கக-அ. ௨08
நூ. ப.
2519

# நாமகள் புகழ்மாலை

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7 - 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

க. சோமசுந்தரப்புலவர்

.10.51 க. பொன்னம்பலம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

385

தி.ம
2519



நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்.

உ

திருச்சிற்றம்பலம்

841.6
சோமசு
SL/PR

# நாமகள் புகழ்மாலை

இது

யாழ்ப்பாணத்து

நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர் அவர்களால்

இயற்றப்பட்டுப்

பண்டிதை பா. பரமேசுவரியார்

எழுதிய உரைக்குறிப்புடன்

2519

யாழ்ப்பாணம்

ஓரியன்பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.

கர — ஆவணி

PRINTED
AT THE ORIENT IMPORTS Ltd.,
216/1, Hospital Road
JAFFNA
and published
BY
**C. J. Iliathamby, B. A.,**
St. John's College, Jaffna
AND
**Pundit S. Ilamurukanar**
Uduvil Girls' College, Chunnakam.

(All Rights Reserved.)

# பதிப்புரை

நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் தமது பதினைந்தாவது வயதிலே பாட்டியற்றத் தொடங்கிவிட்டார். இப்பொழுது அவருக்கு எழுபத்திரண்டு வயது நடக்கின்றது. தங் குலதெய்வங்களாகிய முருகவேளையும் நாமகளையும் வாயாரப் பாடி நெஞ்சாரத் துதிப்பதில் அவருக்குள்ள ஆர்வங் கடலிலும் பெரிது. முன்னிருந்த புலவர்கள் நாமகள்மேல் ஒருசில பிரபந்தங்களையும் தனிப் பாடல்களையுமே பாடினாராகச் சோமசுந்தரப்புலவர், நாமகள் தமக்குக் கலைநிதி தந்த கருணைத்திறத்தை வியந்தும் நயந்தும் பலவேறு பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் பாடி யுள்ளார். பிரபந்தங்களே இந்நூலில் வெளிவருவன. தனிப்பாடல்கள் பின்னர் வெளிவரும்.

தெய்வங்களின் அருட்டிறங்களையும் வரம்பி லாற்றல்களையும் பாடி வணங்குவதும், அருள் பெறுவதும் தவப்பயனால் இம்மையிற் கூடுவன. கல்விப்பயனும் பிறவியின் குறிக்கோளும் கடவுளையறிதலாம். நிலையற்ற உலகத்துப் பொருள்களைப் பாடி வறிதே மாயாமல், நிலையுள்ள பேரின்பப் பெரும்பொருளாய் விளங்குங் கடவுளை வாழ்த்துவதும் வணங்குவதும் பெரும்பயன் தரும். இதனையே பழந்தமிழ்ச் சான்றோர் தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டனர். இந்நாளில் இம்மரபு மாறிக்கொண்டது; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களைக் குறிக்கொள்ளாது விலங்கும் பறவையும் மரமும் முதலிய அஃறிணைப் பொருள்களை ஒரு குறிக்கோளுமின்றி வாளா பாடி மகிழும் மேலைநாட்டுச் செய்யுண்மரபு தமிழ்நாட்டிலுங் குடிகொண்டு வருகின்றது.

இனிப் புலவரின் இப் பாடல்கள் நாமகள் வணக்கத்திற்குரியதோடு சிறந்த இலக்கியமாகவும் அமைந்துள்ளன. கலைப்பெருமாட்டியின் அளப்பருங்கருணைத் திறத்தைச் சிறப்புவகையிற் கூறுமுகமாகப் புலவர் தமிழ்மொழியின் தொன்மையையும் கடவுட்டன்மையையும் இலக்கணவிலக்கியப் பொலிவினையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் புலப்படுத்துகின்றார்.

இனி, இந்நூல் வெளிவருவதற்குப் பொருள் தந்து துணைபுரிந்தோர் அனைவர்க்கும் எங்கள் நன்றியும் வணக்கமு முரியனவாக. அங்ஙனந் துணைபுரிந்தோருள் முதன்மையானவர் இருவர்; ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள அருள்யோவான் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும், ஆங்கிலக் கலைஞரு மாகிய திரு. க. சுப்பிரமணியம் அவர்கள் ஆவர். மற்றவர், உடுவில் மகளிர் கல்லூரியிற் கணிதம் விஞ்ஞானம் என்னுந் துறைகளிற் பேராசிரியராக விளங்கும் அறிவுநூற் கலைஞர், திரு. நா. வீரசிங்கம் அவர்களாவர். நூலின் சிறப்புக்களை யாராய்ந்து படித்து விழுமிய சிறப்புப் பாயிரமும் அணிந்துரையும் நல்கிய கலைமாச் செல்வர் மூவர்க்கும் எங்கள் வணக்க முரியது.

புலவரின் நூல்கள் விரைவில் வெளிவருதற்கு எம்மை யிடையறாது ஊக்கப் படுத்திவரும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், பண்டிதர் வே. க. ப. நாதன் அவர்களுக்கும் எங்கள் நன்றியுரியது. இந்நூலைச் செம்மையாகவும் அழகாகவும் அச்சிற் பதித்துதவிய 'ஒறியன்' பதிப்பகத் தலைவர், திரு. சி. சே. மாரிமுத்து அவர்களுக்கும் எங்கள் நன்றியுரியது.

**பதிப்பாளர்**

# FOREWORD

by

K. S. ARULNANDHY, M.Sc. (LOND.)
(RETIRED DEPUTY DIRECTOR OF EDUCATION)
SENIOR LECTURER, DEPARTMENT OF EDUCATION,
UNIVERSITY OF CEYLON.

It is with unusual pleasure that I have undertaken to write this foreword to the poetical work of **Somasundara Pulavar**, entitled **Namahal Puhalmalai.**

About a quarter of a century ago, when I was a young officer in the Department of Education, I once heard the author himself sing the first stanza, at the commencement of a meeting, in adoration of **Namahal the Tamil Goddess of Learning.** Until I saw the present work a few days ago, I did not realize that it was his own composition. As a matter of fact, I was all along under the impression that a great unknown poet of olden time had composed it. The music of its words and the beautiful sentiments they convey indelibly forced it into my memory, and I used to repeat it to myself ever afterwards and would never get tired of doing so. This surprisingly pleasant and unexpected revelation and the consequent realization that **Namahal Puhalmalai** is the cumulative product of many years of poetic effervescence gives me an added pleasure in writing this foreword.

The entire work is resplendent with captivating melodies, novel and apt similies and metaphors, copious yet appropriate allusions to Hindu mythology and ancient history of the Tamil land, familiar, homely and at the same time elegant words and phrases, and above all a rich and sustained variety of all these and yet other beauties exquisitely combined, as can only be combined by a poet and a scholar both in one, to produce a magnificent Castalian garland of variegated stanzaic flowers.

The author, like most other poets of renown, began to lisp in numbers in his boyhood and continues to do so to this day in his 72nd year inspite of infirmities of old age and failing health. Science is yet unable to tell us which contributes more to the development of personality, heredity or environment. Whatever may be the truth, **Somasundara Pulavar** has been the fortunate recipient of hereditary poetic talent and, along with it, of a stimulating scholarly environment.

I commend the book to all young students of Tamil. There is so much to learn from it especially with the aid of the clear and concise explanatory notes provided therein by the author's daughter-in-law, **Pandithai B. Parameswary,** herself no mean Tamil scholar.

**K. S. Arulnandhy**



# சிறப்புப் பாயிரம்

## 1

உலகியல் விளக்கம், புத்திளஞ் செங்கதிர், செழுங்கதிர்ச் செல்வம் முதலிய நூல்களின் ஆசிரியர், பாலை பாடிய மாவைக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனூர் என்னும் பண்டிதமணி

**க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்**

பாடியது.

### நேரிசை யாசிரியப்பா

**பா**டல்சால் சிறப்பிற் கூடலம் பதிக்கண்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியப்படி
மருவிய வகத்திய வரியணைத் தவிசிற்
களவிய லருளிய கண்ணுதற் கடவுள்
களவில் வள்ளியைக் கவர்ந்திடுங் கள்வன்
மிகத்தெளி புலமை யத்தியன் முதலாத்
தோலா நாவின் மேலோர் சூழப்
பயிலுல குடனே கயிலை வரையினும்
வாழ வழிவழி நீழ லருளியும்
வன்பர் நடுங்க வன்பரைப் புரந்தும்
அன்புத் தமிழர சாளு மரசியை
மான முதலா வகுத்தபண் பனைத்துடன்
ஆன முயற்சிக ளாயின. வணைத்தையுந்
திருமாண் முடிகவி பெருநாள் விழவிற்கு
இனமுற வமைத்தும் பனுவ லணிந்தும்
போற்ற வம்மின் புலவீ ரென்னத்
தேற்று செந்தமிழ்ச் செல்விவழி பாடும்;
தெவ்வ ரொழிந்தன ரெவ்வ மகன்றன
செவ்வி யிதுவெனச் செய்துயி லெடுக்கும்
விருப்பள்ளிப் பொழியுந் திருப்பள்ளி யெழுச்சியும்;
வீங்கிள வேனிலில் வேட்கைமீ தூர
மாங்கனி மாந்தி மகிழ்ந்துகூஉங் குயிலே
ஓங்குதமி ழரசியை யீங்குவரக் கூவின்
ஆங்கதின் மிக்க தீஞ்சுவை பெறுவையென்

றன்பா லதனை யழைத்த பத்தும்;
நினைப்பன வெல்லாம் நின்னையே நினைக்கவும்
உரைப்பன வெல்லாம் நின்னையே யுரைக்கவுங்
காண்பன வெல்லாம் நின்னையே காணவும்
நுகர்வன வெல்லாம் நின்னையே நுகரவும்
ஆசைகூர்ந் தேனெனு மாசைப் பத்தும்;
வழிபடு மடியார்க்குக் கொழுதமிழ் நல்க
வருகென விரக்கும் வருகைப் பத்தும்;
கலைவளம் யாவும் வழிமுறை யுதவலின்
வருகுல தெய்வமென் றருளிய பத்தும்;
மன்னுறுப் பாகப் பன்னு தசாங்கமும்;
மழலைச் சிறாரு முளமகிழ்ந் தோதுஞ்
செந்தமிழ்ச் செல்வித் தீஞ்சுவைப் பாடலும்;
தோளாச் செவியுஞ் சுவையிற் றுளைபட
ஓலமிட் டுரைத்த வோலப் பத்தும்;
மயக்கறு மதிவிளக் கேற்றியென் மனத்துள்
நயத்தக நீயு நன்கமர்ந் தருள்கென
முறையிட் டுரைக்கு நிறைமுறை யீடும்;
நந்தாச் செந்தமிழ் நாயகி யருளால்
உய்ந்தமை யுரைக்கு முய்ந்த பத்தும்;
யானறி யாமற் றானென் னகம்வந்
தருள்விளக் கேற்றிப் பொருள்வளங் காட்டி
யுளங்கொளப் பாடும் வளந்தந் தருளினை
ஆதலிற் சிறியேன் தீதுசெய் பிழைகளைப்
பொறுத்தருள் கென்ற பொறுத்த பத்தும்;
புல்லிய கரணங் கொண்டுனைப் போற்றற்கு
அல்லலு நாணமு மடைந்தன னதனால்
நல்லியற் கரண நல்குமதி யென்றே
நாநயந் துரைத்த நல்லருட் பத்தும்;
உள்ளக் குறிப்பெலா மொளிவிழி காட்டுமென்
றான்றோ ரருளிய வமைதி யனைத்துந்
தோன்றச் சொல்லிய நயனப் பத்தும்;
நடப்பன நடக்கும் அவளருள் வழியென
அடைக்கல முரைத்த வடைக்கலப் பத்தும்;



செஞ்சொற் பூவினிற் பொருள்மணங் கமழ
எமகந் திரிபு முதலன நிரம்பி
யணிபெறு மிரட்டை மணியெனு மாலையும்;
நிறைவுறு புலமை நீயருள் கென்ன
அறைதமிழ் மாலையை அணிந்துகொண் டருளிப்
பெருமறை காணாத் திருவுருக் காட்டிக்
குருவடி வாகிய திருவடி நல்கெனப்
போற்றியென் றுரைத்த போற்றி யகவலும்;
அருள்பெறு மன்பரோ டமைய வளவளாய்ப்
பொருள்சேர் சிவநெறி புகுதற் பொருட்டு
நமோநம வென்றே நவிலுந் தோறும்
உருக்க மிகூஉம் வருக்க மாலையும்;
திருவடி யழகுந் தெய்வத வாற்றலும்
பெருகிய புலமை யருளிய திறனும்
ஆமுறை பிறவும் அழகுறப் புனைந்து
காமுற வைத்த கலித்துறைத் தமிழும்;
கலைப்பெரு மாட்டியின் கவின்மிகு மாடல்
நிலைப்படக் கிளந்த நீள்தா லாட்டும்;
தனிநலன் சான்ற வினியவம் மானையுஞ்;
செந்தமிழ்த் திறனெலாஞ் செப்பலங் காரமும்;
பழந்தமிழ் மரபினு ளிழந்தவை கொண்டு
வளம்பெற வாழ்தல் வகுத்தவா சிரியமும்;
ஆயசொன் மலர்வகை யமைதரப் புனைந்த
திருவார் நாமகள் புகழார் மாலையைத்
தவாஅ விழுப்புகழ் நவாலி யூரன்;
தமிழை யலாதொரு தாயையுங் காணான்;
நாநலங் கனிந்த பாவலர் மாமணி;
பூமிசைத் தன்புகழ் நிறுத்திய புண்ணியன்;
தந்தையார் பதிற்றுப் பத்தோ டிலங்கைச்
சுந்தர வளமுந் தூயசித் தாந்தத்
திட்பமு நுட்பமுந் திகழ்தரப் பொதிந்த
உயிரிளங் குமரன் நாடகத் தமிழும்
கந்த புராணக் கதைதரு விளக்கமும்
முதலா நூல்பல வுதவிய வள்ளல்;
என்னுள மகிழு மின்றமிழ் நண்பன்;

செந்தமிழ்ச் **சோம சுந்தரப் புலவன்**
தன்னை மறந்து தமிழ்தமிழ் தமிழெனத்
தமிழுரு வேறித் தமிழணங் காகி
அமிழ்தமும் வெறிதென வாக்கினன்; அதற்கே
வளமுறு நல்லுரை யமைவுற வகுத்தனள்
இளமைசால் முருகனார் திருமனைத் துணைவி
**பரமே சுவரிப் பண்டிதை** நல்லாள்;
பாலொடு தேனென நூலோ டுரையும்
கீரி மலைவரு கேணி
நீரின் பெருக்கென நிலைத்துவா ழியவே.

## 2

தொல்காப்பியம், இரகுவமிசம் முதலிய நூல்களின்
உரையாசிரியரும் செந்தமிழ் வித்துவானுமாகிய

**அந்தணர் செம்மல் சி. கணேசையர்**

பாடியது.

### நிலைமண்டில ஆசிரியப்பா.

வெள்ளியங் கயிலை வெற்பில்வீற் றிருக்கும்
பொன்னார் சடைமுடிப் புங்கவ னருளாற்
படைப்பினை யாற்றும் பகவ னாவினை
யகலா திருக்குந் தகுதிபெற் றுடைய
நாமகள் பெருமை நவிலுதற் கெளிதோ
ஆயினு மவட னகன்றநற் பெருமையை
முன்னுறப் பெரியோர் மொழிந்தமை போல
மொழிந்திடக் கருதியிச் செழுந்தமிழ் மாலையைப்
பாமகள் கீர்த்தி பரவலும் பள்ளி
யெழுச்சியுங் காலை யிசைதருங் குயிலை
விளித்தவட் கூவுமா றேவுநல் லியல்பும்
மயிலவண் மீதெழு மாசையின் மாண்பும்
வருகைப் பத்தும் வருக்க மாலையும்
குலமார் தெய்வமாக் குலவிய பண்பும்
அரசியா யொளிரவ ளங்கப் பத்தும்



அருளார் பத்து மடைக்கலப் பத்தும்
தாலாட் டம்மனை தகைபோற் றகவல்
நயனப் பத்தொடு நற்சீர்க் கலித்துறை
நயமலி யிரட்டை நன்மணி மாலை
உய்ந்த பத்தோ டோதுபொறைப் பத்தென்
றிங்கிப் பகுதிக ளங்க மாகச்
சொற்சுவை பொருட்சுவை துலங்கியினி தோங்கப்
பத்திச் சுவையின் பயனுல கடையச்
செவ்விய தீவிய சீரிய மொழிகளால்
இயற்றி யுலகினுக் கீந்தன ளின்புற
யாவ னவனெனி னிங்கிலந் தன்னில்
நவாலி யூர்செய் நற்றவந் தன்னால்
வந்துதித் திட்ட மாபெரும் புலவன்;
இலக்கண விலக்கியம் யாவுந் தேர்ந்தோன்;
புலக்கண் கொண்டு பொன்னம் பலவனை
அலக்க ணுருமே யடியருச் சிப்போன்;
இலங்கை வளமும் தால விசாலமுங்
கோதி லுயிரிளங் குமரனா டகமும்
தந்தையார் பதிற்றுப் பத்தொடு பிறவும்
பாடிமுன் பெருமை படைத்தநல் லறிஞன்;
புலவர் சிகாமணி புண்ணிய சொரூபன்;
நற்குண வடிவாய் நண்ணிய பெரியோன்
என்பா னண்மை யினிதுகொண் டுள்ளோன்;
செந்தா மரையிற் றிகழ்மலர் முகத்தோன்;
வாய்மை பேசுந் தூய்மை யாளன்;
தன்போற் புதல்வருந் தகைசேர் புலவராய்
வந்திடப் பெற்ற மாபெருந் தவத்தோன்;
தோமில் சீர்த்தியன் **சோமசுந் தரப்பேர்**
செந்தமிழ் நாடெலாந் திகழவைத் தோனே;
மற்றந் நூலின் மாட்சிமை விளங்கப்
பொற்புறு நயம்பல பொருந்து மோருரை
ஆக்கி யணிந்தன ளருந்தமிழ்ப் **பண்டிதை**
**பரமேசு வரி**யெனும் பண்புடை யாளே.

# 3

திருநெல்வேலிச் சைவாசிரிய கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

பாடியது.

---

நல்லவழி காட்டுவோ மென்றோர்கவி ராசமுகில்
    நற்றமிழ் பொழிந்த நாட்டில்
நறுமணங் கமழ்கின்ற முல்லைமல் லிகையாதி
    நன்மலர்கள் கொய்து சேர்த்துச்
சில்லென்று குளிர்செயுஞ் சிரமாலை மார்பினிற்
    றிகழ்மாலை பலமா லைகள்
திருமகளு மருமகளின் திவ்யகோ லங்கண்டு
    திருவிழி களித்து நிற்ப
வல்லென்ற பண்டிதரும் வாயூறி மதுரிக்க
    வகைசெய்தொர் புலவர் திலகம்
வாணியின் திருவருட் புகழெலாந் தமிழிலே
    வருணித்த தொருவி யப்போ
சொல்லென்ற மலரிலே பொருளென்ற புதுமதுச்
    சொட்டிச் சுரக்கு மமிர்த
சுரபியா யொளிர்கின்ற **சோமசுந் தரநாம**
    **சுகிர்தனைத் துதிசெய் வோமே.** §

---

§ பண்டிதமணியின் அணிந்துரை முடிபு பெருமையால் இதனைத் தனித்து வெளியிடுகின்றோம். ப—ர்:

# அணிந்துரை *

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்விரிவுரையாளர்,

## வித்துவான் மு. அருணாசலப்பிள்ளை அவர்கள்

எழுதியது

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் — ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

என்பது, **தண்டியலங்காரவுரையிற்** காணப்படும் எடுத்துக்காட்டுக் களுள் ஒன்று.

ஓங்கலிடைத் தோன்றுதல், உயர்ந்தோர் தொழும்வண்ணம் ஒளியுடைத்தாதல், உலகத் திருளகற்றல் என்பன, தனியாழி வெங் கதிரிடத்தும், தன்னேரிலாத தமிழின் கண்ணும் அமைந்த தனிப் பெரும் பண்புகளாகும். பனி, புயல், கங்குல் முதலியவற்றால் ஒரோ வழி ஞாயிற்றின் கதிர்கள் மறைக்கப்படுதல் போன்று, வேற்று மொழியாற் றுக்கப்படுதல், அயற்புலவேந்தராட்சி, அடிமையுணர்ச்சி,

---

* இந்நூலுக்கு **அணிந்துரை** யெழுதிய செந்தமிழ்ச்சான்றோர், **அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பல்லாண்டுகளாகத் தமிழ் விரிவுரையாள** ராயிருந்து கலைவளர்த்து வருகின்ற **வித்துவான், மு. அருணாசலப்பிள்ளை** யவர்களாவர். பிள்ளையவர்கள், இலக்கிய இலக்கண நூல்களில் வல்ல **இயற்றமிழ்ப் புலவராதலோடு, இசைத்தமிழிலும்** துறைபோகி, இனிய அழ கிய இசைப்பாடல்கள் பலவற்றை யாத்துள்ளார்கள்.

**அண்ணாமலைப்** பல்கலைக் கழகத்திற் கலைபயிலும் இலங்கைத் தமிழ் மாணவர் அனைவரும், பிள்ளையவர்களின் எஃகனைய மதிவளத்தை யும் கடலனைய கல்வித்திருவையும் பாராட்டிவருவதை யாம் பன் முறை செவியாரக் கேட்டிருக்கின்றோம். இலக்கண இலக்கியப் பொருள் நுட்பங்களை யெல்லாம் மிக எளிதாய், அழகிதாய், இனி தாய் விளக்கி, மாணவரை யுளங்கொள வைக்குந்திறம், பிள்ளைய வர்களுக்குப் பிறப்புரிமையான தென்றும் அவர்கள் விதந்துரைப்பார் கள். பிள்ளையவர்களிடம் அமைந்து விளங்கும் சால்பும், சைவசீல மும், தமிழ்ப்பண்பும் ஒரு பிழம்பினதாய்த் திரண்டு வியத்தகு சாநித்

மக்களதறியாமை முதலியவற்றாற் றமிழ் மொழியும் ஓரொருகாற் சிறிது ஒளி மழுங்கித் தோன்றுதலுண்டு. ஆயினும், ஞாயிற்றின் பேரொளியை எவ்வாற்றானும் மறைத்தல் ஒல்லாதவாறே, தமிழ் மொழியின் பேரறிவுச்சுடரை மறைத்தலும் இயலாத தொன்றாம். அன்றியும், வானவெளியிற் காணப்படும் ஒளிப்பிழம்புகளுக்கு ஞாயிற்றுமண்டிலம் ஒளியுதவி, அவற்றிற்கு முதன்மையாதல் போல, நிலவுலகில் வழங்கிவரும் மொழிகள் பலவற்றிற்கு அறிவுச்சுடர் நல்கி அவற்றிற்குத் தலைமை யெய்துதலும் தமிழ்மொழிக்கு உண்டு. இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்த நந்தம் தமிழ்மொழி, ஞாயிறு உள்ளதுணையும் நலிவின்றி நிலைபெற வேண்டுமாயின் காலந்தோறும் உயிருள்ள புதுப்புது நூல்கள் அதன்கண் இயற்றப்படுதல் வேண்டும்.

**ஈழவளநாட்டிற் றோன்றிய இளஞாயிறுபோன்ற நவாலியூர் முதுபெரும்புலவர், உயர்திருவாளர் க. சோமசுந்தரப்புலவர் அவர்களாற்** பல்வேறு காலங்களில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்து, '**நாமகள் புகழ்மாலை**' எனப் பெயர் சூட்டி, இப்போது வெளியிடப்பெற்றிருக்கும் இந்நூல், **உயிருள்ள நூல்களின் வரிசையில் ஒன்றாகவைத்துப் போற்றத் தகும் உயர்வுடையது; தமிழின் மறுமலர்ச்சி யென்னும் பெயரால் நாடோறும் வெளிவந்துகொண்டிருக்கும் பிறநூல்கள் போலாது, 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய' செழுந்தமிழ்ச் சொற்களால் யாக்கப் பெற்றிருத்தலின், நவில்தொறும் நவில்தொறும் நயம் பயப்பதாயுள்ளது;**

---

இயத் திருவைத் தோற்றுவித்தலினால், அவருடன் பழகுவோர் அவரை எக்காலத்தும் மறத்தலரிதாம். பிள்ளையவர்கள் இந்நூலுக் கெழுதிய விழுமிய இந்நயப்புரையைப் படிக்குந்தோறும் இன்பந் துளும்புகின்றது. உணர்ச்சியொத்த நட்புரிமைகொண்டு, அவர்களுக்கு எங்கள் மறவாநன்றியைத் தெரிவிக் கின்றோம்.

கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் அமைந்தமை போலப் பிள்ளையவர்களுக்கும் எங்களுக்கும் அமைந்த உணர்வொத்த கெழுதகைமையைப் பயினொடு சேர்த்திய கற்போலாக்கியவர், எம்மருமை நண்பரும் பிள்ளையவர்களின் நன்மாணாக்கரும் புலவரிடம் நேயம்பூண்டோரும் ஆகிய பல்கலைக் குரிசில், **திரு. சி. சிவகுருநாதன்** (எம்.ஏ.) அவர்களாவர். அவர்களுக்கு எங்கடப்பாடு சொல்லாமலே யமையும்.

**பதிப்பாளர்.**

இந்நூலாசிரியராகிய புலவரவர்கள் பன்னூற் பயிற்சியும், பழுத்த தமிழ்ப்புலமையும், பரந்த உலகியலறிவும், நிறைந்த பண்பும் ஒருங்கு வாய்ந்த பெருந்தகையாளராவர்.

இவர், இளம் பருவமுதலே இயற்றிய பாடல்கள் ஏறக்குறையப் **பதினையாயிரம்** வரையுள்ளன வென்றும், இதுகாறும் வெளிவந்தனவே யன்றி, இன்னும் பல நூல்வடிவில் வெளிப்படுத்துதற் கேற்பத் தொகுக்கப் பெற்றுள்ள வென்றும் தெரிகின்றன. இங்ஙனம், **வற்றாத ஊற்றாய் வளர்ந்துவரும் புலமைநலங் கனிந்த இப்பெரியார்**, மேலும் பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழ்ந்து தமிழ்ப் பணி புரியும்வண்ணம் இறைவன் திருவருள் புரிக என வேண்டிக்கொண்டு, இந்நூலினுள்ளே நுழைவோம்.

இந்நூல், '**செந்தமிழ்ச்செல்வி வழிபாடு**' என்பது முதல் **இழந்தவைகொண்டு வளம்பெற வாழ்வோம்**' என்பதீறாக வுள்ள இருபத்துமூன்று உட்பிரிவுகளை யுடையது. இவற்றுள் எப்பகுதியைப் படித்தாலும் ஆங்காங்குள்ள சொல்லும் பொருளும், "**சர்க்கரைக் கோர்புறங் கைப்பதுண்டோ**" என்றபடி சுவைபயந்து நிற்றலைக் காணலாம்.

முதலாவது, செந்தமிழ்ச் செல்வியை வழிபடுதற்கு முற்படும் இந்நூலாசிரியர், ஏனைய் புலவர்களையும் அவ்வழிபாட்டிற் கலந்து கொள்ளுமாறு அழைக்கு முறை ஊன்றி நோக்கத் தக்கதாகும். ஒருவரை ஒரு நற்செயலிற் புகுத்தக் கருதிய மற்றொருவர், அவர், தஞ்சொல்லை மறாது ஏற்றுக் கோடற்பொருட்டு, அச் செயலால் விளையும் பயனை முன்னர்க்கூறிப் பின்னர், இன்னுரைகளால் அவரை மகிழ்வித்து, அப்பால், தாமும் உடனிருந்து உதவிசெய்வதாகவும் உரைத்து, உடன்படுத்துதல் உலகியலிற் காணப்படுவ தொன்றாகும். இவ்வுபாயத்தினை நன்குணர்ந்த ஆசிரியர்,

"வம்மின் புலவீர்! வம்மின் புலவீர் !!
இம்மையும் மறுமையும் நன்மை பயந்து,
தொன்மையும் புதுமையும் மென்மையுந் தெய்வத்
தன்மையும் நிரம்பி, எழுமையுந் தொடர்ந்து,
யாழினுங் குழலினும் பாலினும் தேனினும்,
காணினுங் கேட்பினுங் கருதினும் இனிக்கும்
அமிழ்துறழ் தெய்வத் தமிழ்மொழி யுணர்ந்த
மெய்ந்நெறிப் புலவீர், வம்மின் எல்லீரும்;
அந்தமும் நடுவும் ஆதியுந் தெரியாச்
செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுதும் யாமெலாம்"

(செந்தமிழ்ச் செல்வி வழி. 1–10)

என்று அழைக்கின்றார். இதன்கண், தமிழ்த்தெய்வத்தின் சிறப்புக்களுடன், அத்தெய்வத்தை வழிபடுவாரெய்தும் பயன் முதலியனவும் முறையே கூறப்பட்டிருத்தலைக் காணலாம். இருமையினும் நன்மைபயத்தல், எழுமையுந் தொடர்தல், இனித்தல் என்பன பயன்களாம். பிறவும் இவ்வாறே கோடற்குரியன.

இனி, வழிபாட்டிற்குச் சங்கமண்டபத்தை இன்ன இன்னவாறு ஒப்பனை செய்ம்மின் என்று கூறுமுகமாகச் செந்தமிழ்ச் செல்வி வழிபாட்டினை மேற்கொள்ளும் புலவர்கள், மானம் முதலிய உயர்ந்த பண்புகளை யுடையராதல் வேண்டும் என அறிவுறுத்துவாராய், அப்பண்புகளை விதானம் முதலியவாக உருவகித் திருத்தல் (செந்தமிழ்ச் செல்வி வழி. 11–22) அறிந்து இன்புறற்பாலதாம்.

பின்னர், தமிழ்த்தாயின் குடிலருகிற் குறுகி, இன்னவாறு அன்னையைத் துயிலுணர்த்துங்கள் என்பார்,

"புறமொழி விழைவெனுஞ் செறியிரு ளகன்றன;
மறுவறு புலமை வாரணம் இயம்பும்
தெளிவெனும் ஆயிரம் ஒளிநிரை பரப்பிப்
புகழெனும் பருதி கடன்முகட் டெழுந்தனன்,
அடியவ ருள்ளத் தறிவுகண் மலர,
வடிவுடை நெடுங்கண் மலர்திறந் தன்னை,
தொழுதகு பள்ளி யெழுகென" எழுப்புங்கள் எனவும்

இவ்வாறே திருப்பள்ளி யெழுச்சியிலும்,

"பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பய விடிந்தது; படரொளி பரப்பி,
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்;
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி யவிந்தன; குவிந்தனர் தொண்டர்;
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
பின்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே"

எனவும் பாடிள்ளார்.

இவற்றுள், வேற்றுமொழிகள்மேல் வைத்த மோகத்தைச் செறியிருள், கங்குல் என்றமையாற், சென்ற சிலநூற்றாண்டுகளில் தமிழ்மக்கள் நெறியறியாது மயங்கிய நிலையினையும், காலமாறுபாட்டால் அவ்விருள் நீங்கிற்று; அப்புறமொழிகளாகிய உடுக்கணங்கள் ஒளியவிந்தன; தமிழின் புகழ்ஞாயிறு புத்துணர்ச்சிப் பொலிவோடு வீறுகொண்டெழுகின்றது, என்பவற்றால் இக்காலத்து எழுந் தமிழார்வத்தினையும், தமிழ்மக்கள் தம்மையும், தமிழ்ப்புலமை நலத்தையும் அறிந்து தமிழ்த் தொண்டு செய்யத் திரண்டனர் என்பதனால், தமிழ்மொழி எதிர்காலத்து எய்தும் சிறப்பினையும் புலப்படுத்தியுள்ளார்.

தமிழ்வேந்தர் ஆட்சி மறைந்தபின், "இனிப் பாடுநரும் இல்லை; பாடுநர்க்கொன்றீகுநரும் இல்லை" என்றபடி, தமிழ்மொழியைச் சுவையுணர்ந்து கற்பாரும் கற்றவரைப் புரப்பாரும் அருகியமையால், தமிழ்நூல்கள் பிறராற் பழிக்கப்பட்டும், நம்மவராற் பேணப்படாமலும், நீராலும் நெருப்பாலும் சிதல் முதலியவற்றாலும் அழிந்தொழிந்த இடைக்கால நிலையை நினைந்து நினைந்து வருந்தித் தமிழன்னையின் பக்கல் முறையிடுவார் போன்று, வருகைப்பத்தில்,

“என்னைப் புரக்கு மன்னரில்லை;
இயற்சீர் பரவும் புலவரில்லை;
இனிமை விழையு மக்களில்லை;
ஈவோ ரில்லை; யென்றிரங்கி
வன்னக் கருணை வடிவாகி
வாரா திருக்க வழியில்லை;
மனத்தின் படியே வினைபுரியும்
மைந்தர் பலரும் இருக்கின்றார்”

(செய். 8.) என்றும்,

“தேரா தயலார் பழித்தாரோ,
செல்வப் புதல்வர் மறந்தாரோ,
திருவார் கலன்கள் மறைந்தனவோ,
தீயும் நீரும் உண்டனவோ,
வாராக் காலம் வந்தனவோ,
மன்ன ராட்சி யிறந்தனரோ,
வள்ளன் மார்கள் குறைந்தனரோ,
வாய்மைப் புலவர் போயினரோ”

(செய்.10.) என்றும், கூறியிருக்கும்பாடற் பகுதிகள், ஆசிரியருடைய கழிவிரக்கத்தையும், தமிழ்த்தாயின்பால் வைத்துள்ள கனிந்த அன்பையும் ஒருங்கே எடுத்துக் காட்டுவனவாம்.

தொல்காப்பிய மென்னும் பழந்தமிழ்ப் பெருநூலின் கண், தமிழில் மந்திரங்கள் இருந்தன வென்றும், அவை நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிகளே யென்றுங் கூறப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர், தமிழ்த் தாய், ஆக்கல் முதலான முத்தொழிலும் இயற்றும் ஆற்றல் படைத்தவள்; தமிழென்னுஞ் சொல்லே மந்திர வடிவாய் அமைந்தது, என்பவற்றை நன்கு அறிந்தமை யாற்போலும்,

“சஞ்சலம்போம் இன்பந் தழைக்குந் தருமனையும்
அஞ்சலம்போய் வாவென் றதட்டலாம்—வஞ்சகர்செய்
தந்திரமோ தாறுமாறா வாணிதமிழ் மூன்றெழுத்து
மந்திர மோதி வரின்”

(இரட்டை மணி. செய். 6.) என்னுஞ் செய்யுளால், தமிழென்னும் மூன்றெழுத்தாலாகிய மந்திரத்தினையே ஒருவன் இடையறாது ஓதிவருவானாயின், அவன் துன்ப நீக்கமும் இன்பப்பேறும் இறவாநிலையும் எய்துவன்; வேறு மந்திரங்கள் வேண்டா என இறுமாந்து கூறியுள்ளார்.

“ஐம்பா லாகிதமிழ் ஆரணங்கே யாய்” (தசாங்கம் 3) என்ற விடத்துப் பிறமொழிகள், சொற்பற்றிப் பால்வகுத்துக் கொண்டு, ஆண்பாலை யுணர்த்துஞ் சொல்லைப் பெண் பாலாகவும், பெண்பாலை யுணர்த்துஞ் சொல்லை ஆண் பாலாகவும், அவ்விருபால்களை யுணர்த்துஞ் சொற்களை அலிப்பாலாகவும், இங்ஙனம் பிறவாற்றானும் பிறழக் கூறி இடர்ப்படுதல் போலாது, தமிழ்மொழி, பொருள் பற்றி ஐம்பால்வகுத்துக்கொண்டு, பிறமொழிகட்கில்லாத பேரழகு பெற்றிருத்தலின், அத்தமிழணங்கினை ‘ஐம்பா லாகி’ என ஆசிரியர் கூறினர் என்று பொருள்கோடற் கும் ஏற்புடைத்தாக அச்சொற்றொடர் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

நிரம்பிய கல்வியறிவுடையவர் நாற்றிசை நாடுகளுக் குஞ் செல்லலாம்; அந்நாடுகள் தந்நாடுகள் போன்று வேண்டுவன உதவுமாதலால், அவர்களுக்கு ஆற்றுணை வேண்டுவதில்லை என்னுங் கருத்தமைய,

“ஆற்றவுங் கற்றார் அறிவுடையார்......ஆதலால்,
ஆற்றுணா வேண்டுவதில்” என்று பழமொழி பகர்கின் றது. அதனை, இவ்வாசிரியர், பிறர்தம்மதம் மேற்கொண்டு கனைவார் போன்று, புலவர்கள், தோட்கோப்புக்கொண்டு செல்வாராயினும், வழிப்பசிக்கு நாவிற் பொதிசோறு கொண்டு செல்கின்றனர் என்பாராய்ப்,

“பூவிற் பரதேசம் போவார் வழித்துணைக்கு
நாவிற் பொதிந்துவைத்த நல்லமுதே” (தாலாட்டு 109)

“கற்றவர்கள் நாவினிற் பொதிசோறு”

(செந்தமிழ்க்குல.6) எனக்கூறிய நயம் பாராட்டற்குரியது.

இவ்வாசிரியர், சைவத்திருமுறைகளிலும் பிற பல நூல்களிலும் தோய்ந்த புலமைவாய்ந்தவர் என்பதனைப்

பின்வரும் எடுத்துக்காட்டுக்களால் அறியலாம்.

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே" (முறையீடு 10)
"கற்றவர் விழுங்குங் கனியே போற்றி
மற்றவர் காணு மலையே போற்றி" (போற்றித் திரு.)
என்ற பகுதிகள்,

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை"
என்னுந் திருவிசைப்பாவினை அடியொற்றி யெழுந்தன.

"வாய்மை கனியுஞ் செந்நாவுடையார்" (நயனப். 7.)
என்பது,

"செய்யா கூறிக் கிளத்தல்,
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே"
என்னும் புறப்பாட்டு அடிகளையும்,

"இல்லார் இளமையென ஏரார் முகர்வாடி"
(தாலாட்டு 114.) என்பது,

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்" என்னும்,
பாலைக்கலியையும் நினைப்பிக்கின்றன.

"தெய்வமுனைப் போல்வேறு தெய்வமில்லை நீயுரைக்குஞ்
சைவசம யம்போற் சமயமில்லை" (இரட்டைமணி. 16.)
என்ற பகுதி,

"சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்" என்னும் சைவப்
பெரியார் வாக்கைத் தழுவியது.

"சேயழா திருக்கப் பாணினைந் தூட்டும் சிறப்புடை யன்னையே" (பொறுத்தபத்து 1.) என்றது, "பாணினைந் தூட்டுந் தாயி னுஞ் சாலப் பரிந்து" என்னும் மணிவாசகத்தினையும்,

"தீயவென் னுளத்து மேவிநா விடமாய்ச் செந்தமிழ்ப்
பாவருள் செய்யும், ஆய்கலைப் பாவாய்"

"உய்வகை காட்டி யுளத்திலே யிருந்து நாவினுற் பாவகை
யுரைக்குந் தெய்வமே" என்ற பாடற் பகுதிகள்,

"நினைவித்துத் தன்னையென் னெஞ்சத் திருந்து அம்பலத்துள்
நின்று, புனைவித்த ஈசன்" என்னுங் கோவைத் திரு
வாசகத்தையும் நினைவிற்குக் கொண்டு வருகின்றன.

"பொருப்பிலே பிறந்து புகழிலே கிடந்து
நெருப்பிலே நின்று நீரிலே தவழ்ந்தென்
சென்னியில் நாவிற் சிந்தையிற் கலந்து
மன்னிய கருணை வாரிதீ" (போற்றித்திரு. 42-45)
என்னும் அடிகள், "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து" என்னும் வில்லிபாரதச் செய்யுளைப் பின்பற்றி யுள்ளன.

இன்னும், ஆசிரியருடைய பரந்த நூற்பயிற்சிக்குப் பல காட்டுக்கள் காட்டலா மாயினும் விரிவஞ்சி விடப்பட்டன. மேலும், இவ்வாசிரியர், தமிழணங்கிற்கு, நாடு நகரம் முதலான பத்து உறுப்புக்களும் வகுத்துக் கொடுத்து, ஆரிய மாதி அயற்புல மடவார் சீரிய கேண்மையிற் சேவடி பரவ' முடியுடை வேந்தருங் குறுநில மன்னரும் அடியுறை யீந்து குறுவினை யியற்றத், தெய்வப்புலவர் செய்தருள் மணிமுடியை, வணங்காச் சென்னி யிணங்கச் சூட்டி, மூவர் ஆரமும் முனிவர்செய் கோவையும் தேவர் மணியும் மேவரப் புனைந்து. மணிமேகலையை மருங்குறச் சேர்த்திச், சேரன் சிலம்பினைச் சேவடிக் கணிந்து, நாலடிப் பாதுகை நன்கனங் கொளுவி. மற்றும், பற்பல அணியும் பொற்புறப் பூட்டி அவளைக் கன்மாப்பலகை யென்னும் அரியணையி லிருத்தித் தமிழ்ப்பேரரசியாக்கி, அவள் தொல்காப்பிய மென்னும் செங்கோல் கைக்கொண்டு ஞால முழுதும் ஆட்சி நடாத்துதலைக் கண்குளிரக் கண்டு களிக்கின்றார்;

இவளது ஆணை வெள்ளிமலை மேலுஞ் செல்லுதலை எண்ணி வியக்கின்றார்; அமுதினையும் மதியினையும் உருக்கி வார்த்தாற் போன்ற அத்தமிழன்னையின் திருவுருவத்தைத்

தம் உள்ளக் கிழியின்கண் உயிரோவியமாகத் தீட்டி, அக்கண்கொள்ளாப் பேரழகினைப் பார்த்துப் பார்த்து உவகைபூக்கின்றார். மேலும், தமிழணங்கினைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றார்; குழந்தை யாக்கி மணித்தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டுகின்றார். இன்னும் பலவாறாகத் தமிழ்த்தெய்வத்தினை இவர் பாராட்டி யிருக்கும் முறைகளும், அவற்றுட் பொதிந்து கிடக்கும் சுவைநலங்களும் படித்து உணரும் பான்மையனவே யன்றி எடுத்து எழுதிக்காட்டும் எளிமையுடைய வல்ல.

இந்நூலின்கண் அடங்கிய வருகைப்பத்து, அருட்பத்து, போற்றித் திருவகவல், வருக்கமாலை முதலியவற்றுள் யாதேனும் ஒன்றினை நாடோறும் ஓதிவரும் நன்மாணுக்கர், நாமகளுடைய நல்லருள் நோக்கத்தைப் பெற்றேவிடுவரென உறுதியாய்க்கூறலாம்.

தமிழ்த் தெய்வத்தைக் குறித்து நம்முதுபெரும் புலவராய சோமசுந்தரப்புலவரவர்கள் பாடியுள்ள பாடற் கருத்துக்கள் பலவற்றையுந் தொகுத்து நோக்கின்,

"புலனழுக் கற்ற அந்த ணாளன்,
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்,
பரந்திசை நிற்கப் பாடினன்"

எனக் கபிலரை நப்பசலையார் பாராட்டியதுபோல், தமிழ்த் தெய்வத்தைப் பற்றி இனியொருபுலவர் எவ்வாற்றானும் புனைந்துரைத்தற்குச் சிறிதும் இடனில்லாதவாறு இப்புலவராய அந்தணாளர் பாடியுள்ளார் என்று கூறலே யாவருமேற்பதுவர். அதுவே அமைவுடையதாகும்.

இந்நூலுக்குத் திருவாட்டி, பண்டிதை, பா. பரமேசுவரி அம்மையார் எழுதியிருக்கும் உரைவிளக்கங்கள் திட்பமும் நுட்பமுஞ் செறிந்து பயிலுந்தோறும் இன்புறுத்துவனவா யுள்ளன. இவ்வருமந்த நூலினைப் படித்துப் பார்த்து எங்கருத்தைத் தெரிவித்தற்கு ஒருவாய்ப்பு நல்கிய எம்மருமை மாணுக்கர் திரு. சி. சிவகுருநாதன் (எம்.ஏ) அவர்களுக்கு எம் நன்றி யுரியதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
22—9—51.

மு. அருணாசலம்பிள்ளை

# நாமகள் வணக்கம்

அருமருவு மொருகுடிலை யருள்நோக்கக் கருவாக்கும்
உருமருவு நாதவிந்தி னுறாமியற்கை யொலித்திரளை
வீங்குநீர் வியன்கங்கை வேணியணி வேதியனும்
பூங்கடம்பு புரளகலப் புண்ணியனு முருவாக்கித்
தம்பதங்கள் விதிமுறையே நெஞ்சமுந்தித் தவங்கிடந்த
கும்பமுனி கரங்கொடுக்க வவன்மடியிற் குருந்தாகி
மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத் தேகிடந்து
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறுந்
தங்குமிடைத் தமிழுலகம் அரசுபுரி தமிழ்த்தாயே!

மன்னுமருட் டன்மையிலும் வளமையிலும் புதுமையிலும்
உன்னைநிக ரானமொழி யுலகினிலே யொன்றுண்டோ

பாற்கடலின் விடங்கொடுத்த பண்ணவர்கள் நனிநாண
நாற்கடலின் சுவையமுத மரன்செவியில் நுழைத்தனையே

உருக்காணுப் பேரிருளி லொருவனுக்கா யொருத்தியிடை
இருக்காலுங் காணுனை யிருக்காலு மேவினையே

பெருமுதலை சிறுமதலை தரவருளிப் பெற்றோர்கள்
பொருமுதலுங் கருமுதலும் போக்கமொழி புகன்றனையே.

நிறைமதி பொழிதரு நிலவெனு மெழிலினை
மறைபிணி கதவுடன் வழிவிடு மொழியினை
இருமையு முதவிடு மிசைதரு மதியினை
வருமறி வினரக மகிழ்வுறு துதியினை
வரமிகு புலவர்கள் மனநிறை குறியினை
மதுரையி லரசியன் மருவிய நெறியினை

பொய்யுரைப்போர் புன்னுவிற் பொருந்தியதீட் டோட்டுதற்
செய்யதமிழ்ப் பெருமாட்டி தீயிடைநீ குளித்ததுவோ; [கோ

வேற்றுமொழி தீண்டுதலான் மேனிகழீஇக் கொள்வதற்கோ
ஆற்றெதிரே யேட்டின்மிசை யம்மாநீ நீந்தியதே;

எஞ்சலிலா வுயிர்மருந்து யானென்ப துணர்த்துதற்கோ
நஞ்சமுத மாக்கியெங்கள் நாய்கிநீ நாட்டியதே;

நாவினிலே நின்றோய்நீ;
நல்லமொழி பயின்றோய்நீ;
பூவினிலே யமர்ந்தோய்நீ;
பூவுலகம் புரந்தோய்நீ;

உரையுநீ; பொருளுநீ;
உள்ளுநீ; புறமுநீ;
விரையுநீ; மலருநீ;
வித்துநீ; முளையுநீ;

எனவாங்கு,

யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அருந்தமிழ்ப் பாவாய்! ஆருயிர் மருந்தே!
இருந்தவர்க் கொளியே! இசைமுரல் கிளியே!
நந்தா விளக்கே! சிந்தா மணியே!
பூமிசைப் பொலிந்தநின் தோமறு சீர்த்தி
புந்தியிற் கொண்டு சந்தம் போற்றுவென்
தீதறு முன்புகழ் மாலை
மேதினி யெங்கும் விளங்குதற் பொருட்டே.

---

உ

திருச்சிற்றம்பலம்

# நாமகள் புகழ்மாலை

## 1. செந்தமிழ்ச் செல்வி வழிபாடு

### காப்பு

செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை யாட்டியைத் தென்பொதி
சந்தனச் சோலையி னேழிசை கூவுந் தனிக்குயிலைச் [யச்
சிந்தையிற் பூத்துச்செந் நாவிற் பழுத்துச் செவிப்புலத்தே
வந்து கனியுர் பனுவற் பிராட்டியை வாழ்த்துவமே.

### நூல்

வம்மின் புலவீர்! வம்மின் புலவீர்!!
இம்மையு மறுமையு நன்மை பயந்து
தொன்மையும் புதுமையு மென்மையுந் தெய்வத்
தன்மையு நிரம்பி யெழுமையுந் தொடர்ந்து
யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அமிழ்துறழ் தலைமைத் தமிழ்மொழி புணர்ந்த
மெய்ந்நெறிப் புலவீர்! வம்மினெல் லீரும்,
அந்தமு நடுவு மாதியுந் தெரியாச்
செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுதும் யாமெலாம்;
நெடுங்கட லுலகி னிடந்தொறு மிடந்தொறும்
வானுயர் சங்க மண்டபம் வகுத்து
மான விதானம் வளங்கெழ வமைமின்!
ஊக்கமு நெருங்கிய வொருமையு மென்று
நீக்கமி லுறைப்பு நேர்மையு மென்று
மாக்குலைக் கமுகும் வாழையு நடுமின்!
தூக்குறு குரும்பையுந் தொடையலுந் தொடுமின்!

பொற்புறு **பொறுமைப்** பொலங்குட நிரைத்துப்
**புத்துணர்** வென்னும் பொன்முளை பரப்புமின்!
பழையன திருத்திப் புதியன புனைந்து
**தூய்மை** நறும்புகை யெடுத்து மீயுயர்
**வாய்மை விளக்கம்** வயின்றொறு மேற்றுமின்!
ஒல்காப் பெரும்புகழ்த் **தொல்காப் பிய**மெனுந்
தண்டமிழ்க் கனகத் தாமரைப் பீடிகை
மண்டபம் பொலிய வைத்துப் பண்டைநாள்
வடாஅது வான்றொடு வேங்கட மலையுந்
தெனாஅது குமரித் தெண்டிரைப் பௌவமுங்
குடாஅதுங் குணாஅதுந் தொடுகடற் பரப்புமென்
றந்நாள் வரைந்த விந்நான் கெல்லையுள்
அண்டரும் விழையுந் தண்டமி ழகத்தில்
ஆடகக் குடுமி மாடக் கூடலில்
முதலிடை கடையெனு மரபொரு மூன்றிற்
றிரிபுர மெரித்த **விரிசடைக் கடவுளுஞ்**
சூர்முத றடிந்த வீரவேல் **முருகனுங்**
கடன்மிடல் சாய்த்த **குறுநெடு முனியுந்**
தோலா நாவின் **மேலோர் குழுவும்**
மந்திர மிருந்து தந்திரம் புரிய
ஆரிய மாதி யயற்புல மடவார்
சீரிய கேண்மையிற் சேவடி பரவப்
படியுயர் மண்டல மூன்றும் பரிக்கு
முடியுடை வேந்தருங் குறுநில மன்னரு
மடியுறை யீந்து குறுவினை யியற்றத்
தெரிதமிழ்ப் பலகை யரியணை மீமிசை
யுண்ணெகிழ் வேட்கைத் தண்ணொளி விரீஇத்
தேம்பிழி குவளைக ணும்பல்வாய் மலர்ந்து
முல்லை யரும்பிப் பவளம் பூத்த
**முழுமதி யாயிர மொருவயிற் குழீஇய**
**காட்சித் தன்ன மாட்சிகண் கவரத்**
திருவுறை செங்கை நான்கி **னொருகை**
புத்தகச் செங்கோ லேந்த **வொருகை**
வித்தகத் திவவின் நல்லியாழ் தடவ, **ஒருகை**
நச்சுநர் நச்சிய விச்சையி னுதவ, **ஒருகை**



அச்ச மகற்றி யருண்முறை தெரிக்க
உவமையின் றுயர்ந்த தமிழக மன்றியும்
இமிழ்திரை முந்நீர்ப் பெருநில முழுவதும்
பிள்ளைப் பிறைமுடிப் பெம்மா னுறைதரு
**வெள்ளியங் கிரியினு** மும்பருந் தனாஅது
தெள்ளிய வாணைத் திகிரிசென் றுலாவ
முறைமுறை யிருந்து தனியர சாண்டும்;
அதாஅன்று,
அருளடை பொதுளித் தெருணிழல் வழங்கி
பண்பு மலர்ந்துயி ரின்பம் பிலிற்று
மருவா நெறியறி வாதவூ ரெங்கோன்
**திருவா சக**மெனுஞ் செழும்பொழில் புகுந்து
மருப்பூ முகத்து வல்லிய ராயமொடு
**திருப்பூ வல்லி** விருப்பொடு கொய்துங்
**குயிலொடு கூவியுங் கிளியொடு மிழற்றியும்**
பயின்**மணிப் பாவை** நயமுறப் புனைந்தும்
வாசந் திமிர்ந்து **மூச லாடியு**
**மம்மனை** யாடியுங் **கொம்மை** கொட்டியுஞ்
சேரன் செய்த திருக்கிளர் **சிலம்பிற்**
கந்துக வரியிற் **பந்துவந் தடித்துஞ்**
செவிச்சுவை நிரம்பிய கவிச்சுனை குடைந்தும்
பொழில்விளை யாட லெழில்பெற வாடியும்
அதாஅன்று,
நீர்மே னடந்தும் நெருப்பிடைக் குளித்தும்
பார்முதிர் கருங்கடல் பாறையிற் கடந்தும்
மறைபிணி கதவந் திறவெனத் திறந்தும்
கடுபிணி மாற்றியுங் கடுவிடந் தீர்த்து
மருள்விளை யாட லளவில புரிந்தும்
நாட்புடை பெயர நானில மசைக்குங்
காப்புடை வாழ்க்கைக் **கலைப்பெரு மாட்டியைச்**
செந்தமிழ்ச் செல்வியைத் தேமொழித் தேவியைச்
சந்தனச் சிலம்பியைத் தாமரை யாட்டியைத்
தென்னவன் பாவையைச் செம்பியன் பூவையை
மன்னவன் சேரன் வரைதரு மயிலை
யின்னுயிர் நாவமர் பொன்னிறக் கிள்ளையை

ஏழிசை நறும்பொழில் கூவுவெண் குயிலை
விண்ணகப் புலவர் வெட்கிவா யூற
மண்ணகப் புலவர் வாரிவாய் மடுக்கு
மரும்பெற லமுதைப் பெருஞ்சுடர் விளக்கைத்
தன்னருஞ் சேயிற் றமிழ்மகாஅர்க் காக்கு
மன்னையை யன்னவ ளின்னலொ டுறைதரு
சிறுகுடின் மருங்கிற் குறுகுதிர் குறுகிப்
புறமொழி விழைவெனுஞ் செறியிரு ளகன்றன
மறுவறு புலமை வாரண மியம்பும்
தெளிவெனு மாயிர மொளிநிரை பரப்பிப்
புகழெனும் பரிதி கடன்முக டெழுந்தனன்
அடியவ ருள்ளத் தறிவுகண் மலர
வடிவுடை நெடுங்கண் மலர்திறந் தன்னை
தொழுதகு பள்ளி யெழுகென வெழுப்பிச்
செம்பொற் றவிசி னும்பரி னிரீஇ
யன்புநீ ராட்டி **வெண்கலை யுடுத்திச்**
சைவலப் பூங்குழ லைவகை முடிமின்!
மெய்வகைச் சாந்த விரைக்குழம் பணிந்து
செஞ்சொலிற் றொடுத்த மஞ்சரி வளைமின்!
விதுப்பிறை பழித்த கதிர்ப்புறு நுதலிற்
பொங்கிய மகிழ்ச்சிக் குங்கும மிடுமின்!
உய்வகை மும்மையி னுண்மை தெரித்துத்
**தெய்வப் புலவன்** செய்தருள் மணிமுடி
வணங்காச் சென்னி யிணங்கச் சூட்டி
மென்பணைத் தோளினும் பொன்புணர் மார்பினு
**மூவர் ஆரமு** முனிவர் **கோவையுந்**
தேவர்மா **மணியு** மேவர வமைமின்!
**அன்பி னைந்திணை** யாழ்வார் **திருமொழி**
பொன்புனை மாலை வேய்ந்து மின்பொலி
**குண்டலம் வளை**யெனு மொண்டமி ழிரண்டுங்
காதினும் போதுறழ் கையினு மிடுமின்!
தணியாப் புலமைத் தண்டமிழ்ச் சாத்தன்
**மணிமே கலையை** மருங்குறச் சேர்த்திச்
சேரன் றந்த திருக்கிளர் **சிலம்பு**
வேரியந் தாமரை மெல்லடிப் புனைமின்!



**நாலடிப்** பாதுகை கீழுறக் கொளுவி
நாவணி தந்த **பாவணி பலவும்**
பொருந்துழி பொருந்துழி திருந்துபு பூட்டி
யொப்பி லுடல்பொரு ளாவியென் றுரைசா
லப்ப முப்பழ மமுதமு நல்கி
மெய்ப்பொருள் விளக்கங் காட்டி யற்புட
னாழி முதல்வி வாழிய வென்று
சொல்லாண் டியம்பும் **பல்லாண் டியம்பி**
முத்தமிழ் முக்குண மூவுரு வெனூஅ
முத்தொழில் மூவுயிர் மும்மல மெனூஅ
மூன்று குறித்த முழுவதுங் குறிக்குஞ்
சான்றவ ராய்ந்த தமிழ்மொழி மந்திரம்
"நாவியன் மருங்கி னவிலப் பாடி"
லைமுறை மும்முறை முறைமுறை வாராக்
கண்ணினீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப
நெஞ்சநெக் குருக வஞ்சலி செய்து
செந்திரு நாணச் சிதையா வளமருள்
**சிந்தா மணியே! நந்தா விளக்கே!**
**ஆருயிர் மருந்தே! யடியவர் விருந்தே!**
உற்றவர் களிக்க மற்றவர்க் கொளித்த
**கற்பகக் கனியே! யற்புதத் தேனே!**
அருட்பெருங் கடலே! யிருட்பெருங் கடற்குப்
புணையே! தோன்றாத் துணையே! பிணையே!
கண்ணு நீயே! கருத்து நீயே!
எண்ணு நீயே! யெழுத்து நீயே!
பண்ணிய முதல்வி போற்றியென் றுற்றவு
பண்புடை நன்மொழி கூறி முன்புநின்
தொழுமின்! விழுமின்! எழுமின்! றொழுமின்!
ஆடலு மாடுமின்! பாடலும் பாடுமின்!
மானறி யளவையி னன்றி நீவி
அறிந்தன வறிந்தன புரியிற் சிறந்ததன்
மூவா விளநலங் காட்டி வாய்மலர்ந்
தஞ்சலிர் வாழியென் றின்சொற் கூறி
வரம்பல நிரம்பவு மீயு
மறம்பொரு ளின்பம்வீ டடைந்துவாழ் குவிரே!

# உரை விளக்கம் *

இவ்வாசிரியப் பாட்டிற், செந்தமிழ்ச் செல்வியாகிய நாமகளது வழிபாடு கூறுமுகத்தால், தமிழ்மொழியின் காலங்கடந்த பழமையும், இலக்கண இலக்கிய நூல்களின் பொலிவும், சமயகுரவர் முதலாய அருட்சான்றோர் செய்தருளிய திருமுறை மந்திரச் செல்வமும், மூவேந்தரும் பிறரும் தமிழைப் பாதுகாத்த திறமும், இவை போல்வன பிறவும் கூறப்பட்டுள்ளன.

கி. பி. 1925-ஆம் ஆண்டிலே புலவர் இதனைப் பாடித் தமிழ்ப் புலவர் குழுமிய மாசபையில் அரங்கேற்றி முதற்பரிசும் வித்துவ சந்மானமும் வழங்கப்பட்டார் என்ப.

செந்தமிழ்ச் செல்வி வழிபாடு என்று ஆசிரியர் பெயர் தரினும், இதன்கண் ஆற்றுப்படையின் இலக்கணமும் அமைந்து கிடத்தலின், செந்தமிழ்ச் செல்வி ஆற்றுப்படையெனலும் பொருந்தும்.

பனுவல் – கலை. பிராட்டி – பெருமாட்டி. வம்மின் – வந்து சேருமின். தெய்வத்தன்மை – கடவுட்டன்மை. அஃது, எலும்பைப் பெண்ணாக்கியதும் மறைக்கதவினைத் திறந்ததும் முதலாய அருட்செயல்கள்.

மெய்ந்நெறிப் புலவர் – கற்பன கற்று ஒழுக்கம் நிரம்பிய பொய்யடிமையற்ற புலவர்கள்.

விதானம் – மேற்கட்டி. மானம் என்பது தன்னிலையிற் றாழாமையும், தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம். ஊக்கம் – மனவெழுச்சி. ஒருமை – ஒற்றுமை. நேர்மை – நீதி. வடாஅது – வடக்கிலுள்ளது. குணாது – கிழக்கிலுள்ளது. தெனாஅது – தெற்கிலுள்ளது. குடாஅது – மேற்கிலுள்ளது. பௌவம் – கடல். ஆடகம் – பசும்பொன். திரிபுரம் – முப்புரம். சூர்முதல் – சூரபன்மன். தடிந்த – அழித்தருள் செய்த. மிடல் – வலிமை. தோலாநா – பொய்யாத மெய்ந்நா. அயற்புலம் – அயலிடம். மண்டலம் மூன்று – சேர சோழ பாண்டி நாடுகள். அவை கடவுணெறியிலும் நாகரிகத்திலும் மேம்பட்டு நின்றமையின் "படியுயர் மண்டலம்" எனப்பட்டன.

தெரிதமிழ்ப் பலகை – சிறப்பும் சிறப்பின்மையுந் தெரிக்குஞ் சங்கப் பலகை. குழீஇய – சேர்ந்த. மாட்சி – தெய்வத் திருமாண்பு. திரு – அருட்டிரு. நச்சுநர் – விரும்புவோர். திவவு – யாழ்வலிக்கட்டு. முந்நீர் – கடல். பிள்ளைப் பிறை – இளம்பிறை. வெள்ளியங்கிரி – திருக்கைலாசமலை. உம்பர் – தெய்வநாடுகள். தமிழ் வெள்ளியங்கிரியிலும் தெய்வ நாடுகளிலும் முற்காலங்களிற் பயிலப்பட்டு வந்தவுண்மையைச் சேரமான் பெருமாள் நாயனார் திருவுலா வரங்கேற்றிய

* இந்நூலுக்குரிய உரையும் விளக்கமும் பண்டிதை பா. பரமேசுவரியால் எழுதப்பட்டவை.



வரலாற்றாலும், "சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்" என்னும் திருமந்திரச் செய்யுளாலும் அறிக.

திருவாசகம் என்பது, மணிவாசகப் பெருமான் மெய்யுணர்ச்சி பெற்ற ஞான்று திருவருட் டலைப்பாட்டினாற் பாடிய அருட் பாடல்களைக் கொண்ட தமிழ் மந்திரநூல். இலக்கியம் நயப்போர்க்குத் திருவாசகம் ஓர் இலக்கியப் பூங்கா.

மரு – வாசனை. ஆயம் – கூட்டம். குயில் – குயிற்பத்து. கிளி – திருத்தசாங்கம். பாவை – திருவெம்பாவை. ஊசல் – திருப்பொன்னூசல். அம்மானை – திருவம்மானை. சேரன் – இளங்கோவடிகள். சிலம்பு – சிலப்பதிகாரம். கந்துகம் – பந்து. கந்துகவரிப்பாடல். கவிச்சுனை – செய்யுளாகிய நறுநீர்நிலை. தென்னவன் – பாண்டியன். செம்பியன் – சோழன். விண்ணகப் புலவர் – தேவர்கள். மண்ணகப் புலவர் என்றார், தமிழ்நாட்டுப் புலவர் அல்லாதாரும் தமிழ்ச்சுவை கண்டு அள்ளிப் பருகி இன்புற்றமை தெரித்தற்கு.

புறமொழி விழைவு – ஆங்கிலம் முதலிய வேற்றுமொழிகளிற் கொண்ட காதல் - அக் காதலைச் செறியிருள் என்றார், தம்மையும் தமது மொழிப் புலமையையும் மறைத்தமை நோக்கி. வாரணம் – சேவல். பள்ளி – துயில்.

சைவலம் – பாசி. ஐவகை – கூந்தலை முடிக்கும் ஐந்து வகை. மஞ்சரி – மாலை. விதுப்பிறை – பிறைச் சந்திரன். மூவராரம் – மூவர் தேவாரம். கோவை – திருக்கோவையார். தேவர்மாமணி – திருத்தக்க தேவர் அருளிய சிந்தாமணி. அன்பினைந்திணை – இறையனாரகப் பொருள். குண்டலம் – குண்டலகேசி. வளை – வளையாபதி. இவ்விரண்டு நூல்களும் எங்காவது ஏட்டுப் பிரதியில் இருத்தல் கூடுமென்பது ஆசிரியர் கருத்து.

போதுறழ் – பூவையொத்த. தணியாப் புலமை – மெய்ப்புலமை. நாலடி – நாலடியார். பாதுகை – மிதியடி. பல்லாண்டு – திருப்பல்லாண்டு. எட்டாந் திருமுறையிலுள்ளது. **வேண்டிய தருதலிற் சிந்தாமணி. அழியாக் கலைச்சுடர் தருதலில் நந்தா விளக்கு. மன்னுயிர்களைப் புத்துணர்விற் றழைப்பித்து வளர்த்தலின் உயிர் மருந்து. அடியார்க்குப் புதுமை புதுமையான அருளாடல்கள் செய்தலின் விருந்து. கற்பகதருவிடம் இல்லாத அருள்வளத்தைத் தருதலின் இஃது, அதனினும் மேலாயதோர் கற்பகக் கனி. உண்ணவுண்ணத் தெவிட்டாது வேண்டப்படுதலில் அற்புதத்தேன். ஊழிதோறும் மன்னுயிர்க் கருளலிற் பெருங்கடல். அறியாமையைக் கடத்தற்குத் துணைசெய்தலிற் புணை. உயிர்க்குயிராய்க் கலந்துநின்று பிறவிதோறும் உதவலின் தோன்றாத்துணை.**

# 2. திருப்பள்ளி யெழுச்சி

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
    பைப்பய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
    வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
    சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 1

சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்
    தகுமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
    சிறைபுடை யடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு கரற்றிய வொலியும்
    அடியவர் சயசய வமலையு மலியும்
எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

அன்புடை யடியவர் அகப்புனற் றடந்தோ
    றறிவெனுந் தாமரை முகைநெகிழ்ந் தவிழ்ந்த
வன்புடைப் பேதைமை மடுவினிற் பூத்த
    வஞ்சனை பொய்ம்முதல் மலர்வகை குவிந்த
இன்புடை யறம்பொரு ளின்பமும் வீடும்
    எய்துதல் விருப்பினில் யாவரு மெழுந்தார்
என்புயிர் பெறவருள் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 3

புத்தலர் பூங்குழற் புயல்புறந் தவழும்
    புதுநில வுமிழ்மதி முகமலர் பொழியு
முத்தன விளநகை முறுவலின் கருணை
    முந்துறக் கண்டடி முளரிகள் தொழுவான்
பத்திமை யடியவர் கோயிலின் வாயில்
    பாடின ராடினர் பரவினர் படர்ந்தார்
இத்தரை மதித்திடு முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 4



மீட்டிய யாழினர் குழலின ரொருபால்
    வெண்டுகிற் பட்டினர் விரையின ரொருபால்
சூட்டிய சுண்ணத்தர் வண்ணச்செஞ் சாந்தர்
    குளிர்புனல் மஞ்சனக் குடத்தின ரொருபால்
தீட்டிய செழுந்தமிழ் மாலைய ரொருபால்
    திருவடி வணங்குபு திறையொடு புகுந்தார்
ஈட்டினி லெதிர்தவழ் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 5

அரன்றனைக் கூடலி லழைத்தமை பாடி
    அருமறைப் பூட்டினை யவிழ்த்தமை பாடிச்
சிந்தனை யறுத்துயிர் கொடுத்தமை பாடித்
    தீயின்மே லாடிய திறமையும் பாடி
வரந்தரு வாரமுங் கோவையும் பாடி
    வாசகம் பாடிநல் வாய்மொழி பாடி
இரந்தனர் தொண்டர்கள் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 6

முப்புர மெரிசெய்த முதுபரம் பொருளும்
    முருகனு மொருகுறு முனிவனும் பிறரும்
செப்பிய செழுந்தமிழ்ப் பாண்டிநன் னாட்டில்
    திருவொடும் வளர்த்தருள் செய்தவப் பாவாய்
கைப்பிடி புதுமலர் கொண்டுன தடியார்
    காமரு சேவடி கைதொழ வடைந்தார்
இப்படி துதித்திடு முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 7

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
    தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கிநின் வாய்மொழி கேட்டு
    மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
    பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பூவாய்
அன்னனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

தேவர்கள் பாற்கடற் றீவிடங் கொடுத்தார்
சிவனுக்கு நாற்கடற் செவியமு தளித்தாய்
காவியங் கயல்விழிக் கலைப்பெரு மாட்டி
காசினிக் கேகனி கற்பகக் கனியே
ஆவியை யுருக்கிடு மருமொழிப் பாவாய்
அகத்தியன் மடிமிசை யமர்ந்திடும் பூவாய்
ஏவிய புரிகுவம் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 9

ஆடினர் பாடின ரார்த்தனர் செறிந்தார்
அம்மையுன் வாய்மொழி யருமையை யறிந்தார்
தேடின ரோடினர் சிறுமையை விடுத்தார்
தெருவெங்குஞ் செந்தமிழ்த் தோத்திர மெடுத்தார்
வாடின ருன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

## உரை விளக்கம்

திருப்பள்ளி யெழுச்சி யென்பது, துயிலினின்றும் எழுந்தருளு மாறு வேண்டும் முறைமை. திரு வென்பது சிறப்புப் பொருள் தரும் உரிச்சொல். புறத்திணையிலே இதனைத் துயிலெடைநிலை என்பர். வெண்டாமரைப் பூவிலும் பாவிலும் நாவிலும் வீற்றிருந்து நல்லருள் பாலிக்கும் கலையரசியாம் நாமகளை அருள்செய்து காக்குமாறு வேண்டித் துயிலெழுந்தருள்கவென்று பாடியதிது. திருப்பள்ளி யெழுச்சிக்குத் திரோதான சுத்தி என்பது தத்துவப்பொருள். ஆசிரியர் இதனைக் கி. பி. **1925**-ஆம் வருடத்திலே அருளிச்செய்தார்.

(1) புறமொழி – ஆங்கிலம் முதலாய வேற்றுப்புல மொழிகள். கங்குல் – இருள். புறமொழிகளில் தமிழ்மக்கள் வைக்கும் விழைவினை ஆசிரியர் கங்குல் என்றார், அவ்விழைவு தமிழ்மொழியையும் தமிழ்ப் புலமையையும் மறக்கச்செய்து, அவர்களைத் துயரத்துள் வீழ்த்தி நிற்கும் இயல்பு நோக்கி. வானவன் – சூரியன். துன்னிய – நெருங்கிய. தாரகைச் சூழல் – நட்சத்திரக் கூட்டம். தொண்டர் – மெய்ப் புலவரும் கலைமாச் செல்வருமாவர். நாமகளை முத்தமிழ்க் கடலாகவும் அமுதாகவும் உருவகித்த அழகு நயக்கத்தக்கது.



(2) சந்தனச் சிலம்பு – பொதியம். இசைக் குயில் – நாமகளது புகழாகிய குயில். அருட்பாவினச் சங்கு – தெய்வச் சான்றோர் பாடிய பன்னிரு திருமுறை முதலிய பாவினச் சங்குகள். எதிர் சிலம்புதல் – எதிரொலித்தல். கலைக் குருகு – அறிவுக் கலை அழகுக் கலைகளாய அன்னங்கள். அமலை – ஆரவாரம்.

(3) அகப்புனற் றடம் – நெஞ்சமாகிய வாவி. முகை – கட்டு. அவிழ்ந்த – விரிந்த. பேதைமை மடு – அறியாமையாகிய குளம். மக்கள் நெஞ்சங்களிலே வஞ்சனை பொய் முதலியனவும் வாய்மை அன்பு முதலியனவும் உண்டாதலின் அவையெல்லாவற்றையும் மலர் என்றார். நாமகள் அருளால் நற்குண மலர்கள் விரிந்தும் ஏனைய குவிந்தும் போதல் இயல்பு. அறமுத னாற்பொருளு மடைதலே பிறவிப் பயனும் நோக்கமு மாகலின் அவற்றைப் பெறுதற்கு அறிவுவளம் வேண்டி நாமகள்பா லெய்தினர் என்றவாறு.

(4) புத்தலர் – புதிய மலர். குழற் புயல் – கூந்தலாகிய மேகம். முளரி – தாமரை. பத்திமை – இடையறு வன்பு.

(5) யாழினர் குழலினர் – இசைக் கலைஞர். விரை – வாசனை. ஏட்டினி லெதிர் தவழ்ந்த வரலாறு பெரியபுராணத்தா லறிக.

(6) அரன்றனைக் கூடலிலழைத்தது, அருமறைப் பூட்டினையவிழ்த்தது, சிரந்தனை யறுத்துயிர் கொடுத்தது, தீயின்மேலாடியது என்னும் இவ்வரலாறுகளைப் பெரியபுராணத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் காண்க. ஆரம் – தேவாரம். கோவை – திருக்கோவை. தேவாரமும் திருக்கோவையும் அன்போடு ஓதுவார்க்கு வரந்தருந் தன்மையவாதலின் வரந்தரு வாரமும் கோவையும் எனப்பட்டன. வாசகம் – திருவாசகம். வாய்மொழி – திருவாய்மொழி.

(7) முதுபரம்பொருள் – சிவபெருமான். இப்படி – இப்பூமி.

(8) புறமொழி மாந்தர் – ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், இந்தி முதலிய புறமொழியாளர். புறமொழியாளர் நினது கலைவளங் கண்டு அவற்றைப் பெறுதற்கு வந்தனர் என்க. அலம்புதல் – ஒலித்தல். ஏனன் – எளியேன்.

(9) தேவர்கள் சிவனுக்குப் பாற்கடலிற் பிறந்த நஞ்சினைக் கொடுக்க, நாமகள் நாற்கடலமுதங் கொடுத்தாள் என்க.

(10) சிறுமை – புன்மை; என்றது, தமிழ்க் கல்வியை மறந்து வேற்றுமொழி கற்று அறமுத னாற்பொருளு மிழந்து தவிக்கும் பரிதாப நிலைமை. ஏடு – இதழ். வெண்மலர் – வெண்டாமரை மலர்.

**இத் திருப்பள்ளி யெழுச்சியைப் படிக்குங்கால், இதுகாறும் தமிழ்த் தெய்வத்தை மறந்தோமே, தமிழின் பெருமை இத்தகைத்தோ என்னும் ஓர் உள்ளக் கிளர்ச்சி பிறந்து புத்தார்வமும் புத்துணர்ச்சியும் பொங்கும். அதனால் தமிழ்க் கல்வியும் தமிழ்த் தெய்வ வழிபாடும் மீட்டும் நிலைபெறும். இதுவும் ஒருவகைத் திரோதான சுத்தியாம்.**

## 3. குயிற் பத்து

பொன்பொதிந்த சிலைவளைத்துப் புரமூன் றெய்த
புண்ணியனும் பொறிமயில்வா கனனு மீயத்
தென்பொதிய முனிவளர்த்த திருவி னாளைத்
தென்பாண்டி நாடாளுந் தமிழ்த்தெய் வத்தை
மின்பொதிந்த விடையாளை வெண்பட் டாடை
விரித்துடுத்து வெள்ளைமலர் மேவி னாளைக்
கொன்பொதிந்த மனவிருட்கோர் விளக்கா னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 1

வண்டாடுங் கருங்கூந்தற் காட்டி னாளை
வடமாடு நறுங்களப முலையி னாளைக்
கண்டோடும் மொழியாளைக் கலைவ லாளர்
கவியோடுந் திரிவாளைக் கனலின் மேலே
பண்டேறி விளையாடும் பாவை யாளைப்
பாண்டிநெடும் பதியாளைப் பாடை மாக்கள்
கொண்டாடித் திறைகொடுக்க வளரும் ஞானக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 2

தீராத கொடும்பிணிகள் தீர்க்கின் றாளைத்
தென்பாண்டி நாடாளுந் தமிழ்த்தெய் வத்தை
வாராத சித்தியெலாம் வருவிப் பாளை
மன்னரொரு மூவரையும் வாழ்வித் தாளைச்
சேராதார் மனத்தகத்தே தித்தி யாளைத்
திகழொளியை நறும்பாகைத் தேனைப் பாலைக்
கூராத மனங்கூர்வித் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 3

சூடுபிணியுங் கடுவிடமுந் துரத்தி னாளைத்
தொண்டனுக்குக் கடவுளைத்தூ தாக்கி னாளை
அடுசுவையின் பாலமுதுந் தேனும் பாகும்
ஆகாத வினியமொழி யணங்கி னாளைக்
கடல்புடைசூழ் நெடுநிலத்துப் பதினெண் பாடைக்
காரரும்வந் தடிபரவுங் கற்பி னாளைக்
கொடுவினையும் பிணியுமறுத் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 4



ஆதிநடு முடிவுமிலா தமர்ந்த வாற்றால்
ஆருயிர்கட் குயிராகி யருளு மாற்றால்
ஓதுபணி மொழிதன்பா லுடைய வாற்றால்
ஊழிபல வுலப்பினுமா றுறாத வாற்றாற்
பாதிமதி யேறுசடைப் பரனே யென்று
பாவலர்கள் நிதந்துதிக்கும் பனுவ லாளைக்
கோதுபதி யாதெனையுந் தடுத்தாட் கொண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 5

பங்குக்குப் பட்டபனந் துண்டம் மூன்று
பழமுதவ வாய்மலர்ந்த பாட்டி னாளைக்
கொங்குக்குக் கிழியறுத்துக் கொடுத்திட் டாளைக்
குயக்கொண்டா னுயிர்நீக்கிக் கொடுத்திட் டாளை
அங்கணுல குக்கொளியா யமர்ந்திட் டாளை
அறுந்தசிர மாயிரமு மடைவித் தாளைக்
குங்குமப்பூண் முலையாளை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 6

மூவாத சுவையமுதை முச்சங் கத்து
முளைத்தெழுந்த கற்பகத்தை முடிசேர் மன்னர்
பாவாலே யெழுதுவித்த பாவை யாளைப்
பாண்டிவளம் பதியரசு பயில்கின் றாளைக்
காவலருந் தென்பொதிய மலைமேற் றோன்றுங்
கலையாருஞ் சுடர்மதியைக் கனியைத் தேனைக்
கோவாத மணிமுத்தை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 7

விழிக்கின்ற விழிக்குள்ளே விளக்கா னாளை
மென்கரும்பைச் செழும்பாகை விளரி யாழைப்
பழிக்கின்ற மொழியாளைப் பலதே யத்துப்
பாடைமட மங்கையர்கள் பதஞ்சே விக்க
அளிக்கின்ற வருளாளை யறிவா னாளை
ஆசுமுத னாற்கவியின் பொருளை யள்ளிக்
கொழிக்கின்ற சிவக்கொழுந்தை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 8

அவியாத செழுஞ்சுடரை யன்பர்க் கென்றும்
ஆறாத துன்பமெலா மாற்று வாளைக்
கவியாது மறியாவென் னாவின் மேவிக்
கவியுரைத்துக் கேட்டுமகிழ் கலைவ லாளைப்
புவியாத ரித்ததமிழ் புகல்கின் றாளைப்
பொதியமலை முனிமடியிற் பொருந்தி னாளைக்
குவியாத கஞ்சமலர் முகத்தி னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 9

மெய்ம்முழுதும் பால்போலு நிறத்தி னாளை
மேவுமறம் பொருளின்பம் வீடா னாளைக்
கையொருநான் குடையதமிழ்க் கற்ப கத்தைக்
கரும்புருவச் சிலையாளைக் கனிவா யாளைத்
தொய்யில்வன முலையாளைச் சுடருஞ் சங்கத்
தொடியாளைப் பிடியானை நடையி னாளைக்
கொய்ம்மலர்ச்சே வடிகாட்டி யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 10

## உரை விளக்கம்

திருப்பள்ளியினின்றும் எழுந்திருக்கும் நாமகளைக் கூவியழைக் குமாறு காலைக் குயிலை ஆசிரியர் வேண்டுகிறார்.

(1) எல்லாவுலகுக்கும் அறிவுக்கலையை அருளிநிற்கும் நாமகளைத் தென்பாண்டி நாடாளுந் தமிழ்த் தெய்வமென்றார், அத்தெய்வம் தனது இருக்கையைப் பாண்டிநாட்டிலே வைத்து எல்லாவுலகினையும் ஆண்டு வந்தமை காட்டுதற்கு. "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி" என்று மணிவாசகப் பெருமான் இறைவனைக் கூறுவதுங் காண்க. கொன் – பயனிலாமை. மன விருள் – அறியாமை.

(2) களபம் – சந்தனக் கலவை. கண்டு – கற்கண்டு. ஓடுதல் – இனிமைக்குத் தோற்றுப் புறங்காட்டி ஓடுதல். பாடை மாக்கள் – ஏனைய மொழி பயிலும் வேற்று நாட்டு மக்கள். அவர்கள் திருக் குறள், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவாசகம் முதலிய நூல்களைத் தமது பாடையில் மொழிபெயர்த் தெழுதிப் பயின்று அறிவு விளக்கம் பெறுகின்றனர். அந்நன்றியைக் கொண்டாடி அவர்கள் தமிழ் மொழியை நெஞ்சார வாழ்த்தித் துதித்தலைத் திறை என்றார்.



(4) தொண்டன் – சுந்தரமூர்த்தி சுவாமிகள். தமிழ் மொழி யின் தொன்மையும் கலைவளமுங் கண்டு பதினெண்பாடை மக்களும் வருகின்றனரென்க.

(5) முதல் மூன்று அடிகளும் நாமகளுக்கும் இறைவனுக்கும் சிலேடை. ஆதி நடு முடிவுமிலாதமர்ந்தது—இறைவனுக்குப் பொருள் கொள்ளுமிடத்துத் திருமாலுக்கும் நான்முகனுக்கும் இடையே ஆதி நடு முடிவின்றிச் சோதிவடிவாய் நின்றதை உணர்த்தும். நாமகளுக் குக் கொள்ளுமிடத்து, மாயை காரியப்பட்ட காலத்துச் சுத்த மாயை யினின்றும் தமிழ் தோன்றியமையின் அதற்கும் ஆதி நடு முடிவின்மை கொள்க. ஆருயிர்கட் குயிராகி அருளுமாற்றால்—அநாதியே ஆணவ மலத்தாற் கட்டுண்ட மன்பதைகட்கு உயிராக நின்று ஐந்தொழில் புரிந்து அருள் செய்யுந் திறமென இறைவனுக்கும், மன்னுயிர்களுக் கெல்லாம் அறியாமை நீங்க அறிவுயிர்ப்பைக் கொடுத்து அருளுந் திறமென நாமகளுக்குங் கொள்க. ஓதுபணிமொழி தன்பாலுடைய வாற்றால் – அடியவர்கள் அன்பினாற் பணிந்துகூறும் பாடல் மொழி களை உடைமையால் என நாமகளுக்கும், உமாதேவியாரை இடப் பாகத்துடைமையால் என இறைவனுக்கும் கொள்க. ஊழிபல ஏலப் பினு மாறுாத வாற்றால் – படைப்பின் தொடக்கத்திற் சுத்த மாயையினின் றும் தோன்றி, மறையுங் கலையும் மந்திரமுமாய் விரிந்து, உலகு நிலவுந் தோறும் நிலவி, ஒடுங்கும்வழி மீட்டும் அச்சுத்த மாயையிலே ஒடுங்குதலின் பலவூழிகாலக் கழிவினும் அழியாது நிற்குமெனத் தமிழ்மொழிக்கும், எல்லாப் பொருள்களையும் தனக்குள்ளே அடக்கித் தான் பிறிதொன்றிலே அடங்காது நின்று, அப்பொருள்களனைத்தையும் இயக்குவித்து ஊழிதோறும் தன்னியல்பு திரியாது நிற்குமென இறைவனுக்கும் கொள்க. கோது – அறியாமையா கிய குற்றம்.

6. பங்குக்குப் பட்ட பனந்துண்டம் மூன்று பழமுதவ வாய் மலர்ந்த பாட்டு—"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண் டியனும், மங்கைக் கறுகிட வந்துநின்றார் மணப் பந்தரிலே, சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்துக், கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு, நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி சிவந்து, பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே" என வரும் ஔவையார் பாட்டு. கொங்குக்குக் கிழியறுத்துக் கொடுத்தது – தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது. குயக்கொண்டா னுயிர் நீக்கிக் கொடுத்தது—கடைச்சங்க காலத்தில் ஆரியம் நன்று தமிழ் தீதென்று வம்புரை கூறிய குயக்கொண்டான் நக்கீரனாரால் சாகவும் பிழைக் கவும் பாடப்பட்டது. அறுந்தசிர மாயிரமு மடைவித்தது – ஒட்டக் கூத்தர் செங்குந்தர் மரபிற் பிறந்த தமிழ்ப் புலவர். இவரைச் செங் குந்தர் தங்கள்மீது பிரபந்தம் பாடுமாறு கேட்க இவர் குலப்புகழா மென்று மறுத்தனர். அதனாலவர்கள் வெகுண்டெழுந்து இவரைக் கொல்ல முயன்றனர். இவர் தன்பாலன்புள்ள சோமனென்பவனி

டம் அடைக்கலம் புகுந்தார். சோமன் இவரைக் காக்க விரும்பித் தனது மகளைப் பேழையொன்றிலடைத்துத் தன் வீட்டைச் சூழ்ந்து நின்ற செங்குந்தர்பாற் காட்டி இதன்கணுள்ள கூத்தரை நீங்கள் விரும்பியவாறு செய்ம்மின் என, அவர்கள் அப்பேழையைக் கொண்டு போய்ப் பார்க்கையில் அதனுள்ளே சோமனது மகளிருக்கக் கண்டு சோமனது வண்மையை வியந்து அவளைப் போகவிட்டனர். சோமன் செங்குந்தரை நோக்கி நீங்கள் உமது வீரத்தை இப்போது காட்டுவீ ராயின் புலவர் உங்களைப் பாடாதிரார் என, அவர்களுடன்பட்டு ஆயி ரங் குந்தரது சிரங்களை அறுத்துக் குலோத்துங்க சோழனது அரண் மனைக்கு முன்னே சிங்காசனம்போல வடுக்க அச் சிர சிங்காசனத்தி லிருந்து ஒட்டக்கூத்தர் நாமகளை நினைந்துபாடி அறுந்த சிரங்களை ஒட் டச்செய்தனர். சோழன் கண்டு வியந்து இவருக்கு ஒட்டக்கூத்தர் எனப் பெயருங் கொடுத்து இவர் மரபினருக்குச் சிறப்புஞ் செய்தான். அதன்பின் கூத்தர் ஈட்டியெழுபது என்னும் பிரபந்தம் பாடித் தமது மரபினைச் சிறப்பித்தார்.

8. விளரியாழ் – நெய்தல் யாழ். ஆசுமுதல் நாற்கவி – ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைச் செய்யுள்.

9. குவியாத கஞ்சமலர் – இல்பொருளுவமை. தொய்யில் – முலையிலும் தோளிலும் எழுதுங் கோலம்.

---

# 4. ஆசைப் பத்து

**ம**ஞ்சுதவழ் நெடுங்குடுமி மாடக் கூடல்
மன்னுதமிழ்ச் சங்கமணித் தவிசின் மேவிப்
பிஞ்சுமதி வேணியனுங் குமர வேளும்
பெரியதவக் குறுமுனியும் பிறருஞ் சூழக்
கஞ்சமலர் மதிமுகமும் பவள வாயும்
கயல்விழியுங் கமலமலர்த் தாளுங் கொண்டே
அஞ்சொலொரு மூன்றுமருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 1

**கா**தரிக்கப் பேசுபுற மொழிபோ லாது
கல்லினையு முருக்குமொழி கனிந்த வாயும்
பாதரித்த பணைத்தோளும் படிக மாலை
பனுவலியாழ் பரிக்குமொரு கரங்க ளுன்கும்
கோதரித்தென் தலைமிசையே குலவச் சூட்டுங்
கோகனதத் தாள்களுமாய்க் கூடி யன்பர்
ஆதரித்துப் போற்றவருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 2



**எ**ழுத்துவகை யீரைந்து முகம தாக
இயல்மொழியும் புணர்வுமிரு விழிக ளாக
வழுத்துமொரு சொன்னான்குங் கரங்க ளாக
மருவுதொட ரியலரிபோ லிடைய தாகக்
கொளுத்துமிரு வகைப்பொருளுங் கொங்கை யாகக்
கூறுமியாப் பைவகையு மொழிக ளாக
அழுத்தமுறு மணியணியாந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 3

**வ**ள்ளுவன்முப் பால்முடித்து மணிகள் சூடி
வளையினெடு குழையணிந்து மாலை வேய்ந்து
தெள்ளுதமிழ்த், தேவாரம் புனைந்து ஞானத்
திருக்கோவை பூண்டுமே கலையுஞ் சேர்த்தித்
தள்ளரும்வா சகம்பேசிச் சிலம்பு பூட்டித்
தளிரடிமேல் நாலடிப்பா துகையு மாட்டி
அள்ளுமழ கொழுகவருந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 4

**வா**தளித்த புத்தனையு மூமை யாக்கி
மன்னன்மகள் மூங்கைதனை மாற்றிப் பஞ்ச
வேதனைக்குப் பொருளருளிப் பிணிகள் வீட்டி
விரிபசும்பொன் னாற்றெறிந்து குளத்தே கண்டு
சூதடுத்த சமணர்சுடர்க் கழுவி லேறச்
சுடுநெருப்பின் மீதேறித் தொண்டர் சூழ்ந்தே
ஆதரித்துப் போற்றவருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 5

**வ**ளவியதென் பொதியமலைச் சாரல் போகி
மறுபுலமங் கையர்சூழ மணிப்பூக் கொய்தும்
மழுகுபசுங் கிளிமிழற்றிக் குயிலைக் கூவிப்
பந்தடித்து மணியூசல் பரிவி னுந்தி
ஒழுகுசுனை நீர்குடைந்து வேங்கை நீழல்
ஒருமயில்கண் டடனுடிக் கீதம் பாடி
அழகொழுக விளையாடுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 6

மங்குலுறை வேங்கடமுங் குமரி யாறும்
வாரிதியும் நான்குபுடை மதில்க ளாக்கிச்
சங்கமுறை முறைகூட லரணஞ் சூழ்ந்த
தலைநகரா யறமுதலாந் தானை போற்றத்
தங்கமுடி மன்னர்திரு மேனி காக்கத்
தூயகவி வாணர்சொலுஞ் சொற்கோ லோச்சி
அங்கணுல குயிராளுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளுவாயே. 7

குழல்திருத்தி யலர்முடித்துத் திலதந் தீட்டிக்
கோவிரண்டு மையெழுதிக் குழைகள் பூட்டி
வளையலிட்டுக் கச்சணிந்து வடங்கள் மாட்டி
மாசுதவிர் மேகலையை மருங்கிற் கூட்டிப்
பழையதமிழ்ச் சிலம்பணிந்து பட்டு டுத்திப்
பார்வையெட்டால் மலரயனுர் பார்க்கப் பார்க்க
அழகொழுக வழுதொழுகுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 8

மண்ணகத்தார் செவிவாயால் வாரி யுண்ண
வானகத்தார் வாயூறி மறுகுங் கோலம்
எண்ணகத்து மெழுத்தகத்து நிறைந்த கோலம்
இறையவன்வாய் மொழியிலிருந் தெழுந்த கோலம்
பண்ணகத்த வேழிசையாய்ப் பயின்ற கோலம்
பாவகத்தும் நாவகத்தும் பரவுங் கோலம்
அண்ணகத்துச் செழுஞ்சுடராந் தெய்வக் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 9

படிபுகழுங் கவிகாள மேக முன்னுட்
பாரரச னுடனிருக்கப் பரவுங் கோலம்
வடிதமிழா லடியெடுத்து மதுரங் கைப்ப
மறலிகண்டத் தாகசொல வமைந்த கோலம்
கடிகமழ்தார் முடிமன்னன் வாரம் போகக்
காரினமண் மாரிபெயக் கனன்று மேனுள்
அடியெடுத்த சிலம்பொருவர்க் கருளுங் கோலம்
ஆசையுற்றே னினிக்காட்டி யருளு வாயே. 10

# உரை விளக்கம்

**நா**மகளது அருள் வடிவத்தைத் தியானமுகத்திற் காணுதற்கு ஆசையுற்ற ஆசிரியர் அதனைக் காட்டியருளுமாறு வேண்டுகின்றார்.

(1) மஞ்சு – மேகம். மணித் தவிசு – அழகிய இருக்கை. பிஞ்சு மதி வேணியன் – இளம்பிறையை முடியிற்றரித்த சிவபிரான். கஞ்ச மலர் – தாமரைப் பூ. தாமரைப் பூவையும் பூரண சந்திரனையும் ஒத்த முகம். அஞ்சொலொரு மூன்று – இயல் இசை நாடகமாகிய முத்தமிழ்.

(2) உரப்பியும் கனைத்தும் எழுப்பும் இயற்கைக்கு மாறான ஒலிக்கூட்டங்களையுடைய ஆங்கிலம் இலத்தீன் சிங்களம் முதலிய மொழிகளின் வல்லோசைகள் காதுகளைத் துளைத்துத் துன்பம் செய்வனவாதலின் **"காதரிந்தப் பேசு புறமொழி"** யென்றார். தமிழ்மொழி இயற்கைக் கமைந்த மெல்லோசைக் கூட்டங்களை யுடைமையாற் கல்வியினையும் உருக்குமென்றார். பாதரித்த – பாடல்களை மாலையாக வணிந்த. பாத்தரித்த எனற்பாலது பாதரித்த எனக் குறைத்தல் விகாரம் பெற்று நின்றது. கோதரித்து – அறியாமையாகிய குற்றத்தை நீக்கி. கோகனதம் – தாமரை.

(3) இருவகைப் பொருள்–அகப்பொருள் புறப்பொருள்என்பன.

(4) முப்பால் – திருக்குறள். மணிகள் – சீவகசிந்தாமணியும், நான்மணிக்கடிகை மும்மணிக்கோவை என்பனவும். வளை – வளையாபதி. குழை – குண்டலகேசி. மாலை – பாமாலைகள். மேகலை – மணிமேகலை. வாசகம் – திருவாசகம். சிலம்பு – சிலப்பதிகாரம். நாலடிப் பாதுகை – நாலடியாராகிய மிதியடி. மாட்டி – கொளுவி.

(5) வாது – வழக்கு. அழிவழக்குரைத்த புத்தன் ஊமையாயமையும், அரசன் மகள் மூங்கை நீங்கியமையும் திருவாதவூரடிகள் புராணத்திற் காண்க. சூது – வஞ்சனை.

(6) வளவிய – வளப்பம் மிகுந்த. மறுபுல மங்கையர் – வேற்றுப்புல மொழிகளாகிய மடவார். மலர்பூ – மலர்ந்த பூ. **வேற்றுப்புல மடவார் குற்றேவல் செய்யப் பொதியமலைச் சாரலிலே கிளியொடு பேசியும் குயிலுடன் மாறு கூவியும், பந்தடித்தும், ஊசலாடியும் சுனை குடைந்தும், மயில்நடங் கண்டும், வண்ணப் பாடல் படித்தும் விளையாடி வருகின்ற தெய்வ அருட்கோலமென்க.**

(7) மங்குல் – மேகம். வாரிதி – கடல். பழந்தமிழகத்தின் கிழக்கு மேற்கு எல்லைகள் கடல் என்க.

**வேங்கடமுங் குமரியும் கடல்களும் நான்கு மதிலாக, மதுரையம்பதி தலைநகராயமைய, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் தானையாகி நின்று புறத்தே பாதுகாக்க, மூவேந்தரும் பிறரும் மெய்**

**காப்பாளராயமையத் தூய நெஞ்சினராகிய புலவர்களது சாயாத சொல்லாஞ் செங்கோல் தாங்கி, உலகத்து மன்னுயிர்களைப் பொதுவற ஆட்சி செய்யாநிற்கும் தெய்வக்கோலம் என்க.**

(8) கோ – கண். குழைகள் – காதணி வகைகள். பார்வை – கண். அயன் – பிரமன். பிரமன் எட்டுக் கண்களாலும் பார்த்து இன்புற்ற திருக்கோலத்தை ஆசிரியர் அகக்கண் ஒன்றினாலே கண்டு இன்புறுதலை வேண்டுகின்றார். அமுது – தியானமுகத்திலடையும் பேரின்பம். "அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறு மேற்றினன்", எனவரும் மணிவாசகப் பெருமான் வாக்கும் ஓர்க.

(9) செவிவாய் – செவியாகிய வாய். வாரி – ஒருசேர அள்ளி. மறுகும் – வருந்தும். எண் – தருக்கமும் கணிதமும். எழுத்து – இலக்கியமும். இலக்கணமும்.

(10) படி – உலகம்.

காளமேகப் புலவர் ஒருமுறை திருமலைராயன் சபைக்குச் செல்ல, அங்கிருந்த புலவர்கள் பொறாமையினாலே அவரை ஏற்றுக் கொள்ளாது இகழ்ந்தனர். அரசனும் புலவர்கள் பக்கமாக நின்று அவருக்கு இருக்க ஆசனங் கொடாதிருந்தான். உடனே அவர் நாமகளை நினைந்து சரசுவதிமாலை பாடித்துதிக்க அரசனிருந்த ஆசனம் வளர்ந்து இடந் தந்தது. அவர் அவ்விடத்திலிருந்து அரசனவைக்கண் இருந்த புலவர்களைப் பலவிதமாகவும் பாட்டில் வென்று யமகண்டம் பாடிப் புகழ்பெற்றார். அப்போதும் அரசன் அவருக்குச் சிறப்புச் செய்ய நினையாது, தனது அவையத்துப் புலவர்கள் பக்கமாகவே நின்றான். அதுகண்ட காளமேகம் வெகுண்டு,

"கோள ரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர் — நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்"

என்று வசைபாடித் திருமலைராயன் பட்டணத்தைத் திரும்பிப் பாராமற் செல்லப் பட்டணம் மண்மாரியால் நிறைந்தது என்பது இப்பாட்டிற் குறித்த கதைச் சுருக்கம்.

மதுரம் – அதிமதுரகவி. காளமேகத்தின்முன் மதுரகவி கைத்துப்போய்விட்டதென்ற நயம் வியக்கத்தக்கது. மறலிகண்டத் தாசு – யமகண்டம் என்னும் ஆசுகவி. முடிமன்னன் – திருமலைராயன். வாரம் போக – ஒருபக்கம் சார. காரினம் – மழைமேகக் கூட்டம்.

அடியெடுத்த சிலம்பொருவர்க் கருளுங் கோலம் – கம்பருக்குச் சிலம்பு கொடுத்த கோலம். அது வருமாறு:— கம்பர் ஒருமுறை பாண்டிநாடு சென்றபோது, அங்கே கம்பராமாயணப் பிரசங்கம் நடந்தது. அவர் அதிலே வியக்கத்தக்க இடங்களில் வியக்காமை கண்டு



அரசன் அவரது வரலாறு வினாவினான். அவர், தான் கம்பர் கற்றுச்சொல்லி என்று கூறிக் கம்பராமாயணப் பிரசங்கஞ் செய்து காட்டினர். அதைக் கேட்டு அரசன் அவரிடத்து அன்பு கொண்டதைக் கண்ட சபைப் புலவர்கள் பொறாமை கொண்டு அம்பட்டனொருவனுக்குப் பொருள் கொடுத்துக் கம்பரைத் தம்மவர் என்று கூறச் செய்தனர். கம்பர் சிறிதும் அஞ்சாது சரசுவதியின் திருவடிப் பொற்சிலம்பில் ஒன்று பெற்று அதைப் பாண்டியனுக்குக் காட்டி, இப்படிப்பட்ட சிலம்பொன்றை என் தாயாதியாகிய இவனுக்கும் எங்கள் முன்னோர் கொடுத்துப் போயினர். அதை அவன் தரின் இரண்டும் அரசபத்தினிக்கு ஆகும் என்றனர். அம்பட்டன் தன்னிடம் இல்லாமையைத் தெரிவித்து அரசனது தண்டனைக்குப் பயந்து உள்ள காரியத்தை யொழியாது சொன்னான். அது கேட்ட அரசன் வெகுண்டு அவைப் புலவர்களைத் தண்டிக்க எண்ணுகையிற் கம்பர் அவர்களின் உயிரைக் காக்க நினைந்து அரசனுக்குச் சரசுவதி தரிசனங் காட்டிச் சிலம்பினைச் சிலம்பில்லாத திருவடியிற் சேர்த்துச் சரசுவதி அந்தாதி பாடித் துதித்தார். அரசன் அவரைக் கம்பரென அறிந்து தானும் தேவியுமாகப் பல்லக்கிலேற்றிச் சுமந்து சிறப்புச் செய்தான் என்பது.

## 5. வருகைப் பத்து

வண்டார் வெண்டா மரையன்றி
மாசு கலவா மாமாயை
மடுவிற் பூத்த வோங்கார
வட்டக் கமல மலரகத்தும்
கண்டார் உளத்தும் பாவாணர்
கவியி னகத்தும் தென்பொதியக்
கடவுட் சிலம்பின் சந்தனப்பூங்
கடியார் வண்ணப் பொழிலகத்தும்
பண்டேர் ஞானப் பசுங்குழவி
பாடி யிட்ட வேடகத்தும்
பரவு மடியார் நாவகத்தும்
பயிலும் பாதப் பெருமாட்டி
தண்டாப் பெருமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 1

போற்றும் முப்பா லமுதருளும்
பொய்யா மொழியைப் பொற்சிலம்பு
புனைந்த சேரல் இளங்கோவைப்
புகழ்சேர் கம்ப னெனுங்கவியைக்
கூற்ற மிகுமே கலைதொடுத்த
கூல வணிகன் சாத்தனைக்
கோது குலவா முச்சங்கப்
புலவர் குழுவை யடிமைதெளி
தேற்றுந் தெய்வக் கவிமொழிந்த
சேக்கி ழாரைக் கச்சிவரு
தெய்வ முனியைச் சிவஞான
தேவன் றன்னை யுலகிலருள்
சாற்றும் பெருமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 2

நீலக் கடுவை யமுதாக்கி
நெருப்பிற் குளித்து வைகைநதி
நீர்மேல் நடந்து கற்றுணையாய்
நெடுநீர்ப் புணரிக் கடனீந்திப்
பாலைப் புரையும் பிறைச்சடிலப்
பரமன் பாத மலர்வருந்தப்
பலகாற் றூது நடப்பித்தும்
பாவை யெலும்பு பெண்ணாக்கி
மேலைச் சுருதிப் பூட்டறுத்து
வெப்புக் கொடுநோய் குளிர்வித்து
வேழம் பணிவித் துடற்கூலி
விடுவித் தனந்தம் விளையாடல்
சாலப் புரியுந் தமிழகத்துத்
தாயே தலைவி வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 3



அலைசேர் கடலிற் குளிர்மதியே
கடவுண் மணியே கற்பகமே
கனக நிதியே நாற்பாலுங்
கறக்குங் காம தேனுவே
நிலைசேர் பொருளே யெழுபிறப்பும்
நீங்கா துடனாய் நின்றுதவு
நேயத் துணையே யாருயிரே
நினைவே நினைவின் முழுநிறைவே
மலைசேர் தெய்வ மணிவிளக்கே
மலையத் தலையிற் குறுமுனிவன்
மடியிற் கிடத்தித் தாலாட்டி
மகிழ்வின் வளர்த்த மலர்க்கொடியே
தலைசேர் கற்பின் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 4

தேனே பாகே நறும்பாலின்
திரளே கரும்பின் செழுஞ்சாறே
தெவிட்டா வமுதே யெனச்சுவைக்குந்
தெய்வத் தமிழின் தீங்குதலை
மானே மயிலே மடப்பிடியே
மாடப் புறவே மாங்குயிலே
வன்னக் கிளியே பொன்னனமே
மலர்மேற் பாவாய் மணிப்பூவாய்
ஆனேன் றுடையா னிருசெவிகட்
கன்பே முருகன் அகநிறையும்
ஆசைப் பெருக்கே தவப்பயனே
அறிவே தூண்டா மணிவிளக்கே
தானே தனைநேர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 5

வானப் புலவர் மந்தரமால்
வரையைத் தமரத் திரைநிறுத்தி
மணிப்பொற் சூட்டுப் பொறித்துத்தி
யரவு வடத்து வலித்தநாள்
ஊனத் துடனே யெழுந்தவமு
துண்டா ரினிக்கு மதுநாண
ஓதக் கலைத்தீந் தமிழ்க்கடலில்
உலகப் புலவர் நனிகடையக்
காணக் கேட்க நெஞ்சகத்துக்
கருதக் கதிக்கும் பிறப்பேழும்
கலந்து சுவையும் பயனுமருள்
கடவு ளமுதா யெழுந்தவளே
தானத் துயர்ந்த தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 6

கண்ணே கண்ணுட் கருமணியே
மணியுட் கதிரே கதிரொளியே
காணு மறிவே நல்லறிவிற்
கலந்து விளங்குங் காட்சியே
எண்ணே யெழுத்தே யேழிசையி
னின்பே யின்பி லெழுபயனே
ஏழைக் கிரங்கும் பெருங்கருணை
யெம்பி ராட்டி யென்றடியேம்
உண்ணே யத்தோ டுனைக்கூவி
யோல மிட்டு நின்றழைத்தால்
உளுற்றும் பிழைகள் பொறுத்துவரா
துங்கே யிருக்க வழக்குண்டோ
தண்ணேர் தலைமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 7





என்னைப் புரக்கும் மன்னரிலை
இயற்சீர் பரவும் புலவரிலை
இனிமை விழையும் மக்களிலை
ஈவோ ரில்லை யென்றிரங்கி
வன்னக் கருணை வடிவழகி
வாரா திருக்க விதியில்லை
மனத்தின் படியே வினைபுரியும்
மைந்தர் பலரு மிருக்கின்றார்
முன்னைப் பொருட்கு முதற்பொருளே
மூவா விளமை மொழியணங்கே
முந்நீர் வளைத்த வியனுலக
முழுது மாண்ட பெருமாட்டி
தன்னைத் தனிநேர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 8

அப்பார் சடையா ராரமே
அருண்மா ணிக்கக் கோவையே
ஆசை பெருக்கும் வாசகமே
அம்மை யுமையாள் கண்மணியே
முப்பா லுலகுங் காவல்புரி
மூவா முகுந்தன் வாய்மொழியே
முருகப் பெருமான் திருப்புகழே
மூத்த நயினார் மணித்தொடையே
எப்பா லவர்க்கும் முப்பாலே
யிருடீர் ஞான சூத்திரமே
ஏழை யெனையும் பொருட்படுத்தி
எடுத்தாட் கொண்ட பெருமாட்டி
தப்பா வாய்மைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 9

நேரா தயலார் பழித்தாரோ
செல்வப் புதல்வர் மறந்தாரோ
திருவார் கலன்கள் மறைந்தனவோ
தீயும் நீரு முண்டனவோ
வாராக் காலம் வந்தனவோ
மன்னர் ஆட்சி யிழந்தனரோ
வள்ளன் மார்கள் குறைந்தனரோ
வாய்மைப் புலவர் போயினரோ
ஆரா வமுதே யருட்கடலே
அன்பின் பெருக்கே யகச்சுடரே
அன்னாய் வருக வெனவழைத்தால்
அணையா திருக்க விதியுண்டோ
தாரார் வேந்தர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 10

அன்னே வருக மெய்ந்நாவி
னமுதே வருக வாருயிர்கட்
கறிவே வருக அறிவிலெழு
மன்பே வருக அன்புதரும்
பொன்னே வருக புந்திமலர்ப்
பூவே வருக பூவிலமர்
பொறியே வருக பொறிகடந்த
பொற்பே வருக கருணைமழை
மின்னே வருக நாதவிந்து
வெளியே வருக வெளியிலொளிர்
விளக்கே வருக மெய்ந்நூலின்
வித்தே வருக வியனுலகில்
தன்னே ரில்லாத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 11

# உரை விளக்கம்

தாயிலைக் கூவுமாறு வேண்டியும், தெய்வத் திருக்கோலத்தைக் காணுதற்கு ஆசைப்பட்டுக் குறையிரந்தும் நின்ற ஆசிரியர், இப் பதிகத்தால் அருள்புரிய வருமாறு நாமகளை வேண்டுகின்றார்.

(1) மாசு கலவா மாமாயை – சுத்த மாயை. மடு – வாவி. சுத்த மாயை வாவியாகவும் ஓங்கார வடிவம் அதிற்றோன்றிய தாமரையாகவும் உருவகிக்கப்பட்டன. பாவாணர் – புலவர். கடவுட் சிலம்பு – தெய்வத்தன்மை பொருந்திய மலை. கடி – வாசனை. வண்ணம் – அழகு. ஞானப் பசுங் குழவி – மூன்று வயதிலே ஞானப்பாலுண்டு மெய்ஞ்ஞானங் கைவரப்பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார். ஏடு – தேவாரம் எழுதிய ஏடு. தண்டா – குறையாத.

(2) முப்பால் – திருக்குறள். பொய்யாமொழி – திருவள்ளுவர். கூற்றம் – புகழ். கோது – குற்றம்.

(3) கடு – நஞ்சு. புணரி – கடல். சடிலம் – முடி. சுருதி – வேதம். வேழம் – யானை. அனந்தம் – பலப்பல.

(4) கடவுண்மணி – சிந்தாமணி. நாற்பால் – அறம் பொருள் இன்பம் வீடு.

(5) ஆனேறுடையான் – சிவன்.

(6) வானப் புலவர் – தேவர்கள். தமரம் – ஒலி. தமரத் திரை – அன்மொழியாய்க் கடலை உணர்த்தியது. பொறித்துத்தி – பொறியை உடைய படம். வலித்தல் – இழுத்தல். உலகப் புலவர் – கவிஞர். ஏழு பிறப்பிலும் கலந்து சுவைத்தலோடு அறமுதனாற்பயனுந் தருதலின் பாற்கடலமுதம் நாணுவதாயிற்று.

(7) உண்ணேயம் – மனவுருக்கம். வழக்குண்டோ – முறைமையுண்டோ, இல்லையென்றபடி.

(8) சேர சோழ பாண்டியரைப் போல இந்நாளில் தமிழைப் பாதுகாக்கும் மன்னவர் இல்லை என்க. ஈவோர் – புலவர்களை ஆதரிப்போர்.

பண்டுபோலப் புரப்போரும் பரவுவோரும் நயப்போரும் இந்நாளில் இல்லாமை நோக்கி வாராதிருக்க வேண்டாம்; வருக என்றவாறு.

(9) அப்பு – கங்கை. ஆரம் – தேவாரம். அருள் மாணிக்கக் கோவை – மணிவாசகப்பெருமான் அருளிய திருக்கோவை. வாசகம் – திருவாசகம். முகுந்தன் – திருமால். வாய்மொழி – திருவாய்மொழி. மூத்த நயினார் – பிள்ளையார். மணித்தொகை – மும்மணிக்

கோவை, நான்மணிமாலை முதலியன. ஞானசூத்திரமே – சிவஞான போதம்.

ஏழை...............பெருமாட்டி—இந்நூலாசிரியர் தமது பன்னிரண்டாவது ஆண்டிலே, இலக்கணமறியாப் பருவத்திலே, தமிழிற் பாடுமாறு பணித்து அருள்செய்த பெருங்கருணையை இவ்வடியினுற் கூறுகின்ருர்.

(10) தேராது – பெருமையை ஆராய்ந்து தெளியாது. செல்வப் புலவர் – தமிழ்மக்கள். கலன்கள் – ஆபரணங்கள் போன்ற நூல்கள். உவமையாகுபெயர்.

இக்காலத்திலே தென்னிந்தியப் புலவர்கள் தமிழ் மரபினையும் இலக்கண இலக்கிய வரம்பினையும் அழித்து வருகின்றனர். தமிழில் எழுத்துக்களை மாற்றியும் குறைத்தும் கூட்டியும் திருத்த முற்படும் புலவர்கள் பலர். கம்பன் எழுதிய காப்பியத்தைத் திருத்திப் பழி தேடும் இரசிகமணிகள் சிலர். இவைகளைக் குறித்கொண்டு **வாராக் காலம் வந்தனவோ** என்ருர்.

(11) பொறி – இலக்குமி. பொறிகடந்த – ஐம்பொறிகளின் அறிவைக் கடந்த.

## 6. செந்தமிழ்க் குலதெய்வம்

ஏர்கொண்ட முக்கணன் சடைகொண்ட விளமதியி
னெழில்கொண்ட திலதநுதலும்
ஏறுமயில் வாகனன் கைக்கொண்ட கூர்வே
லிரண்டுகொண் டொளிர்விழிகளும்
நீர்கொண்ட குமுதமலர் நிறைகொண்ட திருவாயும்
நித்திலங்குடி கொண்டநகையும் [கை
நெடியவன் வாய்கொண்ட வேய்கொண்ட தோளுமு
நேர்கொண்ட வனமுலைகளும்
கார்கொண்ட மின்னிடையு மனநடையு மொலிகொண்ட
கனகதண் டைக்கால்களும்
கண்கொண்டு கண்டுளங் களிகொண்டு வாழ்ந்திடக்
கருணைகொண் டிடுவதெந்நாள்
சீர்கொண்ட பாமாலை திறைகொண் டுளங்கொண்ட
தேவியே கருணைபுரிவாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 1



ஓயாம லெவர்கட்கு மொண்பொரு ளளிக்கின்ற
வுயர்குறளொ ரைந்துதருவாய்
ஒருநால்வர் திருவாயி னுதவுமறை சிவஞான
முறுபோக முதவுமமுதாய்
மாயாத விருதேவர் மணிகள்திரு மணிகளாய்
மாமூல னருள்மந்திரம்
வற்றாத பால்பொழிந் தருள்காம தேனுவாய்
வண்டமிழ்ப் புலவர்சுரராய்
வேயாத மாடமலி கூடலம் பதியரசு
மேவுமத் தாணியாக
விண்ணுலக மண்ணுலக மாகவர சாள்கின்ற
வெண்டா மரைச்செல்வியே
தேயாத கல்வியுஞ் செல்வமுந் தந்துனது
திருவடிக் காளாக்குவாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 2

மருளேறு நெஞ்சகத் தெண்ணுயி ரஞ்சமணர்
வானேறு கழுவேறிட
மன்னனுடல் குளிரேற வைகைநதி யேடேற
வாளெரியின் மாடேறியும்
இருளேறு நள்ளிரவில் நிலவேறு சென்னியனை
இருதரந் தூதேவியும்
இடியேறு புத்தனுயர் முடியேற வொருமதலை
எழிலேறு கரையேற்றியும்
பொருளேறு மருமறைப் பூட்டேறு கதவுதாழ்
போக்கியு மடைத்துமாழி
போயேறு சிலையேறி யருளேறு பாவினற்
புனலேறு கரையேறியும்
தெருளேறு மொருகோடி விளையாடல் செயவேறு
தெய்வத்தி னுலாகுமோ
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 3

**வா**டாத பாவலரி னெண்டமிழ்ப் பாவலர்கள்
வண்டாக வுண்டுமகிழும்
வற்றாத தீஞ்சுவைச் செந்தேற லேமாரன்
வளையாத பூங்கரும்பே
ஈடாக வொன்றின்றி நெஞ்சினிற் றூண்டாம
லெரிகின்ற மணிவிளக்கே
எழுமையுந் தொடர்கின்ற முழுவலித் துணையே
யிறங்காத கலைமதியமே
ஓடாத நிதியமே தோளாத முத்தமே
உவராத சுவையமுதமே
ஊதாத செம்பொனே எழுதாத வடிவமே
யுரையா துயர்ந்தமணியே
தேடாத வஞ்சரைச் சேராத செல்வியே
திருவருள் கொடுத்தாளுவாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 4

**வா**ராத சித்திவரு விக்கின்ற தெய்வமுயர்
வாக்கினி னிறைந்ததெய்வம்
மாடமலி கூடலம் பதியிலே முச்சங்க
வாழ்வுடனி ருந்ததெய்வம்
சீரான வேங்கடந் தென்குமரி யாயிடைத்
தேயமர சாண்டதெய்வம்
தென்னவன் முதலாய முடிமன்னர் மூவருஞ்
சேவித்து நின்றதெய்வம்
பாராத ரித்திடுந் தமிழ்மறைத் தெய்வமென்
பார்வைக்கு ணின்றதெய்வம்
பார்க்கத் தெவிட்டாத வழகுடைய தெய்வமுயர்
பாவலர்க் குதவுதெய்வம்
தீராத நோய்களைத் தீர்க்கின்ற தெய்வமென்
சிறுமையை யழித்ததெய்வம்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 5



**பா**ணினும் யாழினு மினிக்குமை வகையியற்
பசுவிற்க றந்ததீம்பால்
பரவுபங் கயமிரண் டொருநாலு காந்தள்விரி
பைந்தருவின் வருமுக்கனி
காணினுங் கேட்பினு மதுரிக்கு மிருவிழிக்
கன்னலினை மூந்தசெந்தேன்
கற்றவர்க ளுவினிற் பொதிசோறு தத்தமது
கைக்கெட்ட வேயிருக்க
வீணிலிம் மானுடர்கொ டும்பசிக் குணவாக
விடமருந் துவதுபோல
வேறுமொழி யுணவுகொண் டழிகின்ற மதியின்மை
விதிவன்மை யன்றியுண்டோ
சேணினுங் காணாத வெண்கமல நிதியமே
சிந்தாம ணிக்குவியலே
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 6

**அ**ம்புவி யடைந்தவுட னம்மா வெனக்கூவ
வறிவித்த தெய்வமுநீ
அமுதுவா யுண்ணாவதி மதுரமொழி செவியுண்ண
ஆதரித் திடுமன்னைநீ
இன்புவிளை யும்பசுங் குதலைமொழி பெற்றவர்க்
கீவித்த செல்வியுநீ
ஏடுகைத் தந்துளக் கண்ணைத் திறந்தெழுத்
தறிவித்த விறைவனுநீ
நம்புங் கருத்தைப் பிறர்க்கறிவு றுத்தவென்
நாவிலுறை தூதுவனுநீ
நல்லுயிர்த் துணைவனீ பிரியாத தோழனீ
நன்மனைவி மக்களுநீ
செம்பொனருள் செல்விநீ யுனைமறந் திட்டவத்
தீயர்க்கு முறுவதியுண்டோ
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 7

கண்டெழும் திருகரங் கூப்பித் தலைக்குமேற்
காட்டியஞ் சலிசெய்குவார்
கடவுளே யிப்போது பேசியது முங்களது
கதையென்று கண்ணீர்விடுவார்
தெண்டனிடு வாரிங்கு வந்தகா ரியமேது
தெரிவிக்க வேண்டுமென்பார்
சிறிதுபொரு ளுதவியென் றடியெடுத் திடுமுனந்
திருமுகங் கருமுகமதாய்
விண்டவாய் கூம்பக் கழுத்துச் சரிந்தொரிரு
விழிசொருகி நாக்கு வீழ்ந்து
விக்குளெழ மரணவே தனையுறும் வச்சையர்கள்
வீட்டிலே பொருளிரக்கச்
சென்றிடா வரமுமுன் றிருவடிச் சேவையுஞ்
சிறியெனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 8

இல்லாமை யால்வந்த துயரினல் மிகநொந்
தி. க்கத்து ணிந்துமானம்
ஏகாது பின்றள்ள வாற்றாமை முன்றள்ள
விடையூச லாடியாடிப்
பல்லாயி ரந்தரங் காட்டியும் நாவினுற்
பயிலாத மொழிபயின்றும்
பணியாத பேரைப் பணிந்துமுன் திறவாத
படலைபல பலதிறந்தும்
பொல்லாத வஞ்சரைப் பாடியும் புகல்கின்ற
பொய்ம்மைமொழி செவிமடுத்தும்
போற்றுமுன் பெருமைபறி போகவிட் டென்மனம்
புண்பட்ட வாறுபோதும்
செல்லாத செல்வமுந் திருவடிச் சேவையுஞ்
சிறியெனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 9



என்மனக் கவலைமுழு வதுமொழியு மாறுதி
சேடனை யிரந்துகொளினும்
என்பெற்ற வன்னையுன் பொன்பெற்ற விருசெவி
யிடங்கொள்ளு மோவறிகிலேன்
நன்மனத் தாலறிந் தருள்புரிவை யென்றிந்த
நாள்களெல் லாங்கழித்தேன்
நானிலவு காத்திட்ட கிளியான தன்றியோர்
நயமில்லை நல்குரவினும்
புன்மையும் நோயுங் கெடுத்துயிர்க் குற்றமும்
போக்கியினி யருள்புரிகுவாய்
பொல்லாத பிள்ளையென் றென்னைப் புறந்தரப்
போகாது பொறையுனக்கே
சின்மய சொரூபியே யானந்த வெள்ளமே
சிந்தா மணிக்குவியலே
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 10

# உரை விளக்கம்

உருதிரோற்காரி ஆண்டு ஐப்பசித் திங்களில் நோயினாலும் மிடியினாலும் பெரிதும் வருந்திய ஆசிரியர் அவற்றினின்றும் நீக்கித் தம்மைக் காத்தருளுமாறு குலதெய்வமாகிய நாமகளை வேண்டி இப் பதிகத்தைப் பாடினார்.

(1) ஏர் – அழகு. நிறை – பொலிவு. நித்திலம் – முத்து. நெடியவன் – திருமால். நெடியவன் வாய்கொண்ட வேய் – திருமால் கோபாலனைகப் பிறந்து வாயில்வைத்து ஊதிய குழலாகிய மூங்கில். அனம் – அன்னம்; குறைந்து நின்றது. கும்பமுனி – அகத்தியனார்.

(2) **ஓயாமல் எவர்கட்கும் ஒண்பொருள் அளிக்கின்ற உயர்குறள்— கற்குந்தோறுங் கற்குந்தோறும் பொருள் சிறந்து அறமுதலிய நாற்பொருளாகிய நூற்பயனைக் குறைவின்றித் தருகின்ற திருக்குறள். எப்பாலவர்க்கும் பொதுவாய நூலாதலின் எவர்கட்கும் என்றார்.** ஐந்து தரு – அரிசந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. ஒருநால்வர்– சைவசமயகுரவர் நால்வர். அவர் உதவிய மறை தேவாரமும் திருவாசகமுமாம். ஒப்பின்மையில் ஒருநால்வர் என்றார். இருதேவர் – திருத்தக்கதேவரும் அருண்மொழித்தேவரும். மணிகள் – மாணிக்கம் போன்ற சிந்தாமணியும் பெரியபுராணமும். திருமணிகளாய் – சிந்தா

மணிகளாய். மாமூலன் – திருமூலநாயனார். மந்திரம் – திருமந்திரம். சுரர் – தேவர். கூடலம்பதி – மதுரை. அரசு மேவும் அத்தாணி – ஆட்சி செய்தற்கு வீற்றிருக்கும் சபாமண்டபம்.

திருக்குறள் ஐந்தருவாகவும், நால்வர் அருளிய தேவார திருவாசகங்கள் அமுதமாகவும், இரு தேவரும் அருளிய நூல்கள் சிந்தாமணிகளாகவும், திருமூலரது திருமந்திரம் காமதேனுவாகவும், தமிழ்ப் புலவர்கள் தேவராகவும் அமைதலின் வெண்டாமரைச் செல்விக்கு விண்ணுலகம் மண்ணிடத்திலும் அமைவதாயிற்று.

(3) மருள் – மயக்கம். வானேறு கழு – தீயோரை அழித்தலாற் பெருமை மிகுந்த கழு. வான் – பெருமை. நிலவு – சந்திரன். சென்னியன் – சிவன். தூது – சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகப் பரவை நாச்சியாரிடத்திலே இருமுறை தூது சென்றமை. மதலை – குழந்தை. பொருள் – மெய்ப்பொருள். ஆழி – கடல். சிலை – கருங்கல். தெருளேறு மொருகோடி விளையாடல் – புறச் சமயத்தாரிடம் சைவமே மெய்ச்சமயம் என்னும் நல்லுணர்வுண்டாதலை வேண்டிப் புரிந்த அனந்தம் விளையாடல்கள். சமணர் எண்ணாயிரவரைக் கழுவேற்றியது முதலாய திருவிளையாடல்களைப் பெரிய புராணத்தாலறிக.

(4) வாடாத பா அலர் – எக்காலத்தும் அழகும் இனிமையும் பொருளும் கெடாத பாக்களாகிய பூக்கள்.

பாக்களைப் பூக்களாகவும், பாவலர்களை வண்டுகளாகவும், தீஞ்சுவையாகிய தேனை நாமகளாகவும் உருவகித்தார். மாரன் – மன்மதன். ஈடு – சமம். இறங்குதல் – தேய்தல். கலைமதியம் – பூரணசந்திரன். ஓடாத – அழியாத. தோளாத – துளைக்காத. உவராத – தெவிட்டாத. ஊதாத – பொற்கொல்லனால் ஊதியுருக்கப்படாத.

(5) வாராத சித்தி–தவத்தாற் பெறமுடியாத சித்திகள். சிறுமை– வறுமையால் ஈயாச் செல்வரிடத்தே சென்று அடைந்த இகழ்ச்சி. நாமகளது அருளினாற் சிறிய முயற்சிகளிற் பெரிய செல்வம் பெருகியமையின் சிறுமையை அழித்த தெய்வம் என்றார்.

(6) பாண் – இசைப்பாடல். ஐவகை இயற்பசு – ஐந்துவகை இலக்கணங்களாகிய பசுக்கள். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

பங்கயம் இரண்டு – இரண்டு பாத தாமரைகள். நான்கு காந்தள் – நான்கு கைகள். இரண்டு பங்கயமும் நாலு காந்தளும் விரிந்த ஒரு கற்பகதருவிற் பழுத்த முக்கனிகள் என்க. அவை இயல் இசை நாடகமென்பன. தீம்பாலும், முக்கனியும், செந்தேனும், பொதிசோறும் இருக்க இம்மானுடர் வீணை வேற்றுமொழியென்னும் விடம் அருந்துவது விதிவலியாலோ என்று இரங்குகின்றார் ஆசிரியர்.



(7) செந்தமிழ்க் குலதெய்வம் தாய், தந்தை, குரு, துணைவன், தோழன், மனைவி, சுற்றம் முதலாய எல்லாமாகவும் அமைந்த திறங் கூறப்பட்டது. அம்புவி – பூமி. உளக்கண் – அறிவுக்கண். உய்தி – ஈடேற்றம்.

(8) இச் செய்யுள் ஆசிரியருடைய வாழ்வில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சியைத் தெரிவிப்பது. புலவர், பொருள் முட்டுப்பாட்டினால் ஒரு செல்வன்வீடு சென்றார். செல்வன் புலவரைக் கண்டது முதலாக நிகழ்ந்த சம்பவங்களை ஓர் ஓவியம்போல எடுத்துக்காட்டுகின்றார். அச் செல்வன் இப்போதும் உயிருடன் இருத்தலினால் அவர்தம் பெயரைச் சொல்லுவது பண்பாகாது. அஞ்சலி – வணக்கம். திருமுகம் – பொலிந்த சிவந்த முகம். கருமுகம் – உலோபத்தாற் கருமையடைந்த முகம். விண்டவாய் – பேசியவாய். கூம்ப – பேசாதிருக்க. வச்சையர் – உலோபிகள். இவரை "உவர்க்கடலன்ன செல்வர்" என்பர் ஏனைப் புலவோர்.

(9) இச் செய்யுளும் பொருளிரக்கச் சென்று பட்ட துன்பங்களைக் காட்டுவது.

(10) பொன் – அழகு. புன்மை – சிறுமை. நோய் – உடற்பிணிகள். உயிர்க்குற்றம் – அறியாமை. சின்மயம் – அறிவு.

## 7. தசாங்கம்*

## மூலமும் உரை விளக்கமும்

அரசனுக்குரிய நாடு, மலை, ஆறு, ஊர், முரசு, கோடி. மாலை, யானை, குதிரை, செங்கோல் என்னும் பத்து உறுப்பினையும் நேரிசை வெண்பாவினாற் பாடுவது தசாங்கம் என்க. இது கிளியை விளித்துப் பாடப்படுவது. இதனை ஆசிரியர் உருதிரோற்காரி யாண்டு கார்த்திகைத் திங்கள் இரண்டாம் நாளிற் பாடினார்.

### நாடு

செந்தார்ப் பசுங்கிளியே தென்பாற் குறுமுனிபா
நந்தாத் தமிழரசி நாடுரையாய் — வந்தேறி
மங்குல்தவழ் வேங்கடமும் வான்குமரி யாறுமிடைத்
தங்குதமிழ் நன்னாடு தான். 1

* இவ்வுரையானது, உரையாசிரியையால் 1938-ஆம் ஆண்டில் எழுதப்பட்டு ஈழகேசரி ஆண்டு மடலில் வெளிவந்தது.

**இதன் பொருள்:**—கிளியே! தெற்கின்கண்ணுள்ள உருவத்தாற் குறிய அகத்திய முனிவர் உதவிய என்றுமுள்ள தமிழரசியாகிய நாமகளது நாட்டினைக் கூறுதி. அது, மேகம் நீரை முகந்து வந்து ஏறித் தவழ்கின்ற வேங்கட மலைக்கும் குமரியாற்றிற்கும் இடையேயுள்ள தமிழகம் என்பது.

செந்தார்ப் பசுங்கிளி – சிவந்த ஆரத்தினையுடைய பச்சை நிறம் பொருந்திய கிளி. கழுத்திலுள்ள செம்மைவரி தார்போலக் கிடத்தலின் தார் எனப்பட்டது. ஒப்பினாகிய பெயர். அற்றேல், கிளிக்குச் சிறப்புத் தருவது பேச்சன்றே. அடை கொடுக்குங்கால் இன்றியமையாத சிறப்பினை எடுத்து மொழிதல் மரபு. ஆதலின், பேச்சினையே முற்கூறுகவெனின்; அதுவே யமையுமெனினும் கிளியைக் கண்டுழி முதலில் உள்ளத்தைக் கவர்வது அதன் பசுமை நிறமும் அப்பசுமை பொலியக் கிடந்த ஆரத்தின் செம்மை நிறமுமாம். பேச்சோவெனின் அது கிளி தன் உள்ளம் விழைந்து பேசியக்காலன்றிக் கண்ட மாத்திரத்தானே அறியப்படுதலின்றாம். அதனாற் கண்டவளவில் உள்ளத்துப் பதிந்து மகிழ்வைத் தரும் உருவச் சிறப்பினையே முதற்கண் மொழிந்தார், யார்க்கும் உள்ளஞ் சென்றவழியே மொழியுஞ் சென்று பிறக்குமாதலின் என்க. இவ்வாறே திருமுருகாற்றுப்படையில் நக்கீரனாரும்,

> "உலக முவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
> ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

என முருகக்கடவுளின் எண்ணிறகடங்காத் திருவிளையாடல்களும் அருட்குணங்களு மெல்லாங் கிடப்பத் தமது உள்ளத்துப் பதிந்த தோற்றப் பொலிவினையே முதற்கண் மொழிதல் காண்க.

ஆண்டும் மயிலின் பசுமையிடையே தோன்றும் முருகனின் செம்மையையே விதந்து கூறுகின்றார். அற்றாயின், அதன் பசுமை பொலியக் கிடந்த மூக்குமுளதன்றோ செம்மைநிறங் காட்டற்கு, அது கூறாது ஆரங் கூறியதென்னையெனின்? பல்லாற்றானும் அழகுபடப் புனைந்துழியும் மங்கல வணியாய மாலை அணியாக்கால் அப்புனைந் தவற்றாற் பொலிவின்றாம். அதனால் இதற்கும் மங்கலவணி யெனும்படி கிடந்த ஆரத்தினை எடுத்து மொழிந்தாரென்பது. வன்னி, தத்தை, சுகம், கிள்ளை முதலாய பல பெயர்களிருப்பவும் வழக்கு மிகுதிபற்றிக் கிளியென முதற்கண் விளித்தார்.

அகத்தியர் தெற்கின்கண்ணதாகிய பொதியின்கண் இருந்தாரென்பது புராணக் கொள்கையாதலின் 'தென்பாற் குறுமுனி' எனப்பட்டது.

**சொல்வளமும் பொருள்வளமும் துறுமி, ஓசைநயமுடைத்தாய், இயல், இசை நாடகநூல்களும் தத்துவநூல்களும் தருக்கநூல்களும் மந்திரநூல்களும்**



**முதலாய நூல்களாற் பொலிந்து இலக்கண வரம்பு கடவாது நிற்றலின் 'நந்தாத் தமிழ்' எனப்பட்டது.**

**தொல்காப்பியச் செங்கோலேந்தி அன்னக்கொடி யுயர்த்தி முத்தமிழாம் முரசதிரப் பாமாலை புனைந்து மலைபடுகடாங் களிறுகப் பரிபாடல் பரியாக, வைகைநதி வளம்படப் பெருகும் நான்மாடக்கூடலில் அரசுவீற்றிருந்து வேங்கடமுங் குமரியுமாய எல்லைக்குட்பட்ட தமிழ்நாடெல்லாம் ஆணைசெல அரசுபுரிதலின் 'அரசி' என்றார்.** நந்தா – அழிவில்லாத.

மழைமேகமானது கடலிலே நீரை முகந்து சூற்கொண்டு ஆகாய வெளியை அலங்கரித்து வந்து, தன் வருகையை இடையே தடை செய்து உயர்ந்து கிடந்த வேங்கடத்தைக் கடத்தற்கு மென்மெலவேறிச் சென்று, ஏறிய களைப்பினாற் றவழும் என்பார், 'வந்தேறி மங்குல் தவழ் வேங்கடம் என்றார். மங்குல் வந்து ஏறித் தவழ் வேங்கடம் என இயைத்துப் பொருள் கொள்க. ஏறி என்றதனாலே மேகங்கள் செல்லும் அளவிலும் பார்க்க வேங்கடம் உயர்ந்துள்ளதென உயரமும் அதன் நீர்வளமும் கூறியவாறாம்.

"நிலங்கடந்த நெடுமுடி யண்ணலை நோக்கி உலகந் தவஞ் செய்து வீடுபெற்ற மலையாதலாலும் எல்லாரானு மறியப்படுதலாலும் வேங்கடத்தை எல்லை கூறினார். குமரியுந் தீர்த்தமாதலிற் கூறினார். இவ்விரண்டையும் நூல் தொடங்குங் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டாமென்று கருதிப் பிறிதெல்லை கூறாது இவற்றையே கூறினார். இவ்விரண்டும் அகப்பாட்டெல்லையாயின் என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல்கொண்டதாகலின். கிழக்கும் மேற்குங் கடலெல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினார்" என்னும் நச்சினார்க்கினியரது தொல்காப்பியப் பாயிரவுரையை ஈண்டும் வேங்கடத்தையும் குமரியையும் எல்லை கூறியதற்கு உரைத்துக்கொள்க. இனிக் குமரியை முற்கூறாது வேங்கடத்தை முற்கூறினார், தொல்லாசிரியர்கள் கூறியவாறே கூறுதல் வேண்டி. தொல்லாசிரியர்களும் வடதிசை மங்கலதிசையாகலின் அத்திசைக்கண் உள்ள வேங்கடத்தை முற்கூறினாரென்க.

'இடைத் தங்கு தமிழ்நாடு' என்றார், இவ்விரண்டும் தமிழ்நாட்டின் அகத்ததாய் அதற்கு எல்லையாகும் என்பது காட்டுதற்கு.

"பாண்டிநாடே பழம்பதி" என்று திருவாதவூரடிகள் சிறப்பித்துக் கூறியதும் சொல்வடிவாய அங்கயற்கண்ணி தடாதகைப் பிராட்டியாராகியும் பொருள்வடிவாகிய சோமசுந்தரக் கடவுள் சுந்தரபாண்டியராகியும் முருகக் கடவுள் உக்கிரபாண்டியராகியும் ஆட்சி செய்த பெருமை மேவியதும், சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளியதும் தமிழைப் பல்லாற்றானும் வளர்த்த பாண்டிய மன்னர்களும் புலவர்களுமிருந்து சங்கமருவிய சிறப்பு

வாய்ந்ததுமாய மதுரையம்பதியைத் தலைமையதாய்க் கொண்டு, அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலாய மெய்யடியார்களையும் ஏனைய நாயன்மார்களையுஞ் செங்கோன் மன்னர்களையும் கற்புடை மங்கையரையுந் தன்னகத் தேந்திய சிறப்பு வாய்ந்ததாகலின் 'நன்னாடு' என்றார். இனி, நன்னாடு எனவே அமைவதாகத் 'தான்' என்றதென்னையெனின் தனக்கு நிகராகப் பிறிதொரு நாடின்றித் தானே தனித்துச் சிறந்து நிற்றலின் 'தான்' என்றார் என்க.

## மலை

அம்பொற் பசுங்கிளியே யன்றிளங்கோ வாய்ந்தளித்த
செம்பொற் சிலம்பி சிலம்புரையாய்—உம்பரெலாம்
வந்துலவு மிந்துலவு வண்டுலவு தண்டலைசூழ்
வந்துலவு தென்பொதிய மாம். 2

இ – ள்:—கிளியே! இளங்கோவடிகளால் ஆராய்ந்தணியப்பெற்ற சிலப்பதிகாரமென்னும் சிலம்பணிந்த நாமகளது மலையினைக் கூறுதி! அது, தேவர்களும் சந்திரனும் வண்டுகளும் உலாவுகின்ற சோலைகள் சூழ்ந்த தென்றல் வீசுகின்ற தென்பொதிய மென்பது.

அகத்தியமுனிவர் இருத்தல்பற்றியும் தமிழ் அமிழ்தைச் செவியால் நுகர்தல் பற்றியும் தேவர்கள் வந்துலவுவர். வெங்கதிர் வெப்பந் தீர்ந்து தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நிழற்செய்யும் மாலைக்காலத்து இந்துலவுதல் கழிபேரின்பஞ் செய்தலின் 'இந்துலவு தண்டலை'யென்றார். தண்மையினைத் தலைப்பட்டு நிற்றலின் தண்டலை எனப்பட்டது.

வந்து – காற்று. காற்றுலவாத விடமின்மையின் காற்றுலவுதல் எல்லாவிடங்களுக்கும் பொதுவாம். பொதுவாயதொன்றனை இதற்கு அடைமொழியாகச் சிறப்பித்ததென்னையெனின், காற்றுத் தாம் பல. அவற்றுள், இன்பந் தருவது தென்றல். அத் தென்றல் பொதியத்துப் பிறத்தலினாலே வந்துலவுதல் பொதியத்துக்குச் சிறப்பாம். இனித் தென்றல் வீசுமிடம் பிறவுமுண்டென்பார்க்கு, உண்டெனினும், சந்தனம் முதலிய மரங்களிற் படிந்து நறுமணங் கமழ வருதலின் இது சிறந்ததென்க. 'சந்தனப் பொதியம்' என்றார் பிறரும்.

தென்பொதி – இனஞ் சுட்டாத அடையடுத்து வந்தது. காடும் மலையும் நாடும் பாலையுங் கடலும் ஆகிய இடம் எல்லாங் கடந்து பேரிளைப்புற்ற மதியம் ஈண்டு வந்து களைதீர உலவிற்றென்றும், பூமத்திய மண்டலத்திலிருந்து வெங்கதிர் வெப்பத்தால் விரிந்து ஆண்டிருக்க இடம்பெறாது மேலெழுந்து தெற்கே சென்று கீழிறங்கித் தென்கீழ்காற்றாய் வீசிப் பூமத்திய மண்டலங் கடந்து தென்மேற்காய்த் திரும்பி இவ்வாறாகக் காய்ந்தும் விரிந்தும் சுழன்றும் திரும்பியும் இளைத்து



வந்த காற்று இச்சோலையில் இளைப்பாற உலவிற்றென்றும் தற்குறிப்பேற்றவணி புனையப்படுதல் காண்க.

இனிச் சாவா வமிழ்துண்டு மூவாவின்பம் பெற்ற தேவர்களும், யாவர்க்கும் இன்பஞ் செய்யும் மதியும், தென்றலும் இம்மலைக்கண் இன்பம் பெறுதற்கு வந்துலவினரெனவே பொதியத்து இன்பச் சிறப்புச் சொல்லாமலே அமையுமென்க.

## ஆறு

அம்பா லனையமொழி யஞ்சுகமே செஞ்சொலருள்
ஐம்பா லழகிதமி ழாறுரையாய்—நம்பாதார்
ஈட்டிச் செழுங்கழுவி லேறவெதி ரேறிவரு
மேட்டிற் சுமந்தவைகை யாறு. 3

இ – ள்:—அஞ்சுகமே! ஐம்பாலழகியாகிய நாமகளது ஆறு உரைத்தி; அது, சமணர்கள் கழுவிலேறுமாறு தான் ஆற்று வெள்ளத்துடன் ஓடாது எதிரேறி வந்த திருஞானசம்பந்தரது திருவேட்டினைச் சுமந்த வைகையாறு என்பது.

பால், மொழியின் இனிமைக்கு உவமை. இனித் தமிழ்மொழியன்றிப் பிறமொழி பயின்ற கிளியிடத்து இத் தசாங்கத்தைக் கேட்டல் சாலாதாகலின் அழகிய பாலையொத்த தமிழ்பேசுங் கிளி என்றலும் அமையும். அஞ்சுகம் என்றதில் சுகத்தைச் செய்வது என்னும் தொனிப்பொருள் காண்க.

கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என ஐந்துவகையாக முடிக்கப்படுதலின் ஐம்பால் எனப்பட்டது. இனி இருட்சி சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என்னும் ஐவகைப் பண்பினது என்பாருமுளர். வைகைநதி ஈட்டிச் செழுங்கழுவில் நம்பாதார் ஏற எதிரேறிவரும் ஏட்டைச் சுமந்த வரலாற்றைப் பெரியபுராணத்தால் அறிக.

## ஊர்

தாமப் பசுங்கிளியே சங்கத் தலையிருந்தோர்
ஊமைக் குரைதெரித்த ஊருரையாய்—தூமாலி
மேன்மாடத் தும்பர் விதுப்பழித்த நெற்றியர்வாழ்
நான்மாடக் கூடல் நகர். 4

இ – ள்:—கிளியே! சங்கத்தரசியாயிருந்து ஊமைக்கு உரைதந்த நாமகளது ஊர் கூறுதி. அது, பிறையினை வென்ற நெற்றியர் வாழும் நான்மாடக் கூடல் நகர் என்பது.

னமைக்கு உரைதெரித்த வரலாற்றைத் திருவாதவூரடிகள் புராணத்தாலறிக.

சந்திரன் இருள் கீண்டு ஒளி விடுதற்கு மேகமண்டலங் கரிதாயிருத்தல்போல, ஈண்டும் இம்மங்கைநல்லார் நெற்றியாகிய சந்திரன் இருள் கீண்டு ஒளிவிடுதற்கு மாடத்தைக் கரிதாக்கவேண்டித் 'தூமமலி' என அடைகொடுத்தார். தூமம் – புகை. அகிலைப் புகைத்தலாலுண்டாவது.

நான்மாடக்கூடல் நகர் – மதுரை. மதுரைமாநகரின்மீது வருணன் கோபித்து மேகங்களை ஏவி மழை பொழிவித்த காலத்துப் பாண்டியன், சோமசுந்தரக் கடவுளை வேண்டிநிற்க, அப்பெருமான் மேகங்களை மதுரையின் நான்கு மூலையினுமேவி, அந்நீரைப் பருகி மழையைத் தடுத்தருளியதால் நான்மாடக் கூடல் எனப்பட்டதென்பர். நச்சினார்க்கினியர் திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்னும் இவைகளுக்கு நடுவே இருத்தலால் அப்பெயர் பெற்றதென்பர்.

## முரசு

**வண்டாடுஞ் சோலை மரகதமே! வானவருங்**
**கொண்டாடுஞ் செல்விபறை கூறிடுவாய்—பண்டே**
**வழுத்து மியலிசை நாடகமு மாகப்**
**பழுத்ததமிழ் மூன்றாம் பறை. 5**

**இ – ள்:**—மரகதமே! வானவருங் கொண்டாடுஞ் செல்வியாகிய நாமகளது முரசினைக் கூறுதி. அது, பண்டுதொட்டே துதிக்கப்பட்டு வருகின்ற இயல் இசை நாடகம் என்னும் மூன்றுமென்பது.

வானவரும் என்றதில் உம்மை உயர்வுசிறப்பு. பாற்கடல் ஈந்த அமிழ்து வீடுதராமையும் இத் தமிழ்க்கடல் ஈந்த அமிழ்து வீடு தருதலும் உணர்ந்து, தேவர்கள் கொண்டாடுவர். அன்றி, நான்முகன் தேவியாதல்பற்றியும் கொண்டாடுவர். உம்மையால் மண்ணவர் கொண்டாடுதல் பெறப்படும். மண்ணவர், மொழியரசியாதல் பற்றியும் தெய்வமாதல்பற்றியும் கொண்டாடுவர். இனி, வானவர் என்றது கடவுளரை எனக்கொண்டு, திருமாலும் முருகக்கடவுளும் சிவபிரானும் உமாதேவியாரும் முதலாய கடவுளர் விரும்பிக் கொண்டாடிய செல்வி என்றலும் அமையும்.

எல்லா வளமும் நிரம்பி நுகர்தற்கினிதாய்க் கனிந்திருத்தலிற் பழுத்த தமிழ் எனப்பட்டது.

கொடைமுரசு மணமுரசு வீரமுரசு என மும்முரசு, அரசர்க்குரித்தாகலின் நம்மரசிக்கும் இயல் இசை நாடகம் என்னும் மூன்றினையும் முரசமாக்கிக் கூறினர் என்க. 'பண்டே வழுத்தும்' என்றதினாற் றமிழின் பழமையும் பெருமையும் அறியப்படும்.



## கொடி

முன்னம் பசுங்கிளியே மூட்டுமறைப் பூட்டவிழ்த்த
பொன்னங் கொடிக்குக் கொடிபுகலாய்—பின்னமிலா
வன்னக் கொடியிடத்தான் வேதண்ட மட்டுமுயர்
அன்னக் கொடியென் றறி. 6

**இ – ள்:**—கிளியே! முன்னொருகாலத்து அடைக்கப்பட்டிருந்த மறைக் கதவினை அப்பர் சுவாமிகளது நாவிலெழுந்தருளித் திறக்கப் பாடியருளிய பொற்கொடிபோலும் நாமகளது கொடியினைக் கூறுதி. அஃது, உமையம்மையாரை இடப்பாகத்தே கொண்ட இறைவனது வெள்ளிமலை மட்டுமுயர்ந்த அன்னக்கொடியென்பது. இதனை அறிகுதி என்றவாறு.

முன்னம் மூட்டுமறைப் பூட்டவிழ்த்த என இயைக்க. இவ்வரலாற்றைப் பெரியபுராணத்தாலறிக.

இறைவனது இடப்பாகத்தே ஒன்றியிருத்தலினாலே 'பின்னமிலா' என்றார். வன்னக்கொடி – உமாதேவியார்.

பிரமதேவனுக்குக் கொடி அன்னம் ஆதலின், நாமகளுக்கும் கொடி அதுவென்க.

பண்டைநாளில் வெள்ளிமலைவரையும் தமிழ் பரவியிருந்தமையாலே அவ்வெல்லைவரையும் அன்னக்கொடி பறந்தது.

## மாலை

தண்டலையில் வாழுமிளந் தத்தாய் தமிழரசி
கொண்டணியு மாலையொன்று கூறிடுவாய்—தொண்டருள
மாமாலை நீக்கி மணிமாலை யீந்தருளும்
பாமாலை யென்றே பகர். 7

**இ – ள்:**- சோலையில் வாழும் இளங்கிளியே! தமிழரசியது மாலைகளுட் சிறந்ததைக் கூறுதி. அது தொண்டர்களது வறுமைத் துன்பத்தை நீக்கி அவர்களுக்கு இரத்தின மாலைகளைப் பரிசிலாகக் கொடுத்தருளும் பாமாலையாகும். அதனையே எக்காலத்தும் எவ்விடத்தும் அவளுக்குச் சிறந்த மாலை என்று நீ கூறிக்கொள் என்றவாறு.

'கொண்டணியும் மாலை' என்றார், அவள் ஏனைய மலர்மாலை மணிமாலை பொன்மாலை முதலாயவற்றை உளங்கொண்டும் கொள்ளாதும் அணிவள். ஆனால், அடியவரது பாமாலைகளை அன்போடு உளங்கொண்டே அணிவள் என்றற்கு.

தொண்டருள மா மால் — அடியவர்களது உள்ளங்களிலே வறுமைத் துன்பத்தாலுண்டாகிய பெரிய மயக்கம்.

முற்காலத்துப் புலவர்கள் வள்ளல்களைப் பாடிப் பொன்பெற்றதை மூன்றாமடி காட்டும்.

## யானை

**தே**னேறு செஞ்சொற் சிறுகிளியே! செய்யதமிழ்
மானேறு பட்டத்து வாரணமென்—ஞானக்
கலைபடுக டாக்களிறாங் கௌசிகனா ரீந்த
மலைபடுக டாக்களிறா மற்று. 8

**இ — ள்:-** இனிமை பொருந்திய செவ்விய சொற்களைப் பேசுகின்ற சிறிய கிளியே! நாமகளது பட்டத்து யானை என்னவெனில், அது ஞானக் கலைகளெல்லாங் கற்றுக் கல்விமதம் பொழியுங் களிறன்னைய கௌசிகனார் தந்த மலைபடுகடாம் என்னும் யானையாகு மென்பது.

தேன் — இனிமை. இரண்டாமடியிலே யானைமேலே இவர்ந்து செல்லும் ஒரு மானென்று நாமகளை உருவகித்தமை நயக்கத்தக்கது.

களிற்றினை ஈன்று தருதல் களிற்றுக்கன்றி மற்றொன்றிற்கு அமையாமையின் கௌசிகனாரைக் கலைபடு கடாக் களிறு என்றார். இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னனைப் பாடிய செய்யுள் மலைபடுகடாம் என்பது. இது பத்துப்பாட்டிற் பத்தாவதாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## குதிரை

**சோ**லைப் பசுங்கிளியே சொல்லின் கிழத்திதிரு
மாலைப் பரிமா வகுத்துரையாய்—மேலை
வரிபாடு மன்பர் வகையாய் வகுத்த
பரிபாட லாடற் பரி. 9

**இ — ள்:-** கிளியே! சொல்லுக்கு உரிமையுடையவளாகிய நாமகளது அழகிய மாலையணிந்த செலவினையுடைய குதிரை இன்னதென வகுத்துக் கூறுதி. இசைப்பாட்டுக்களைப் பாடுமன்பர் வகைப்பட வகுத்த பரிபாடலே பரியாகும் என்றவாறு.

எட்டுத்தொகையுள் ஐந்தாவது பரிபாடலாகும். இஃது எழுபது பாடல்களைக் கொண்டது. இந்நூற் பாடல்கள் பண்முறையாற் றொகுக்கப்பட்டு இசையோடு பாடப்பட்டு வந்தமையாலும், திருமாலுக்கும் முருகக்கடவுளுக்கும் காடுகிழாளுக்கும் வைகையாற்றுக்கும் மதுரைக்கும் உரியனவாக வகுக்கப்பட்டுள்ளமையாலும், 'வரிபாடு மன்பர் வகையாய் வகுத்த' என்றார்.



ஆடற் பரி — வெற்றியையுடைய குதிரை.

## செங்கோல்

**வா**னகம்போல் நாசி மரகதமே! வாய்த்தமொழி
தேனகம்போற் றித்திப்பாள் செங்கோலென்—மானமுடன்
பல்காப் பியரும் பணிந்துதலை மேற்சூடுந்
தொல்காப் பியமெனவே சொல். 10

**இ — ள்:—**ஒளி பொருந்திய நகம்போன்ற மூக்கினையுடைய கிளியே! தேன்போன்ற மொழியினையுடைய நாமகளது செங்கோலென்னெனின், அது பல காப்பியங்களையுடையாரும் பணிந்து தலைமேற் சூடும் தொல்காப்பியமாம் என்று சொல்லுதி என்றவாறு.

கிளியை மரகதமாக உருவகித்தார். நாமகள், தொண்டர்கள் நாவிலெழுந்தருளி நவின்ற மொழிகள் தப்பாமற் பயன் கொடுப்பனவாதலில் 'வாய்த்த மொழி' என்றார். அகம் தேன்போல் என மொழி மாற்றுக. அகம் — உள்ளம். அவளது மொழிகள் கற்றோர் அகத்தில் தேன்போலத் தித்திக்கும் என்க. இனித் தேனின் சுவையறியப்படுதல் உட்கொள்ளப்பட்ட வழியாதலினால் உட்கொள்ளப்பட்ட தேன்போலத் தித்திக்கும் மொழி என உரைத்தலும் அமையும்.

பல்காப்பியர் — காப்பியங்கள் பாடிய பலருமாவர். காப்பியங்களெல்லாம் தொல்காப்பியத்தின் இலக்கண வரம்பு கடவாது இயற்றப்பட்டு வருதலில் அதனைச் செங்கோலென்றார்.

# 8. செந்தமிழ்ச் செல்வி

**வி**ந்துநாத மீதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
வெண்கமல மேலிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 1

**ச**ந்திரனைப் போனிறத்தாள் செந்தமிழ்ச் செல்வி
தத்துவங் கடந்துநிற்பாள் செந்தமிழ்ச் செல்வி 2

**இ**யற்கையொலி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
என்றுமழி யாதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 3

வன்னவடி வாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
பன்னுயிரின் நாவுறைவாள் செந்தமிழ்ச் செல்வி 4

முன்னுள தமிழ்மொழிந்தாள் செந்தமிழ்ச் செல்வி
மூலமொழி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 5

மாரிபோலும் பூங்குழலாள் செந்தமிழ்ச் செல்வி
வளருமிளம் பிறைநுதலாள் செந்தமிழ்ச் செல்வி 6

கூருமருட் கண்ணுடையாள் செந்தமிழ்ச் செல்வி
குனிபுருவச் சிலையுடையாள் செந்தமிழ்ச் செல்வி 7

எட்போலும் நாசியினாள் செந்தமிழ்ச் செல்வி
இன்னமுத மொழியுடையாள் செந்தமிழ்ச் செல்வி 8

முத்துப்போற் பல்லுடையாள் செந்தமிழ்ச் செல்வி
முருக்கம்பூ விதழுடையாள் செந்தமிழ்ச் செல்வி 9

ஆடிபோலுங் கன்னத்தினாள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மிடறுடையாள் செந்தமிழ்ச் செல்வி 10

கோங்கரும்பு வனமுலையாள் செந்தமிழ்ச் செல்வி
குளிருமுத்து வடமுடையாள் செந்தமிழ்ச் செல்வி 11

வேய்போலுந் தோளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
மென்றொடிமுன் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி 12

செங்காந்தள் விரலுடையாள் செந்தமிழ்ச் செல்வி
செய்யதுகிற் கச்சுடையாள் செந்தமிழ்ச் செல்வி 13

மின்போலு நுண்ணிடையாள் செந்தமிழ்ச் செல்வி
மேகலை யரையுடையாள் செந்தமிழ்ச் செல்வி 14

ஆலிலைபோல் வயிறுடையாள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மாலையினாள் செந்தமிழ்ச் செல்வி 15

உடுத்தபட் டாடையினாள் செந்தமிழ்ச் செல்வி
ஓங்கார வுந்தியினாள் செந்தமிழ்ச் செல்வி 16



கன்னிவாழை மென்றொடையாள் செந்தமிழ்ச் செல்வி
காமர்கணைக் காலுடையாள் செந்தமிழ்ச் செல்வி 17

தண்டைகொஞ்சுந் தாளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
தாமரைப்பூஞ் சேவடியாள் செந்தமிழ்ச் செல்வி 18

தண்பொதியி லேபிறந்தாள் செந்தமிழ்ச் செல்வி
தவமுனிவன் மடிவளர்ந்தாள் செந்தமிழ்ச் செல்வி 19

கூடனகர் வாழ்வுகந்தாள் செந்தமிழ்ச் செல்வி
கோவேந்த ரேவல்கொண்டாள் செந்தமிழ்ச் செல்வி 20

புத்தகஞ்சேர் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
பொற்பளிங்கு மாலையினாள் செந்தமிழ்ச் செல்வி 21

வீணையிரு கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
வேதமுடி வாய்விளைந்தாள் செந்தமிழ்ச் செல்வி 22

நீரின்மே லேநடந்தாள் செந்தமிழ்ச் செல்வி
நெருப்பினுள் ளேகுளித்தாள் செந்தமிழ்ச் செல்வி 23

நஞ்சையமு தாக்கிவைத்தாள் செந்தமிழ்ச் செல்வி
நாள்கோள் விலக்கிவைத்தாள் செந்தமிழ்ச் செல்வி 24

வெய்யபிணி மாற்றிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி
வேழமதை யோட்டிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி 25

உண்டமக வைப்பயந்தாள் செந்தமிழ்ச் செல்வி
ஊமைதனைப் பேசுவித்தாள் செந்தமிழ்ச் செல்வி 26

வள்ளுவர்முப் பால்குடித்தாள் செந்தமிழ்ச் செல்வி
வாரமணிக் கோவைகொண்டாள் செந்தமிழ்ச் செல்வி 27

சிந்தா மணிபுனைந்தாள் செந்தமிழ்ச் செல்வி
சேரன் சிலம்பணிந்தாள் செந்தமிழ்ச் செல்வி 28

மெய்ப்புலவர் வாயினிற்பாள் செந்தமிழ்ச் செல்வி
வேண்டும் வரந்தருவாள் செந்தமிழ்ச் செல்வி 29

பொல்லா வினையறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
பொன்மாரி தான்சொரிந்தாள் செந்தமிழ்ச் செல்வி 30

செய்த பிழைபொறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
தேடிவந் தேயருள்வாள் செந்தமிழ்ச் செல்வி 31

நினைத்த வுடன்வருவாள் செந்தமிழ்ச் செல்வி
நின்றுகவி பாடிடுவாள் செந்தமிழ்ச் செல்வி 32

என்றென்று போற்றிசெயச் செந்தமிழ்ச் செல்வி
இடர்நீக்கி யாண்டனளே செந்தமிழ்ச் செல்வி. 33

## உரை விளக்கம்

கழுங்காடுஞ் சிறுமியர் இருவர் பாடியதாகச் செய்தது.

(1) விந்து நாதம் – குடிலை என்னும் சுத்த மாயை.

(2) தத்துவம் – மாயையின் காரியப்பாட்டின லுண்டாகிய தத்துவப் பொருள்கள்.

(3) தமிழ்மொழி இயற்கை ஒலிக்கூட்டங்களை உடையது. கனைத்தும் உரப்பியும் இயற்கைக்குப் பெரிதும் மாருகவுச்சரிக்கும் ஒலிக்கூட்டங்கள் தமிழிற் கிடையா. அதனலேயே இது பல்லாயிர வாண்டுகள் கழிந்தும் இறவாது, பழைமைக்குப் பழைமையாகியும் புதுமைக்குப் புதுமையாகியும் நிற்கும் கடவுள்போல நிலவி வருகின்றது. செயற்கை ஒலிக்கூட்டங்களை உடைமையாலே இதனேடு வழங்கிய பழைய பிறமொழிகள் இன்று இறந்துபட்டன.

(5) தமிழ் எல்லா மொழிகளுக்கும் மூலமொழி யென்பதைக் காலஞ்சென்ற கலைஞர், மாணிக்க நாயக்கரும், கத்தோலிக்க சமய குருவாகிய நல்லூர் ஞானப்பிரகாசவடிகளும் துணிந்து கூறுவர்.

(6) மாரி – மழைமேகம்.

(10) ஆடி – கண்ணடி.

6—18 இப்பாடல்களினல் நாமகளது அருள் வடிவம் முடிமுதல் அடிவரையும் வருணிக்கப்பட்டுள்ளது.

19—33 இப்பாடல்களினல் தமிழ்மகள் பொதியிலே பிறந்து, அகத்தியன் மடியிலே வளர்ந்து, மதுரையிலே அரசுபுரிந்து, மூவேந்தர் ஏவல்கொண்டு, தொண்டர்களிடத்துப் புரிந்த அருளாடல்களையும், நமக்கு அருள் செய்து வறுமை நீக்கிக் கவிபாடுவித்து இடர்நீக்கி ஆட்கொண்ட திறத்தினையும், நினைந்துருகிப் பாடுந் திறம் நயக்கத் தக்கது.

இதனை, உருத்திரோற்காரியாண்டு கார்த்திகைத் திங்கள் ஐந்தாம் நாளிற் பாடியருளினர்.



## 9. ஓலப் பத்து

சங்கரன் றிருத்தாள் போற்றித் தவமுனி யிரந்து வேண்ட
அங்கவ னருளாற் றேன்று மருந்தமிழ் மாதே யோலம்!
வெங்கொடு மலத்தாற் றேன்றும் வீங்கிருள் விடிய வுள்ளத்
தங்கம லத்தின் மேவு மணிமணி விளக்கே யோலம்!! 1

புத்தகத் தமர்ந்தா யோலம் பூவினின் வாழ்வே யோலம்
வித்தகத் தலைவீ யோலம் மெய்ப்பொருள் முதல்வீ யோலம்
முத்தவெண் குடையா யோல முழுமதி முகத்தா யோலம்
பித்தனை யுவந்தாட் கொண்ட பிராட்டியே யோல மோலம். 2

செப்புநேர் முலையா யோலஞ் செவ்வரிக் கண்ணு யோலம்
மைப்புயற் குழலா யோலம் மதுரமென் மொழியா யோலம்
துப்புநே ரிதழா யோலம் சொற்பொரு ளானு யோலம்
வெப்புநோய் வழூதிக் கோட்டு மெய்த்தமிழ்ச் செல்வீ யோலம் 3

ஆக்குவான் நாவில் வாணி யாகியே யமர்ந்தா யோலம்
காக்குமால் மார்பிற் செய்ய கமலையாய்க் கலந்தா யோலம்
போக்குவா னிடத்தில்ஞானப் பூவையாய்ப் புணர்ந்தா யோலம்
நீக்கமின் றுயிர்க டோறு நிறைந்திடு நிறைவே யோலம். 4

அன்றுதொட் டெனக்கு மாரு வரும்பகை யாக மன்னித்
துன்றிடு மடமைக் கங்குற் றெல்வலி தொலையா வாட்டி
வென்றிடு மளவிற் கோல மெய்யறி வொளியை வீசி
ஒன்றிடு முளத்து திக்கு மொண்பொரு ளோல மோலம். 5

மூவர்க்கு மரியா யோலம் முடிவிற்கு முடிவே யோலம்
யாவர்க்கு மினியா யோலம் யாவையு மருள்வா யோலம்
சேவற்பூங் கொடியோன் கேள்வி சிறந்திடு செல்வீ யோலம்
நாவிற்கு முயிர்க்கு மென்று நற்றுணை யானு யோலம் 6

உரைமக ளோல மோலம் உலகமீன் றவளே யோலம்
வரைதரு மகளே யோலம் மங்கல வடிவி யோலம்
விரவிசை மடந்தை யோலம் வெண்கம லத்தா யோலம்
திருமலி வாணி யோலந் தீவினை தீர்ப்பா யோலம். 7

அறிவுரு வானு யோலம் அன்பினி லமர்வா யோலம்
செறிதரு பொருள்க ணான்குஞ் சிற்றுயிர்க் கருள்வா யோலம்
மறுபுல மொழிக ளாரும் மங்கையர் வருடச் சேந்த
நறுமலர்ப் பதத்தா யோலம் ஞானநா யகியே யோலம். 8

ஆருயிர்க் கெழுமை தோறு மருந்துணை யானு யோலம்
சீரியாழ்க் கரத்தா யோலஞ் சிற்றிடைக் கலைமா னோலம்
பாருணு மமுதே யோலம் பத்தர்கள் வைப்பே யோலம்
கூர்துயர் நீக்கி யாளுங் குலமணி விளக்கே யோலம். 9

பண்டொரு புடையில் வைத்த பழநிதி வேண்டும் போதில்
அண்டிவந் தடைந்த வாபோ லடியனை யடைந்தா யோலம்
கண்டினிற் கனிந்த தீஞ்சொற் கலைப்பெரு மாட்டி யோலம்
மண்டிய வினைகள் போக்கி மலரடி தருவா யோலம். 10

## உரை விளக்கம்

ஓலம் – அபயமிட்டழைத்தல்.

(1) அகத்தியர் வடமொழிப் புலவர்களோடு காசியிற் சங்கமிருந்து அம்மொழி ஆராய்வுழி உண்டாய பிணக்கினால் இறைவனை வேண்ட இறைவன் கோயிலின் ஒரு மூலையிலிருந்து பெருமணம் வீசச் செய்தான். முனிவர் அது யாதோவென வியந்து அம்மூலையினை நோக்கிச் செல்வுழி முன்னரிலும் மிக்க நறுமணங் கமழப் பேராவலோடு ஆண்டுக் கிடந்த ஏடுகளை எடுத்து ‘இனிமை’ என்னும் பொருளை உட்கொண்டு தமிழ் தமிழ் எனப் பன்முறை கூவினார். இறைவன் அத்தமிழ்மொழியை அவருக்கு அறிவுறுத்தருளி விடுப்ப அவர் தென் திசைப் புகுந்து சங்கமிரீஇத் தமிழாராய்ந்தா ரென்பது முதலிரண் டடிகளிலுமுள்ள வரலாறு.

வீங்கிருள் – அறியாமை. அதற்குக் காரணம் ஆணவமலமாகலின் மலத்தாற் றோன்றும் என்றார். இருள் விடிதற்கு ஒளி வேண்டுமாதலின், நாமகளை மணிவிளக்கென்றார்.



(2) புத்தகம் – நூல்கள். எல்லாக் கலைகளையும் உணர்த்தும். பூ – வெண்டாமரைப்பூ. வித்தகம் – ஞானம்.

(3) செவ்வரி – சிவந்த வரி. மைப்புயல் – கரிய மேகம். துப்பு – பவளம். வெப்பு நோய் – சுடுபிணி. வழுதி – பாண்டியன்.

(4) ஆக்குவான் – பிரமன். காக்கும் மால் – உலகினைக் காக்கும் திருமால். போக்குவான் – உருத்திரன். ஞானப்பூவை – உமை. பிரமனுடைய நாவிலும் திருமாலுடைய மார்பிலும் உருத்திரனுடைய பாகத்திலும் அமர்ந்து படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழிற்கும் சத்தியாய் நின்றவாறு கூறினார்.

(5) அன்றுதொட்டு – அநாதியாக. மன்னி – நிலைபெற்று. துன்றிடும் – நெருங்கும். மடமைக் கங்குல் – அறியாமையாகிய இருள். தொல் வலி – பழைய வலிமை. தொலையா – தொலைத்து. வாட்டி – வலிகெடுத்து. வென்றிடுமளவில் – அறியாமையை அறிவினால் வெல்லுங் காலத்து.

(6) சேவற்பூங் கொடியோன் – முருகன். கேள்வி – செவி. நாவிற்கும் உயிர்க்கும் என்றது, நாவிலே சொல்வலியாகவும் உயிரிலே அருட்டுணையாகவும் கலந்து நிற்றலை என்க.

(7) உரைமகள் – சொன்மடந்தை. உலகமீன்றவள் – தாய். வரைதரு மகள் – மலைமகள்.

(8) பொருள்கள் நான்கு – அறம் பொருள் இன்பம் வீடு. ‘மறுபுல மொழிகளாரும் மங்கையர் வருடச் சேந்த நறுமலர்ப் பதத்தாய்’ என்று தமிழ்மொழியின் பெருமையை ஆசிரியர் போற்றுந் திறம் அழகு வாய்ந்தது.

(9) எழுமை எழுபிறப்பும் கல்வி தொடரும் என்பதை
“ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப் புடைத்து” என்னும் திருக்குறளால் அறிக.

பார் – மண்ணுலகு. விண்ணுலகு கடலமுதை உண்ண மண்ணுலகு தமிழமுதை உண்ணுமென்க.

வைப்பு – சேமநிதி. மணிவாசகனார் ‘எய்ப்பினில் வைப்பு’ என்றார். கூர் – மிகுதி.

(10) முன்னொருகாலத்துச் சேமித்து வைத்த செல்வம், பின்பு வேண்டியதொரு காலத்துத் தானே வந்துதவிய தன்மைபோல அடியேனைக் காத்தற்கு வந்தாய், என்று பழம் பிறப்புணர்வு தோன்ற ஓலமிட்டழைத்து, மலரடிகளைத் தந்தருளுமாறு வேண்டுகின்றார். கண்டு – கற்கண்டு. மண்டிய – நெருங்கிய.

இதனை ஆசிரியர் உருதிரோற்காரியாண்டு மார்கழித் திங்கள் ஏழாவது நாளிற் பாடியருளினார்.

# 10. முறையீடு

நெஞ்சகம் படிந்த வாசையும் பொய்யு
நிரம்பிய வெகுளியுஞ் செருக்கும்
வஞ்சமும் பொல்லா மயக்கமு நீக்கி
மதியெனு மணிவிளக் கேற்றிக்
கஞ்சமென் மலர்போ லாண்டுநீ வந்து
கலந்திருந் தருளுதல் வேண்டும்
அஞ்சொலும் பொருளு மாகியே யெங்கு
மமர்ந்திடு மருந்தமிழ்த் தாயே. 1

வண்டுவீழ் கூந்தன் மான்விழித் தேன்போன்
மதுரமென் மொழிமதி வதனத்
தொண்டொடி மண்பொன் னுறுமயக் கோட்டி
யொளிமணி விளக்குளே யேற்றித்
தண்டையுஞ் சிலம்புஞ் சிலம்பிரு சரண
தாமரை தந்திடல் வேண்டும்
பண்டுநான் மறையும் பாவலர் குழுவும்
பரவிடும் பசுந்தமிழ்த் தாயே. 2

காமமும் வெகுளி மயக்கமும் நெஞ்சக்
கறைகளுங் கருணையாற் போக்கி
ஏமமா கியநல் லறிவெனுந் தூண்டா
மணிவிளக் கென்னுளே யேற்றி
மாமதி யுருகி வழிந்தன தெய்வ
வடிவுடன் வதிந்திடல் வேண்டும்
பாமலர் சிந்தி யடியவர் வணங்கப்
பயனருள் பசுந்தமிழ்த் தாயே. 3

மாயையால் வந்த மயக்கமு மிருள்சேர்
மலத்தினால் வருமறி விழப்பும்
மேயவூழ் வினையாற் பொருந்திய குறும்பும்
விலக்கியே மதிவிளக் கேற்றித்
தீயனேன் காணத் திருவுருக் காட்டிச்
சிந்தையி லிருந்திடல் வேண்டும்
ஆயநாற் பொருளு மடியவர்க் கருளு
மழிவிலா வருந்தமிழ்த் தாயே. 4



காரினு மிருண்டு வினைமர மூடிக்
காமமே கோபமே முதலாம்
போரரிக் குழுவு முளியமுங் குழும்
புன்மனக் காட்டினைப் புதுக்கிச்
சீரிய ஞான மணிவிளக் கேற்றித்
தேவிநீ யமர்ந்திடல் வேண்டும்
ஆருயிர் நாவி னமுதென வினிக்கு
மழிவிலா வருந்தமிழ்த் தாயே. 5

இளமையின் வந்த மிடியெனுஞ் சுழல்காற்
றெதிருறு பூளைவீ யெனவும்
பழமையி னோயா மெரியிடை யிட்ட
பல்லவ மென்னவும் பதைக்கும்
உளமகிழ் வடைய மதிவிளக் கேற்றி
உடனிருந் தருளுதல் வேண்டும்
அழகினுக் கழகு செயுந்திருக் கோலத்
தழிவிலா வருந்தமிழ்த் தாயே. 6

என்புதோல் போர்த்த புன்புலால் யாக்கை
யிருட்டறை மூலையி லிருக்கும்
வம்பனே னெனையு மாட்கொள விரும்பி
மாசழித் தொளிவிளக் கேற்றி
உம்பருங் காணத் தெய்வதக் கோலத்
துடனுளே யுறைந்திடல் வேண்டும்
அம்புவி மதிக்கச் சுடுகல்பொன் னுக்கு
மழிவிலா வருந்தமிழ்த் தாயே. 7

உலகினி லுள்ளோர் ஞானியென் றுரைக்கு
முறைபெறப் புறத்தொழி லுஞற்றிக்
கலகல வொலிக்கும் பதரென வுள்ளே
கனப்பிலாக் கசடனே னுளத்தில்
இலகிய வறிவா மணிவிளக் கேற்றி
யிருந்தருள் புரிந்திடல் வேண்டும்
அலகிலாக் கலையும் பொருளுமா ருயிர்கட்
கருள்செயு மருந்தமிழ்த் தாயே. 8

மறைவிலே பொய்யும் வஞ்சமு மியற்றி
மாசிலே னெனநடிக் கின்ற
அறிவிலே னுள்ளத் தருள்விளக் கேற்றி
யற்புதக் கோமள வடிவம்
செறிவுறக் காட்டி யாண்டிடல் வேண்டுந்
தீயர்வான் கழுவினி லேற
அறைபுனல் வைகை யாற்றெதி ரேறு
மழிவிலா வருந்தமிழ்த் தாயே. 9

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே
கனியினிற் கனிந்திடு நறவே
சற்றுநல் லுணர்ச்சி படைத்திடா வுளத்திற்
றழன்மணி மதிவிளக் கேற்றிக்
குற்றமுள் ளவைகள் பொறுத்தருள் வடிவங்
கூட்டிநீ யாண்டிடல் வேண்டும்
வற்றிடு குளத்து நீர்க்கரா மதலை
யருளிய வருந்தமிழ்த் தாயே. 10

## உரை விளக்கம்

முறையீடென்பது, ஆசிரியர் தம்மிடமுள்ள காமம் வெகுளி மயக்கம் முதலாய குற்றங்களை அகற்றி அறிவு விளக்கந் தந்து ஆட்கொள்ளுதல் வேண்டுமென்று குறையிரத்தல்.

(1) கஞ்ச மென்மலர் – வெண்டாமரைப்பூ. ஆண்டு என்றது நெஞ்சகத்தைச் சுட்டியது. நெஞ்சகத்துப் பதிந்த ஆசை முதலாயவற்றை நீக்கி அறிவு என்னும் அழகிய விளக்கினை ஏற்றி வெண்டாமரையிடத்து விரும்பி யுறைதல்போல என்னெஞ்சிலும் நீ கலந்திருந்தருளுதல் வேண்டும் என்றவாறு.

(2) பண்டுநான்மறையும் பாவலர் குழுவும் பரவிடும் பசுந்தமிழ்த் தாயே! வண்டுவீழ் கூந்தலினையும் மான் விழியினையும் தேன் மொழியினையும் மதிவதனத்தினையும் உடைய ஒண்டொடி! மயக்கு ஓட்டி விளக்கு ஏற்றிச் சரணதாமரை தந்திடல் வேண்டும் என முடிக்க. ஒண்டொடி – அண்மை விளி.

தண்டையுஞ் சிலம்புஞ் சிலம்பிரு சரண தாமரை – தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற அடைக்கலம் புகுதற்கு அமைந்த இரு திருவடித் தாமரை. குழு – கூட்டம்.



(3) மாமதி உருகி வழிந்தன தெய்வ வடிவு – சந்திரன் உருகி வழிந்தாற்போன்ற அறிவுருவாகிய தெய்வக்கோலம். மாமதி என்றூர் கலை நிரம்பிய முழுச் சந்திரன் என்றற்கு. மாமதி உருகி வழிதல் இல்பொருளுவமை.

(4) இருள் சேர் மலம் – ஆணவமலம். அறிவிழப்பு – உயிர்க்கு இயற்கையாயுள்ள அறிவின் மறைப்பு. குறும்பு – துன்பங்கள்.

(5) அரிக்குழு – சிங்கக் கூட்டம். உளியம் – கரடி.

(6) பூளை வீ – சிறுபூளை என்னும் ஒருவகைச் செடியினது பூ. பல்லவம் – தளிர். மிடி என்னும் சுழல்காற்றுக்கு எதிர்ப்பட்ட பூளைப் பூப்போலவும் நோய் என்னும் எரியிடை யிடப்பட்ட தளிர்போலவும் பதைக்கும் உளம் என்க. அழகினுக் கழகுசெயுந் திருக்கோலம் – நூல்களாகிய அணிகலன்களுக்கு அழகினைக் கொடுக்கும் கோலம்.

(7) மாசு – மனக் குற்றம். சுடுகல் பொன்னாக்கியதைப் பெரிய புராணத்திற் சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத்திற் காண்க.

(10) கரா – முதலை. முதலையுண்ட பிள்ளையை அழைத்த கதையைப் பெரியபுராணத்திற் சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரத்திற் காண்க.

இதனை ஆசிரியர் உருதிரோற்காரியாண்டு கார்த்திகைத் திங்கள் பதின்மூன்றாவது நாளிற் பாடியருளினார்.

## 11. உய்ந்த பத்து

பாலினொடு நெய்யினீ ராடி னாளைப்
பாவினொடு பணிமுத்தஞ் சூடி னாளை
வேலினொடு சேலடர்த்த விழியி னாளை
விண்ணமுதும் பாகுமொவ்வா மொழியி னாளை
நூலினொடு கொடிநுடங்கு மிடையி னாளை
நோன்பினொடு தவமுயல்வார் புடையி னாளைக்
காலினொடு புனல்நிலந்தீ வெளியி னாளைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 1

மூவாத வெழிலொழுகு முருவி னாளை
முடியாத கதியருளுந் திருவி னாளைப்
பாவாண ருருகியுரை நுதியி னாளைப்
பழையதமிழ் மணிக்கூடற் பதியி னாளைச்

சாவாத வரமருளுங் கற்பி னாளைச்
சந்தனமுந் தென்றலும்வாழ் வெற்பி னாளைக்
காவாருங் கற்பகத்திற் படர்பூங் கொம்பைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 2

வண்டிசைக்குங் கருங்கூந்தற் காட்டி னாளை
வைகையிலே எதிரேறிக் காட்டி னாளைத்
தண்டிசைக்குந் தாமரைப்பூங் கரத்தி னாளைத்
தன்னடியார்க் கேசுரக்கும் வரத்தி னாளை
எண்டிசைக்குந் தான்முதலா யிருந்திட் டாளை
ஈசனிரு செவிக்கினிமை விருந்திட் டாளைக்
கண்டிசைக்குந் தாமதுரக் கனியைத் தேனைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 3

சந்தனப்பொற் சிலம்பினிலே பிறந்திட் டாளைத்
தமிழ்முனிவன் மடிமிசையே வளர்ந்திட் டாளைச்
சுந்தரனுக் கிறைவனைத்தா தேவி னாளைத்
தொண்டருள மணிவிளக்காய் மேவி னாளைச்
செந்தழன்மேல் வேவாது சிறந்திட் டாளைத்
தீவினையேன் செய்தபிழை மறந்திட் டாளைக்
கந்தனுக்குப் பாமொழிவித் தெனையு மாண்ட
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 4

மூச்சங்கப் பெருவாழ்வை யொருவா வின்பை
முக்கனியின் மதுரத்தை யமுதைத் தேனை
அச்சங்கள் கெடுத்தருளு மன்னை தன்னை
ஆடெரியிற் குளித்தெழுந்த வரசி தன்னை
நச்சங்க ளாரமுத மாக்கி னாளை
நான்மறையின் பூட்டறுத்த ஞான கும்பக்
கச்சங்க ளறுத்தகன்ற தனத்தி னாளைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 5

அற்பகத்தே யூறிவரு மறிவி னாளை
அறிவகத்தே கருவாகி யமரு வாளைச்
சொற்பதங்கள் கடந்தசெழுஞ் சோதி யாளைத்
தூண்டாத மணிவிளக்கைத் துயரந் தீர்க்கும்

2519



நற்பதத்தை யென்றலையில் நாட்டி னாளை
நல்லுயிர்கள் நாவினிலே நடனஞ் செய்யுங்
கற்பகத்தைக் கனகமலர்க் கொம்ப னாளைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 6

எம்மொழிக்கு மூலமாய் முளைத்திட் டாளை
இனிமைக்குத் தான்வரம்பாய்த் தழைத்திட் டாளை
மைம்மலியு நறுங்கூந்தற் காட்டி னாளை
வைகைநதி தனிற்றவழ்ந்த வேட்டி னாளைப்
பொய்ம்மலிந்த சமணரைமுன் வீட்டி னாளைப்
புத்தமுது மனுங்கவருள் பாட்டி னாளைக்
கைம்மலிந்த புத்தகமும் யாழுங் கொண்ட
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 7

வஞ்சமிலா நெஞ்சகத்தி லூறுந் தேனை
வாசமலி தாமரையில் வைகும் மானை
அஞ்சரண பங்கயமென் றலைமேல் வைத்தே
ஆண்டவளை வேண்டுவன வளித்திட் டாளைத்
தஞ்சமெனத் தனையடைந்தார் தம்மை யென்றுந்
தானாக்கிப் பெருவாக்குத் தருகின் றாளைக்
கஞ்சமலர் முகத்தாளைக் கனியைப் பாகைக்
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 8

தேவாதி தேவனிரு செவிகட் கென்றுந்
தித்திக்குந் தெள்ளமுதைச் செவ்வேற் பெம்மான்
மூவாத பன்னிரண்டு செவிக ளுள்ளே
முளைத்தெழுந்த செழுங்கரும்பை முகுந்த னுக்குப்
பூவாலே சூடிப்பின் கொடுத்தாள் சொன்ன
பூம்பாவைப் பொற்பணியைப் புலவர் தங்கள்
நாவாலே யள்ளியுண்ணு நவநீ தத்தை
நாமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 9

அற்பகத்தே யனவரத மாடி னாளை
அலரகத்தே மணமாகி யமர்ந்திட் டாளை
எற்பகத்தே யுயிர்கூட்டி யுருத்தந் தாளை
ஏடகத்தே திழ்ந்துவிளை யாடி னாளைச்
வ

சொற்பொருளும் பயனுமாய்த் துலங்கு வாளைத்
தூயதமி ழொருமூன்றுஞ் சொல்லி னாளைக்
கற்பகத்தைப் புத்தகமுங் கையு மான
கலைமகளை நினைந்தடியே னுய்ந்த வாறே. 10

## உரை விளக்கம்

**நா**மகளின் திருவருளால் உய்ந்த வகையைக் கூறுவது இப் பதிகம்.

(1) பா – நால்வகைப் பாவும் வரிப்பாடல்களும் பிறவும். பணி – அணிகலம். முத்தம் – முத்துமாலை.

பாவலர்களது பாக்களையும் அணிகலன்களையும் முத்துமாலைகளையும் திருமுடியிற் சூடியுள்ளாள் என்க. இனிப் பாக்களை முடியிலும் அணிகலன்களை உறுப்புக்களிலும் முத்துமாலையைத் திருக்கரத்திலும் அணிந்துள்ளாள் எனலும் அமையும். அடர்த்த – நெருக்கிய அல்லது பொருத. பாகு – வெல்லம். நுடங்குதல் – துவளுதல். நாலுங் கொடியும் ஒவ்வாமையாற் றுவண்டன. புடை – பக்கம். நோன்பிகளுக்கும் தவத்தினருக்கும் அண்மையளாய் நின்று ஞான உணர்வினைக் கொடுப்பாள் என்க.

(2) மூவாத – முதிராத. முடியாத கதி – பேரின்ப வாழ்வு. திரு – அருட்டிரு. நுதி – புகழ். வணக்கமுமாம். வெற்பு – பொதியமலை.

(3) தண்டு – வீணை. இசைக்கும் – வாசிக்கும். ஈசன் இரு செவிக்கு இனிமை விருந்து இட்டாளை – இறைவனது இரு செவிகளுக்கும் இனிய தமிழ் விருந்து படைத்தவளை; என்றது, அடியவர்கள் இறைவனைத் துதித்துப் பாடிய தேவார திருவாசகம் முதலாயவற்றை என்க. கண்டு – கற்கண்டு. இசைத்தல் – புகழ்ந்து பேசுதல். கற்கண்டு நாவிற்கு மாத்திரம் இனிமைதரும். இத் தமிழ் மதுரக் கனி நாவிற்கும் செவிக்கும் சிந்தனைக்கும் இனிக்குமாதலின் இக்கனியைக் கற்கண்டு புகழ்வதாயிற்று.

(4) கந்தனுக்குப் பாமொழிவித்தது – இவ்வாசிரியர் முருகக் கடவுளுக்குக் கந்தவனநாதர் நான்மணிமாலை, நல்லூர்ப் பதிகம், நல்லையந்தாதி, நல்லைத் திருப்புகழ், கதிரைவேலவர் பதிகம் முதலாய நூல்களைப் பாடுதற்கு அருள்செய்து நின்றது.

(5) ஒருவா – நீங்காத. ஆடெரி – ஆடுகின்ற நெருப்பு. நெருப்பு எரியும்போது அசைதலின் ஆடெரி எனப்பட்டது.



“தொட்டனைத்தூறு மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு” ஆதலின் ‘ஊறிவரும் அறிவு’ என்றார். அவ்வறிவூற்று நாமகளிடத்துப் பேரன்பு பூண்ட ஞானிகளுக்கு இயல்பாகவே ஊறி இன்ப வீட்டிற்கு வாயிலாகிய மெய்யுணர்வென்னும் கருப்பொருளாயமைதலின் ‘அறிவகத்தே கருவாகி அமருவாளை’ என்றார். சொற்பதம் – சொல்லாற் குறிக்கப்படும் பொருள். நற்பதம் – நலனருளும் திருவடிகள். கனகம் – பொன்.

(7) வரம்பு – எல்லை. அனுங்க – வருந்த.

(8) அஞ்சரண பங்கயம் – அழகிய திருவடித் தாமரைகள்.

(9) தேவாதிதேவன் – சிவபிரான். முகுந்தன் – திருமால். பூவாலே சூடிப்பின் கொடுத்தாள் – ஆண்டாள் அம்மையார். இவர் சொன்ன பூம்பாவை – திருப்பாவை என்னும் நூல். பூம்பாவையாகிய பொற்பணி என்க.

# 12. பொறுத்த பத்து

**சே**யழா திருக்கப் பாலினைந் தூட்டுஞ்
சிறப்புடை யன்னையே போலத்
தூயநாற் பொருண்மே லவாவுரு வெனக்குந்
தொடர்பினு லன்னவை யருளித்
தீயவென் னுளத்து மேவினா விடமாய்ச்
செந்தமிழ்ப் பாவருள் செய்யும்
ஆய்கலைப் பாவாய் முத்தமிழ்ச் செல்வீ
யரும்பிழை பொறுத்தருள் வாயே. 1

**பொ**ய்யுரைத் திழிந்த புலையரைப் பாடிப்
பொருளலஃப் புன்மொழி புலம்பி
ஐயையோ பொழுதை யவத்திலே கழிக்கு
மறிவிலே னென்னையு மருளி
உய்வகை காட்டி யுளத்திலே யிருந்து
நாவினுற் பாவகை யுரைக்குந்
தெய்வமே மேலாஞ் செழுந்தமிழ்ச் செல்வீ
செய்பிழை பொறுத்தருள் வாயே. 2

வம்புகள் பேசிப் பயனில கரைந்து
மாண்டவர் பேரிலே பொய்ம்மை
பம்பிய பாடல் பலபல வுரைத்துப்
பாவமே யீட்டிய வெனக்கும்
அம்புவி மதிக்கப் புலமைதந் தருளி
யகத்தினு நாவினு மமருஞ்
செம்பொனே மணியே முத்தமிழ்ச் செல்வீ
செய்பிழை பொறுத்தருள் வாயே. 3

பொருந்தலர்ப் பழித்தும் வசைபல கொழித்தும்
பொருளிலாப் புன்மைகள் புகன்றும்
வருந்திய வஞ்சப் புலையனேன் றனக்கும்
வாழ்வினை யருளுவா னுள்ளம்
பொருந்திவந் துள்ளும் புறம்புமாய் நின்று
புலமைதந் தருளிய பொருளே
திருந்திய தெய்வச் செந்தமிழ்ச் செல்வீ
செய்பிழை பொறுத்தருள் வாயே. 4

அரும்பொனே மணியே பாற்கடற் பிறவா
வமுதமே யாருயிர்த் துணையே
விரும்பிய வுதவுங் கற்பக தருவே
விளிவிலா மனமணி விளக்கே
இரும்புநே ருள்ளத் தென்னையு மாண்ட
வெம்பெரு மாட்டியெவ் வுயிர்க்குங்
கரும்பென வினிக்கு முத்தமிழ்ச் செல்வீ
செய்பிழை பொறுத்தருள் வாயே. 5

வறியவன் புல்லன் வஞ்சக னென்னையும்
வலியவந் தாண்டுகொண் டருளி
யறிவிலே பயின்று நாவிலே யுரைக்கு
மம்மையே யழிவிலாப் பொருளே
யுறுமவா வுளத்தால் வாக்கினாற் செயலா
லுணர்வினா லுணர்விலா மையினாற்
சிறியனேன் செய்த பெரும்பிழை பொறுத்துத்
திருவருள் செய்திடு வாயே. 6



இளமையு மழகும் பொருளென வெண்ணி
யிருந்துழி யியற்றுபுன் றொழிலால்
எழுமையு நரகில் விழக்கட வேனை
யிரக்கத்தா லாண்டுகொண் டருளி
யுளமகிழ்ந் திருந்து நாவினி லுரைக்கு
மொளிவிரி யருங்கலை மதியே
வளமலி செஞ்சொன் முத்தமிழ்ச் செல்வீ
வன்பிழை பொறுத்தருள் வாயே. 7

மாயையிற் பிறந்த கண்கவர் வடிவ
மயக்கிலே மயங்குகின் றேனைத்
தாயபே ரெழில்சேர் திருவுருக் காட்டி
மனத்தினைத் தொடக்கியாட் கொண்டு
பாயநாற் பொருளின் பரப்பெலா மருளிப்
பாவகை நாவினின் றுரைக்கும்
ஆய்கலைப் பாவாய் முத்தமிழ்ச் செல்வீ
யரும்பிழை பொறுத்தருள் வாயே. 8

மாசிலா மதிபோன் மலர்ந்திடு முகமும்
வஞ்சனேன் வல்லிருள் வாட்டுந்
தேசுலாம் விழியும் பாததா மரையுஞ்
சிறியனேன் சிந்தையிற் காட்டி
ஆசையா யாண்டு பிணிமிடி நீக்கி
யருந்தமிழ்ப் புலமையுந் தந்த
வாசமா மலர்வாழ் முத்தமிழ்ச் செல்வீ
வன்பிழை பொறுத்தருள் வாயே. 9

என்பிழை பொறுத்தே பிணிமிடி நீக்கி
யின்றமிழ்ப் புலமையு மருளி
மன்பெரு வடிவுங் காட்டியாட் கொள்ளும்
வரமரு ளென்றுனைப் பணிந்தேன்
அன்பினில் விளைந்த வமுதமே தேனே
யரும்பொனே மாமணிக் குவையே
என்பினைப் பாவை யாக்கிய முதல்வீ
யேன்றுகொண் டருள்புரி வாயே. 10

# உரை விளக்கம்

உலகியல் வயப்பட்டிருந்தமையினாலே ஆசிரியர், அறிவு வளமும் செய்யுள் செய்யும் வன்மையுந் தந்த நாமகளைப் பாடாது சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோரைப் பாடித் தமிழ்த் தாய்க்குச் சிறுமை செய்த பெரும்பிழையைப் பொறுத்தருளுமாறு நாமகளை வேண்டுகின்றார். உருதிரோற்காரி ஆண்டு கார்த்திகைத் திங்களில் இப்பதிகம் பாடப்பட்டது.

(1) சேய் – குழந்தை. சிறப்புடையன்னை – கைம்மாறு வேண்டாது கருணையாற் பேணிவளர்க்குந் தாய். தொடர்பு – முற்பிறப்புக்களிலே வழிபட்டீட்டிய நல்வினைத் தொடர்ச்சி. கம்பருக்குக் காளிதேவியினது திருவருளும் காளிதாசருக்குப் புவனேசுவரி அம்மனின் திருவருளும் புலமையைக் கொடுத்ததுபோலத் தமக்கு நாமகளது திருவருள் புலமையைக் கொடுத்து வரகவியாக்கியதை இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் நினைந்துருகுகின்றார் ஆசிரியர்.

(2) புலையர் – ஒழுக்கங்கெட்ட மானுடர். புன்மொழி – சிறுமொழி. அவம் – வீண்.

(3) மாண்டவர் – இறந்தவர். பம்பிய – நிறைந்த. அம்புவி – ஆகுபெயராய் உயர்ந்தோரை உணர்த்தியது.

(4) பொருந்தலர் – பகைவர்கள். வசை – வடுமொழி. பகைவரைப் பழித்தமையும் வசை மொழிந்தமையும் ஒரு நிகழ்ச்சியை உள்ளிட்டது. ஆசிரியர் நவாலியிலுள்ள மக்கிக்கிடங்கு என்னும் தமது பரம்பரை முதுசொக் காணியின் வேலிக்கு, அவ்வூருக்குப் புதியராய்ப் புகுந்து சிறுசெல்வம் படைத்து வாழ்ந்த வம்பமாக்கள் சிலர் தீக் கொளுவியபோது அவர்கள் கெடுமாறு பாடினார். அன்றிரவே தீக் கொளுவினோன் உடம்பிலே வெம்மைநோயுற்று ஆற்றானாய் ஊர்விட்டோடினான். அவனுக்கு உதவியாய் நின்றோர் இன்னும் சீர்கெட்டு அவலமுறுகின்றனர், என்பது அவ்வரலாறு.

(5) விளிவு – அழிவு. இரும்பு நேருள்ளம் – அன்பு கொண்டிளகாமனம்.

(7) அருங்கலை மதி – அறுபத்துநான்கு கலைகளும் நிரம்பிய மதி. வன்பிழை – பொறுக்க வியலாத பிழை.

(8) தொடக்கி – கட்டி. நாற்பொருளின் பரப்பு – அற முதலிய நாற்பொருள்களின் விளக்கம்.

(9) தேசு – அழகு. பிணி – தொய்வு சன்னி மூலம் முதலிய ஆசிரியரை வருத்திய நோய்கள். மிடி – வறுமை.

# 13. அருட் பத்து

உருப்பளிங்கு போனிறமு மொளிநிலவு முகமும்
ஒருகோடி மன்னுயிர்கட் கறிவமுத முதவும்
அருப்புவன மென்முலையு மறுபதங்கண் முரலும்
ஐம்பாலு மெம்பாவ மறுக்குமருள் விழியு
மருப்பொலியு மரவிந்த மலரடியு நான்கு
மணிக்கடகத் திருக்கரமு மாகவுள மன்னித்
திருப்புவன முழுதருளு நான்முகனு வமருஞ்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 1

ஆராத காதலுட னடியவர்கள் வேண்ட
அம்மாநீ புரியாத வருளாட லுண்டோ
கூராத வுள்ளமெலாங் கூர்விக்க வல்லாய்
கூறாத ஊமையுரை கூறுவிக்க வல்லாய்
ஏறாத செந்தழலி லேறிநிற்க வல்லாய்
இறந்தவரை யொருகணத்தி லெழுப்புவிக்க வல்லாய்
தீராத பிணிதீர்த்துன் சேவடிகள் துதிக்கச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 2

அற்றகுளத் தறனிரம்பி முதலைவர விலையோ
அம்முதலை யொருமதலை யருள்புரிய விலையோ
குற்றமறத் திருவிழியுங் கொடுப்பிக்க விலையோ
கோலின்றித் தோணிகரை கூட்டுவிக்க விலையோ
பெற்றநிதி யாற்றிலிட்டுக் குளத்தெடுக்க விலையோ
பெரியவிடப் பிணிநீக்கிப் பிழைப்பிக்க விலையோ
சிற்றடியேன் செய்தபிழை யத்தனையும் பொறுத்துச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 3

முருகோடித் திசைகமழு முகிலோடு குழலு
முயலோடு முழுமதிபோன் முகமலரும் விழியும்
குருகோடு மடநடையுங் கொம்போடு மிடையுங்
கோங்கோடு மிளமுலையுங் குறித்தடியேன் நினைத்
அருகோடி யிருகரத்தா லணைத்தென்னைத் தூக்கி [தால்
அன்போடு மமுதுதவி யடியனுளத் துறங்குந்
திருகோடப் பிணியோடத் தீயவினை யோடச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 4

மஞ்சஞ்சு குழலுமிரு வாளஞ்சு விழியு
மதியஞ்சு நுதலுமுயர் வரையஞ்சு முலையும்
பஞ்சஞ்சு திருவடியும் பளிங்கஞ்சு வடிவும்
பாம்பஞ்சு சுடர்க்காந்தள் பணிந்தஞ்சு கரமு
நெஞ்சஞ்சத் தீயபிணி நேர்ந்தஞ்சு காலை
நினைத்தவுட னோடிவந்து நீயணைத்துத் தூக்கி
அஞ்செஞ்சொ லஞ்சலென வருளியக மகிழ
அரியதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 5

மீனேறு கொடித்தென்னன் மெய்ப்பிணியைத் தீர்த்தா
வினையேறு சமணர்களை வெங்கழுவிற் சேர்த்தாய் [ய்
வானேறு முயிருடம்பில் வந்தேறப் பணித்தாய்
வஞ்சனுயிர்க்குடியேறு முடியேறத் துணித்தாய்
ஆனேறு மெம்பெருமா னிடமேறு மம்மை
அருளேறு மொருவிழியா யமர்ந்தருளு மமுதே
தேனேறு வெள்ளைமலர்த் தவிசேறி வாழுஞ்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 6

அப்பணியுஞ் செழுஞ்சடை யரன்றரப் பிணிந்தாய்
அப்பொதிய மாமலை யவன்மடி வளர்ந்தாய்
ஒப்பரிய கூடலுறு சங்கமுவந் திருந்தாய்
ஓதுபொரு ளுன்குமுயிர்க் குதவியருள் சுரந்தாய்
இப்படியி னொப்பின்மொழி மங்கையரைப் பயந்தாய்
எவ்வுயிர்க்கு முயிராகி யிருந்தருளு மன்னாய்
செப்புகலை மெய்ப்பொருள் சிறக்கவருள் செய்யுஞ்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 7

மணிதிகழும் பொதியமலை நீவாழும் மலையே
மன்னுதமி ழுலகமுன தரசாட்சி நிலையே
பணிதிகழு முடிமன்ன ருன்னேவ லாளர்
பார்படைத்த வொருமுதல்வ னுன்காவ லாளன்
அணிதிகழும் பெருவளத்திற் குறையதிலை மெய்யே
ஆனாலு முனைப்பாடு மடியனிணி யையோ
திணிதிகழு மிடிதிகழ வருந்துவது போக்கிச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 8



ஈசனைமுன் பணிகொண்ட மொழியுன்றன் மொழியே
எழின்முருகன் பலசெவிகட் கினித்ததுமுன் மொழியே
ஆசுதவி ரைங்கரன்கேட் டருள்வதுமுன் மொழியே
அந்நெடுமால் பாய்சுருட்ட வறைந்ததுமுன் மொழியே
வாசமலர்க் குழலுமையாண் மகிழ்வதுமுன் மொழியே
மன்னுதமி ழகமெங்கும் வழங்குவதுமுன் மொழியே
தேசுமலி யுன்மதுர மொழிகேட்டுள் ளிரங்கிச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே. 9

ஒருகோடி பெரும்பாவ முணராது புரிந்தேன்
ஓயாத சிற்றின்பத் துழன்றுழன்று திரிந்தேன்
உருகோடு மெய்யன்பா லுன்பாதம் பணியா
வுன்மத்த னெனையாளத் திருவுள்ள மிரங்கி
அருகோடி வந்தெடுத்து மடிமீதி லிருத்தி
அறிவமுத நிறையவளித் தரும்பிணிகள் மாற்றித்
திருகோட மிடியோடத் தீயவினை யோடச்
செய்யதமிழ்ப் பெருமாட்டி திருவருள்செய் குதியே.10

## உரை விளக்கம்

அருளென்பது இறைவன் உயிர்கள்மேல் வைக்கும் கைம்மாறு வேண்டாப் பேரிரக்கம்.

(1) உரு – அழகு. அரும்பு – முகை. வனம் – அழகு. அறுபதம் – வண்டு. ஐம்பால் – ஐந்து வகையாக முடிக்கப்படுங் கூந்தல். மரு – நறுமணம். அரவிந்தம் – தாமரை. கடகம் – காப்பு. திருப்புவனம் – அழகிய பதினான்கு உலகம். நான்முகன் – பிரமன். நான்முகன் நாவமரும் பெருமாட்டி! உருப்பளிங்கு போனிறமும்............ கரமுமாக உளமன்னித் திருவருள் செய்குதி, எனப் பொருள்கூட்டி முடிக்க. உள மன்னி – மனத்தில் நிலைபெற்று.

(2) ஆராத – குறையாத. கூராத–நுண்ணறிவில்லாத. இரண்டாம் மூன்றாமடிகளினாலே அருளாடல்கள் சில கூறப்பட்டன. தீராத பிணி–புலவர் அவர்களை நெடுங்காலமாகத் தொடர்ந்த தொய்வு நோய்.

(3) அற்ற குளம் – நீர்வற்றிய குளம். அறல் – நீர். முதல் மூன்று அடிகளாலும் அருளாடல்கள் கூறப்பட்டன.

(4) முருகு – வாசம். முகிலோடு குழல் – முகில் நாணி ஓடு தற்குக் காரணமாய நறுங்கூந்தல். முயலோடு முழுமதி – கறை நீங்கிய பூரண சந்திரன். குருகு – அன்னம். ஓடுதல் – நடைக்கு நாணியோதுங்குதல். கொம்பும் கோங்கும் இடைக்கும் முலைக்கும் உவமை. திருகு – வஞ்சம் முதலாய குற்றங்கள்.

(5) மஞ்சு – மேகம். மஞ்சும், வாளும் மதியமும் வரையும் பஞ்சும் பளிங்கும் காந்தளும் முறையே குழலுக்கும் விழிக்கும் நுதலுக்கும் முலைக்கும் திருவடிக்கும் வடிவிற்கும் கரத்திற்கும் உவமையாதற்கு அஞ்சின என்க. பாம்பஞ்சு சுடர்க் காந்தள் – கண்டோர் பாம்பென்று அஞ்சுதற்குக் காரணமான கார்த்திகைப்பூ.

(6) தென்னன் – பாண்டியன். அவனது கொடி மீனக்கொடி. தீவினைகளைப் பெரிதுமுடையராதலின் வினையேறு சமணரெனப்பட்டார். ஆனேறு மெம்பெருமான் – சிவபிரான். இடமேறுமம்மை – உமை. தவிசு – இருக்கை.

(7) அப்பு – நீர். ஈண்டுக் கங்கையாறு. பொதிய மலை முனிவன் – அகத்தியர். பொருள் நான்கு – அறம் பொருள் இன்பம் வீடு. படி – பூமி. மொழி மங்கையர் – மொழிகளாகிய மங்கையர். எல்லா மொழிக்கும் மூலமொழி தமிழாதலின் 'மங்கையரைப் பயந்தாய்' என்றார். கலை – அறுபத்துநான்கு கலைகள்.

(8) பணி – வேலைப்பாடு. பணி திகழும் முடிமன்னர் – மூவேந்தர். பார்படைத்த ஒரு முதல்வன் – பிரமன். காவலாளன் – தலைவன். இல்லை எனற்பாலது இலை எனக் குறைந்தது. பெருவளத்திற் குறையில்லாத உன்னைப் பாடும் அடியேன் வறுமையால் வருந்துவது முறையாகாது ஆதலால், வறுமையைப் போக்கித் திருவருள் செய்குதி என வேண்டுகின்றார்.

(9) பணி – ஏவல். ஆசு – குற்றம். எல்லாத் தெய்வமுங் காதலிக்கும் பெருமை தமிழ்மொழிக்குண்டென்பது இப்பாட்டினாற் கூறப்பட்டது.

(10) திருகு – வஞ்சம் முதலிய குற்றம்.

---

## 14. நயனப் பத்து.

சந்தனச் சோலையிற் றென்னம் பொருப்பிற் றவமுனிவன்
முந்து வளர்த்திட்ட தெய்வத் தமிழ்மொழி மொய்குழலாள்
சந்திரன் தோற்ற முகத்தா மரைக்கீழ்க் குமிழருகே
இந்திர நீல மலரிரண் டென்று மிலங்கிடுமே. 1



பண்ணு மமுது மொதுங்குஞ் சுவைமொழிப் பாரதிதன்
விண்ணும் விரும்பிடு மெண்ணெண் கலைத்திரு மேனியிலே
நண்ணும் புலவர் விருந்தா யருந்தியெந் நாளுமுய்ய
எண்ணு மெழுத்துங் கொழித்தே யிலங்கு மிருவிழியே. 2

பொன்பெற்ற மேனிப் பசுந்தமிழ்ச் செல்வி புயற்குழற்கீழ்
மின்பெற்ற பாதி மதிக்கீழ்க் குனித்திட்ட வில்லிடையே
கொன்பெற்ற கூர்நுதி யம்பிரண் டுண்டுளங் கூர்மடமைத
துன்புற்ற பேரிரு ளோட வொளிர்ந்து துரத்திடுமே. 3

வள்ளக் கமலத்தி லேயெள்ளுப் பூக்க மநவியிரு
கள்ளக் குமுத மிருசார் மலர்ந்து கருணைமதுத்
துள்ளிக் குதிக்க விசைமணம் வீசிநற் றூயகவி
யள்ளிச் சொரிந்து கடைக்கணித் தேயெனை யாண்டிடுமே. 4

காலை யிளங்கதிர் கண்டு மலராக் கதிர்மறையும்
மாலைக் குவியா விடையிடை யேமலர்ந் துங்குவிந்தும்
பாலைப் பொழிந்து கடுவைக் கெடுத்துயர் பாற்கடலிற்
சேலைத் துரத்தி யெனையாளு நாமகள் சீர்விழியே. 5

வானும் புவியுந் துதிக்கின்ற தீந்தமிழ் மங்கைநல்லாள்
தானுங் கருணையு மாகநின் றேழையைத் தாங்குமன்னை
தேனுஞ் செந்தாதும் பரப்பும் வதனச்செந் தாமரைமேல்
மீனும் வைவேலும் பொருவுஞ் செங்காவி மிளிர்கின்றவே. 6

வாய்மை கனியுஞ் செந்நா வுடையார்க்கு மகிழ்வரும்பித்
தாய்மை கனியு மகமுடை யார்தோ முமைவிரிந்து
தீமை கனியுஞ் செயலுடை யாரைச் செறுத்தறுத்துத்
தாய்மை கனியுங் கலைமகள் கூர்விழித் தாமரையே. 7

மொய்த்தா ரணிமுகின் மண்டலத் தின்கீழ் முளைமதியாஞ்
செய்யா ரணிமண் டலமதன் கீழ்ச்சிலை மண்டலமாம்
ஐதா கியதமிழ்த் தேவி யருட்டிரு மேனியிலே
மெய்யா ரிருவிழி மண்டல மங்கே விளங்கிடுமே. 8

வாவென் றழைப்பது போலிமைக் கும்வண் டமிழ்க்கவிதை
தாவென்று கேட்பது போலே செவிக்கடை சாரும்பின்னர்
ஆநன் றென்றுரைப் பதுபோன் மலர்ந்தின் னருள்பிலிற்றும்
பூவொன்று செந்தமிழ்த் தேவி கயலைப் பொருவிழியே. 9

நம்புரை கூறுநர் போல நடித்து நடுவிகந்து
வம்புரை கூறுநர் வஞ்சகத் துக்கஞ்சல் வாழியென்று
இன்புரை கூறுதல் போல மகிழ்வுட னேயிலங்கும்
பொன்புரை மேனிக் கலைவாணி நாட்டப் புதுமலரே. 10

---

# உரை விளக்கம்

நயனப்பத்தென்பது கண்ணின் அருட்பொலிவை வியந்து பாடுவது. நயனம் – கண். இது பெரும்பாலும் கட்டளைக் கலித்துறையாற் பாடப்படும்.

(1) தென்னம் பொருப்பு – பொதியம். தவமுனிவன் தென்னம் பொருப்பிற் சந்தனச்சோலையில் முந்து வளர்த்திட்ட தெய்வத் தமிழ் மொழி ஆகிய மொய்குழலாளது முகத்தாமரைக் கீழ்க் குமிழருகே என்றும் இந்திர நீல மலிரண்டு இலங்கிடும் என இயைக்க. மொய்குழல் – நெருங்கிய கூந்தல். களங்கமுடைமையாலும், வளர்வு தேய்வுகளுடைமையாலும், கிரகணமுடைமையாலும், தோற்ற மறைவுகளுடைமையாலும், இடையிடையே மேகத்தினால் மறைக்கப்படுதலாலும் சந்திரன் இவளது முகத்திற்கு ஒவ்வாது தோற்றதென்க. குமிழ் – மூக்கு. இந்திரநீலம் – கருநீலம். மலிரண்டு – மலர்போலும் விழிகள் இரண்டு.

(2) தமிழின் இனிய சுவைக்கு ஒவ்வாது இசையும் அமுதும் ஒதுங்கின என்றபடி. பாரதி – நாமகள். எண்ணெண்கலை – அறுபத்து நான்கு கலைகள்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றாராதலின் அறுபத்துநான்கு கலைகளாகிய திருமேனியிலே எண்ணும் எழுத்தும் கண்ணிடத்தே யமைந்த வென்றார். எண்ணு மெழுத்து மறியவே ஏனைய கலைகளெல்லாம் எளிதினறியப்படும் என்க. நண்ணும் புலவர் – நாமகளது அடித் தாமரைகளை விரும்பி அணுகிய செந்தமிழ்ப் புலவர் கூட்டம். மொழிக்குத் தோற்று அமுது ஒதுங்கவே தேவர்கள் அதனை உண்ண நாணி எண்ணெண் கலைகளையும் உண்ண விரும்பினர். விருந்து – புதிது. புலவர்கள் எண்ணும் எழுத்தும் பயின்றபின் ஏனைய கலைகளை நாள்தோறும் புதிது புதிதாக அறிந்து அறிந்து உய்கின்றாராதலின் "விருந்தா யருந்தி எந்நாளும் உய்ய" என்றார். உய்ய – அறம் நிலையின்மையும் பொருள் நிலையின்மையும் இன்பம் நிலையின்மையும் உணர்ந்து வீடுபேற்றுக்கு முயன்று உய்ய. கொழித்தல் – தெரித்தல்.



(3) பசுந்தமிழ் – இனிய தமிழ். புயற்குழல் – மேகம்போன்ற கூந்தல். மின் – ஒளி. பாதிமதி – நெற்றி. குனித்த வில் – வளைந்த புருவம். கொன் – பெருமை. நுதி – நுனி. அம்பு இரண்டு – விழிகள் இரண்டு. கூர் மடமை – மிகுந்த அறியாமை. அவ்விழிகள் மெய்யடியார்தம் அறியாமையைத் துரத்துமாகலின் பேரிருளோட வொளிர்ந்து துரத்திடும் என்றார்.

(4) வள்ளக் கமலம் – கிண்ணம்போலும் தாமரைப் பூ. ஈண்டு முகத்தைக் குறித்தது. எள்ளுப் பூக்க – எள்ளுப்பூ விரிய. அது நாசியைக் குறித்தது. குமுதம் கண்களைக் குறித்தது. இருசார் – இருபுறம். கருணை – பேரருள். இசை – புகழ். பண்ணுமாம். தூய கவி – சில் வாழ்நாள் மக்களைப் பாடாது அருள்வேண்டித் தெய்வங்களைப் பாடும் பாடல்கள். கடைக்கணித்தல் – கடைக்கண் பார்த்து அருள் செய்தல். இரு கள்ளக் குமுதம், கமலத்திலே எள்ளுப் பூக்க, இருசார் மருவி, மலர்ந்து, குதிக்க, வீசி, சொரிந்து, கடைக்கணித்து, ஆண்டிடும் என இயைக்க. தமதுள்ளத்தை முழுவதும் கவர்ந்தமை பற்றிக் கள்ளக் குமுதமென்றார்.

(5) காலை இளங்கதிர் – இளஞாயிறு. கதிர் மறையும் மாலை– ஞாயிறு படுகின்ற மாலைக் காலம். பாலைப் பொழிந்து – பால் நிறத்தைப் பொழிந்து. கடுவைக் கெடுத்து – நஞ்சை வென்று. நிறத்தால் நஞ்சின் கருமையை வென்றது. பால் வெள்ளை விழியையும் நஞ்சு கருவிழியையும் குறித்தன. பாற்கடலிற் சேல் – திருப்பாற்கடலிலுள்ள சேல் என்னும் மீன். அதுவும் கண்ணுக்கு ஒவ்வாமையினலே தோற்றோடியது என்க. சீர்விழி – அறியாமையை நீக்குஞ் சிறப்புடைய விழிகள். விழிகளாகிய தாமரை மலர்கள் என விரிக்க. விழிகளாகிய தாமரை மலர்கள் காலை இளங்கதிர் கண்டு மலராது மாலைக் குவியாது இடையிடையே மலர்ந்தும் குவிந்தும் பாலைப் பொழிந்து கடுவைக் கெடுத்துச் சேலைத் துரத்தி எனை ஆளும் என இயைக்க.

(6) வை வேல் – கூரியவேல். பொருவும் – ஒக்கும். காவி – கருங்குவளை போன்ற கண்கள். தானுங் கருணையுமாக நிற்றலின் அன்னை என்றார்.

(7) கலைமகளது விழித் தாமரை வாய்மையுடையார் மாட்டு மகிழ்வரும்பு மத்துணையாய் நின்று தூய்மை கனிந்த அகமுடையார் மாட்டுத் தோழமை பூண்டு அருள் விரியப்பெற்றுத் தீமை நிறைந்த செயலாளரைச் செறுத்தறுத்துத் தாய்மை கனியும் என்க.

(8) தார் – மாலை. முகில் மண்டலம் – முகிலொத்த கூந்தல். முளைமதி – பிறைச் சந்திரன். அது நெற்றி. சிலை மண்டிலம் – புருவம். ஐது – அழகு. வியப்புமாம்.

(9) இமைத்தல் அருள் செய்தற்கு வாவென்பதுபோலாகும். செவிக்கடை சார்தல் தமிழ்ப்பாடல் தாவென்பதுபோலாகும். மலர்ந்து இன்னருள் பிலிற்றுதல் ஆ! நன்று என்றுரைப்பது போலாகும். பிலிற்றுதல் – கொப்பளித்தல்.

(10) இலங்குதல் – விட்டு விட்டு ஒளிர்தல்.

## 15. அடைக்கலப் பத்து

பொய்ம்மாய வாழ்க்கைப் புணரியின் மூழ்கிப் புலம்புகின்ற
இம்மா னுடனைக் கரையேற்று வாயெறி யுஞ்சிலைமேல்
மெய்ந்நா வருஞ்சொற் றுணையாய்க் கரைபுக வேயருள்செய்
அம்மா தமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 1

வஞ்சப் பிறவி மயக்கமு மின்னலு மாற்றியுன் றன்
கஞ்சத் திருவடி காட்டிட வேண்டுங் கவிப்புலவர்
நெஞ்சத் திருந்து நினைப்பை முடிக்கு நிறைமதியே
அஞ்சொற் றமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 2

கச்சங் கடக்குங் கதிர்முலை யாய்கவ லைக்கடலாம்
இச்சங் கடத்துக் கெதுசெய்கு வேனெனை யாண்டருள்வாய்
முச்சங்க மேவி முழுதுல காண்டு முதுபுலவர்
அச்சங் கடத்துந் தமிழ்த்தெய்வ மேயுன் னடைக்கலமே. 3

பொல்லா வறுமைத் தழலிடைப் புக்குப் புழுவெனயான்
நல்லாய் வருந்தும் வருத்தந் திருவுள நாட்டிலையோ
வில்லா ரெரியிற் புகுந்தழி யாதங்கு வீற்றிருந்த
அல்லார் குழற்றெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 4

இன்னு வறுமைப் பெருக்கினி னேய்ச்சுழிப் பட்டெளியேன்
இந்நாள் வருந்தும் வருத்தம் பொறுக்கலை னேட்டினிலே
முன்னாட் சுழிப்புன லுக்கெதி ரேறிய மொய்குழலே
அன்னாய் தமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 5

தாயு மெனைப்பெற்ற தந்தையு நீயென்று தானடைத்தேன்
காயு முடற்பிணிக் கோர்மருந் தீமக ரக்கொடியோன்
நோயு முடற்குறை யுங்கெட வன்று நுவன்றவளே
ஆயுந் தமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 6



எண்ணைச் சிறந்த வெழுத்தை யிருவிழி யாக்கியெழு
பண்ணைப் பயின்மொழி யாக்கிய ஞானப் பசுங்கிளியே
கண்ணைத் திறந்தொளி காட்டுதி முன்கத வந்திறந்த
அண்ணற் றமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 7

வாளுங் கயலும் பொருவும் விழியார் மயக்கினிலே
நாளும் பொழுதுங் கழித்தேற்குன் பாத நளினவிணை
சூழும் வரமொன் றருள்புரி வாய்துறைப் பாண்டிநன்னா
டாளுந் தமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 8

மோதிக் கலக்கும் வறுமையு நோயு முடித்துனது
சோதிக் கமலத் துணைமலர் சூட்டித் துணையருள்வாய்
வாதித்த புத்தனை யாக்கியொ ரூமையைப் போக்கிவைத்த
ஆதித் தமிழ்த்தெய்வ மேயடி யேனுன் னடைக்கலமே. 9

எல்லாப் பிழையும் பொதிந்தவென் பாடலை யின்பமகார்
கல்லா மழலை மொழியெனக் கொண்டு கதிதருவாய்
பொல்லாத நஞ்சமு தாக்கிய ஞானப் பொலங்கொடியே
அல்லார் குழற்செந் தமிழ்த்தெய்வ மேயுன் னடைக்கலமே. 10

## உரை விளக்கம்

ஆசிரியர் தம்மை வருத்தும் நோயும் வறுமையும் பிறவித் துயரும் ஆகிய துன்பங்களினின்றும் காத்தருளுமாறு நாமகளிடத்து அடைக்கலம் புகுந்ததைக் கூறுவது இப் பதிகம்.

(1) பொய்ம்மாய வாழ்க்கை – உண்மையை மறைத்து வஞ்சனை செய்யும் உலகியல் வாழ்க்கை. புணரி – கடல். சிலை – கல். திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லோடு துணையாகக் கட்டிக் கடலில் எறிந்தபோது அவர் பொய்யறியா நாவில் வந்த "சொற்றுணை வேதியன்" என்னும் சொல்லை துணையாகக் கரையேற அருள் செய்த தமிழ்த் தெய்வமே இம் மானுடனைக் கரையேற்றுவாய்; அடியேன் உன் அடைக்கலம் என்றவாறு.

(2) கஞ்சம் – தாமரை. கவிப் புலவர் – செய்யுள் செய்யும் மெய்ப் புலவர். பல்வேறு வகைக் கலைகளிலும் வல்லுநராய பல்வேறு புலவர்களுக்கும் அவ்வக் கலைகளாய் நின்று நிறைதலின் நிறைமதி என்றார். அஞ்சொல் – அழகிய சொல்.

(3) சங்கடம் – துயரம். கவலை – நோயானும் மிடியானும் உண்டாகும் கவலை.

(4) ஆசிரியர் தாம்பட்ட வறுமையைத் துன்பமிகுதி நோக்கித் தழலென்றார். நல்லாய் – மிகுதியாய். இனி நல்லாய்! என விளிப் பெயராக்கியுங் கொள்ளலாம். வில் ஆர் எரி – ஒளி நிறைந்த நெருப்பு. எரியிற் புகுந்தழியாதங்கு வீற்றிருந்தது – திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமய வுண்மைகளை ஏட்டில் எழுதி நெருப்பிலிட்டு எரியாமற் பெற்றுக்கொண்டது. அல்லார் குழல் – இருள்போலக் கருமை நிறைந்த கூந்தல்.

(5) இன்னா – துன்பம். பெருக்கு – வெள்ளம். சுழி – நீர்ச்சுழி. வறுமையாகிய வெள்ளத்திலே நோயாகிய நீர்ச்சுழியி லகப்பட்டு வருந்தும் வருத்தம். சுழிப் புனலுக்கு எதிரேறியது – திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சமய வுண்மைகள் எழுதிய ஏட்டினை வைகைநதியிலிட்டு எதிரேறிவரச் செய்தது.

(6) காயும் – வருத்தும். மகரக் கொடியோன் – மகரமீனைக் கொடியிலேயுடைய பாண்டியன். அவனது வெப்புநோயுங் கூனும் ஞானசம்பந்தரது தேவாரத்தினாலே நீங்கியமை ஈண்டுக் கூறப்பட்டது. உடற்குறை – கூன். ஆயும் – ஆராயும்.

(7) அண்ணல் – தலைமை. கதவந் திறந்தது – மறைக் கதவு திறக்கப் பாடியது.

(8) பாத நளினவிணை – பாத தாமரைகள் இரண்டு.

(9) துணை – இரண்டு. துணை – உதவி.

வாதித்த புத்தனை ஊமையாக்கி ஓர் ஊமையைப் போக்கி என ஊமையென்னும் சொல்லை முன்னுங் கூட்டி உரைக்க. வாதவூரடிகள் தம்முடன் வாதாடிய புத்தரது வினாக்களுக்கெல்லாம் விடை கூறவும் அவர்கள் கேளாது மறுத்தனர். வாதவூரர் வாக்கின் செல்வியாகிய கலைமகளை நினைந்து இப் பொய்யர் நாவினின்றும் நீங்குக என்றனர். உடனே புத்த குருக்கள் அனைவரும் ஊமைகளாயினர். இதைக் கண்ட புத்த அரசன் வாக்கில்லாத என்மகள் வாக்குப் பெறுமாறு அருளினால் நான் சைவனாவேன் என்றனன். வாதவூரர் பெண்ணை வருவித்து ஒழிந்த புத்தர் கேட்ட வினாக்களுக்கெல்லாம் அவளே விடைபகரச் செய்தனர். அரசன் பேருவகை யெய்திச் சைவனானான் என்பது ஊமையாக்கியதும் ஊமை நீக்கியதும் ஆகிய வரலாறு.

(10) மகார் – மக்கள். நஞ்சை அமுதாக்கிய ஞானப் பொலங்கொடி என்றார் தனது பாடலை மழலைபோல ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மேலும் வலியுறுத்துதற்கு.

# 16. இரட்டை மணி மாலை

## காப்பு

அணிமாலை பாவா லணிவாட் கிரட்டை
மணிமாலை நாவால் வழங்கப் — பிணிமாலை
ஓட்டுமிரு கோட்டம் பிறையிதழி யோங்குசடை
காட்டுமொரு கோட்டனடி காப்பு. 1

## நூல்

வெண்டா மரைமேல் விளையுந் தமிழ்ச்செழுந்தேன்
கண்டா லினிக்குமிரு கட்கரும்பு — கொண்டார்க்கு
வஞ்சத் திருக்கு மறுத்தொழியா வாழ்வுதவி
நெஞ்சத் திருக்கு நிறைந்து. 2

நிறைவாண் மலர்முக மும்பணைத் தோளு நிலவினொளி
குறைவா ணகையு மிருட்குழற் காடுங் கொடியிடையும்
அறைவா னமுத மொழியு மரவிந்தத் தாள்களுமாய்
உறைவாளுரைமகள்வெண்கமலத்துமென் னுள்ளத்துமே

உள்ளத்தா னுள்ள வழுதூறித் தித்தித்தென்
கள்ளத்தை நீக்கியின்பங் காட்டுமே — வெள்ளைக்
கலையு மணியுமணி காமரன மென்போற்
தலையு மணியுமணித் தாள். 4

தாடலை வைத்தவெண் டாமரை மேவித் தனதருட்சித்
தாடலை வைத்தம் புவியா ளரசி யணிகள் சுவைத்
தாடலைவைத்தகுழலாளென்னன்னை தன்னம்புயம்பொற்
றாடலை வைத்தெனை யாண்டா ளழிந்தன சஞ்சலமே. 5

சஞ்சலம்போ மின்பந் தழைக்குந் தருமனையும்
அஞ்சலம்போய் வாவென் றதட்டலாம் — வஞ்சகர்செய்
தந்திரமோ தாதுகலை வாணிதமிழ் மூன்றெழுத்து
மந்திர மோதி வரின். 6

**வ**ரிக்கோல வாள்விழி பானலம் போது மதன்கரத்த
வரிக்கோல வாரிதி யீயு மருந்து மதுரமொழி
வரிக்கோல மாமுலை வாரணக் கோடு மலர்க்கரத்து
வரிக்கோ லமரிசை யாழுடைச் செந்தமிழ் மாமயிற்கே. 7

**ம**யிலே மடவனமே வண்டமிழ்ப்பூங் காவிற்
குயிலே மலயமலைக் கொம்பே — மயலேதந்
தீர்க்கும் பழைய வினையிரண்டு மின்னினியே
தீர்க்குந் திருவருளைச் செய். 8

**செ**ல்லாத செல்வியைத் தாமரை யாட்டியைத் தீயவர்பால்
நில்லா தமர்ந்தெங்கு நின்றாளை நித்யகல் யாணியைநூல்
கல்லா தவர்மனம் போலிருட் கூந்தற் கனங்குழையை
அல்லா தருளுடைத் தெய்வந் தமிழகத் தார்க்கிலையே. 9

**தா**ய்போ லுணவருளித் தந்தைபோற் கல்விகொடுத்
தாய்வளைபோ லின்ப மகத்துதவிச் — சேய்போல்
இளங்குதலைத் தீஞ்சொற் செவிக்கீவா ளென்றும்
வழங்குதலை யுற்றதமிழ் மாது. 10

**மா**வாழ் பொதிய மலையிற் பிறந்து வரமுனிவன்
பூவாழ் கரமெனும் பொற்றொட்டி லாடிப் புலவர்சங்கப்
பாவாழ் பலகை யிருந்தேட்டி லேதவழ் பாவையென் றன்
நாவாழ் வுகந்தமை நான்முன்பு செய்திட்ட நற்றவமே. 11

**த**வந்தரு மோங்குந் தனந்தரு மின்புஞ்
சிவந்தரும் பேரின்புஞ் சேர்க்கும் — நலந்தருமிப்
பூவா ழெழுபிறப்பு நற்றுணையாய்ப் புல்லுமே
பாவாழ் கலைமான் பதம். 12

**ப**ண்டங்கு தீஞ்சொற் பனுவற் பிராட்டி பவளவிதழ்
விண்டங் கெழுந்த செழுந்தமிழ்க் கங்கை வியனதியு
மண்டங்கி முட்டி நிவந்துவிண் ணேறு மனமறுகக்
கண்டங் கறுத்த பெருமா னிருசெவிக் கட்டுண்டதே. 13

**க**டையமுதிற் றென்பொதியக் கல்லிற் பிறந்த
நடையமுத நல்ல வமுதம் — கடையமுதம்
உண்டா லினிக்கு முணர்ந்தாலுங் கேட்டாலுங்
கண்டா லினிக்குமிது காண். 14



**கா**வர சங்க மயலும் பிணியுங் கடிந்துகமழ்
பூவர சங்கமர் பொன்னன மேபுக லும்பிடிக்கைம்
மாவர சங்கனுங் குந்நடை யாய்மணிக் கூடலிலுந்
தாவர சங்கம மெங்கு நிறைந்த தமிழ்த் தெய்வமே. 15

**தெ**ய்வமுனைப் போல்வேறு தெய்வமிலை நீயுரைக்குஞ்
சைவசம யம்போற் சமயமிலை — பொய்யன்று
மாமறையு மாறில் மறையு மறையுமென்றால்
நாமறையு மாறு நகை. 16

**கை**யது புத்தகம் யாழக்க மாலை கவிரிதழ்ந
கையது முத்தமு முல்லை யரும்புங் கமழுமைவ
கையது பூங்குழல் காலொன் றிரண்டு கமலநன்மு
கையதுகொங்கைகருத்ததென்மேற்கொண்டகாரிகைக்கே

**கா**ரியமன் மேதிக் கடாவினெதிர்ந் தாலுமது
காரியமன் றன்று கடத்தெலும்பைச் — சீரியசம்
பந்தனுயர் பூம்பாவை யாக்கவருள் பாமகள்முன்
தந்ததமி ழின்றுமுண்டு தான். 18

**தா**துறை தாமரை யோபுன லோதரை யோவிரைசேர்
போதுறை சோலைப் பொதியங்கோ லோபுல வோருலகோ
சூதுறை கொங்கைத் துடியிடைச் சுந்தர வல்லியன்ன
மாதுறை கின்ற விடந்தா னறியும் வழியிலையே. 19

**வ**ண்ணப் புனலும் வளியு நெடுவிசும்பும்
மண்ணுமன லும்மறைந்து நின்றாலும்—எண்ணுமிரு
கண்ணுமன மும்முருகக் காட்டி வெளியாக
நண்ணும் தமிழரசி நன்று. 20

**ந**ங்கைக் கிடந்தரு நாண்மல ரேமுக நாகிளவேய்
அங்கைக் கிடந்தரு தோளா மடியில வந்தளிரே [றினது
கொங்கைக் கிடைந்தொல்கு நுண்ணிடைக் கொப்புமை கூ
சங்கைக் கிடமிட மேதட மேவுவெண் டாமரையே. 21

# உரை விளக்கம்

இரட்டை மணிமாலையாவது வெண்பாவும் கலித்துறையுமாக இருபது செய்யுள் அந்தாதித் தொடையான் வருவது. இருநிற மணிகளை இடையொப்பத் தொடுத்த மாலைபோல இருவகைப் பாமணிகளை இடையொப்பத் தொடுத்தலினால் இப்பெயர்த்தாயது.

(1) அணிமாலை – அழகு செய்யும் மாலை. இனித் தான் அணிதற்கியைந்த விசேடமமைந்த மாலை எனலும் அமையும். அத்தகைய மாலையைப் புலவர்களாகிய பொற்கொல்லரைக் கொண்டு பாவாகிய செம்பொன்னாற் செய்வித்து அணியும் நாமகளுக்கு என்க. பிணிமாலை ஓட்டும் – பிறவிப் பிணிக்குக் காரணமாகிய மயக்கத்தை ஓட்டும். இரு கோட்டு அம்பிறை – இரு கொம்புகளையுடைய அழகிய பிறை. இதழி – கொன்றை. ஒரு கோட்டன் – ஒற்றைக் கொம்பனாகிய யானைமுகக் கடவுள்.

(2) மொழி வடிவாய் நின்று நாவாலே பயிலுந்தோறும் இனிக்கும் தேனாதலின் 'வெண்டாமரை மேல் விளையுந் தமிழ்ச் செழுந்தேன்' என்றார். புத்தகமும் மணிவடமும் ஏந்தி வீணை தடவி வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெண்டாமரைமேல் எழுந்தருளியிருக்குந் தோற்றப் பொலிவு, கண்ட மாத்திரத்தே உள்ளத்தைக் கனிவித்தலின் 'கண்டா லினிக்கு மிரு கட்கரும்பு' என்றார். இருகட் கரும்பு – இரண்டு கண்களுக்குங் கரும்புபோலினிப்பவள். இனி எண்ணும் எழுத்துமாகிய இரு கணுக்களையுடையதோர் கரும்புபோல்வா ளெனலுமாம். கொண்டார்க்கு – தன்னைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுவார்க்கு. வஞ்சத் திருக்கு – உயிரை வஞ்சிக்கும் காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்கள். மறுத்து – நீக்கி. ஒழியா வாழ்வு – நீங்காத பேரின்ப வாழ்வு. நெஞ்சத்து நிறைந்து இருக்கும் – அடியேனது உள்ளத்தே நிறைந்த செல்வமாக இருக்கும்.

(3) வாள் – ஒளி. நிலவினொளி குறைவாணகையும் – நிலவின் ஒளியைக் குறைக்கும் பேரொளி காலும் முறுவலும். அறைவான் அமுதமொழி – எல்லோரும் சிறந்ததென மேலெடுத்துரைக்கும் அமுதம் போன்ற செந்தமிழ் மொழியும்.

(4) வெள்ளைக் கலையும் வெள்ளை அணியும் அணி கார்மார் அன்னம் – வெள்ளை உடையையும் வெள்ளை அணிகலன்களையும் அணிந்துள்ள அழகிய அன்னம் போல்வாளது. என் போற்றலையும் அணியும் மணித்தாள் – நாயன்மார் அடியார்களுடைய போற்றுதலையன்றிச் சிறியேனது போற்றுதலையும் அணிகின்ற அழகிய திருவடிகள். தாள் அமுதூறித் தித்தித்துக் கள்ளத்தை நீக்கி இன்பங் காட்டும் என்க.



(5) தாள் தலை வைத்த வெண்டாமரை மேவி – (தாமரைக் கொடியானது) தனது தண்டின் உச்சியிலே பொலிய வைத்த வெண்டாமரை மலரிலே வீற்றிருந்து. தனது அருட்சித்து ஆடலை வைத்து அம்புவி ஆள் அரசி – தனது கருணையால் அறிவுருவமான விளையாடலைச் செய்து தமிழகமன்றி உலகம் முழுமையும் ஆளும் அரசி. அளிகள் சுவைத்து ஆடலை வைத்த குழலாள் – வண்டுகள் தேனை உண்டு பறந்தாடுதற்குக் காரணமான பூமுடித்த கூந்தலையுடையாள். தன் அம்புயப் பொற்றாள் தலை வைத்து என்னை ஆண்டாள் – தனது தாமரைப் பூவையொத்த அழகிய திருவடிகளை என் தலைமீது வைத்து என்னை ஆண்டுகொண்டாள். சஞ்சலம் அழிந்தன – அதனாலே எல்லா வகைத் துன்பங்களும் அழிந்தன.

(6) தருமன் – இயமன். அஞ்சலம் போய்வா என்று அதட்டலாம் – யாம் உனக்கு அஞ்சமாட்டோம் நீ போய் வருகவென்று உறுக்கலாம். வஞ்சகர் செய் தந்திரம் – உண்மை நெறிகளைக் காணவிடாத பாச ஞானங்களைத் தரும் நூல்கள். தந்திரம் – நூல். கலைவாணி தமிழ் மூன்றெழுத்து மந்திரம் – நாமகளது 'தமிழ்' எனும் மூன்றெழுத்தாலாகிய மந்திரத்தை.

(7) வரிக்கோல வாள்விழி பானலம் போது – செவ்வரி படர்தலால் அழகுடைய கூரிய விழிகள் நீலோற்பலம் போன்றன; மதுர மொழி மதன் கரத்த வரிக்கோல் அவ் வாரிதி ஈயும் மருந்து – தித்திக்கும் மொழியானது மன்மதன் கையிலுள்ள வரிகளையுடைய கோலாகிய கரும்பையும் தேவருலகிலுள்ள அந்தப் பாற்கடல் கொடுத்த அமிழ்தத்தையும் ஒத்தது. வரி – நிறமுமாம். சுட்டில் வகரமெய் விகாரத்தாற் றொக்கது. வரிக்கோல மாமுலை வாரணக்கோடு – தேமலும் தொய்யிலுமுடைய பெரிய முலைகள் யானைக் கொம்பையொத்தன. வரி – தேமல். கோலம் – அழகு; என்றது தொய்யில் முதலிய புனைவுகளை. மலர்க் கரத்து வரிக்கோல் அமர் இசை யாழுடைச் செந்தமிழ் மாமயிற்கு – மலர் போன்ற திருக்கரத்திலே கட்டப்பட்ட நரம்புகள் பொருந்திய இசையையுடைய யாழைத் தாங்கிய நாமகளுக்கு. வரித்தல் – கட்டுதல். முதனிலைத் தொழிற்பெயராய் நின்றது. கோல் – நரம்பு. ஏகாரம் ஈற்றசை.

(8) பொதியத்துப் பயில்வதனாலும் சாயலுடைமையாலும் மயில். அறியாமையைப் பிரித்து நீக்கி அறிவை ஊட்டுதலாலும், நடையழகுடைமையாலும் மடவனம். தமிழ்க் காவியச் சோலையிற் கூவுதலிற் குயில். அழகுதரும் பல்வேறு கலைநூற் பூக்களைத் தாங்கலிற் கொம்பு. மலய மலை – பொதியமலை. மயல் – மயக்கம். பழையவினை – அநாதியே வரும் வினைப்பயன். இன்னினி – இப்பொழுது. திருவருள் – கருணை.

(9) செல்லாத செல்வி – எழுமை எழுபிறப்பும் விட்டு நீங்காது தொடரும் செல்வி. நித்ய கல்யாணி – எப்பொழுதும் இன்புடையவள். நித்திய கலியாணி எனற்பாலது செய்யுள் நோக்கிக் குறைந்தது.

(10) ஆய்வளை – மனைவி. அன்மொழித் தொகை. தாய்போல் உணவும் தந்தைபோற் கல்வியும் மனைவிபோல் இன்பமும் புதல்வர்போற் பேச்சின்பமும் தருவாள் என்றவாறு. வழங்குதல் – கொடுத்தல். இனி உலக வழக்கிலுஞ் செய்யுள் வழக்கிலும் திரியாது இயங்குதல் என்றலு மமையும்.

(11) மா – செல்வம். வரமுனிவன் – வேண்டும் பொருள்களைக் கொடுக்கும் ஆற்றல் உள்ள முனிவன். பூவாழ் கரம் – பொலிவமைந்த கரம். புலவர் பாவாழ் சங்கப் பலகை – புலவர்களது செந்தமிழ்ப் பாக்கள் நீடு வாழ்தற்கிடமாயிருந்த கன்மாப் பலகை. பொதியிற் பிறந்து பொற்றெட்டிலாடிப் பலகையிருந்து ஏட்டிலே தவழ்ந்த பாவை எனது நாவை உகந்தமை முன்செய்திட்ட தவமெனக் கூட்டுக.

(12) செல்வம் சிலகாலத்துத் துன்பத்தையும் கொடுக்குமாதலின் அதைத் தவிர்க்க ஓங்கும் தனம் என்றார். இன்பு – இம்மையின்பம். சிவந்தரும் பேரின்பம் – முத்தி. நலம் தரும் – எப்பொழுதும் நன்மையே தரும். இப்பூவாழ் எழுபிறப்பும் – இப் பூமியில் வாழும் எழுவகைப் பிறப்புக்களிலும். கலைமான் – கலைமகள்.

(13) பண்டங்கு தீஞ்சொற் பனுவற் பிராட்டி – இன்னிசை புகலிடமாகத் தங்குதற்குரிய தித்திப்பான சொற்களால் ஆக்கப்பட்ட கலைகளுக்குத் தலைவியாகிய நாமகளது. பனுவல் – நூல்கள். பவளவிதழ் விண்டங் கெழுந்த செழுந்தமிழ்க் கங்கை வியனதியும் – பவள வாயிலிருந்து இழிந்து செல்லும் தமிழாகிய கங்கைநதியும். மண்டங்கி ...............கட்டுண்டதே – இப்புவியிற் றங்கி நாற்றிசையும் பரந்து சிவஞானத் திருவுலா அரங்கேற்றியபோது கைலாசமலையிலெழுந்தருளின் விஞ்சியதாற் றேவர்களும் மனங் கலங்கச் சிவபெருமானது இருசெவியிடத்திலும் கட்டுண்டது. உம்மை ஆகாய கங்கை கட்டுண்டதேயன்றி இக்கங்கையும் கட்டுண்டது என இறந்தது தழீஇய எச்சவும்மையாய் நின்றது. செவியிற் கட்டுண்டது என ஏழனுருபு விரிக்க.

(14) கடையமுது – திருப்பாற் கடலிற் கடைந்தெடுத்த வமுது. தென்பொதியக் கல்லிற் பிறந்த நடையமுதம் – பொதியமலையிற் பிறந்த சொல்லிலும் நினைவிலும் இயங்குந் தமிழ் அமுதம். கடையமுதம் உண்டாலன்றி இனியாது. நடையமுதம் அதனோடு கண்டாலும் கேட்டாலும் கருதினாலும் இனிக்கும். கடலிற் பிறந்ததிலும் கல்லிற் பிறந்தது மேலென்று கூறியது வேற்றுமையணி. கண்டாலினிக்கு மென்பதிலும்மை தொக்கது.



(15) வரம் – இச்சை. சங்கம் – கூட்டம். மயல் – மயக்கம். வரசங்க மயலும் பிணியுங் கடிந்து கா – இச்சைகளின் கூட்டத்தினால் வரும் மயக்கத்தையும் நோயையும் நீக்கிக் காத்தருள்க. கமழ் பூ அரசு அங்கு அமர் பொன் அனமே – வாசனையுடைய பூவினுக்கு அரசாகிய தாமரைப் பூவிடத்து வீற்றிருக்கின்ற அழகிய அன்னமே. புகலும் பிடிக் கைம்மா அங்கு அனுங்கும் அரசு நடையாய் – ஒப்பென்று கூறப்படுகின்ற பெண்யானை வருந்துதற்குக் காரணமான அரச நடையை உடையவளே. அங்கு அசைச் சொல். மணிக்கூடலிலும் தாவரசங்கம மெங்கும் நிறைந்த – அழகிய மதுரையிலும் நிலையியற்பொருளும் இயங்கியற் பொருளுமாகிய எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ள. தமிழ்த் தெய்வமே – செந்தமிழ்த் தெய்வமே. அனமே! நடையாய்! தெய்வமே! கா, எனப் பொருள்கூட்டி முடிக்க.

(16) மாமறை – வேதம். மாறில் மறை – அவ் வேதங்களுக்கு மாறில்லாத தமிழ் மறைகள். ஆரிய வேதம், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்காம். தமிழ்வேதம் தேவார திருவாசகங்களும் ஏனைய திருமுறைகளுமாம். அறைதல் – சொல்லுதல். நாம் அறையுமாறு நகை – நாம் கூறுவது நகைக்கத்தக்கதாம். நீயே தனித் தெய்வம். நீ சொல்லும் சமயமே சைவம் இதுவே வேதமுடிபு என்றவாறு.

(17) புத்தகம் யாழ் அக்கமாலை கையது – புத்தகமும் யாழும் உருத்திராக்க மாலையும் கைகளிடத்தன. முத்தமும் முல்லையரும்பும் கவிர் இதழ் நகையது – முத்தினதும் முல்லையரும்பினதும் ஒளியழகு முருக்கம்பூவையொத்த இதழ்களினிடையே தோன்றும் முறுவலினிடத்தே அமைந்துள்ளது. கமழும் பூங்குழல் ஐவகையது – மணங்கமழும் பொலிந்த கூந்தல் ஐம்பகுப்பையுடையது. கொங்கை காலொன்றிரண்டு கமலநன் முகையது – கொங்கைகள் ஒரு தாள் ஈன்ற இரு தாமரை மொட்டுக்களைப் போன்றன.

(18) காரியமன் – கறுத்த வடிவுடைய கூற்றுவன். மேதிக்கடா – எருமைக் கடா. எதிர்தல் – முன்வருதல். காரியமன்று – பயனில்லை. கடம் – குடம். முன்தந்த தமிழ் – பூம்பாவை குடத்தினின்றும் எழும்பப் பாடிய "மட்டிட்ட புன்னை" என்னும் திருப்பதிகம். திருஞானசம்பந்த சுவாமிகள் எலும்பைப் பெண்ணாக்கப் பாடியருளிய திருப்பதிகத்தை ஓதி உயிர்பெறலா மாதலின் கூற்றுவன் உயிரைக் கொண்டுபோனாலும் காரியமில்லை என்றவாறு.

(19) இதன் திணை:— கைக்கிளை. துறை:—ஐயம். தாது – பூந்தாது. புனல் – நீர். விரை – வாசனை. சூது – சூதாடு கருவி. வல்லி – கொடி. தாமரைமேலே வீற்றிருக்கும் இலக்குமியோ! நீருறை மகளோ! பூமகளோ! பொதியத்துத் தமிழ்மகளோ! புலவோர் நாவிலுறையும் நாமகளோ! எனத் தலைமகளது உறைவிடத்தை ஐயுறுதல் ஐயம்.

(20) புனலும் வளியும் விசும்பும் மண்ணும் அனலும் ஆகிய ஐம்பூதத்தோடும் கலந்து நின்றாலும் கண்ணும் மனமும் உருகத் தமிழுருசி காட்சிதரும் என்றவாறு.

(21) நங்கைக்கு இடந்தரும் நாண்மலரே முகம் – நாமகளுக்கு இருப்பிடமாகிய தாமரை மலரே முகத்திற்கு ஒப்பாகும். நாகு இள வேய் அங்கைக்கு இடந்தரு தோள் – இளைய மூங்கில் அழகிய கைகளுக்கு இருப்பிடந் தருகின்ற தோளுக்கு ஒப்பாகும். அடி இலவந் தளிர் – திருவடிகள் இலவந் தளிருக்கு ஒப்பாகும். நுண்ணிடைக்கு ஒப்புமை கூறின் அது சங்கைக்கு இடம் – மெலிந்த இடைக்கு ஒப்புமை கூறுங்கால் அது உண்டோ இல்லையோ என்பதே ஐயத்துக் கிடமாயிருக்கின்றது. இத்தகையாளுக்கு இடம் தடாகத்து வெண்டாமரை மலர் என்றவாறு. நாகிள வேய் – ஒருபொருட் பன்மொழி.

---

# 17. போற்றித் திருவகவல்

பொன்மகள் கொழுநனும் புத்தேள் கூட்டமு
மன்மலை நட்டு மதித்திட வெழுந்த
தெளிவள ரமுது மொளிவளர் பளிங்கு
முருக்கி வார்த்தன்ன திருக்கிளர் மேனியு
மருண்மழை பொழியும் வரிநெடு விழிகளும்
வாங்கிய புருவமும் பூங்குமிழ் நாசியு
முத்தமிழ் மதுரப் புத்தமு தொழுகும்
பவளவாய் மலருந் தவளவா ணகையுங்
காரிருள் கடந்த வாரிருங் கூந்தலும்
பொன்புனை களனு மென்பணைத் தோளு
மாலையு நூலும் யாழு மேந்திய
வாலிய காந்தண் மலரொரு நான்குஞ்
சந்தணி தனமுந் தந்தன விடையு
நெஞ்சிலன் புடனே நினைதொறுஞ் சுவைக்குஞ்
செஞ்சிலம் பலம்புஞ் சேவடி யிணையும்
வெண்பட் டாடையுந் தண்முத்த மாலையு
மாராக் காதலொ டனுதின நோக்கினுந்
தீராப் புதுமைத் தெய்வத வடிவுமாய்
வெண்டா மரைமேல் வீற்றிருந் தருளுந்
தண்டா முத்தமிழ்த் தாயே போற்றி



சங்கரன் மலர்த்தாள் தவமுனி வேண்ட
அங்கவ னருளிய வமுதே போற்றி
யறுமுக னருள்பெறு சிறுமுனி மடிமிசைக்
குறுகுறு நடந்த குருந்தே போற்றி
பூவினின் மேவிய புத்தேள் பொய்யா
நாவினின் மேவிய நங்காய் போற்றி
அல்லியல் கண்டத் தரனிட மமரும்
வல்லிதன் கண்ணுய் வதிந்தாய் போற்றி
பூமகள் கேள்வன் புரத்தினிற் பொருந்தும்
மாமக ளொருமரு மகளே போற்றி
யாடக மதுரை யருந்தமிழ்ச் சங்கக்
கூடலின் வளர்ந்த கொம்பே போற்றி
மன்னுயிர் நாவெனும் வாவியின் மலர்ந்த
பொன்னறி யாநறும் பூவே போற்றி
தென்னவன் சேரன் செம்பிய னென்னு
மன்னவர் மூவர் வாழ்வே போற்றி
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகலிட மாளும்
பன்னுப் பெருமைப் பாரதி போற்றி
மெய்ந்நா விரும்பும் வித்தகி போற்றி
எந்நாட் டவர்க்கு மிறைவி போற்றி
பொருப்பிலே பிறந்து புகழிலே கிடந்து
நெருப்பிலே நின்று நீரிலே தவழ்ந்தென்
சென்னியி னுவிற் சிந்தையிற் கலந்து
மன்னிய கருணை வாரிதி போற்றி
உள்ளநெக் குருக வுரோமஞ் சிலிர்ப்ப
வெள்ளநீர் கலுழ மெய்விதிர் விதிர்ப்ப
நாத்தழு தழுப்ப நயந்துநின் றன்புகழ்
ஏத்துநர் நெஞ்சத் திருள்கெடுத் தருளித்
தேனினும் பாலினுந் தெவிட்டா தினிக்கும்
வானினுங் காணு மணியே போற்றி
கல்வி சற்றிலாக் கசடனே னையும்
வல்லிதி னண்ட மயிலே போற்றி
சிறுமையும் பிணியுந் தீவினை யிருளும்

வெறுமையுஞ் சீய்த்த வெயிலே போற்றி
மேவிய பல்கலை விரிபொழி லிருந்து
கூவிய வேழிசைக் குயிலே போற்றி
கற்றவர் விழுங்குங் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி
சேணினு மறியாத் திருவே போற்றி
காணினு மினிக்குங் கரும்பே போற்றி
விண்ணகப் புலவர் வெள்கி வாயூற
மண்ணகத் தெழுந்த மருந்தே போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
யெண்ணே போற்றி யெழுத்தே போற்றி
சுடுபிணி மாற்றிய சுடர்க்கொடி போற்றி
கடுவிடந் தீர்த்த கனங்குழை போற்றி
கூடிய சமணர்கள் கூர்ங்கழு வேற
ஏடெதி ரேறிய வேந்திழை போற்றி
யாருயிர் வௌவி யருளினை போற்றி
சீரிய ஞானச் செழுஞ்சுடர் போற்றி
செங்கலைப் பொன்னாய்ச் செய்தனை போற்றி
யங்கமும் வேதமு மறைந்தனை போற்றி
என்பினைப் பெண்ணா யெடுத்தனை போற்றி
வன்பினை மாற்று மணியே போற்றி
அரும்பொரு ளின்ப மறங்கதி நான்குந்
தரும்பெருங் கற்பக தருவே போற்றி
யயனுடன் சேர்ந்துல களிப்பாய் போற்றி
புயலுடன் கலந்தவை புரப்பாய் போற்றி
அரனுடன் புணர்ந்தவை யழிப்பாய் போற்றி
உரனுடை நெஞ்சி லொளியே போற்றி
பூவொடு மணமும் போன்றாய் போற்றி
பாவொடு பழகிய பாவாய் போற்றி
ஆவியை யுருக்கு மன்பே போற்றி
பாவியைத் தூக்கும் பதத்தாய் போற்றி
மானே போற்றி மடப்பிடி போற்றி
தேனே போற்றி தெளிவே போற்றி
அழியா தூழியு மமர்ந்தாய் போற்றி



பழியாச் செழுநிதி படைத்தாய் போற்றி
நோக்கரு நுண்ணுரு வானாய் போற்றி
வாக்கொடு மனமு மடங்காய் போற்றி
ஊமைக் குரைதரு முத்தமி போற்றி
சேமக் கலையின் றெளிவே போற்றி
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குந்
தெள்ளிய பாகின் றிரளே போற்றி
கம்ப னருளிய கவிச்சுவை மாந்திச்
செம்பொற் சிலம்பருள் செய்தாய் போற்றி
இந்தணி செஞ்சடை யிறைவனை யிருளிற்
சுந்தரன் றூதாய்த் தாண்டினை போற்றி
கொழிதமிழ்க் கொங்கு தேரெனக் கூறிக்
கிழிதனை யறுத்த கிளியே போற்றி
உயிரே போற்றி யுணர்வே போற்றி
செயிர்தீ ரறிவின் செல்வி போற்றி
அவ்வைக் கருந்தமி ழருளிய மதுரக்
கொவ்வைக் கனிவாய்க் கொடியே போற்றி
ஆதியு மந்தமு மகன்றாய் போற்றி
சோதிமெய்ஞ் ஞானச் சுடரே போற்றி
முழுதுல காண்ட முதல்வி போற்றி
பழுதறு செஞ்சொற் பகர்ந்தாய் போற்றி
அன்னக் கொடியுடை யரசி போற்றி
வன்னக் கொடியிடை மடவாய் போற்றி
ஓரெழுத் தறியா வொருவ னென்னையுஞ்
சீரிய கல்விச் செழுநிதி யுதவித்
தெரிவன தெரிந்த செல்வர் கோட்டிக்
குரியவ னாக்கிய வெண்ணுதல் போற்றி
மறைபிணி கதவந் திறந்தாய் போற்றி
குறைதவிர் கோமளக் கொழுந்தே போற்றி
நிதியே போற்றி நிறைவே போற்றி
கதியே போற்றி கசிவே போற்றி
பொன்னே போற்றி புலனுணர் விறந்த
மின்னே போற்றி விளக்கே போற்றி
அன்னிய மொழிகளு மடிதொழு தேத்த

மன்னிய சிந்தா மணியே போற்றி
எழுதா நான்மறை யென்றுநின் றேங்கத்
தொழுதகு தமிழ்மறை சொன்னாய் போற்றி
பழமையும் புதுமையும் படைத்தாய் போற்றி
எழுமையுந் தொடர்தரு மின்பே போற்றி
சினத்தொடு புத்தனைச் செறுத்தாய் போற்றி
மனத்துயர் நீக்கு மருந்தே போற்றி
நாவலங் கோலாய் நடத்தினை போற்றி
பாவலங் காரப் பழம்பொருள் போற்றி
அரும்பொரு ளைந்து மானாய் போற்றி
விரும்புதல் வெறுத்த லில்லாய் போற்றி
முதலையுண் டிறந்த முதிர்சுவைக் குதலை
மதலையை வாவென வழைத்தாய் போற்றி
நாளுங் கோளும் நலிமிடி பிணியும்
பாழும் வினையும் பறிப்பாய் போற்றி
பாமகள் போற்றி நாமகள் போற்றி
பூமகள் போற்றி புகழ்மகள் போற்றி
முத்தமிழ்க் கல்வியு நாற்கவிப் புலமையு
மைம்புல னடக்கமு மறுமுகற் கன்பு
மெழுவகைப் பிறவியு மெய்ம்மைவிட் டகலா
தெண்வகைச் சித்தியு மெங்களுக் கருளி
யின்பினுந் துன்பினு மிரவிலும் பகலினு
மன்புடன் காத்தரு ளென்னாய் போற்றி
யாவையு முடனு யறிவாய் போற்றி
யறிந்தருள் செய்யு மணங்கே போற்றி
அறிவினு ளருளா லமர்ந்திருந் தெனக்குக்
குறைவறு புலமை கொடுத்தாய் போற்றி
குறைவறு புலமை கொடுத்திடக் கூறும்
நறுந்தமிழ் மாலை நயந்துகொண் டருளி
ஏவருங் காண தெங்கணு நிறைந்த
மூவா விளநலங் காட்டிமுன் னின்றே
யஞ்சலென் றருளிட வேண்டும்
பஞ்சணி நூபுர பாதபங் கயமே.

# உரை விளக்கம்

**போ**ற்றி என்ற ஈற்றுச் சீருடைய அடிகளின் மிகுதிகொண்ட திருவகவல் ஆதலின் போற்றித் திருவகவல் என்னும் பெயர்த்தாயது.

பொன்மகள் கொழுநன் – திருமால். புத்தேள் கூட்டம் – தேவர் கூட்டம். மன்மலை – மந்தரமலை. மதித்திட – கடைந்திட. மதித்தல் – கடைதல். தெளிவளர் அமுதும் – தெளிந்த அமுதும்; தெளிவின் மிகுதி காட்ட வளர் என்றார். தெளி – முதனிலைத் தொழிற்பெயர். குடிலையின் காரியமாய்ச் சொல்லுலகுக்குத் தெய்வமாகிய உரைமகளது தெய்வத் திருமேனியின் தூய்மையும் பேரொளியும் இனிது புலனாக அமுதையும் பளிங்கையும் உவமை கூறினார். அமுதையும் பளிங்கையும் உருக்கிவார்த்தன்ன என்றது இல்பொருளுவமை. வாங்கிய – வளைந்த. வார் இருங் கூந்தல் – நீண்ட கரிய கூந்தல். பொன்புனை களன் – பொன் னணிகலன்கள் அணிந்த கழுத்து. பொன், கருவியாகுபெயர். களன் – களம். மொழியிறுதிப் போலி. பணை – மூங்கில். தந்து அன்ன இடை – நூலினை ஒத்த இடை. அலம்புதல் – ஒலித்தல். ஆராக் காதல் – நிறைந்த பேரன்பு. ஆர்தல் – நிறைதல். தெய்வத வடிவு – தெய்வக் கோலம். தண்டா முத்தமிழ் – குறையாத முத்தமிழ். தவமுனி – அகத்தியர். குருந்து – குழந்தை. பூவினின் மேவிய புத்தேள் – பிரமன். அல் – இருள். அரனிடம் அமரும் வல்லி – உமை. உமாதேவியாருக்கு ஒரு கண் இலக்குமியும் ஒருகண் நாமகளுமாதலின் வல்லிதன் கண் எனப்பட்டது.

பூமகள் – பூதேவி. மாமகள் – சீதேவி. சீதேவிக்கு நாமகள் மருமகள். ஆடக மதுரை – பொன்மதுரை. கூடல் – நான்மாடக் கூடல். பொன் – இலக்குமி.

பௌவம் – கடல். பன்னப் பெருமை – சொல்லி யமையாத பெருமை. பாரதி – கலைமகள். கலுழ – சிந்த. தெவிட்டாதினிக்கும் – மிகுந்தவழி வெறுப்பைத் தராது என்றும் ஒரு படித்தாய் இனிக்கும்.

கசடன் – அறிவில்லாதவன். வெறுமை – இல்லாமை. சீய்த்த – அழித்த. சேண் – தூரம். கதி – வீடு. உரன் – வலிமை. சேமக்கலை – முன்னோர்களாற் சேமித்து வைக்கப்பட்ட கலைகள். இந்து – பிறை. கொழிதமிழ் – புலவர்களால் ஆராயப்பட்ட தமிழ். கிழி – பொற்கிழி; தருமிக்குப் பொற்கிழி கொடுத்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க. செயிர் – குற்றம். கோட்டி – அவை. நா வலங் கோலாய் – நாவை வெற்றியமைந்த செங்கோலாக. பஞ்சு – செம்பஞ்சுக் குழம்பு. நூபுரம் – காற்சிலம்பு.

# 18. வருக்க மாலை

## காப்பு

ஓங்கார மூலத் தொருவ னிருபாதம்
ஆங்காரந் தீர்க்கு மருந்து.

## நூல்

அல்லியங் கமலத் தணங்கே நமோநம
ஆருயிர் நாவிற் றேவீ நமோநம
இருள்சே ரிருவினை தீர்ப்பாய் நமோநம
ஈசனைத் தூதா யேவினை நமோநம
உமையா ளொருவிழி மணியே நமோநம
ஊமைக் குரைதரு பாவாய் நமோநம
எழுதிடு தமிழ்மறை யீந்தாய் நமோநம
ஏழிசை யின்னமு தானாய் நமோநம
ஐந்திய லம்பா லழகீ நமோநம
ஒலிதரு குடிலைக் குயிரே நமோநம
ஓங்கா ரத்துள் ளொளியே நமோநம
ஔவைக் கருள்புரி யரசீ நமோநம
அஃகாப் பெருநிதி யளிப்பாய் நமோநம
கல்விக் கருணைக் கடலே நமோநம
நப்போ லயன்மொழி நயந்தாய் நமோநம
சங்கப் புலவர்கள் தலைவீ நமோநம
ஞயந்தரு ஞானப் பொருப்பே நமோநம
இடம்படு தமிழகத் திறைவீ நமோநம
இணங்கிய சிந்தா மணியே நமோநம
தண்டமிழ் மக்கள் தாயே நமோநம
நஞ்சமு தாக்கிய நாயகி நமோநம
பத்து மெட்டும் பகர்ந்தாய் நமோநம
மந்திர மறைமொழி மாதே நமோநம
இயலிசை நாடகப் பயனே நமோநம
அரனிரு செவிகட் கமுதே நமோநம
இலவிதழ் வெண்ணகை யேந்திழை நமோநம
வள்ளுவன் முப்பா லுள்ளாய் நமோநம



அழகிய மேகலைக் குழகீ நமோநம
இளமையு முதுமையு மில்லாய் நமோநம
அறமுத லுன்கின் றிறவே நமோநம
அனமிடை பிடிநடை யன்னாய் நமோநம
கம்பன் வாயிற் கனியே நமோநம
கால மூன்றுங் கடந்தாய் நமோநம
கிஞ்சுக மணிவா யஞ்சுக நமோநம
கீரன் மெய்ம்மொழிச் சீரே நமோநம
குருபரன் நாவிற் குயிலே நமோநம
கூடலி லாடிய கொடியே நமோநம
கெழுமிய குண்டல கேசீ நமோநம
கேள்விச் செஞ்செவி வாழ்வே நமோநம
கைதவன் வளர்த்த கரும்பே நமோநம
கொஞ்சுஞ் சுவைமொழி வஞ்சீ நமோநம
கோது தவிர்த்தரு ளாதீ நமோநம
கௌசிக மதுரநன் மொழியாய் நமோநம
சந்தனப் பொதியச் சுந்தரி நமோநம
சாவா மூவா மருந்தே நமோநம
சிற்பர ஞான வரம்பே நமோநம
சீதர குமரன் றேவீ நமோநம
சுடுபிணி நீக்கிடு தோகாய் நமோநம
சூளா மணியே சுடரே நமோநம
செல்வமுங் கல்வியுஞ் சேர்ப்பாய் நமோநம
சேரன் செஞ்சிலம் பணிந்தாய் நமோநம
சைவலக் கூந்தற் சசியே நமோநம
சொல்லும் பொருளு மானாய் நமோநம
சோதியுட் சோதியுட் சோதீ நமோநம
சௌந்தர கோமளப் பொலங்குழை நமோநம
ஞமனிடர் தீர்க்குஞ் சிவமே நமோநம
ஞானமும் வீடு மானாய் நமோநம
ஞிமிறிமிர் கூந்தற் புறவே நமோநம
ஞெகிழ்தரு மன்பி னிறைவே நமோநம
ஞைவினை தீர்த்தருள் செய்வாய் நமோநம
தந்தையுந் தாயும் பைந்தொடி நமோநம

தானமுந் தவமுந் தருவாய் நமோநம
இத்திக்கு முத்தமிழ்ச் செல்வீ நமோநம
தீவினை பிணிமிடி தீர்ப்பாய் நமோநம
துரியமெய்ஞ் ஞானச் சுடரே நமோநம
தூரமு மணிமையு மானாய் நமோநம
தெய்வப் பழமறை முடிவே நமோநம
தேசம் பரவுந் திருவே நமோநம
தையா வெண்கலை மெய்யாய் நமோநம
தொல்காப் பியநூற் செல்வீ நமோநம
தோலா நாவிற் பாலே நமோநம
தௌவைக் கொவ்வைச் செவ்வாய் நமோநம
நவைதீ ரொன்பது சுவையே நமோநம
நாட்பிறை நறுநுதல் நங்காய் நமோநம
நித்தில வொண்ணகைக் கொத்தே நமோநம
நீலக் குவளை விழியாய் நமோநம
நுண்மா ணுழை புலக் கண்ணே நமோநம
நூலணி சேல்விழி மானே நமோநம
நெஞ்சக மாமலர் வாழ்வே நமோநம
நேயப் பனிமலை யூற்றே நமோநம
நைவள மணியாழ் நலமே நமோநம
நொந்தன னடியேன் காப்பாய் நமோநம
நோக்க நோக்கப் புதியாய் நமோநம
பதினெண் பாடையும் பகர்ந்தாய் நமோநம
பாவலர் நாவிற் பயனே நமோநம
பிறவாய் இறவாய் பெரியோய் நமோநம
பீடார் கூடற் பிராட்டி நமோநம
புத்தக மேந்திய கையாய் நமோநம
பூவினி லுறைதரு பூவாய் நமோநம
பெறுவதற் கரிய பேறே நமோநம
பேதைமை கெடுக்கு மாதே நமோநம
பைஞ்சுனைப் பங்கயப் பதத்தாய் நமோநம
பொல்லாப் புன்மலம் பொடிப்பாய் நமோநம
போதா னந்தப் பொருளே நமோநம
பௌவக் குமரிப் பதியாய் நமோநம



மனமிடி தீர்க்கு மருந்தே நமோநம
மாமகள் மகிழா மருமகள் நமோநம
மின்னிடை மேனி நுண்ணிடை நமோநம
மீனவன் நாவிற் றேனே நமோநம
முழுமதி யன்ன முகத்தாய் நமோநம
மூவா முருகன் தங்காய் நமோநம
மெய்ப்பொருள் தருமுயிர் வைப்பே நமோநம
மேலைச் சிவநெறி வித்தே நமோநம
மைவிழிக் கருணை மலரே நமோநம
மொழிதரு பாடற் பரியாய் நமோநம
மோனமெய்ஞ் ஞான முடிவே நமோநம
மௌவற் பூங்குழல் வாணீ நமோநம
யமனையு மோட்டு மறையாய் நமோநம
யாமள வன்னக் கொடியே நமோநம
யுகந்தொறும் புதுமை யுகந்தாய் நமோநம
யூகமாகிய பாகே நமோநம
யௌவன நீங்காத் தௌவாய் நமோநம
வளவன் காவிரி மடந்தாய் நமோநம
வாசகங் கோவை மலர்ந்தாய் நமோநம
வித்தைச் செம்புல விளைவே நமோநம
வீரப் புதல்வரை யீன்றாய் நமோநம
வெந்துயர் வினைமிடி சிந்தாய் நமோநம
வேலைக் கருள்வேய்த் தோளீ நமோநம
வையக முற்றுஞ் செய்தாய் நமோநம
வௌவாக் கலைமணி வைப்பே நமோநம
நாமகள்நமோநம பூமகள்நமோநம
பாமகள் நமோநம மாமகள் நமோநம
பாரதி நமோநம பகவதி நமோநம
சீரதி கந்தரு செல்வீ நமோநம
ஆதி நமோநம அறிவீ நமோநம
வாணீ நமோநம வரதீ நமோநம
எண்ணே நமோநம எழுத்தே நமோநம
கண்ணே நமோநம கருத்தே நமோநம
பொல்லாப் பிழைகள் பொறுப்பாய் நமோநம

பொறுத்துன் பூம்பதந் தருவாய் நமோநம
தந்தென் வெந்துய ரறுப்பாய் நமோநம
அறுத்தழி யாவின் பருள்வாய் நமோநம
அருள்பெறு மடியரோ டளாவிப்
பொருள்சேர் சிவநெறி புணர்ந்திடும் பொருட்டே.

## உரை விளக்கம்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாலாகிய சொற்களை அடிகளின் முதலில்மைத்துச் செய்யப்பட்டதாதலின் இவ்வகவல் வருக்க மாலையாயிற்று.

ஓங்கார மூலத்தொருவன் – விநாயகப் பெருமான். ஆங்காரம் – ஆணவ முனைப்பாய நான் என்னும் செருக்கு. அல்லி – அகவிதழ். அல்லியங் கமலம் – அகவிதழ்களையுடைய அழகிய கமலம். இருள் – ஆணவமலம். ஆணவமலமென்றது அறியாமையை. அறியாமையாலே சேர்ந்த நல்வினை தீவினை என்னும் இருவினையையும் இருள்சேர் இருவினை என்றார். தமிழ்மறை – தேவார திருவாசகங்களும் ஏனைய திருமுறைகளும். எழுதாமறையின் வேறுபடுத்த எழுதிய மறையெனப்பட்டது. ஏழிசை இன்னமுது – இசைக்கலை. ஐந்தியல் – எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணம். ஐந்தியலும் ஐம்பாலாயமையுமென்க. ஒலிதரு குடிலை – விந்துநாத தத்துவம். அதனைக் காரியப்படுத்துந் தன்மை நாமகளுக்கிருத்தலின் உயிரெனப்பட்டது. ஓங்கார வடிவுள்ளே ஒளியாய் மன்னுதல் திருமந்திரம் முதலாய தமிழாகமங்களிற் கூறப்பட்டது. அஃகா – குறையாத. நப்போலயன்மொழி நயந்தாய் – நகரம் ஏனைய எழுத்துக்களை உயிர்ப்பித்தல்போல, அயன்மொழிகள் பலவற்றையும் சொல்லானும் பொருளானும் உயிர்ப்பித்து அருளிச்செய்தாய். சங்கப் புலவர்கள் – அகத்தியனார் தொல்காப்பியனார் முதலாய இடைச்சங்கப் புலவர்களும் நக்கீரர் திருவள்ளுவர் கபிலர் பரணர் முதலிய கடைச்சங்கப் புலவர்களுமாவர். ஞயம் – நயம். மொழிமுதற்போலி. ஞானப் பொருப்பு – ஞானமலை. ஞானத்தை மலை என்றார் நால்வகை நிலைகளுள்ளும் நான்காவதாய் நிற்கும் உயர்ந்த நிலையாதலாலும், அந்நிலையெய்திய வழி மனத்திண்மை மிகுந்து அசைக்கலாகாத பேரன்பு பிறத்தலாலும் என்க. இணங்கிய – விரும்புவன கொடுத்தற்கு மனமிணங்கிய. பத்து – பத்துப்பாட்டு. எட்டு – எட்டுத்தொகை. இயல் இசை நாடகம் – முத்தமிழ் நூல்கள். இவற்றின் பயன் – அறம் பொருள் இன்பம் வீடடைதல். இலவு – இலவம்பூ. வள்ளுவன் – திருவள்ளுவர். முப்பால் – திருக்குறள். குழகி – அழகி. திறவு – வழி. திறவுகோலுமாம். அறமுதலாற்பொருளைத் திறந்து உலகுக்குக் காட்டிய ஒரு தனிமொழி தமிழேயாம். அனம் – அன்னம். இடை – வருந்தும். கிஞ்சுகம் – முள் முருக்கம்பூ. அஞ்சுகம் – கிளி. கீரன் – நக்கீரனார். மெய்ம்மொழி – ஆணை தப்பா மொழி. அது திருமுருகாற்றுப்படை. சீர் – சிறப்பு. குருபரன் – குமரகுருபரவடிகள். அவர் ஐந்து வயதுவரையும் ஊமையாயிருந்து முருகப்பெருமான் திருவருளால் ஊமை நீங்கிப் பல்வேறு நூல்களை அழுதொழுகப் பாடினார். அதனால் நாவிற் குயிலெனப்பட்டது. கூடல் – மதுரை. கெழுமிய – இசைந்த. குண்டலகேசி – ஐம்பெருங் காப்பியங்களுளொன்று. கேள்வி – கேள்விச்செல்வம். கைதவன் – பாண்டியன். வஞ்சி – ஓர் கொடி. கோது – குற்றம். கௌசிகம் – மருத யாழிசை. சிற்பரஞானம் – பதிஞானம். சீதர குமரன் – திருமாலின் மகனாகிய பிரமன். சைவலம் – பாசி. சசி – மதி. ஞமன் – நமன். போலி. சோதி – ஒளி. முதலாவது ஒளி அசுத்த மாயை ஒளி. இரண்டாவது ஒளி சுத்த வித்தை ஒளி. மூன்றாவது ஒளி விந்துவாகிய பேரொளி.



ஆணவமலமாகிய பேரிருளிற் கிடந்த ஆன்மா அசுத்த மாயை ஒளியாலே சிறுக அறிவு பெற்றுச் சுத்த வித்தை ஒளியாலே இன்னும் கூடிய அறிவுபெற்று விந்து தத்துவத்துப் பேரொளியாலே பேரின்பப் பேறுதரும் உண்மை ஞானத்தைப் பெறுதலின் நாமகளைச் 'சோதியுட் சோதியுட் சோதீ' என்றார்.

கோமளம் – இளமை. பொலங்குழை – பொற்றோடு. அன்மொழித் தொகையாய் நாமகளை உணர்த்தியது. ஞமன் – நமன் – போலி. ஞமனிடர் – மரணத் துன்பம். சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தோதி மரணத் துன்பத்தினின்றும் நீங்குதற்குத் துணைபுரிதலின் ஞமனிடர் தீர்க்குஞ் சிவம் என்றார். ஞிமிறு – வண்டு. புறவு – புறா. ஞெகிழ்வு – உருக்கம்.

ஞைவினை – துன்பந்தரும் தீவினை. துரியம் – ஐவகை நிலையுள் நாலாவது.

தூரமும் அணிமையும் ஆனாய் – வழிபடாதவருக்குத் தூரமாயும் வழிபடுவாருக்கு அணிமையாயும் நிற்பவளே. தையா வெண்கலை மெய்யாய் – தைக்கப்படாத அறிவுக் கலையை உடுத்த திருமேனியை உடையவளே. தோலா நா – மெய்ம்மை வாய்ந்த நா.

கொவ்வைச் செவ்வாய்த் தௌவை என மாறிக் கொவ்வைக் கனிபோலும் சிவந்த வாயினையுடைய தாய் என்க. நவை – குற்றம். ஒன்பது சுவை – பெருமிதம், அச்சம், இளிவரல், மருட்கை, உவகை, அழுகை, வெகுளி, நகை, சாந்தம் என்பன. நாட்பிறை – புதுப்பிறை.

அது மூன்றுநாட் பிறை. முதலிருநாளுந் தெரியப்பெறுது மூன்றுநாட் புதிதாகத் தெரிதலினலே மூன்றுநாட்பிறை நாட்பிறையாயிற்று. நித்திலம் – முத்து.

நுண் மாண் நுழைபுலக் கண்ணே – நுண்ணிதாய் மாட்சிமைப் பட்ட பல நூல்களையும் ஆராய்ந்தறிந்த விசேட அறிவாகிய கண்ணே. நாமகளை அறிவுக் கண் என உருவகித்தார்.

நூல் – காவியங்கள். சேல் – மீன். நேயம் – உள்ளன்பு. கை வளம் – குறிஞ்சி யாழிசை.

நாமகளின் அருட்கோலம் நோக்க நோக்கப் புதுவிருந்தாதலின் புதியாய் என்றார்.

பதினெண் பாடை:—தமிழ்நிலத்திற் பேசப்படுந் தமிழும் அதைச் சூழ்ந்த பதினேழ் நிலங்களிற் பேசப்படும் பதினேழு மொழிகளும் பதினெண் பாடையெனப்படும். தமிழ் ஒழிந்த ஏனைய பதினேழ் நிலத்தையும்,

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக் குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங் குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே"

என்னும் செய்யுளானறிக. தமிழ் மொழியிலிருந்தே ஏனைய பதினேழ் மொழிகளும் பிறந்தன என்பது ஆராய்ச்சியாளர் துணிபாதலின் பதினெண்பாடையும் பகர்ந்தாய் என்றார். பயன் – பொருள். பீடு – பெருமை. மதுரையிலே கலைகளும் முத்தமிழும் ஆராயப்பட்டமையாலே கூடற் பிராட்டி என்றார். பைஞ்சுனை – பசிய சுனை. சுனை யென்றது பொதுவாக ஈண்டு நீர்நிலையை உணர்த்தியது. பொடித்தல் – அழித்தல். போதானந்தப் பொருள் – அறிவும் இன்பமுமாய்த் துலங்கும் பொருள். பௌவம் – கடல். மனமிடி – மனத்தில் எழும் வீண் எண்ணங்களாகிய வறுமை. மீனவன் – பாண்டியன். மூவா முருகன் – ஒருபடித்தாய தெய்வப் புத்திளமையோடு விளங்கும் முருகக் கடவுள். முருகு இளமை குறித்தாலும் மிகுதி காட்ட மூவா என்றார்.

பாடற்பரி – பரிபாடலென்னும் குதிரை. மௌவல் – மல்லிகைப் பூ. யாமளம் – இளமை. சாமளம் என்பதன் போலி. யூகம் – விவேகம். பாகு – வெல்லம். தௌவை – தாய். வௌவாக்கலை – பிறரால் கவரப்படாத அறிவுக்கலை. வைப்பு – சேமநிதி. பாரதி – நாமகள். வரதி – வரங் கொடுப்பவள்.

# 19. நாமகள் கலித்துறை

## காப்பு - விநாயகர்

பூமகள் கேள்வன் மணியுந்தித் தாமரை பூத்தவயன்
மாமறை நாவினும் வெண்டா மரையினும் வாழுமெங்கள்
பாமகள் சேவடி போற்றிப் பசுந்தமிழ்ப் பாப்பகர
வேமரு வாதி விநாயகன் பொன்னடி யுச்சியவே.

## முருகன்

அஞ்சு தலையுடைத் தாறு தலையடைந் தன்பருய
அஞ்சு தலையுடை யாறு தலையடைத் தாரருளும்
அஞ்சு தலையுடை யாறு தலையுடை யாற்றெழுதே
அஞ்சு தலையுடை யாறு தலைப்பா வறைகுவனே.

## குரு

வாடும் பயிருக்கு மாமழை போலென் மலக்கொடுமை
யோடும் படிக்குக் கருணை சுரந்த வுயர்குருவின்
தேடுந் திருவடி சிந்தையிற் கொண்டு செழுந்தமிழாற்
பாடும் பணிதந்த பாரதி பாதங்கள் பாடுவனே.

## நூல்

திருவளர் தாமரை போலு முகமுஞ் செழுங்குவளை
மருவளர் நோக்கமுஞ் செந்துவர் வாயு மதிநுதலுந்
தருவளர் செங்கர நான்குஞ் சிலம்பணி தாள்களுமா
யுருவளர் பூங்கொடி யொன்றென் விழிக்கு ளொளிர்கின்றதே

தாமரை போலுங் கரத்தா லெடுத்துத் தழுவி யிரு
தாமரை போலும் விழியாற் குறித்துச் சலங்கலழித்
தாமரை நாழிகை யும்மற வாவர மங்கமலத்
தாமரை நாவிற் பசுங்கொடி யேயென்றுந் தந்தருளே. 2

பழகிய பைந்தமிழ்ப் பாவாணர் கூறும் பனுவலினும்
வளவிய நான்முகன் நாவினு நான்கு மறையகத்து
மிளகிய வன்பர்கள் நெஞ்சினும் பூத்தென் சிரத்தொளிரு
மழகிய செந்தமிழ்ச் சுந்தரி நூபுரத் தம்புயமே. 3

தூண்டா விளக்கம் பிறவாத முத்தஞ் சுடரரவந்
தீண்டா மதியங் கடையாது தோற்றிய தெள்ளமுதம்
மாண்டாலுங் கூடத் தொடரும் வழித்துணை வஞ்சனெனை
யாண்டா தரித்தவெண் டாமரைத் தண்டமி ழாரணங்கே. 4

ஆணந்தரு மெய்யன்பர் கூட்டந் தருங்கொடுக் கக்குறையாப்
பணந்தரும் பைந்தமிழ்ப் பாவொரு நான்கும் பகரத்தருங்
கணந்தருங் கல்வி தருஞ்சிவ மான கதியுந்தரும்
மணந்தரும் வெண்டா மரைவாழு மன்னை மலர்ப்பதமே. 5

சுணங்கும் வடமுஞ் சுமந்திறு மாந்த துணைமுலையு
மிணங்குந் துடியிடை யும்பணைத் தோளு மெழிலமுதும்
பிணங்கு மொழியு மடித்தா மரையும் பெரிதுமன்பால்
வணங்கும் வரமருள் வாய்தென் பொதிய மலைமயிலே. 6

விற்காட்டி வேறிரு வேல்காட்டிப் பொல்லா வினைவிடிய
வெற்காட்டும் வாணி முகமதிப் பேடகத் தின்மதுரச் [கப்
சொற்காட்டுந் துப்பிதழ்ச் செப்பினுண் முத்தந் தொகுத்திருக்
பற்காட்டிச் செல்வர்கள் பாற்போ யிரத்தல் பழவினையே. 7

ஆடையுந் தனுவும் புரவியு மன்மதன் குஞ்சரமும்
படையுந் திருமுக முந்நுத லுஞ்சுவைப் பான்மொழியு
மிடையுங் குழலு மெனவுடை யாண்மழை மின்னலஞ்சி
யிடையு மிடையுடை யாள்கலை வாணி யிளமயிலே. 8

மயிலே மடப்பிடி யேதமி ழூறு மழலைமொழிக்
குயிலே குலக்கொடி யேவினை வேலை குடித்தெழுந்த
வெயிலே நிலவுமிழ் மேனிமின் னேயென் மிடிகெடுக்கும்
அயிலே யுனதிரு தாளன்றி யில்லை யடைக்கலமே. 9

காரே நறுங்குழல் வில்லே திருநுதல் காமரயிற்
கூரே கயல்விழி கொம்பே துடியிடை கோங்கரும்பின்
சீரே வனமுலை பாகே சுவைமொழி தீங்ககற்றிப்
பாரே மதிக்க வெனையாண்ட வெள்ளைப் பசுங்கிளிக்கே. 10

வார்க்குங் குமக்கொங்கை யும்பணைத் தோளும் வலியமிடி
தீர்க்குங் கருணை விழியுஞ்செவ் வாயுந் திருமுகமு
மார்க்குந் தமிழ்மறைக் கிண்கிணிக் கால்களு மாகவியான்
பார்க்குந் திசைதொறு நிற்பாள்சொற் பாவை பயங்கெடுத்
[தே. 11



பூமகள் கூறும் புகழ்மக ளின்பம் புரியுமகள்
பாமகள் யாரும் பணியு மகள்பனி போனிறத்து
நாமகள் நல்லுயிர் நாவினி னன்கு நடனமிடு
மாமகள் தாமரைக் கண்ணனுக் கென்றும் மருமகளே. 12

தாக்குந் தமிழ்த்துறை யேறிய தொண்டர்க டுன்பமெலாம்
போக்கு மலர்மிசைப் புத்தமு தேபுன்மைப் பொங்கிருளை
நீக்குஞ் செழுஞ்சுட ரேயென்று நாவினி னின்றுரையை
ஆக்கு முயிர்த்துணை யேயடி யேனுன் னடைக்கலமே. 13

நாவா லெடுத்துச் செவியா லருந்தநன் னெஞ்சகமே
மேவா வினிப்ப துயிர்ப்பிணி தீர்ப்பது விண்ணவர்க்கும்
ஆவா கிடைத்தற் கரியது பாற்கட லன்றுபெரு
மூவா மருந்தது வெண்டா மரைமேன் முளைத்ததுவே. 14

வாசப்பட் டாடை யுடையுந் திருமுக மண்டலமும்
பூசப்பட் டேயெளிர் பூங்குழற் காடும் புதுநகையு
மோசைப்பட் டோதிம மென்ன மிழற்றெருண் சிலம்படியு
மாசைப்பட் டேனன்னை யேயினிக் காட்டி யருளுதியே. 15

காமன் கரத்தது செந்துவர் வாயது காட்டுவது
பூமன்னு திங்கண் முகத்திற் பொலியும் புயல்நிறத்து
மாமன் கரத்தது கண்ட மிருக்கையும் மாமதலைத்
தாமன் குனித்தது மார்பின செந்தமிழ்த் தையலுக்கே. 16

திருவுறை செங்கர நான்கி னொருகை செகமுணர
அருமறைப் புத்தக மேந்திய தன்ப ரகம்விளங்க
வருவுறை மாலை யினைக்கரங் கொண்ட துவையிரண்டும்
வருமுறை யாழின் நரம்பு தெரித்து வருடியவே. 17

எப்போதும் போதாக் கலைவாணி பாத மிரண்டுமென்றும்
முப்போதும் போதுகொண் டேத்துவி ரேல்முடி மன்னரெலாங்
கைப்போதுங் கூப்புவர் செல்வங் கதிக்குமிக் காசினியி
லெப்போதுஞ் சீருண் டிறந்தால் மறுமையி லின்பமுண்டே. 18

திருமுத்த மாலையுஞ் சந்தனச் சேறுந் திளைக்குங் கொங்கை
யுருமுத்த வெண்ணகைச் சூடகச் செங்கை யுயர்கருணை
தருமுத் தமகுணத் தாயே யெனையெடுத் துத்தழுவி
யொருமுத்தந் தாவறி யாமையு நோயுமொழிந் திடவே. 91

ஒப்பிதழ்த் தாமரைப் பூவென் றுரைக்கு மொளிமுகத்துத்
துப்பிதழ்ச் செப்புத் திறந்து சுடர்முத்தங் காட்டிமுன்செய்
தப்பித மெல்லாம் பொறுத்துன் மடிமிசைத் தந்துவினை
வெப்பித மாக வளரமு தீகலை மெல்லியலே. 20

**வா**னும் புவியும் புனலுங் கனலும் வளியுமிய
மானு மிருசுட ருங்கலந் தென்விழி மன்னிநின்ருள்
தேனுங் கரும்பு மமுதும் புறங்கண்ட தெய்வமொழி
மானுஞ் சுரும்பும் விரும்பும் விழிக்கலை வாணுதலே. 21

**ஆ**விக் கருந்துணை யாந்தமிழ்ச் செல்வி யருள்வடிவிற்
காவிக் கருங்கணும் வள்ளைக் குழையுங் கதிர்முகமும்
தூவிக் குலமயிற் சாயலும் பாதத் துணையுநெஞ்சிற்
பாவிக்குந் தோறு மமுதூறி யின்பம் பயந்திடுமே. 22

**ஊ**னு ருடம்பிற் பிணிக்கொரு கோடி மருந்துரைத்தா
ரானு லுயிர்ப்பிணிக் கேற்ற மருந்தொன் றறிந்துரைப்பேன்
மானுர் விழியுங் குயிலார் மொழியு மருவிவெள்ளைத்
தேனுர் கமலத் திருக்கும் பிராட்டி திருவடியே. 23

**வ**ஞ்சந் திருத்திப் பொறுமையுங் கோபமு மாற்றியென் றன்
நெஞ்சந் திருத்தி யொளிவிளக் கேற்றி நினதுபதக்
கஞ்சம் பொருத்திக் கதிதரு வாய்கம லத்துறையு
மஞ்சந் திருத்து நடையாய் பலகலை யாய்மயிலே. 24

**ஒ**ருகணப் போதுந் தரியாத வின்பத் துழலுமென்னை
யருகணைத் தென்று மழியாத வின்பத் தழுத்திவைப்பாய்
இருகணு ணின்ற வொளியே யினமென வெண்ணியனக்
குருகணை கோல நடையாய் நறுந்தமிழ்க் கோமளமே. 25

**மா**தங்க மேனி வடிதங்கு வேலிரு மைவிழிகள்
சூதங் கெழுந்த புணர்முலை மின்னல் துடியிடையா
மேதங் கெடுத்தெனை யாண்ட பனுவற் பிராட்டியிரு
பாதங்கள் நீரினிற் பூவா தலர்ந்திடும் பங்கயமே. 26

**த**ண்டே னொழுக்கி யரியுறல் போற்றண் ணளிபிலிற்றிக்
கொண்டாடு மன்பினர் கூடுத லாற்குலத் தாமரையும்
வெண்டா மரையாள் பதமுமொப் பென்னிலும் மென்மலருக்
குண்டே விரிந்து குவிகின்ற தாகு மொருகுறையே. 27



**ப**ண்டே குறைகொண் டுடம்பிற் கறைகொண்டு பாம்பொரு
ளுண்டே யுமிழ்கின்ற வெச்சிலை யோவுயர் பாவலர்கள் [நா
கண்டே கனிந்து பவளம் விரிந்து கதிரரும்புந்]
தண்டா மரையாள் முகத்தா மரைக்கொப்புச் சாற்றியதே. 28

**அ**வியாச் செழுஞ்சுட ராய்நெஞ் சகத்தே யமர்ந்தெனது
கவியா தரிக்குங் கலைப்பெரு மாட்டி கதிர்முகத்தே
குவியாக் குவளையுங் கோவாத முத்துங் குரைகடலுற்
பவியா வமுதும் பவளமுங் கூடிப் பயில்கின்றவே. 29

**போ**காத செல்வம் புரிவாளைப் புத்தமு துக்குவமை
யாகாத செஞ்சொ லருள்வாளை யன்றழன் மீதமர்ந்து
வேவாது நின்று விளையாடி னளை விரும்பினல்லாற்
றேகாதி வஞ்சந் துறக்கரி தென்பர்செந் நாவலரே. 30

## தனியன்

**த**வந்தரு மேலாந் தனந்தரு மின்பந் தருந்தணியா
நவந்தரு சீர்தரு நட்புத் தருநல்ல வாழ்வுதரும்
பவந்தரு தீவினை வேரு மரமும் பறித்தழியாச்
சிவந்தருஞ் செந்தமிழ்ச் செல்வியின் ஞானத் திருவடியே.

## உரை விளக்கம்

(1) **பூ**மகள் – இலக்குமி. கேள்வன் – கணவன். மணியுந்தித் தாமரை – அழகிய திருவுந்திக் கமலம். பூத்தவயன் – தோன்றிய பிரமன். மாமறை நா – பெரிய வேதங்கள் பயின்ற நா. ஓமருவாதி விநாயகன் – பிரணவ வடிவினையுடைய ஆதிக்கடவுளாகிய விநாயகப் பெருமான். உச்சியவே – தலைமிசை யமர்வன.

(2) அஞ்சுதலை உடைத்து – பயப்படுதலை நீக்கி. அன்பர் ஆறுதலை அடைந்து உய்ய – அன்பர்கள் ஆறுதல் அடைந்து உய்வதற்கு. அஞ்சு தலையுடை ஆறுதலை அடைத்தார் அருளும் – ஐந்து திருமுகங்களை உடையவரும், கங்கையைத் தலையிலே தரித்தவருமாகிய சிவபிரான் பெற்ற. அஞ்சுதலையுடை ஆறுதலை யுடையாற்றெழுது – சூரபன்மன் முதலாய அசுரர்கள் அஞ்சத்தகுந்த ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளைத் தொழுது. அஞ்சுதலையுடை ஆறு தலைப்பா அறைகுவன் – முப்பதாகிய பெருமை பொருந்திய பாடல்களைச் சொல்லுவேன். அஞ்சு தலையுடை ஆறு – ஐயாறு; அது முப்பது என்க. ஐந்து – அஞ்சு எனப் போலியாய் நின்றது. தலை – பெருமை நாமகளின் திருவடிகளுக்கு அணியப்படுதல் இப்பாடல்களுக்குப் பெருமை என்பது.

(3) உயர் குரு – ஞானாசிரியராகிய சுப்பிரமணிய குரு. அவர் ஆசிரியரது பதினெட்டாவது ஆண்டிற் பெங்களூரிலிருந்து யாழ்ப்பாணம் வந்து நவாலியிலுள்ள ஆசிரியர் இல்லத்திற்றங்கி ஞானோபதேசஞ் செய்தருளினார். அவர் அந்நாளிற் செய்தருளிய அற்புதங்கள் பலவாம். பாரதி – நாமகள்.

(4) திரு – கண்டாரால் விரும்பப்படும் அழகு. மருவளர் செழுங் குவளை நோக்கம் – வாசனை மிகுந்த செழித்த குவளைப் பூப்போலும் கண்கள். துவர் – பவளம். தருவளர் செங்கரம் நான்கும் – கற்பகதருவை வளர்க்கின்ற சிவந்த கரங்கள் நான்கும். நாமகளது திருக்கரங்கள் நாள்தோறும் உலகிற்கு அறிவு வளத்தை வரையாது கொடுத்தலைக் கண்ட கற்பகதரு தனது இழிவு போக்க நாள்தோறும் வளர்தலை மேற்கொண்டதென்றது தற்குறிப்பு. உரு – வடிவம்.

(5) அங்கமலத் தாமரையில் நாவிற் பசுங்கொடி – அழகிய நீரிலுண்டாகும் தாமரைப் பூவிலும் மன்னுயிர்களது நாவிலும் வீற்றிருக்கும் பசிய கொடிபோன்றவளே. தாமரைபோலும் கரத்தால் எடுத்துத் தழுவி – தாமரைப் பூப்போலும் திருக்கைகளால் எடுத்தணைத்து. தாவும் மரைபோலும் இரு விழியாற் குறித்து – தாவுகின்ற மான்களை ஒத்த இருவிழியாற் கருணைசெய்து. மரை – ஓர்வகை மான். தாவும் எனற்பாலது தாம் எனக் குறைந்து நின்றது. சலங்கள் அழித்து – வஞ்சகங்களை நீக்கி. ஆம் அரை நாழிகையும் மறவா வரம் என்றுந் தந்தருளே – சூரிய சந்திரர்களால் அளக்கப்பட்டு ஆதலையுடைய அரை நாழிகைப் பொழுதும் மறவாதிருக்கின்ற வரத்தினை எப்பொழுதுந் தந்தருள்வாய். ஏகாரம் – ஈற்றசை. அங்கமலத் தாமரை நா என்றதற்குப் பிரமதேவனது அழகிய நீர்மேற் பூத்த தாமரைபோலும் நாக்கு எனக்கொண்டு அவனது நாவில் வீற்றிருக்கும் கொடி எனலும் அமையும்.

(6) அழகிய செந்தமிழ்ச் செல்வியின் அம்புயம் பனுவலினும் நாவினும், மறையகத்தும் நெஞ்சினும் பூத்து என் சிரத்தொளிரும் எனப் பொருளுரைக்க. நூபுரம் – சிலம்பு. பைந்தமிழ் பழகிய பாவாணர் என மொழி மாறுக. பனுவல் – நூல். இளகிய அன்பர் – கருணைசெய்யும் திறங்கண்டு உள்ளம் நெகிழ்ந்த அன்பர்கள்.

(7) தூண்டாத விளக்கம் பிறவாத முத்தம் சுடரரவந் தீண்டா மதியம் கடையாது தோற்றிய தெள்ளமுதம் என்றது தெரிதரு தேற்றவுவமையணி.

(8) பணம் – செல்வம்; ஈண்டுக் கொடுக்கக் குறையா என்றதனாலே கல்விச் செல்வத்தைக் குறிக்கும். பாவொரு நான்கு – தமிழிலுள்ள வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன. கணம் – கணப்பொழுது. பாவொரு நான்கும் தரும். அதையும் ஒரு கணப்பொழுதிலே பாடுமாறு நாவிலே நின்று அருளும் என்றவாறு.



சிவமான கதி – வீடு பேறு. மணம் – வாசனை. பூமிசை வாழுதலால் மணந்தரும்.

(9) சுணங்கு – தேமல். இணங்கும் – இசையும். துடி – இடை சிறுத்த ஓர்வகைப் பறை. பனை – பருமை. பிணங்கும் – மாறுபடும்.

(10) வில் – வில்லுப்போல வளைந்த புருவம். வேல் – வேல்போலும் கூரிய கண்கள். எல் – ஒளி. முகமதிப் பேடகம் – முகச்சந்திரனாகிய பெட்டகம். துப்பு – பவளம். செப்பு – செப்புப்போலும் வாய். முத்தம் – பற்கள்.

(11) கலைவாணி இளமயில் – கலைவாணியாகிய இளமயிலொப்பாள். மன்மதன் குடையும் தனுவும் புரவியும் குஞ்சரமும் படையும் – மன்மதனது குடையாகிய மதியத்தையும், தனுவாகிய கரும்பையும், குதிரையாகிய கிளியையும், யானையாகிய மேகத்தையும், படையாகிய பூக்களையும். திருமுகமும் நுதலும் சுவைப்பான் மொழியும் மிடையும் குழலும் எனவுடையாள் – முறையே தனது திருமுகமும் நெற்றியும் சுவைமிக்க இனிய மொழியும் பூக்கள் நெருங்கிய கூந்தலும் என உடையவள். மிடைதல் – நெருங்குதல். ஈண்டுப் பூக்களின் நெருக்கத்தை உணர்த்திப் படையும் என்னும் உவமானத்தாற் குறிக்கப்பட்ட உவமேயமாகிய கூந்தலில் அணியப்பெற்ற நன்மலர்களைக் குறித்து நின்றது.

(12) வினைவேலை குடித்தெழுந்த வெயில் – இருவினைக் கடலைக் குடித்தெழுந்த ஞானசூரியன். மிடி கெடுக்கும் அயிலே – வறுமையாகிய அரக்கனை அழிக்கும் வேலாயுதமே.

(13) நறுங்குழல் காரே – நறிய கூந்தல் மழைமேகத்தையே ஒப்பதாகும். திருநுதல் வில்லே – அழகிய நெற்றி வில்லையே ஒப்பதாகும். கயல்விழி காமர் அயிற்கூரே – கயல்போலும் விழிகள் அதனை ஒப்பதன்றி அழகிய வேலின் நுதியினையே பெரிதும் ஒப்பதாகும். துடியிடை கொம்பே – உடுக்கைபோலும் இடை அதனை ஒப்பதன்றிப் பூங்கொம்பையே பெரிதும் ஒப்பதாகும். வனமுலை கோங்கரும்பின் சீரே – அழகிய தனங்கள் கோங்கரும்பையே ஒப்பதாகும். சுவை மொழிபாகே – இனிய மொழிகள் வெல்லத்தையே ஒப்பதாகும். பார் – உலகம். உயர்ந்தோரை உணர்த்தியது.

(15) பூமகள் – பூதேவி. ஈண்டுப் பூமியிலுள்ளாரை உணர்த்தும். யாரும் – எக்கலைவல்லாரும். நல்லுயிர் – தவத்தினாலே அறிவுவிளக்கம் பெற்ற உயிர்கள். இவ்வுயிர்களது நாவிலே மந்திரவடிவாய் நின்று வரங்கொடுப்பாளாதலினாலே நடனமிடும் மாமகள் என்றார். தாமரைக் கண்ணன் – திருமால். திருமாலின் உந்திக் கமலத்தே பிறந்த நான்முகனுக்குத் தேவியாதலின் திருமாலுக்கு மருமகளென்க.

(16) நூக்குறா – ஆராயப்படுகின்ற. தமிழ்த்துறை – தமிழிலுள்ள அகம் புறம் ஆகிய இருபொருளும். புன்மைப் பொங்கிருள் – சிறுமையாகிய நிறைந்த இருள்.

(17) நாவால் எடுத்துச் செவியால் அருந்த நன்நெஞ்சகமே மேவாவினிப்பது – நாவினாலே சுவைபட எடுத்துச் சொல்லிச் செவி வாயாக அருந்தும்போது நெஞ்சகத்தே உணர்ச்சி வடிவாய்ப்பொருந்தித் தித்திப்பது. ஆ ஆ – வியப்பிடைச் சொற்கள். மூவாமருந்து – மூப்படையாது என்றும் இளமை தருவதாய அமுது.

(18) வாசம் – வாசனை. பூசப்பட்டு – நெய் முதலியன தடவப்பெற்று. ஓதிமம் – அன்னம்.

(19) செந்தமிழ்த் தையலுக்கு – செந்தமிழணங்கிற்கு. செந்துவர் வாயது காமன் கரத்தது காட்டுவது – சிவந்த வாயிடத்துப் பயிலப்படும் மொழிகள் மன்மதன் கையிலுள்ள கரும்பின் இனிமையைத் தெரியக் காட்டுவன. பூமன்னு திங்கள் முகத்திற் பொலியும் – அழகு நிலைபெற்ற மதியம் முகம்போல விளங்கும். கண்டம் புயல்நிறத்து மாமன் கரத்தது – கழுத்து நீலமேக நிறமுடைய மாமனாகிய திருமாலின் திருக்கரத்திலுள்ள சங்கினை ஒப்பதாகும். மாமதலைத் தாமன் இருக்கையும் குனித்ததும் மார்பின – பெரிய கொன்றை மாலை யணிந்த சிவபெருமானின் இருப்பிடமாகிய கைலை மலையும் அவன் வளைத்ததாகிய மேரு மலையும் மார்பிலுள்ளன. மதலை – கொன்றை.

(20) திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மைவாய்ந்த வோர் அழகு. உரு – செபத்தினுரு. நாமகளின் திருக்கரங்களுள் ஒன்று உலகிற்குக் கலைகளை யருளும் புத்தகமேந்தியது. ஒன்று தொண்டர்களது உள்ளம் தத்துவ விளக்கமடையுமாறு மணிமாலையேந்தியது. மற்றைய இருகையும் இசைக்கலை மேலோங்க யாழ் தடவின என்றவாறு.

(21) எப்போதும் போதாக் கலைவாணி – எக்காலத்தினும் விட்டு நீங்காத கலைமகள். முப்போதும் – காலை, மாலை, மத்தியானம் ஆகிய பூசைநேரங்கள் மூன்றும். போது – மலர். கைப்போது – கையாகிய மலர். கைகூப்பி வழிபடுவர் என்றவாறு. கதிக்கும் – மிகும்.

(22) உரு – அழகு. சூடகம் – கைவளை. தமது அறியாமையும் நோயும் நீங்க ஒரு முத்தம் வேண்டினாராதலின் உயர்கருணை தரும் உத்தம குணத் தாய் என்றார்.

(23) இதனாலே உத்தம குணத் தாயாகிய நாமகளிடத்து அருளமுதாகிய உணவினை வேண்டுகின்றார்.

செப்பு – சிமிழ் ஆகுபெயர். தப்பிதம் – தவறு. வினைவெப்பிதமாக – செய்தவினை வாடியழிய.



(24) ஐம்பூதங்களிலும் உயிரிலும் இரு சுடரிலும் கலந்து நிற்றல் கடவுட்டன்மையாகலின், ‘வானும் புவியும் புனலுங் கனலும் வளியும் இயமானும் இருசுடருங் கலந்து’ என்றார்.

இயமானன் – உயிர்; அது இயமானெனக் குறைந்து நின்றது. மன்னி – நிலைபெற்று. இருசுடர் – சூரியன், சந்திரன். மருண்ட நோக்குடைமையால் மானுங் குவளைமலர் போன்றிருத்தலிற் சுரும்பும் விழியை விரும்புவனவாயிற்று.

(25) காவி – குவளை. வள்ளை – ஓர் கொடி. ஆகுபெயராய்க் காதை உணர்த்தும். தூவிக்குலம் – தோகையீட்டம். பாவிக்குந்தோறும் – எண்ணுந்தோறும்.

(26) ஊன் – இறைச்சி. ஆறா – நீங்கா; இருவினை ஒப்பிலன்றி நீங்காமையின் ஆறுவுயிர்ப்பிணி என்றார்.

(27) கஞ்சம் – தாமரை. கமலத்துறையும் அஞ்சத் திருத்து நடையாய் – தாமரையில் இருக்கின்ற அன்னம் தான் பார்த்துத் திருந்துதற்குக் காரணமான நடையை உடையவளே. கதி – வீடுபேறு.

(28) ஒருகணப் போதுந் தரியாத வின்பம் – நிலையற்ற உலக போகங்கள். இனமென வெண்ணி அனக் குருகணை கோல நடையாய் – நடையொப்புமையாலும் தாமரை மேவுதலாலும் வெள்ளைநிறமுடைமையாலும் தனக்கு இனமென்று கருதி அன்னப்பறவை பக்கலில் அணைதற்குக் காரணமான அழகிய நடையாய். கோமளம் – அழகுடையவள்.

(29) மாதங்கம் – பொன். வடி – கூர்மை. சூது – சூதாடுகருவி ஏதம் – துன்பம்.

(30) குலத்தாமரைகள் தேன்பிலிற்றி வண்டுகள் மொய்க்கப்படுதல் போல வெண்டாமரையாளது திருப்பாத தாமரைகளும் தண்ணளி பிலிற்றி அன்பர்களாகிய வண்டுகள் மொய்த்தற்கு இடமாயிருத்தலின் இரண்டும் ஒப்பாம். எனினும் குலத்தாமரைக்கு விரிந்து குவிகின்றதாகிய ஒரு குறை உண்டு என்பது.

(31) பண்டுதொட்டே குறைதலை உடையதாய் உடம்பிற் களங்கம் உடையதாய் இராகு கேதுக்களாகிய பாம்புகளால் உண்ணப்பட்டுப் பின் உமிழப்படும் எச்சிலாகிய மதியத்தையோ, கற்கண்டின் சுவைகனிந்து பவளம்போலும் இதழ்கள் விரிந்து ஒளிமுறுவலரும்பும் நாமகளின் திருமுகத்திற்கு ஒப்பென்று பாவலர்கள் சாற்றியது ஒவ்வாதென்றபடி.

(32) குரைகடல் உற்பவியா அமுது – பாற்கடலிற் பிறவா அமுது; அது பவளவாயில் ஊறிய அமுதம்போலும் நீர்.

(33) தேகாதிவஞ்சம் – தனு கரண புவன போகம் முதலாய குற்றங்கள்.

(34) தணியா நவம் – குறையாத புதுமை.

# 20. தாலாட்டு.

## காப்பு.

சீர்பூத்த நாமகண்மேற் செந்தமிழ்த்தா லாட்டுரைக்கக்
கார்பூத்த வைங்கரத்துக் கற்பகத்தைக் கைதொழுவாம். 1

செந்தமிழ்ச் செல்விதிருத் தாலாட்டுச் செப்புதற்குக்
கந்த முருகன் கழலிணைகள் காப்பாமே. 2

நந்தாத் தமிழ்முதல்வி தாலாட்டு நாட்டுதற்கு
வந்தாண்ட ஞானகுரு மாணடிகள் வாழ்த்துவமே. 3

வெள்ளைக் கலையாளே வெண்டா மரையாளே
தெள்ளுதமிழ்த் தாலாட்டுச் செப்பவருள் செய்யுமம்மா. 4

செஞ்சொற் பசுங்கிளியே தீங்குயிலே பூங்கொடியே
நெஞ்சத் திருந்து நினைவருளிச் செய்யுமம்மா. 5

பாவேறு நாவிற் பயில்வதுபோ லென்பழகா
நாவேறி வீற்றிருந்து நன்மை புரியுமம்மா. 6

## நூல்.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ. 7

தென்பொதிய மாமலைவாழ் தெய்வக் குடமுனிக்கு
நம்பனரு ளாலளித்த ஞானச் செழுஞ்சுடரோ (ஆரா) 8

குன்ற மெறிந்த குமரமுனி வாய்கொடுப்ப
வென்ற புலமுனிவன் வேண்டுகலை வெண்மதியோ (ஆரா) 9



மூடத்தை யுண்டறியா மூதறிவைக் காலுகின்ற
சேடர்செழு நாவிலெழுஞ் செந்தீயின் தெய்வதமோ (ஆரா) 10

செந்தா மரைமுதல்வன் செம்பொற் கரம்பிடித்த
அந்தா மரைமே லமர்ந்தருளு மோதிமமோ (ஆரா) 11

ஆருயிர்கள் நாவசைக்க வங்கிருந்து காலசைக்குஞ்
சீருயிர்க்கும் பொற்றூவித் தெய்வ மடமயிலோ (ஆரா) 12

ஆழித் துகிலசைத்த வம்புவியோ ரஞ்செவியில்
ஏழிசையின் செந்தேன் சொரியு மிளங்குயிலோ (ஆரா) 13

அஞ்ச முயர்த்தோ னணிமணிநாப் பஞ்சரத்துட்
செஞ்சொற் பழமறைகள் செப்பியருள் சாரிகையோ (ஆரா)

தீட்டுங் கலைத்தமிழ்த்தேர் செல்வர்செந் நாவினிசைப்
பாட்டும் பயனும் பகரும் பசுங்கிளியோ (ஆரா) 15

வித்தைப் பெருங்கடலில் மேலோர் குளித்தெடுத்த
சுத்தச் சுரிமுகமீ சோதிமுத்த மாமணியோ (ஆரா) 16

கல்விக் கிரியரித்துக் கற்றவர்கள் கண்டெடுத்த
வில்லிட் டொளியுமிழும் வெள்ளைவை டூரியமோ (ஆரா) 17

வெள்ளைக் கலைமதித்து மெய்ப்புலவர் வாரியள்ளி
உள்ளக் கவலைகெட வுண்டுவக்குந் தெள்ளமுதே (ஆரா) 18

அன்பா ரறக்குழைவிட் டான பொருளரும்பி
இன்ப மணமலர்ந்து ஞானங்கனி கற்பகமோ (ஆரா) 19

வெந்தாபஞ் சோகம் வெறுமைபிணி வீட்டுகின்ற
மந்தார தெய்வ மரத்தில்வைத்த கோற்றேனோ (ஆரா) 20

சிந்தா குலமுந் திரைநரையு மூப்புமழி
சந்தான கற்ப தருவருள்சஞ் சீவினியோ (ஆரா) 21

மைக்கட்டு நீக்கு மதித்தேவ தாரமதிற்
கைக்கெட்ட வந்து கனிந்த நறுங்கனியோ (ஆரா) 22

ஆசையெட்டு முட்டி யறிவுமணம் வீசுகின்ற
தேசு மலிபாரி சாதச் செழுமலரோ (ஆரா)23

மேவெழ் பிறவியினு மேமாப் பிணிப்பருளும்
பாவாழ் கலைத்தேனு பாலித்த பாலமுதோ (ஆரா)24

பொல்லாக் கல்லாமை பொருமையின்மை போக்கியென்றுஞ்
செல்லாத செல்வமருள் சிந்தா மணிக்குவையோ (ஆரா)25

எங்கெங்குச் சென்றாலு மின்பச் சிறப்புடனே
சங்க நிதியுமருள் சங்கத் தனிநிதியோ (ஆரா)26

பூமணக்குந் தாரும் புகழ்மணக்கும் புத்துறவும்
பாமணக்குஞ் சீரும் பரிந்தளிக்கும் பங்கயமோ (ஆரா)27

வெள்ளமுந் தீயும் விறல்வேந்து மொன்னலருங்
கொள்ள முடியாக் குறையா நவநிதியோ (ஆரா)28

திங்கள் மிலைந்த சிவனார் மடிமீதில்
மங்கையுமை கண்குளிர வந்துலவும் வான்குருந்தோ (ஆரா)29

பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பச்சை முகின்மேனி
மாற்கரிய வன்பு மருவு மருமகளோ (ஆரா)30

ஆறுமுகங் கொண்டவெங்க ளையர்க் கிளையவளோ
கூறுவள்ளி யானைமிகக் கொண்டாடு மைத்துனியோ (ஆரா)31

பூமிக்கு ணில்லாப் பொருளருளும் பொன்னனை
மாமிக்கு நெஞ்ச மகிழா மருமகளோ (ஆரா)32

அஞ்சு கணைக்கிழவற் காறு தலையருளும்
வஞ்சி யிடையிரதி வாழ்த்துகின்ற முன்னவளோ (ஆரா)33

வெண்டா மரைத்தவிசில் வீற்றிருந்தே யேழுலகுங்
கொண்டாட ஞானமுடி கொண்டருளுங் கோமகளோ (ஆரா)

மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறும்
பொங்கு கடலுமிடைப் பூமிசெய்த புண்ணியமோ (ஆரா)35



சேரன் குலக்கொழுந்தோ சென்னி தவக்கொழுந்தோ
பாரப்பூ ஞாரமணி பாண்டியனார் பாக்கியமோ (ஆரா)36

மேரு மலைகுனிய வெள்ளிமலை மெய்வெளுக்க
ஆரப் பொதியமலை யாளு மரசியரோ (ஆரா)37

தென்றல் கவரியிடச் செஞ்சாந்து பூச்சொரிய
வென்றி முனிமடியில் வீற்றிருக்கு மெல்லியரோ (ஆரா)38

நாட்டும் புகழ்வைகை ஞானசம் பந்தனிட்ட
ஏட்டிற் றவழ்ந்தெதிரே யேறு மிளங்கொடியோ (ஆரா)39

ஏடகப்பொற் பஞ்சணையின் வைகை யெழினுதலாள்
ஆடகக்கை யாயிரத்தா லாட்டவள ராரணங்கோ (ஆரா)40

வஞ்சச் சமணரெல்லாம் வான்கழுவின் மேலேற
மஞ்சத்தீ யேறி மகிழ்ந்திருந்த மங்கையரோ (ஆரா)41

தீமலர்ந்த சாம்பரொரு சேயிழையாய்ச் சேர்ந்துவர
வாய்மலர்ந்து வண்டமிழை மந்திரித்த வாணுதலோ (ஆரா42

பாட்டும் பொருளும் பரமசிவ னென்றெவர்க்குங்
காட்டுங் கருணைக் கடலோ கடலமுதோ (ஆரா)43

நெஞ்சிரக்க மென்றுமிலா நின்மூடர் முன்கொடுத்த
நஞ்சினிக்கு நல்லமுது மாக்குவித்த நாயகியோ (ஆரா)44

கற்றுணையாய்க் கட்டிக் கடலிலெறி பட்டவர்க்குச்
சொற்றுணையாய் நின்றருளுந் தோன்றாத் துணைவியரோ (ஆரா

பேதைமைத் தாழ்நீக்கிப் பெருஞ்சோதி காட்டுதல்போல்
வேதமெய்த் தாழ்நீக்கி வெளிகாட்டும் வித்தகியோ (ஆரா)46

தொண்டனுக்கு நள்ளிரவிற் றூதாகப் போக்கியெங்கள்
அண்டர்பிரான் றன்னை யடிப்படுத்து மாயிழையோ (ஆரா)47

தண்டா மரைக்குளத்திற் றங்குங் கராமொருநாள்
உண்ட பசுங்குழவி யோடிவரச் சொன்னவளோ (ஆரா)48

வாதித்த புத்தர்கடம் வாய்பொத்திக் கைவிரிக்க
ஓதித் திருச்சாழ லுரைசொல வைத்தவளோ (ஆரா)49

ஆடலு மம்பலமும் விட்டா டகக்குடுமிக்
கூடலி றைவன் குடியிருக்கச் செய்தவளோ (ஆரா)50

தேனூறு செந்தமிழின் தீஞ்சுவையை யுன்னியுன்னி
வாயூறிக் கான்மாறி மன்றாட வைத்தவளோ (ஆரா)51

உள்ளபொருள் நான்கி லொன்றுங் குறையாமல்
வள்ளுவன் வாயால் வழங்கியருள் மாதரசோ (ஆரா)52

முன்மொழிந்த வாயிரத்து முந்நூற்று முப்பதையும்
பின்னொருபா மூன்றடியிற் பேசிவைத்த பெண்மணியோ (ஆ)

பட்டபனந் துண்டமொன்று பங்குக்கு மூன்றுபழம்
இட்டப் படிகொடுக்க வேவியரு ளேந்திழையோ (ஆரா)54

கொஞ்சத் தினைக்காகக் கூழைப் பலாத்தழைக்கச்
செஞ்சொன் முதற்பாவைச்செப்பியருள் தேமொழியோ(ஆரா

ஓருமிறை வன்பொருளுக் குள்ள விலையுரையைக்
கீரன் மதிவாய்க் கிளத்துங் கிளிமொழியோ (ஆரா.56

ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்தோன்
ஆருயிர் வெள்வி யருளா லளித்தவளோ (ஆரா.57

வாய்ச்சதமிழ்க் கம்பனன்று வாய்சோர்ந் துரைத்தமொழிக்
காய்ச்சியாய்ச் சாட்சி யறைந்தருளு மம்மணியோ (ஆரா.58

கம்ப னளித்தவெள்ளைக் காப்பிரண்டுக் காசைகொண்டு
செம்பொற் சரணத் திருச்சிலம்பொன் றீந்தவளோ (ஆரா)

கூளி புரட்டுங் குடிசைநெடும் பித்திகையை
நாழி பெறுவித்து நாட்டுவித்த நங்கையரோ (ஆரா)60

ஈட்டிக்குக் கூத்த னெறிவித்த செந்தலைகள்
கூட்டி யுயிர்கொடுத்த கூடன் மலைமருந்தோ (ஆரா)61



வெள்ளைக் கலைபொழிந்த மேகமர சோடிருந்து
கொள்ளைக் கவிசொரியக் கூறுங் குலக்கொடியோ (ஆரா)62

ஆள்கண் டெதிர்த்த வதிமதுரங் கைப்படையக்
கோள்கண்டு காலகண்டங் கூறிவென்ற கோற்றொடியோ(ஆ.

பாமாரி தேக்கிப் பயனுதவான் நாடுமண்ணின்
மாமாரி யாலழிய வார்த்தைசொன்ன மைவிழியோ (ஆரா)64

பொய்யா மொழிமொழிக்குப் போற்றுமே மேழ்புலவர்
துய்ய முடிதுளக்கச் சூழ்ச்சியொன்று சொன்னவளோ(ஆரா)

ஞானக் கடன்முழுது நான்மூன்று சூத்திரத்தில்
ஆன குழவி யடக்கமகி ழாரணங்கோ (ஆரா)66

ஆனநான் மூன்றினையு மாயவறி வாற்பெருக்கி
ஞானமுனி தண்டுறையில் நாட்ட நயந்தவளோ (ஆரா)67

சீர்மன்னு மோர்பத்துச் செய்யதமிழ் கேட்டுடனே
போர்மன்னன் பாடை புகட்டியருள் பூங்குழையோ(ஆரா)68

போற்றும் பொருட்டுறையிற் பொன்போற் கலித்துறைகள்
நூற்றுக்கு நான்மடங்கு நூறுநுவல் நுண்ணிழையோ(ஆரா)

மாறுருத் தூதவையிற் காட்டமலர் சண்பகத்தில்
ஆறுகால் காட்டி யருளைம்பா லழகியரோ (ஆரா)70

மின்ன லிடையாளோ வேத மொழியாளோ
சொன்ன சிவகலைக்குட் சோதியாய் நின்றாளோ (ஆரா)71

ஓசை யொலியாளோ ஓங்கார நாயகியோ
பேசுவிந்து நாத வடிவமைந்த பெய்வளையோ (ஆரா)72

வன்ன வடிவாளோ மந்திர வாசகியோ
சொன்ன பதமும் பொருளுமாஞ் சுந்தரியோ (ஆரா)73

வண்டரற்றுங் கூந்தன் மதிநுதலோ வண்டமிழ்தேர்
தொண்டரற்ற நீக்கி யருள்சுரக்குஞ் சொன்மகளோ(ஆரா)74

காவி விழியாளோ காமர் மொழியளோ
ஆவி புகுத்தி யணிந்தெழுது மோவியமோ (ஆரா)75

மூவேந்தர் சீர்த்தியெனு முத்துமணித் தொட்டிலிலே
பாவேந்தர் தாலாட்டக் கண்வளரும் பாரதியோ (ஆரா)76

சொன்மா மணிமதுரைச் சொக்கப் பிரானருளுங்
கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே (ஆரா)77

கன்மாப் பலகைக் கனகமணித் தொட்டிலிலே
சொன்மாலை யேழெழுவர் சூட்டவளர் தூமணியோ(ஆரா)78

முச்சங்க மென்னு முழுவயிரத் தொட்டிலினூற்
பிச்ச நிழற்கீழ் வளர்ந்த பிராட்டியரோ (ஆரா)79

சீரா ரகத்தியமாஞ் செம்பவளத் தொட்டிலிலே
பாரார் பரவப் பயின்றருளும் பான்மொழியோ (ஆரா)80

கூருந்தொல் காப்பியமாம் கோமேதத் தொட்டிலிலே
பூரணனூர் தாலாட்டக் கண்வளர்ந்த பூரணியோ (ஆரா)81

இச்சைப்பட் டார்க்கினிய ரேத்துஞ்சே னுவரையர்
நச்சுபே ராசிரியர் நன்கிருந்து தாலாட்ட (ஆரா)82

நச்சுபே ராசிரியர் நன்கிருந்து தாலாட்ட
இச்சை யுடன்வளர்ந்த வெங்க ளிளம்பிடியோ (ஆரா)83

பாவலர்க ளுவாகும் பவளமணித் தொட்டிலிலே
காவலர்கள் கைகொடுக்கக் கண்வளருங் காரிகையோ(ஆரா)84

தொன்னூற்பா வாய்ந்து தொகுத்தபசுந் தொட்டிலிலே
நன்னூ னுணுகிடையார் நாதச் சுதியெழுப்ப (ஆரா)85

நன்னூ னுணுகிடையார் நாதச் சுதியெழுப்ப
பின்னூ லணையி லுறங்கும் பிராமியரோ (ஆரா)86

விண்ணே புவியே விரிபுனலே காலேயெங்
கண்ணே மணியேநற் காட்சியே கண்வளராய் (ஆரா)87



தண்டாச் சிறப்புடைய சாவித் திரிமானே
கண்டே சுவையே கனங்குழையே கண்வளராய் (ஆரா)88

திங்கட் குடையான் திருக்கரத்திற் போய்க்குலியாச்
செங்கரும்பே யூறிவருந் தேறலே கண்வளராய் (ஆரா)89

மாரிதாழ் கூந்தன் மதிவெண் டிலதநுதற்
கூரிய நாசிக் குறுந்தொடியே கண்வளராய் (ஆரா)90

உண்டா லினிக்கு முதுபோலா தெஞ்ஞான்றுங்
கண்டா லினிக்குங் கலையமுதே கண்வளராய் (ஆரா)91

ஞானப் புவிக்குயிராய் நாட்டுங் குடிலையெனும்
மானப் பெருவாவி வட்டவடி வாயிருக்கும் (ஆரா)92

வட்டப் பெருங்குளத்து மாமருங்கு தோறுமங்கே
மட்டு விரிகஞ்ச மலர்க்காடு பூத்திடுமே (ஆரா)93

மட்டு விரிகஞ்ச மலர்க்காட்டு மத்தியிலே
வெட்ட வெளியிலொரு வெண்டா மரைமலரும் (ஆரா)94

வேத மரும்பி மிகுமா கமம்விரிந்து
போதக் கலைநாறிப் பொருட்டா திறைத்திடுமே (ஆரா)95

சேரா யிரமுகமுஞ் செந்தே னறிவொழுக்கி
யோரா யிரமிதழ்கொண் டோங்குமந்தப் புண்டரிகம்(ஆரா)96

உண்டு பசிபோக்கி யோரே ழிசைச்சுருதி
வண்டு முரல மலர்ந்ததந்தப் புண்டரிகம் (ஆரா)97

பேச மலர்ந்த பிரசவெண் டாமரைமேல்
வாச மணிப்பொகுட்டு மந்திரப்பொற் றொட்டிலிலே(ஆரா)98

மின்ன லிடையுடையார் வீழு மொழியுடையார்
வன்ன வடிவுடையார் மங்கையர்மூப் பானொருவர்(ஆரா)99

மங்கையர்மூப் பானொருவர் வந்து புடைசூழ்ந்து
செங்கை குவித்துச் சிரம்வணங்கி மெய்காப்ப (ஆரா)100

**எ**ண்ணெண் கலையி லெடுத்தவெண் சாமரங்கள்
பண்ணெண் மொழியார் பணிந்து பணிமாற (ஆரா)101

**இ**தக் கடற்பிறந்த கின்னர மங்கையர்கள்
நாதச் சுதிதூக்கி நல்வீணை வாசிக்க (ஆரா)102

**நீ**ரியலுஞ் சென்னி நிமலன் மலைப்பிறந்த
வாரிய மங்கை யருகிருந்து தாலாட்ட (ஆரா)103

**ஆ**ரிய மங்கை யருகிருந்து தாலாட்டச்
சீரிய செஞ்சொற் றிருமகளே கண்வளராய் (ஆரா)104

**மா**னே பிடியே மணிப்புறவே மாமலையிற்
தேனே குறையாத் திரவியமே கண்வளராய் (ஆரா)105

**வ**ஞ்சி யிடையாளே வாழைத் தொடையாளே
கொஞ்சு மொழியாளே கோமளமே கண்வளராய்(ஆரா)106

**அ**ன்னக் கொடியாளே யம்பூர வாகனியே
பொன்னுரைத்த மேனிப் புரிகுழலே கண்வளராய்(ஆரா)107

**ப**த்தித் தருவிற் பழுத்ததே மாங்கனியே
சித்தத் தெளிவே சிவக்கொழுந்தே கண்வளராய் (ஆரா)108

**பூ**விற் பரதேசம் போவோர் வழிப்பசிக்கு
நாவிற் பொதிந்துவைத்த நல்லமுதே கண்வளராய்(ஆரா)109

**மு**ன்ன மினிக்கு முதுபாகே சருக்கரையே
சின்னஞ் சிறுத்தவிடைத் தேன்குழலே கண்வளராய்(ஆரா)110

**மா**சு தவிர்த்த மதிவதனஞ் சோதிகுன்ற
ஓசை தழுதழுக்க வுன்னி யழவேண்டாம் (ஆரா)111

**து**ண்டப் பிறைநுதலிற் சோதிமணி முத்தரும்பக்
கண்டம் பொருமக் கலைச்சி யழவேண்டாம் (ஆரா)112

**க**ண்ணாடி யன்ன கதுப்புக் கவின்றொலைய
அண்ணாந்து வெம்பி யரசி யழவேண்டாம் (ஆரா)113



**இ**ல்லா ரிளமையென வேரார் முகம்வாடி
அல்லல் பெருக வரசி யழவேண்டாம் (ஆரா)114

**கா**லனை வென்று கலையையரன் கைப்படுத்தும்
வேலை நெடுங்கண்கள் வெண்முத்தஞ் சிந்திடுமே (ஆரா)115

**வே**லை நெடுங்கண்கள் வெண்முத்தஞ் சிந்தியிடப்
பாலைப் பழித்தநிறப் பாவை யழவேண்டாம் (ஆரா)116

**ந**ஞ்சை யரன்கரத்து நாட்டிக் கருங்குவளை
அஞ்ச மலர்விழிக ளாணிமுத்தஞ் சிந்திடுமே (ஆரா)117

**அ**ஞ்ச மலர்விழிக ளாணிமுத்தஞ் சிந்தியிடச்
செஞ்சொற் பெருமதுரைச் செல்வி யழவேண்டாம்(ஆரா)118

**சே**லெல்லாந் தென்மதுரைத் தேவிவிழி சென்றடைய
வேலெல்லாம் வென்றகண்கள் வெண்முத்தஞ் சிந்திடுமே(ஆரா)

**வே**லெல்லாம் வென்றகண்கள் வெண்முத்தஞ் சிந்தியிட
நாலெல்லாம் போற்றுமெங்கள் நோன்பே யழவேண்டாம்(ஆ.)

**கோ**ப விதழ்துடிக்கக் கோற்றேன் கடைதுளிக்கச்
சாப நுதனெரித்துத் தையா லழவேண்டாம் (ஆரா)121

**கோ**ள்கேட்ட சான்றோன் மனம்போ லிதழ்துடிக்க
வாள்வீட்டு கண்பனிப்ப மங்கை யழவேண்டாம் (ஆரா)122

**ந**ல்லுயிர் கோற லெதிர்ப்பட்டான் நெஞ்சம்போல்
மெல்லிதழ்க டாந்துடிப்ப வெம்பி யழவேண்டாம் (ஆரா)123

**பூ**வூ ரிதழ்துடிப்பப் பூங்குமுதப் பொற்பழித்த
வாயூறி மேனி வடிய வழவேண்டாம் (ஆரா)124

**க**ற்புடையோர்த் தூற்றுங் கயவன்சீர் போலுனது
பொற்பு நலனழியப் பூவை யழவேண்டாம் (ஆரா)125

**மு**ன்வா யரும்பிரண்டு தோன்ற முறுவலித்துப்
பின்வா யுதடு பிதுக்கி யழவேண்டாம் (ஆரா)126

**க**ண்பாதி மூடிக் கடைவா யமுதொழுகப்
பெண்பாவை வெம்பிப் பெரிது மழவேண்டாம் (ஆரா)127

**கா**மன் சிலைபழித்த கட்புருவங் குஞ்சித்துத்
தாம வடஞ்சுவைத்துத் தையா லழவேண்டாம் (ஆரா)128

**கை**யின் வளைபுலம்பக் காற்சதங்கை யோலமிடச்
செய்ய விரல்சுவைத்துத் தேவி யழவேண்டாம் (ஆரா)129

**ஊ**டன் முகத்தயனு ருச்சி மிசையுதைக்கும்
பாடகத் தாள்சுவைத்துப் பாவை யழவேண்டாம்(ஆரா)130

**வா**க்குத் தழுதழுக்க மைக்கண் சிவப்பேற
மூக்குநீர் சிந்தி முதல்வி யழவேண்டாம் (ஆரா)131

**ஆ**ச்சி யழவேண்டா மம்மா வழவேண்டாம்
வாய்ச்ச தமிழகத்து மாதா வழவேண்டாம் (ஆரா)132

**பா**லாற் குறையோபூம் பஞ்சணையாற் பஞ்சமுண்டோ
கோலமணிப் பூணுடை யிந்நாட்டுக் குறைந்தனவோ(ஆரா)133

**பா**லன் குரல்கேட்டுப் பாற்கடலை யீந்தபிரான்
ஓலஞ் செவிகேட் டுனதுபசி தீரானோ (ஆரா)134

**தே**ம்பி யழுத சிறுவனுக்குப் பால்சுரந்த
காம்பனதோ என்னை கருணை புரியாளோ (ஆரா)135

**வா**னுறங்கு மேனி வடிவழக னுன்மாமன்
தானுறங்கும் பாற்கடலைத் தந்துபசி தீரானோ (ஆரா)136

**பி**ள்ளைப் பிறையணிந்த பிஞ்ஞகனும் பேறுதவு
புள்ளி மயிலூரும் புலவர் பெருமானும் (ஆரா)137

**வா**ரி குடித்த வரமுனியும் வாலறிவிற்
சீரியரு மோர்மூன்று தேனு வளர்த்தார்கள் (ஆரா)138

**போ**ற்றுங் கபாடபுரம் பொன்னுருந் தென்மதுரை
ஏற்ற மணிக்கூட லிம்மூத் தொழுவினிலே (ஆரா)139



**ஏ**ற்ற மணிக்கூட லிம்மூத் தொழுவினிலே
பேற்ற மொருமூன்று பேணி வளர்த்தார்கள் (ஆரா)140

**வ**ல்லநா வாலே மதிவயலி லேசெதுக்கிப்
புல்லுநா லூட்டிமிகப் போற்றி வளர்த்தார்கள் (ஆரா)141

**செ**ல்வப் பசுமூன்றிற் றேடிக் கறந்தெடுத்த
நல்ல சுவையமுதம் நாங்களுனக் கூட்டிவைப்போம்(ஆரா)142

**தொ**ண்டர் புராணத் தொடுகடலி லேயருளாற்
பண்டுகிழான் மொண்டுதவு பாலமுத மூட்டிவைப்போம்(ஆரா)

**க**ந்தன் கதைகடைந்து கச்சியப்ப னன்றெடுத்துத்
தந்த சுவைத்திரளைத் தையா லருத்திவைப்பேம் (ஆரா)144

**பே**சுபுக ழேந்திகனி வெண்பாப் பிழிந்துகம்பன்
ஆசைக் கவியி லநேகமுடைத் துத்துருவி (ஆரா)145

**கூ**த்த னுலாச்சுவையுங் கூட்டி யதிவீரன்
வார்த்தைச் செழுந்தேனும் வாக்கி வடித்தெடுத்து(ஆரா)146

**அ**ல்லமன் காதை யருங்கருப்பஞ் சாறூற்றி
வில்லி தனிகை வியன்கதையின் பாலளவி (ஆரா)147

**மெ**ல்லியபா கட்டெடுத்து வேண்டும் படிதருவோம்
கல்லை யுருக்குமொழிக் கன்னி யழவேண்டாம் (ஆரா)148

**பொ**ன்னுன மாமி பொருது மனம்புழுங்கிக்
கன்னத் தடித்துவெகு கற்பனைகள் சொன்னாளோ(ஆரா)149

**நா**சித் துளையாலும் நாக்கு நுனியாலும்
பேசும் பரதேசிப் பெண்ணணங்கு தொட்டாளோ(ஆரா)150

**சி**ங்கள மாதியயற் றேசத்துப் பெண்மணிகள்
எங்களுக்கு நீயொப்பென் றில்லாது சொன்னாரோ(ஆரா)151

**ஆ**தரித்த மக்களெல்லா மவ்வணங்கி லாசைகொண்டு
காதரிக்கப் பேசியுனைக் கையுதறி விட்டாரோ (ஆரா)152

எல்லாத் திசையு மெறிந்த விருஞ்சீர்த்தி
கல்லார் மனம்போலக் கங்குல்வாய்ப் பட்டதுவோ(ஆரா)153

வாயின்மத நாலொருகை வாளொருகை கொண்டுவஞ்சர்
தீயினவை வாரியிட்டுச் சேர வெரித்தனரோ (ஆரா)154

அஞ்சியொஞ்சிப் பதுங்கிக் யங்கங் கடைந்தவற்றைச்
செஞ்சிதலு மண்ணுஞ் சிதைத்தரித்துத் தின்றனவோ(ஆரா)

செஞ்சிதலு மண்ணுஞ் சிதைத்தரியாச் சில்லணிகள்
வஞ்ச மனமுடையோர் மாட்டு மறைந்தனவோ (ஆரா)156

தக்கசில நூலணிக டாமுமணி யாருதவார்
வைக்கோல் ஞமலியர்பால் வந்தடைந்து மாண்டனவோ(ஆ.

போதனை சாதனையிற் போற்றவைத்த சந்நிதிகள்
மாதன சாதனையி லுன்னை மறந்தனரோ (ஆரா)158

வாகான மாபா டியமணியை வண்டுறையார்
ஆகாது கொல்லென் றறையில்வைத்துப் பூட்டினரோ(ஆரா)

ஆரியை பெற்ற வணங்கென் றுனைச்சிலபேர்
காரிய மின்றிக் கழறக் கலங்கினையோ (ஆரா)160

உள்ள பெயரிருக்க ஊரார் பெயர்சூட்டிக்
கள்ளத் திருவாண்டுங் கட்டி மொழிந்தாரோ (ஆரா)161

முச்சங்க வாழ்வு முடிமன்னர் காவலும்போய்
அச்சத்தின் மேலு மயற்பழியு மாயினவோ (ஆரா)162

ஆதரிப்பார் போனுர்கள் ஆடையணி யில்லையென்று
மாதாசி நொந்து மனக்கவலை கொள்ளுதியோ (ஆரா)163

உள்ளங் கவலற்க வுண்கண் பனியற்க
கொள்ளும் படிதெரிந்து கூறுவன கேட்டமோ (ஆரா)164

சீரழிந்து கெட்டுச் சிதைந்து நிரைமாறிப்
போரழிந்து பூஞ்சு பிடித்துப் பிடியாகி (ஆரா)165



முன்பின் முரணி முழுதும் புழுவுழுது
கம்பை நடுமுரிந்து கட்டுவிட் டுச்சிதறி (ஆரா)166

மூலைக்கு மூலை மடங்கிமுடங் கிக்கிடந்த
கோலத் திருவா பரணக் குவையெல்லாம் (ஆரா)167

கோலத் திருவா பரணக் குவையெல்லாம்
வாலறிவின் மேலோர் வருந்தி யெடுத்தார்கள் (ஆரா)168

ஊணும் துகிலும் உடற்சுகமுங் கைப்பொருளும்
நாணுங்கை விட்டவர்கள் நாடி யெடுத்தார்கள் (ஆரா)169

நாடி யெடுத்து நலனழியா மற்றிருத்தி
நீடுலகி லெங்கு நிறைய வளித்தார்கள் (ஆரா)170

எங்கு மளித்த வெழிலா ரிழைகளெல்லாம்
மங்கா நிதிவழங்கும் வாழ்வே யெடுத்தணிவேம் (ஆரா) 171

ஆறுபே ரீரே ழணிமணிகள் வைத்திழைத்த
பேறுதவு ஞானப் பெருமகுடஞ் சூட்டிவைப்பேம் (ஆரா)

நாவார வேத்தியிந்த நானிலத்தார் வாழ்வுபெறுந்
தேவார முன்றன் றிருக்கழுத்திற் பூட்டிவைப்போம்(ஆரா)

ஆணிப்பொன் னம்பலவன் கோத்ததொரு நானூறு
மாணிக்கக் கோவைமணிமார்பில் வளைத்திடுவேம் (ஆரா)

நாவா யிரம்போற்று நன்மந் திரமாலை
மூவா யிரமுமெங்கள் மொய்குழலே யாமணிவேம் (ஆரா)

தேவ ரிருவர்தருஞ் செஞ்சொற் றிருமணிகள்
தாவில் தொடைமிடைந்து தாயே யணிந்திடுவேம் (ஆரா)

மாகலைதே ருங்கூல வாணிகனுர் தந்தமணி
மேகலை வெண்கலைசூழ் மின்மருங்கி லேபுனைவேம்(ஆரா)177

சீரடியர் நல்லா ருணர்ந்து விலைதெரித்த
சேரமான் தந்த திருச்சிலம்பு காற்கணிவோம் (ஆரா)178

பண்டை வளையா பதியுடனே பாவலர்வாய்
விண்ட தமிழ்க்காப்பு மென்கரத்துச் சேர்த்திடுவோம் (ஆரா)

செந்தாது சேர்த்தெடுத்துத் தெய்வப் புலவர்செய்த
வந்தாதி யாதி யணிவிரலுக் கீந்திடுவேம் (ஆரா)180

மங்கல மாலைபுனை மஞ்சரி வஞ்சியுலாத்
துங்கமடன் முதலாஞ் சொல்லணிகள் சூட்டிவைப்பேம்(ஆ)

சூட்டிப் புனைந்து தொடுத்தணிந்து தொன்மையெழில்
காட்டி யணைத்துக் கரத்தேந்திக் காவல்செய்து (ஆரா)182

பாட்டுக்குப் பொன்சொரியும் பாண்டித் துரைத்தேவன்
கூட்டி யியற்றுங் குலவுசங்கத் தொட்டிலிலும் (ஆரா)183

அன்பர்க ளெங்கங்கே யமைத்துவைத்த சங்கமெனும்
பொன்பொதியுந் தெய்வப் புதியமணித் தொட்டிலிலும்(ஆரா

ஆரியமுந் தண்டமிழும் ஆதரிக்கு மன்பர்புரி
சீரியநற் சங்கமெனுந் தெய்வமணித் தொட்டிலிலும் (ஆரர)185

சீரியநற் சங்கமெனுந் தெய்வணித் தொட்டிலிலுங்
கூரிய மெய்ஞ்ஞானக் குலவிளக்கே யாமேற்றி (ஆரா)186

நீட்டும் பனுவற் றிருப்புக ழெலாங்கூறி
வாட்டந் தவிர மகிழ்ந்துதா லாட்டினமே (ஆரா)187

வாட்டந் தவிர மகிழ்ந்துதா லாட்டுவது
கேட்டு மனமகிழ்ந்து கேடி லருள்பூத்து (ஆரா)188

கேட்டு மனமகிழ்ந்து கேடி லருள்பூத்துக்
கோட்டந் தவிர்த்துக் குறுமுறுவல் கொண்டருளி (ஆரா)189

செஞ்சிலம்பு கொஞ்சுந் திருச்சரணஞ் சென்னியில்வைத்
தஞ்சலஞ்ச லென்றே யணைத்துப் புறந்தடவி (ஆரா)190

வாட்டு மிடியும் மனவருத்த மும்போக்கித்
தீட்டுங் கலைத்தமிழின் செல்வ மெமக்கருளி (ஆரா)191



கஞ்சத் தவிசுங் கலைவாணர் நாவும்போல்
நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்து (ஆரா)192

நெஞ்சத் திருந்து நினைத்த வரங்கொடுத்துச்
செஞ்சொற் பிராட்டி திருவருள்செய் தாண்டருளே(ஆரா)

தெய்வத் தமிழ்வாழி செந்தமிழ்ப்பன் னூல்வாழி
நல்வித்தை தந்தருளு நாமகளும் வாழியரோ (ஆரா)194

ஆனை முகன்வாழி யாறு முகன்வாழி
ஞான மணிமன்று ணாயகனும் வாழியரோ (ஆரா)195

அம்பிகை வாழி யகத்தியனு ரும்வாழி
நம்புமுச் சங்கத்து நாவலரும் வாழியரோ (ஆரா)196

மூவேந்த ரும்வாழி முச்சங்க மும்வாழி
பாவேய்ந்த பாண்டிப் பழம்பதியும் வாழியரோ (ஆரா)197

சேலாட்டு முண்கட் டிருவாணி மேலுரைத்த
தாலாட்டெஞ் ஞான்றுந் தழைத்தூழி வாழியரோ (ஆரா)198

## உரைவிளக்கம்

(1) **கா**ர்பூத்த ஐங்கரத்துக் கற்பகம் – மேகம்போன்ற வண்மை பூத்த ஐந்து திருக்கரங்களை உடைய கற்பகப் பிள்ளையார்.

(2) கந்த முருகன் – இருபெயரொட்டு.

(3) நந்தா – குறையாத. ஞானகுரு – சுப்பிரமணிய சுவாமிகள்.

(6) பர்வேறு நா – நால்வகைப் பாக்களைப் பயின்ற முது புலவர்கள் நா. என் பழகா நா – எனது பாப்பயிற்சியில்லாத நா.

(8) குடமுனி – அகத்தியனார். நம்பன் – சிவன். ஞானச் செழுஞ்சுடர் – ஞானசூரியன்.

(9) குன்றம்–[கிரவுஞ்சகிரி.]குருகுப்பெயர்க் குன்றம். குமரமுனி– முருகக்கடவுள். வாய் கொடுப்ப – வாயின் வழியாகப் பெற்றுக் கொடுக்க. சந்திரன் அத்திரி முனிவனின் கண்ணிலும் வடவைத்தீயின் முகத்திலும் பாற்கடலின் வயிற்றிலும் பிறந்தான் என்று கூறப்படும்.

ஈண்டுத் தமிழ்மகளாகிய வெண்மதி குமரமுனிவாயிற் பிறந்தது என்றவாறு. குருவாயிருந்து அருளினமையாலே குமரனை முனி என்றார். புலம் வென்ற முனிவன் எனமாறுக. புலம் – ஐம்புலம். புலம்வென்ற முனிவன் – அகத்தியர்.

(10) மூடம் – அறியாமை. அறியா மூதறிவு – அளவிட்டறிய முடியாத பேரறிவு. சேடர் – அறிவுடையோர். செந்தீயின் தெய்வதம் – செந்தீக்கடவுள். நாமகளின் ஞானப் பேரொளியை முச்சுடராயுங் கூறினர். (8, 9, 10 ஆம் செய்யுட்கள்)

(11) செந்தாமரை முதல்வன் – திருமாலின் உந்தித்தாமரையிற் பிறந்த பிரமன். செம்பொற் கர பிடித்த – மணஞ் செய்துகொண்ட. அந்தாமரை – அழகிய வெண்டாமரை. ஓதிமம் – அன்னம்.

(12) நாவசைக்க – நாவை அசைத்து ஒலியைப் பிறப்பிக்க முயலும்போது. அங்கிருந்து – அந்த நாவிலெழுந்தருளி. காலசைக்கும் – ஒலியாய் மொழியாய் நடனஞ்செய்யும். சீர் உயிர்க்கும் – சிறப்புக்களைத் தோற்றுவிக்கும். தூவி – தோகை.

(13) ஆழித் துகில் அசைத்த அம்புவியோர் – கடலாகிய ஆடையைக் கட்டிய பூமியிலுள்ள மக்கள்.

(14) அஞ்சம் உயர்த்தோன் – அன்னக் கொடியை உயர்த்திய பிரமன். நாப் பஞ்சரம் – நாவாகிய கூடு. சாரிகை – நாகணவாய்ப்புள். 11—15 வரையும் உள்ள தாழிசைகளால் ஓதிமம், மயில், குயில், பூவை, கிளி என்னும் ஐவகைப் பறவைகளாயுங் கூறப்படுதல் காண்க.

(16) வித்தைப் பெருங்கடல் – கல்வியாகிய பெருங் கடல். மேலோர் – அறிஞர்கள். சுத்தச் சுரிமுகம் – வெள்ளிய சங்கு. சோதி மூத்த மாமணி – ஒளிகாலும் முத்துமணி.

(17) கல்விக் கிரி – கல்வியாகிய மலை. வில்லிட்டொளியுமிழும் – விட்டுவிட்டெறிக்கும். ஒன்பது மணிகளுள் ஏனைய நிறமொவ்வாமையின் வெள்ளை வைடூரியம் கூறப்பட்டது.

(18) வெள்ளைக் கலை – தூய நூற்கடல். மதித்து – கடைந்து.

(19) அறம் பொருள் இன்பம் வீடு தருங் கற்பகமென்றவாறு.

(20) வெந்தாபம் – துன்பம். சோகம் – துயரம். அது துன்ப நீட்டிப்பால் வருவது. வெறுமை – வறுமை. பிணி – நோய். வீட்டுகின்ற – அழிக்கின்ற. தெய்வ மந்தார மரம் – கடவுள் நாட்டுமந்தார மரம். கோற்றேன் – கொம்புத்தேன்.

(21) சஞ்சீவனி – உயிர் மருந்து. சஞ்சீவினி என்றும் வழங்கும்.



(22) மைக்கட்டு – கரிய ஆணவமலக்கட்டு. மதி – மெய்ஞ்ஞானம்.

(23) ஆசை – திசை. தேசு – ஒளி.

(24) ஏமாப் பிணிப்பு – உறுதியான தொடர்பு. கலைத்தேனு – நூலுணர்வாகிய காமதேனு. பாலித்த – சுரந்த.

(25) கல்லாமை – கல்வியறிவில்லாமை. பொறுமை – அழுக்காறு. செல்லாத செல்வம் – கல்வி.

(27) தார் – மாலை. புத்துறவு – பெரியோர் உறவு. பங்கயம் – பதுமநிதி.

(28) தமிழ்மொழியை வெள்ளமும் நெருப்பும் பகையரசர்களும் வேற்று மொழியாளரும் அவ்வக் காலங்களிலே அழிக்க முயன்றும் முடியாமை கூறுகின்றார்.

(29) மிலைந்த – சூடிய. குருந்து – குழவி. தமிழ் சிவனுக்குப் பிள்ளை என்றபடி.

(30) மால் – திருமால். நாமகள் திருமாலுக்கு மருமகளாதல் முற்கூறினும்.

(31) ஆறுமுகப் பெருமானுக்குத் தங்கை யாதலின் வள்ளியம்மையார் தெய்வயானையம்மையார் இருவர்க்கும் மைத்துனி என்க.

(32) பூமிக்குள் நில்லாப் பொருள் – ஐம்பூதத்தானியன்ற அழிகின்ற பொருட்செல்வம். நாமகள் தருங் கலைச்செல்வம் என்றும் அழியாது பூமிக்குள்ளும் புறம்பும் யாங்கணும் அருவாய் நிற்றலின் மாமிக்கு நெஞ்சம் மகிழாதாயிற்று. பொன் – திருமகள்.

(33) அஞ்சு கணைக்கிழவர் – மன்மதன். மன்மதனுக்கு அயன் மூத்தானாதலின் இரதிக்கும் நாமகள் மூத்தவளென்க.

(35) தமிழ்நாடு செய்த தவப்பயன் என்றவாறு.

(36) பாரப்பூணாரம் – இந்திரனால் இடப்பட்ட மிகப் பாரமாகிய ஆரம். அதனைப் பாண்டியன் தாங்கினான்.

(37) வில்லாக வளைத்தபோது வளைந்து நின்ற மேருவை வெள்கிக் குனிந்த தென்றதும், இயல்பாகவே வெளுத்த வெள்ளிமலையை வெள்கி வெளுத்ததென்றதும், தற்குறிப்பேற்றம் என்னும் அணி. பொதியமலையை அரசிருக்கையாக்கியது மேருவுக்கும் வெள்ளிமலைக்கும் வெட்கந் தருவதாயிற்று.

(40) ஆடகம் – ஆகுபெயராய்த் தொடியை உணர்த்தியது. கை ஆயிரம் – திரைக் கை ஆயிரம்.

(41) மஞ்சத் தீ – தீ ஆகிய மஞ்சம். மஞ்சம – கட்டில்.

(43) திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றின் பொருளென்னை என்றவழி அவற்றின் பொருள் சிவனே என்று கூறிய மாணிக்கவாசகனுருக்குக் கருணை காட்டும் கடல் என்க.

(46) பேதைமைத் தாழ் – அறியாமையாகிய பூட்டு. வேதமெய்த் தாழ் – உண்மையாகிய வேதங்களினுற் பூட்டப்பட்ட பூட்டு. இது மறைவனத்துக் கதவு திறந்தமை கூறியது.

(47) அண்டர் பிரான் – சிவன். அடிப்படுத்தும் – அடியார்க் கெளியனுக்கும்.

(48) கராம் – முதலை.

(49) வாய்பொத்தி – வாய் அடைத்து. ஊமையாகி என்றபடி. கை விரிக்க – கையை விரித்துக் கையே வாயாக அதனுற் பேச. வாய் பொத்திக் கை விரிக்க என்ற சொன்னயம் பாராட்டற் பாலது. திருச்சாழல் – மாணிக்கவாசகர் அருளிய திருப்பதிகம்.

(50) ஆடகக் குடுமிக் கூடல் – பொன் முடிகளை உடைய மதுரை. திருச்சிற்றம்பலத்தையும் ஐந்தொழிலாடலையும் மறக்கச் செய்தது தமிழின் சுவையாமென்க.

(53) இது திருவள்ளுவர் பாடிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளையும் ஔவையார் "ஈதல் அறம்" என்ற வெண்பா மூன்றடியினுலுங் கூறியதைக் காட்டுவது.

(54) இஃது அங்கவை சங்கவை கலியாணத்தில் ஔவையார் கூழைப்பலாத் தழைக்கவொரு வெண்பாப் பாடித் தினை பெற்றதைக் கூறுவது.

(56) இஃது இறையனுர் களவியலுக்கு நக்கீரனுர் உரை கண்ட வரலாற்றைக் கூறுவது.

(57) இஃது ஆரியம் நன்று தமிழ் தீதென்று கூறிய குயக் கொண்டானைச் சாகவும் பிழைக்கவும் நக்கீரர் பாடியதைக் கூறுவது.

(58) இது கம்பர் துளியைத் துமியென்றுரைத்தமொழி சரியானதெனச் சாட்சி பகர இடைச்சியாய் வந்ததைக் கூறுவது.

(59) கம்பனுக்குச் சிலம்பு கொடுத்த வரலாறு கூறுவதிது. அவ் வரலாறு முன்னர்க் கூறினும். வெள்ளைக் காப்புக்கு ஆசைப்பட்டுப் பொற்சிலம்பினைக் கொடுத்தவள் என்ற நயம் பாராட்டற்பாலது. வெள்ளைக் காப்பு – "படிகநிறமும்" என்றதும் "ஆயகலைகள்" என்றதும் ஆகிய சரசுவதி அந்தாதிக் காப்பு வெண்பாக்கள்.



(60) கூளி – பேய். பித்திகை – சுவர். நாழி – நாழி நெல்லு. இது வைக்க வைக்கக் கூளி புரட்டி விழுத்திய ஒரு சுவரைக் கம்பன் வைத்து நாழி நெல்லுக் கூலி பெற்றமை கூறிற்று.

(61) ஈட்டி – ஈட்டி எழுபது. கூத்தன் – ஒட்டக்கூத்தன். இது செங்குந்தரை ஒட்டக்கூத்தர் பாடிய வரலாறு கூறுவது. இவ்வரலாறு குயிற்பத்து 6-ஆம் செய்யுள் உரையிற் கூறப்பட்டுள்ளது.

62 முதல் 64 முடியக் காளமேகப் புலவர் திருமலைராயன் அவை புகுந்ததும் யமகண்டம் பாடியதும், வசை பாடியதும் கூறுவது. இவ்வரலாறு ஆசைப்பத்துப் பத்தாம் பாட்டின் உரையிற் கூறப்பட்டுள்ளது.

(65) இது வணங்காமுடிப் பாண்டியன் அவையிலே பொய்யாமொழிப்புலவர் நாற்பத்தொன்பது சங்கப்புலவர்களது உருவச் சிலைகளையும் தலையசைக்கப் பாடியதைக் கூறுவது.

(66) நான்மூன்று சூத்திரம் – பன்னிரண்டு சூத்திரம். குழவி – மெய்கண்டதேவர். மெய்கண்டதேவர் சிவஞானபோதச் சூத்திரஞ் செய்ததை இது கூறும்.

(67) ஞானமுனி – சிவஞானமுனி. இது சிவஞானமுனிவன் திராவிட மாபாடியஞ் செய்தது கூறும்.

(68) ஓர்பத்துச் செய்யதமிழ் – சகலகலாவல்லிமாலை. இது குமரகுருபர சுவாமிகள் நாமகள் அருளால் இந்துத்தானிப் பாடை கற்றுத் துருக்கரை வென்று சைவத்தை மெய்ப்பித்ததைக் கூறுவது.

(69) போற்றும் பொருட்டுறை – நாணிக்கண் புதைத்தலென்னும் துறை. இஃது அமிர்த கவிராயர் என்னும் புலவர் அரசவையில் நாணிக் கண்புதைத்தலென்னும் துறையை வைத்து அம்மையருளால் நானூறு கலித்துறை பாடியதைச் கூறுவது. ஒரு துறைக்கோவை என இந் நூல் வழங்கும்.

(70) இது சண்பகபுரத் தரசன்பேரில் வண்டுவிடு தூது பாடிச் சென்ற புலவனெருவனை ஆண்டிருந்த வித்துவான்கள் சண்பகமலரில் வண்டுவீழாது என்று தடுக்கப் புலவர் மீனுட்சி யம்மையைப் பாடிச் சண்பகமலரில் வண்டு வீழக் காட்டி நூல் அரங்கேற்றியதைக் கூறுவது. ஆறுகால் – வண்டு.

(71) சிவகலை – ஆகமங்கள்.

(73) வன்னம் – எழுத்து.

(74) அற்றம் – குற்றம்.

(77) கன்மாப்பலகை – சங்கப்பலகை.

(78) ஏழெழுவர் – சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர்.

(79) நூற் பிச்ச நிழல் – நூல்களாகிய பீலிக்குடை நிழல்.

(81) பூரணனர் – இளம்பூரணனர்.

(82) இச்சைப் பட்டார்க் கினியர் – நச்சினார்க்கினியர் இளம் பூரணர் நச்சினார்க்கினியர் சேனாவரையர் பேராசிரியர் என்போர் தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஆவர்.

(85) நன்நூல் நுணுகிடையார் – நல்லநூல்போலும் நுண்ணிடையார்; நன்னூல் என்னும் இலக்கண நூல். சிலேடை.

(86) பின்னூல் – வழிநூல்கள்.

(89) திங்கட் குடையான் – மன்மதன்.

(91) உது – அமுதைச் சுட்டி நின்றது.

(92) ஞானப்புவி – அறிவுலகம். 92 முதல் 104 வரையும் ஞானப் புவியின் தோற்றமும் விரிவும் கூறப்படும். குடிலை – சுத்தமாயை. மானம் – எல்லை. குடிலையைக் குளமாக உருவகித்தார், வட்டவடிவாதல் பற்றி. வட்ட வடிவாகிய குடிலையே ஞானப்புவிக்கு மூலாதாரம என்றவாறு.

(93) மருங்கு – பக்கம். மட்டு– தேன். மலர்க்காடு – சொல்லுலகம். மூலாதாரமாகிய குடிலையின்றும் எல்லாப் புவனங்களுக்கும் வேண்டிய சொல்லுலகம தோற்றும் என்றவாறு.

(94) வெட்டவெளி – குடிலை வெளி. வெண்டாமரை – பிரணவம். இது குடிலைவெளியிலிருந்து பிரணவம் தோன்றும் என்கின்றது.

(95) பிரணவமாகிய வெண்டாமரையிலிருந்து வேதமென்னும் உண்மை நூல்கள் அரும்பி அவற்றின் பொருள் நுட்பங்களாகிய ஆகமங்கள் விரிந்து சிவஞானபோதமென்னும் கலைஞான மணம்வீசி மெய்யுணர்வாகிய தாது சொரிந்திடும்.

(96) அந்த வெண்டாமரை தனது ஆயிரம் இதழ்களாலும் அறிவுத்தேனை ஒழுகச்செய்யும்.

(98) எழுகோடி மந்திரங்களுக்கும் பிரணவம் உற்பத்தி ஆதலின் வாசமணிப் பொகுட்டு மந்திரப்பொற்றெட்டில் எனறார்.

(99) வீழும் மொழி – விருப்பப்படும் ஒலி. முப்பானொருவர் – உயிரும் மெய்யும் ஆய்தமுமாகிய முப்பத்தோரெழுத்துக்கள். வன்னம் – எழுத்து. வடிவு – வரிவடிவு. இஃது எழுத்துக்களின் உற்பத்தி கூறியது.

(101) இது கலைகள் விரிந்தவாறு கூறியது.



(102–103) இவையிரண்டானும் ஆரியம் தமிழோடருகுறைந்தமை கூறப்பட்டது.

(107) பூரவாகினி – நாமகள்.

(109) பூவிற் பரதேசம் போவோர் – புரவலரைப் பாடிச் செல்லும் புலவர்கள்.

(113) கதுப்பு – கன்னம்.

(114) வறியவருக்கு இளமை வாடுதல்போல முகம்வாடி என்க.

(115) நோக்கு வருத்தஞ்செய்தலின் காலனை வென்றதென்றார். இவள் நோக்கை ஒவ்வாமையின் மான்கன்று அரன் கையிற் சரண் புக்கது. கலை – மான்கன்று. வேலை – கடல். கடல்போலுங் கரிய கண்கள். இது பண்புவமை.

(117) நஞ்சு கண்ணுக்கு ஒப்பாகாமையின் பயந்து அரனது கண்டத்தை அடைந்தது.

(118) அஞ்சம் – அன்னம்.

(119) சேல் – கயல்மீன். அவைகள் கண்ணது கவினுக்கு அஞ்சி அங்கயற்கண்ணியின் விழியை அடைந்தன.

(120) வேலெல்லாம் – வேலின் பண்புகளெல்லாம்.

(121) கோபம் – இந்திர கோபம். கோற்றேன் – கொம்புத்தேன். சாபம் – வில்லு.

(122) சான்றோன் மனம் கோள்கேட்டவழித் துடித்தல்போல இதழ் துடிக்க என்க. வீட்டுதல் – ஓட்டுதல்.

(124) பூவூர் இதழ் துடிப்ப – பூவின் தன்மையமைந்த இதழ்கள் துடிக்க.

(125) கற்புடையோரைத் தூற்றுங் கயவர் சீர்அழிதல்போல நலனெலாந் தொலைய என்றபடி. பொற்பும் நலனும் அழிய என உம்மை விரிக்க.

(128) குஞ்சித்து – வளைத்து.

(133) பாலன் குரல்கேட்டுப் பாற்கடல் ஈந்தது:– உபமன்னியு முனிவர் குழந்தையாயிருக்கும்போது தாய்ப்பாலில்லாது சருக்கரை கலந்த அரிசிமாவை ஊட்டி வளர்த்தாள். இப்படி வளரும்போது தாய் தனது சகோதரனை வசிட்டரிடஞ் சென்று ஓர் மாதமிருக்கையில், ஓமஞ் செய்து மிகுந்த காமதேனுவின் பாலை அருந்தநி கொடுப்பப் பெற்று ஊட்டிவந்தாள். வீடு சேர்ந்ததும் குழந்தை மாவை உண்ணுது பாலை நினைந்து அழுதது. தாய் பலவாறு தேற்றிக் காமதேனுவின்பால்

முந்திச்செய்த சிவபூசைப் பயனாற் கிடைக்கப்பெறுவது. அதை நாங்கள் எப்படிப் பெறலாம் என்று வருந்தக் குழந்தை தான் தவஞ்செய்து பெறுவேனென்று புறப்பட்டுச் சென்று சிவனை நோக்கிப் பூசை செய்து பாற்கடலைப் பெற்றது.

(135) தேம்பி அழுத சிறுவன் – திருஞானசம்பந்தர். இவ்வரலாற்றைப் பெரிய புராணத்தாலறிக.

(136) வான் உறங்கும் மேனி – மேகம் ஒவ்வாத துயரினாலே துயிலுதற்குக் காரணமான நீலமேனி.

(138) ஓர் மூன்று தேனு – முதல் இடை கடைச் சங்கங்களாகிய மூன்று காமதேனு.

(139–140) முதற் சங்கம் கபாடபுரத்திலும், இடைச் சங்கம் தென்மதுரையிலும், கடைச்சங்கம் கூடல்நகரிலும் நிறுவப்பெற்றது. சங்கத்தைத் தேனு என்றாராதலின், சங்கமிருந்த இடத்தைத் தொழு என்றார். பேற்றம் – பெற்றம். செய்யுளில் நீட்டல் விகாரம் பெற்று நின்றது.

(141) மதி என்னும் வயலிலே வல்ல நா என்னும் உழவாரத்தாற் செதுக்கியெடுத்த நூலென்னும் புல்லை ஊட்டி மிகவும் போற்றி வளர்த்தார்கள் என்க.

(142) அவ்வாறு வளர்க்கப்பட்ட தேனுவின் பாலை உனக்கு ஊட்டுவேம் என்றவாறு.

(143) திருத்தொண்டர் புராணமென்னும் கடலிலே சேக்கிழார் சுவாமிகள் அள்ளித்தந்த பாலமுதம் ஊட்டுவேம் என்றவாறு.

(144) கந்தன் கதை – கந்த புராணம்.

(145) புகழேந்தி வெண்பா – நளவெண்பா.

“ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.”

எனக் கம்பன் ஆசையோடு கூறிய காவியமாதலால் இராமாயணத்தை ஆசைக்கவி என்றார். செய்யுள்நெறி நான்கினுள் இதன்கண் அமைந்தது பெரும்பாலும் நாளிகேரபாக மாதலால் உடைத்துத் துருவி என்றார்.

(146) கூத்தன் – ஒட்டக்கூத்தன். உலாப்பாடுவதில் வல்லவன். அதிவீரன் – அதிவீரராம பாண்டியன். அவன் வார்த்தை – நைடதம், வெற்றிவேற்கை முதலியன. வாக்கி – வார்த்து.



(147) அல்லமன் காதை – பிரபுலிங்கலீலை. ஆக்கியோன் சிவப்பிரகாச சுவாமிகள். வில்லி – வில்லிபாரதம். தணிகை – தணிகைப் புராணம். வியன்கதை – கொங்குவேண்மாக்கதை.

(148) மெல்லிய பாகு அட்டு எடுத்து – பிழிந்து துருவிக் கூட்டி வடித்தெடுத்து ஊற்றி அளவி மெல்லியதொரு பாகு சமைத்து.

(150) நாசி – மூக்கு. மூக்காலும் நுனி நாக்காலும் பேசப்படும் இயற்கைக்கு மாறான ஒலிக்கூட்டங்களையுடைய ஆங்கில மொழியாகிய பெண்பேய் தீண்டிற்றோ என்றவாறு. அணங்கு – பெண்பேய்.

(151) சிங்களம் முதலாய அயல்நாட்டு மொழிகளும் உன்னோடொக்கும் பெருமையுடையன என்று அறிவிலிகள் அழிவழக்கு உரைத்தாரோ என்றவாறு.

(152) உன்னை முன்பு ஆதரித்த மக்களெல்லாரும் ஆங்கிலமென்னும் அந்த மோகினிப் பேயில் ஆசையுற்றுக் காது அரிக்கப் பேசி உன்னைச் சிறிதும் கடைக்கணியாது விட்டாரோ என்றவாறு.

(153) தமிழ் மன்னராண்ட சங்க காலத்திலும் அதன் பின்னும் எல்லாத் திசையிலும் பரந்த நினது நல்லிசை இந்நாளிற் கல்லார் மனம்போல இருள் வாய்ப் பட்டதோ என்றவாறு.

(154) இது மகமதியர் படையெழுச்சியில் நிகழ்ந்தன கூறிற்று. வாயில் மதநூல்–வாய்மையற்ற சமயநூலாகிய கோரான் என்னும்நூல். இந்நூலை ஓதாதவரை வாளுக்கு இரையாக்கிச் சைவத் தமிழ்நூல்களை எரித்தனர் என்க.

(155) தீயிலழிந்தனபோக அங்கங்கே புலவர்கள் சிலர் மறைத்து வைத்தவற்றைச் சிதலும் மண்ணும் உண்டனவோ என்றவாறு. சிதல் – கறையான்.

(156–157) சில மந்திர நூல்களும் வைத்திய நூல்களும் சோதிட நூல்களும் கணித நூல்களும் இசை நூல்களும் வைக்கோற் போரிற் கட்டப்பட்ட நாய்போலத் தாமுமறியாது மற்றோர்க்கும் உதவாத சில வஞ்சகர் கைப்பட்டு அழிந்த வரலாற்றை இரண்டு தாழிசைகளும் கூறும். ஞமலி – நாய்.

(158) மடங்களிலும் சந்நிதானங்களிலும் தமிழ் நூல்கள் சில போற்றுவாரின்றிச் சிதைந்தவகையை இதனாலுணர்த்தினர்.

(159) இது சிவஞான முனிவர் செய்த திராவிட மாபாடியத்தை ஆவடுதுறையார் பிறருக்குப் பயன்படாது பூட்டிவைத்ததை உணர்த்துவது.

(160) இது, தமிழ் வடமொழியினின்றும் பிறந்ததென்று கூறுவார் கூற்றை உணர்த்துவது.

(161) உள்ள பெயர் – தமிழ். ஊரார் பெயர் – திராவிடம் என்னும் வடமொழிப்பெயர் திரிந்து தமிழ் என வந்ததென்ப. கள்ளத் திருவாண்டு கட்டி மொழிதல் – இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் எழுந்த தொல்காப்பியத்தின் காலத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்னதெனவும் இன்னும் பலவாறும் தமிழின் தொன்மையைக் குறைத்துக் கூறுதல்.

(162) முடிமன்னர் காவலழிய அச்சம் மேற்பட்டது. அயற்பழி– அயன்மொழியாளர் கூறும் புறங்கூறல்.

(165–182) இத்தாழிசைகளால் ஏடுகளிலே சிதைந்துகிடந்த நூல்களை அச்சிற் பதிப்பித்துப் பாதுகாத்த திறம் கூறப்பட்டது. அங்ஙனம் பதிப்பித்தோர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, கலாநிதி, உ. வே. சாமிநாதையர், பாண்டித்துரைத்தேவர் நிறுவிய நான்காவது தமிழ்ச் சங்கத்தார் முதலியோரும் பிறருமாவர். பிடியாகி – ஒட்டி. ஆறுபேர் – சைவசித்தாந்த நூலாசிரியர்கள். ஈரேழ் அணி மணிகள் – பதினன்கு சைவசித்தாந்த சாத்திரங்கள். அறுவராலும் செய்யப்பட்ட பதினன்கு சாத்திரங்கள் என்க. நன்மந்திர மாலை – திருமந்திரமாகிய மாலை. செந்தாது – பொன்; செம்மையாகிய சொற்பகுதி. இரண்டிற்குஞ் சிலேடை. காவல் செய்தல் – பேய், பூதம், அவுணர், இராக்கதர் அணுகாது ஐயவியும் நெய்யுங் கலந்து புகைக்கச்செய்தல். ஐயவி – வெண்கடுகு.

(183) புலவர்களை ஆதரித்தமையும் நூல்பதிப்பித்தற்குப் பொருளுதவியமையும் தோன்றப் பாட்டுக்குப் பொன் சொரியும் என்றார். இவர் மதுரையில் இப்போதிருக்கும் நாலாஞ் சங்கத்தை நிறுவினர்.

(185) ஆரிய திராவிட சங்கம் அமைந்தமை கூறினர்.

(195) ஞான மணிமன்று – தில்லையம்பலம்.

இரத்தாட்சி ஆண்டு புரட்டாதித் திங்கள் விசயதசமிநாளில் இத்தாலாட்டுப் பாடப்பட்டது.

# 21. அம்மானை

சந்தப் பொதியமுனி தந்த தமிழ்த்தெய்வம்
வந்த பளிங்கு வடிவுடையா ளம்மானை
வந்த பளிங்கு வடிவுடையா ளாமாயின்
அந்தவந்த வன்னமெலா மாகுவளோ வம்மானை
அகரமுதல் வன்னமெலா மாகுவளே யம்மானை. 1.

வாய்ப்பான முச்சங்க வண்டமிழ்சொல் தேமொழியாள்
ஆப்பால் நிறமுடைய வாரணங்கா மம்மானை
ஆப்பால் நிறமுடைய வாரணங்கே யாமாயின்
ஆப்பாலி லேகருமை யடையாதோ வம்மானை
ஐம்பாலி லேகருமை யடையுங்கா ணம்மானை. 2.

ஆவிக் கமுதான செய்யதமி ழாரணங்கு
வாவிக் கமல மலர்முகத்த ளம்மானை
வாவிக் கமல மலர்முகத்த ளாமாயின்
காவி கமலத்திற் காணுமோ வம்மானை
கட்காவி கமலத்திற் காணுமே யம்மானை. 3.

கோல்வளையா மூவேந்தர் கொண்டதமிழ்த் தெய்வம்
வால்வளைபோற் கண்டம் மருவினு ளம்மானை
வால்வளைபோற் கண்டம் மருவினு ளாமாயின்
வால்வளைமுத் தீன்றக்கா லெங்குவைப்பா ளம்மானை
வைப்புத்துப் புச்செப்பில் வைத்திடுவா ளம்மானை. 4.

தண்டாத் தமிழருளுஞ் சங்கத் தமிழ்மாதா
வெண்டா மரைமேலே வீற்றிருப்பா ளம்மானை
வெண்டா மரைமேலே வீற்றிருப்பா ளாமாயின்
கொண்டாடு மன்னமெங்கே கோயில்கொள்ளு மம்மானை
கோலத் திருநடையிற் கோயில்கொள்ளு மம்மானை. 5.

எந்த மொழிக்கு மிறைவி தமிழ்மாதா
செந்திரு மாமியுடன் சேர்ந்திருக்கா ளம்மானை
செந்திரு மாமியுடன் சேர்ந்திருக்கா ளாமாயின்
வந்திரு வருங்கூடி வாழாரோ வம்மானை
வாழ்வ துலகில் வழக்கமில்லை யம்மானை 6.

முற்றாத தெய்வமொழி முச்சங்கச் சீமாட்டி
வற்றாது பால்சுரக்கும் வான்பசுக்கா ணம்மானை
வற்றாது பால்சுரக்கும் வான்பசுவே யாமாயின்
மற்றாரோ பால்கறந்து வைத்தார்கா ணம்மானை
வள்ளுவர்முப் பால்கறந்து வைத்தாரே யம்மானை. 7.

கொஞ்சும் மதுரமொழி கொண்டதமிழ்க் கோமாட்டி
வஞ்சிக் கொடியிடையாள் மான்பிணைகா ணம்மானை
வஞ்சிக் கொடியிடையாள் மான்பிணையே யாமாயின்
அஞ்சொற் கலையு மருளுவளோ வம்மானை
ஆறுபத்து நான்குகலை யருளினள்கா ணம்மானை. 8.

சீருயிர்க்குந் தென்றற் செழுஞ்சிலம்பிற் றேமொழியாள்
ஆருயிரை நல்கு மருமருந்தா மம்மானை
ஆருயிரை நல்கு மருமருந்தே யாமாயின்
ஆருயிரை நல்கி யருளினள்கா ணம்மானை
ஆயிரங் குந்தருயி ரருளினளே யம்மானை. 9.

சொல்லார்க்கு மஞ்சுகம்போற் றோகைமயிற் சுந்தரியாள்
எல்லர் மளிப்பா ளிரப்பவருக் கம்மானை
எல்லா மளிப்பா ளிரப்பவருக் காமாயின்
இல்லாமை யாற்கவிஞ ரேங்குவதே னம்மானை
ஏற்பதிழி வென்றவர்க ளிரவார்கா ணம்மானை 10.

குன்றிற் பிறந்ததமிழ்க் கோலக் கொடியிடையாள்
அன்றெரியின் மூழ்கிவிளை யாடினள்கா ணம்மானை
அன்றெரியின் மூழ்கிவிளை யாடினளே யாமாயின்
துன்றுசுடர் மேனியிலே சுட்டிலதோ வம்மானை
துட்டச் சமணர் நெஞ்சைச் சுட்டதுகா ணம்மானை. 11.



வீடுதவுஞ் செய்யதமிழ் மெய்ஞ்ஞான வேதவல்லி
ஏடின்மிசை நீரிலெதி ரேறினள்கா ணம்மானை
ஏடின்மிசை நீரிலெதி ரேறினளே யாமாயின்
ஏலாச் சமணரெங்கே யேறினர்கா ணம்மானை
எண்ணா யிரங்கழுவி லேறினர்கா ணம்மானை. 12.

ஏராருந் தென்ன னிருஞ்சிலம்பி லேபிறந்த
சீரார் தமிழ்மடந்தை சிற்றிடைச்சி யம்மானை
சீரார் தமிழ்மடந்தை சிற்றிடைச்சி யாமாயின்
ஆரார்க்குப் பாலுண்ண வருளினள்கா ணம்மானை
ஆருயிர்கட் கறிவின்பா லருளினள்கா ணம்மானை. 13.

தென்னன் மணிக்கூடல் சேருந் தமிழரசி
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யம்மானை
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யாமாயின்
என்னென்ன நூலிழைக ளீகுவா ளம்மானை
ஏராரு மோரைந் திழைதருவா ளம்மானை. 14.

## உரைவிளக்கம்

அம்மானையாவது மூன்று பெண்கள் கூடியிருந்து விளையாடுவதோர் விளையாட்டு. முதலாவது பெண் எடுத்துரைக்கும் பொருளில் இரண்டாவது பெண் வினா நிகழ்த்துவாள். மூன்றாவது பெண் அவ்வினாவிற்கு விடை கூறுவாள். இவ்வாறு உரையாடி விளையாடுவர். இதனை இந்நாட்டிற் "கொக்கான் வெட்டுதல்" என்பர். திருவாசகத்திலுஞ் சிலப்பதிகாரத்திலுங் கலம்பகங்களிலும் அம்மானைப் பாட்டுக்கள் காணப்படும். பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவம் ஓர் உறுப்பு.

(1) முதலாவது பெண் தமிழ்த்தெய்வம் பளிங்கு வடிவினள் என்று முதலிரண்டடிகளாலுங் கூறித் தனது அம்மானையை எறிந்து ஏந்துகிறாள்.

இரண்டாவது பெண் நாமகள் பளிங்கு வடிவினளாயின் எல்லா வன்னமுங் காட்டுவளோ என்று வினா நிகழ்த்தித் தனது அம்மானையை எறிந்து ஏந்துகிறாள்.

மூன்றாவது பெண் நாமகள் அகரமுதலாக வுள்ள எல்லாவன்னமுமாகுவாள் எனச் சிலேடைப் பொருளால் அவள் வினாவிற்கு விடைகூறித் தனது அம்மானையை எறிந்து ஏந்துகிறாள். வன்னம் – நிறத்திற்கும் எழுத்திற்கும் சிலேடை.

(2) முதலாவது பெண் நாமகள் பசுப்பால் போலும் வெண்ணிறமுடைய பெண்ணணங்கு என, மற்றவள் கூந்தல் கருமை நிறமுடையது உடம்பு வெண்ணிறமுடையது; எனவே பாலிலும் ஒருபகுதி கறுப்பாயிருக்கவேண்டும் அல்லதுஉவமையாகாதுஎன்பாள் 'ஆப்பாலிலே கருமையடையாதோ' எனவினாவெழுப்புகிறாள். மூன்றாவது பெண் அவள் கருத்துணர்ந்து ஆவென்பதை வியப்பிடைச் சொல்லாக்கிப் பால்–பகுதி என்னும் பொருளில்வரச் சிலேடையமைத்து ஐம்பாலிலே கருமையடையும் என விடைகூறுமுகத்தால் பாலிலே ஒருபகுதி கறுப்புத்தான் என்கிறாள்.

(3) முதலாவது பெண் தமிழணங்கு வாவியிற் பூத்த கமலமலர் போலும் முகத்தினையுடையாள் என, மற்றவள் நாமகளின் திருமுகத்திலே இரண்டு குவளைமலர்போலுந் திருவிழிகள் மலர்ந்துள்ளன. கமலமலர் முகத்திற்கு உவமையானால் அதிலே இரண்டு குவளைமலர்களும் பூத்திருக்க வேண்டும். இல்லையேல் உவமை பொருந்தாது என்பாள் 'காவி கமலத்திற் காணுமோ' என, வினா எழுப்புகிறாள். மூன்றாவது பெண் கமலம் என்னுஞ் சொல்லிற்குத் தண்ணீர் என்னும் பொருள் தோன்றக் 'கட்காவி கமலத்திற் காணுமே' எனக் கூறுமுகத்தாற் 'கண் போலுங் காவிமலர்கள் தாமரை மலரிலே பூத்திருக்க வேண்டியனவே' என விடைகூறுகிறாள்.

கட்காவி – கள்ளையுடைய காவிமலர்; கண்போலுங் காவிமலர்கள். கமலம் – நீர்; தாமரை. காவிமலர்கள் தாமரையிலே பூத்தல் இல்பொருளுவமை.

(4) முதலாம் பெண் தமிழ்த்தெய்வம் வெண்சங்கு போலுங் கண்டத்தினை உடையாள் என்கிறாள். இரண்டாவது பெண் அவ்வாறாயின் அந்த வெண்சங்கு முத்தீனுங் காலத்தில் அவள் அம்முத்தை எங்கே வைப்பாள் என வினாவுகிறாள். மூன்றாவது பெண், தனது வாயாகிய பவளச் செப்பினுள் வைப்பாள் என விடையிறுக்கிறாள்.

துப்புச் செப்பில் வைத்திடுவாள் என்றது, சங்கீனும் முத்தைப் பவளச் செப்பினுள் வைப்பாள் என்னும் விடையைத் தருதலோடு முறுவலாகிய முத்தையும் கலையுலகைச் சேமித்து வைத்த பவளம் போன்ற சிவந்த வாயினிடத்தே வைத்திருக்கிறாள் என்னும் பொருளையும் சிலேடையாற்றரும் என்க.

வைப்பு – சேமித்து வைத்தல். துப்பு – பவளம்; பவளம்போன்ற வாய். முத்து – சங்கீனும் முத்து; முறுவல்.



(5) முதலாம் பெண் தமிழ்த்தாய் வெண்டாமரைமேலே வீற்றிருப்பாள் என்கிறாள். இரண்டாம் பெண் அவ்வாறாயின் அவளது அன்னம் எங்கே உறையும் என வினாவுகிறாள். மூன்றாவது பெண் அது அவளது அழகிய நடையிலே கோயில் கொள்ளும் என்கிறாள். நாமகள் தாமரையிலுறையவே அவளது வாகனமாகிய அன்னம் அவளைவிட்டு நீங்காது நடையிலேயமைந்த அழகே கோலமாக உறைந்ததென்பதும், நாமகள் தாமரையைக் கோயிலாகக்கொள்ள அன்னம் அக்கோயிலின் நடைவாயிலில் எழுந்திருந்ததென்பதுஞ் சிலேடையாயமைந்த பொருள். சிவனுக்கு இடபமும், முருகனுக்கு மயிலும், திருமாலுக்குக் கருடனுங் கோயில் வாயிலிற் கொடிமரத்துக்குப்பக்கத்தில் வைக்கப்படுதல்போல அன்னமுந் தாமரைக் கோயிலின் வாயிலில் எழுந்திருந்ததென்க.

(6) முதலாவது பெண் தமிழ்த்தாய் தனது மாமியாராகிய திருமகளுடன் சேர்ந்திருக்காள் என்கிறாள். இரண்டாவது பெண் அவ்வாறாயின் இவ்வுலகிலும் இருவரும் கூடிவாழாரோ என வினாவுகிறாள். கல்வியுஞ் செல்வமுங் கூடியிராவோ? என்பது இவள் வினாவின் உட்கருத்து. மூன்றாவது பெண் மாமியும் மருகியும் மருவிவாழ்தல் உலக வழக்கிலில்லாத செயல் என்கிறாள். கல்வியுஞ் செல்வமும் கூடியிருப்பதரிது என்பது இவள் உட்கருத்து என்க.

(7) முதல்ாவது பெண் நமது சங்கச் சீமாட்டி வற்றாது பால் சுரக்குங் காமதேனு என்கிறாள். இரண்டாவது பெண் அவ்வாறாயின் அந்தக் காமதேனுவின் பாலைக் கறந்து வைத்தவர் யாரோ? என வினாவுகிறாள். மூன்றாவது பெண் பாலுக்குப் பகுதி என்னுஞ் சிலேடைதோன்ற வள்ளுவர் முப்பால் கறந்து வைத்தார் என்கிறாள்.

பால் – ஆவின்பால்; பகுதி.

(8) முதலாம் பெண் தமிழ்க் கோமாட்டி மான்பிணைகாண் என்கிறாள். இரண்டாம் பெண் அவள் மான்பிணையாயின் கலையை அருளுவளோ என்கிறாள். மூன்றாவது பெண் அறுபத்துநான்கு கலைகளை அருளினாள் காண்பாயாக என்கிறாள்.

கலை – ஆண் மானுக்கும் நூல்களுக்கும் சிலேடை.

(9) முதலாம் பெண் தென்றற் சிலம்பிற் பிறந்த நமது தேமொழியாள் உலகத்துயிர்களை அருள் செய்து காக்கும் அருளுடையாள் என்கிறாள். இரண்டாவது பெண் அத்தகையளாயின் அவள் யாருடைய உயிரைக் காத்தருளினாள் என வினாவுகிறாள். மூன்றாவது பெண் ஆயிரங் குந்தருயிரை அருளியுள்ளாள் என விடைகூறுகிறாள்.

ஆயிரஞ் செங்குந்தரது உயிரைக் காத்த வரலாற்றைக் குயிற் பத்து 6-ஆம் பாட்டின் உரையிலே கூறினாம்.

ஆருயிர் – அரிய உயிர்; யாருடைய உயிர் எனச் சிலேடை தரும்.

(10) முதலாம் பெண் கிளிமொழியும் மயிற்சாயலுமுடைய நம் அழகி இரப்பவர்க ளெல்லார்க்கும் ஈவாள்காண் என்கிறாள். இரண்டாம் பெண் அப்படியாயின் புலவர்கள் வறுமையால் ஏங்குவதேன்? என வினாவுகிறாள். மூன்றாவது பெண் அப்புலவர்கள் ஏற்பதிழிவு என்று இரத்தலைமேற்கொள்ளார்கள் அதுவே வறுமைக்குக் காரணம் என்கிறாள்.

(11) முதலாம் பெண் நமது கொடியிடையாள் எரியிடை மூழ்கி விளையாடினாள் என்கிறாள். இரண்டாவது பெண் அவ்வாறு விளையாடினாளாயின் தீச்சுடர் அவள் திருமேனியிலே சுட்டிலதோ என்கிறாள். மூன்றாவது பெண் அவளது விளையாட்டுத் துட்டச் சமணர் நெஞ்சிலே சுட்டது என்கிறாள்.

சிவபெருமானுக்குப் பாண்டியன் அடித்தஅடி அவருக்குப் படாது எல்லோர் முதுகிலும் பட்டவாறுபோல நாமகள் தீயிடை விளையாடியதும் அவளுக்குச் சுடாது துட்டச் சமணரைச் சுட்டெரித்தலாகிய திருவிளையாடலாக முடிந்தது என்க.

(12) முதலாவது பெண் நமது வேதவல்லி ஏட்டின்மேலேறியிருந்து ஆற்றி லெதிரேறி வந்தாள்காண் என்கிறாள். இரண்டாவது பெண் தமிழ்மகள் எதிரேறினளாயின் அதற்கு ஏலாத சமணர் எங்கே ஏறினர்? என வினாவுகிறாள். மூன்றாவது பெண் அச்சமணர் தமக்கு ஏலாத காரியத்தை விட்டு ஏற்ற காரியஞ் செய்வாராய் எண்ணாயிரங் கழுவில் ஏறினர்காண் என்கிறாள்.

நாமகள் நீரிலெதிரேறியதுபோலச் சமணருங் கழுவிலேறி எழுந்தருளினார்கள் எனச் சமணருக்கும் ஒரு வெற்றி கூறித் தனது விடையையும் வெற்றியாக முடிக்கும் மூன்றாமவளின் விடைநயமுணர்க. ஏட்டின்மிசை யெனற்பாலது ஏடின்மிசை யெனக் குறைந்து நின்றது.

(13) முதலாவது பெண் தமிழ்மகள் சின்னஞ் சிறுத்த இடையிணையுடையாள் என்கிறாள். சிற்றிடைச்சி என்பதைச் சிலேடையாகக் கொண்டு இரண்டாமவள் நாமகள் இடைச்சியாயின் ஆருக்குப் பால் உணவு கொடுத்தாள் என்கிறாள். மூன்றாமவள் பால் என்பதைப் பகுதி என்னும் பொருளிற்கொண்டு உயிர்களுக்கு அறிவின் பகுதிகளைக் கொடுத்தாள் என விடைகூறுகிறாள்.



(14) முதலாவது பெண் சின்னஞ் சிறுத்த இடையிணையுடைய தமிழரசி தூரத்திலிருப்பவள் என, இரண்டாவது பெண், சேணிச்சி– நெய்தற்றொழில் செய்பவள், எனப் பொருளமைத்துச் சேணிச்சியாயின் என்னென்ன வகையான நூலிழைகள் நூற்றுத் தருவாள் என வினாவுகிறாள். மூன்றாவது பெண் ஐம்பெருங்காப்பியங்களாகிய அணிகலன்களைத் தருவாள் என்னும் பொருள் தோன்ற ‘ஏராரு மோரைந் திழைதருவாள்’ என்கிறாள்.

சத்திய லோகத்திருப்பவ ளாதலிற் சேணிச்சி எனப்பட்டது. சேணிச்சி – தூரத்திருப்பவள்; நெய்தற்றொழில் செய்பவள். நூல் இழை – பஞ்சிலே நூற்ற நூலிழை; நூல்களாகிய அணிகலன்.

இது இரத்தாட்சி யாண்டு தைத்திங்களிற் பூசநாளிற் பாடப் பட்டது.

## 22. அலங்காரம்

**மா**சற்ற திங்கள் வதனமுஞ் சோதி வரிவிழியுந்
தேசுற்ற செம்பவ ளச்செப்பு ளொப்பில் திருநகையும்
பாசக் குலமறச் சென்னியிற் சூட்டும் பதவிணையு
மாசைப்பட் டேனன்னை யேயினிக் காட்டி யருளுதியே. 1.

**கா**ரஞ்சு கூந்தலுஞ் சேலஞ்சு கண்ணுங் கதிர்மதியின்
சீரஞ்சு நெற்றியும் வேயஞ்சு தோளுமென் றீயவினை
வேரஞ்ச வூன்றி மிதிக்குஞ் சரண விரைமலரு
மாரஞ் சிளநகையுங் கண்டுநீங்கினே னல்லல்களே. 2.

**நா**ட்கொண்ட சோதி மதிகய லெள்ளுநல் லாடிதுப்புத்
தாட்கொண்ட தாமரை மொட்டுத் தடித்துத் தனிக்கதலி
கேட்கின்ற வள்ளை கிளர்தளிர் காட்டிக் கிறிபறித்தே
ஆட்கொண்ட வம்மைக்கு மூவேழ் வழியு மடிமைகளே. 3.

**வ**ந்தாயென் னாவில் வதிந்தாய் பலமது ரக்கவிகள்
தந்தாய் தருகின் றனைதரு வாயுட லந்தளர்ந்து
நொந்தாலு முன்றன் றொழும்பு மறவேன் நுனிக்குநன் னூற்
சிந்தா மணியே யழியாத ஞானச் செழுஞ்சுடரே. 4.

கோடாத கல்விச் செழும்புனற் குட்டத்தி லேகுலவும்
வாடாத வெண்டா மரைமல ரேமல ரின்மணமே
ஓடாத ஞானக் கலைமதி யேயுற வேயுயிரே
பீடார் செழுந்தமிழ்த் தாயே யடைக்கலம் பேணுகவே. 5.

ஒன்றிற் படிக மணிமாலை யொன்றினி லேயுரைநூல்
வென்றிக் கரங்க ளிரண்டினில் மங்கல வீணையழ
கொன்றித் ததும்பி யொழுகு முகத்தி லுயர்கருணை
மன்றற் றிருவடிக் கேநாத நூபுர மன்னிடுமே. 6.

உள்ளத்தி லோரொளி தோன்றிடு முற்றுற்று நோக்கியக்கால்
வள்ளக் கமல முகமுங் குளிர்ந்த வரிவிழியும்
விள்ளக் குமுத விதழ்கள் விரிய விளங்குகின்ற
கள்ளத் திருநகை யுங்காட்டிப் பின்னர்க் கரந்திடுமே. 7.

சிந்திக்குங் காலை மணிமுடி வெற்றிச் சிலைகொணுதல்
பந்தத் திருக்கற நோக்குங் குவளை பவளவிதழ்
புந்திக்கு ளின்பம் பொலியுந் திருநகை பொன்னுருவங்
கந்தத் திருவடி தோன்றுமொவ் வொன்றாய்க் கதிர்விழிக்கே. 8

கண்ணிணை மூடிக் கருத்தை நிறுத்தக் கறையிருள்போய்
விண்ணிடை யன்னதொர் மின்னற் கொடியொன்று மேவும
றண்ணளி மாமதி தோன்றுமத் தண்மதி யூடிரண்டு [திற்
கண்ணிணை தோன்றச் சிறுநகை தோன்றிக் கரந்திடுமே.9.

தாவென் றிரந்து திருமுன்ன ரேதண்ட னிட்டுநின்றால்
வாவென் றழைத்து மடிமீ திருத்தி வருடியணைத்
தாவென்று வாயைத் திறவென்றஞ் ஞானப் பசியடங்கிப்
போவென்று புத்தமு தீவா ளருந்தமிழ்ப் பூங்கொடியே.10.

பாலைவென் றேபணிக் கும்மொழிக் கன்னி பசுந்தமிழ்ச்சொல்
நாலையன் றேயுயிர்க் கூட்டுந் துடியடி நுண்ணிடையாள்
வேலைவென் றேவிளங் கும்விழி சங்கணி மென்கரத்து
மாலையன் றேயுல கேழுக்கும் ஞானம் வழங்குவதே. 11.



பத்தகத் தேயுடை யார்தொழுந் தண்டமிழ்ப் பாவையுயிர்க்
கொத்தகத் தேயிருள் கூட்டுணுந் தெய்வக் குலவிளக்கம்
நத்தகத் தேயமு தாயொளிப் பாள்நளி னக்கரத்திற்
புத்தகத் தேபொரு ணூலும் பொருந்திப் பொலிகின்றவே.12.

அங்கோட்டுத் தென்னம் பொருப்பினிற் றோன்றி யகத்தி
தங்கோட்டந் தீர்க்கத் தமிழருள் செய்த தனிமுதல்வி [யனார்
பைங்கோட் டிளவே யிணைமலர்க் காந்தள் பயிலுகின்ற
செங்கோட் டியாழிலென் றேயிசை யேழுஞ் செனிக்கின்றவே.13

சொல்லப் பனைச்சிலைத் தோணியி லேற்றிவன் றாண்டனுக்காய்
நல்லப் பனைச்சந்து போக்கிய தண்டமிழ் ஞானவல்லி
கல்லப் பனுவற் கலைமதி மாமுகத் தேகனிந்த
செல்வச் சிரிப்பிலன் றேயுயி ரின்பஞ் செழிக்கின்றதே. 14.

நஞ்சுவெம் பும்படி வார்த்தை வழங்கிக்கைந் நாகமுடைந்
தஞ்சிவெம் பும்படி பார்த்தவள் தண்டமி ழாரணங்கு
வஞ்சிவெம் புந்தொடி நுண்ணிடை யாண்மலர்த் தாளணியுஞ்
செஞ்சிலம் போசையி லேசொல் லுலகஞ் செறிகின்றதே. 15.

ஆங்காரங் கோப மழுக்கா றவாவு மடக்கியுள்ளே
நீங்காது நின்ற கருணைப் பிராட்டிவெண் ணீற்றழகி
பூங்கா வனப்பொதி யப்பொருப் பாள்பொன் னடிப்பொலியு
மோங்கார நூபுரத் தேசொல் லுலக முதிக்கின்றதே. 16.

நேய மலிந்தவர் நெஞ்சகத் தாமரை மேனிமிர்ந்த
தூய சுடருரு வாய்நின்று பண்டு துடக்குமிருள்
ஓப வருளு முரைமகள் மேனி யுடையிலன்றே
ஆய கலைக ளறுபத்து நான்கு மமர்கின்றவே. 17.

புன்மாலை யாக்கைப் பிணியை யில்லாமையைப் போக்கியிசை
நன்மாலை சூட்டிடு செந்தமிழ் நாயகி நற்கழுத்திற்
பொன்மாலை முத்து மணிமாலை பூமலர் மாலையிலே
சொன்மாலை யாறிரண் டெட்டுமெந் நாளுந் துலங்கிடுமே. 18.

**கு**யிலாரு மென்மொழிக் கோவ்வைச்செவ் வாய்க்குங் குமக்கழைத்
மயிலாருஞ் சாயன் மதலை முதலை தரவழைத்த [தோள்
வெயிலாரும் மேனிவெண் டாமரை யாட்டி வியன்கருணை
அயிலாரு நாட்டங்க ளெண்ணு மெழுத்து மருள்கின்றவே. 19.

**ஓ**வாத முத்தமிழ்க் கற்பகத் தேசுவை யூறுசொற்பூ
நாவா லெடுத்தன்பு நாராற் றொடுத்த நறுந்தொடைகள்
மாவார மாயணி செந்தமிழ்ச் சுந்தரி வாய்மலரிற்
சாவாத மூவா மருந்து பொருந்தித் தழைக்கின்றதே. 20.

**மா**னடை கண்ணி மயிலடை சாயன் மலரிலனந்
தானடை தெய்வப் பிடிநடை யோட்டுந் தனிநடையிற்
றேனடை செந்தமிழ் நூனடை சீர்நடை சேர்ந்தியலும்
பாநடை நல்ல வுரைநடை யெல்லாம் பயில்கின்றவே. 21.

**ஒ**ல்காப் பெரும்புகழ்ப் பேராசிரிய னுரைவகுத்த
தொல்காப் பியப்பொருட் சூத்திரம் போற்சுருங் கும்மிடையாள்
பல்காப் பியப்பனு வற்பெரு மாட்டி பதவிணையே
எல்லா வுயிர்க்கு மறிவுக் கறிவா யிருப்பதுவே. 22.

**ஏ**ழொன்று பல்பிறப் புக்கு முடனு யிருந்தெனகக்
காழொன் றிருட்கங்குல் போக்கிடக் கல்வி விழிதிறந்து
வாழென்று வைப்பாள் முகத்துக்குத் தோற்று மறுகியன்றே
தாளொன்றி னின்று வனவாசஞ் செய்திடுந் தாமரையே.23.

**ம**ந்தர நட்டு மதித்துழி வந்த மறுதலைகள்
வந்து கலந்தன வாள்விழி நோக்கம் மனவிருளைச்
சிந்திய விந்துரு நாதச் சிலம்பணி சேவடிகள்
அந்தமி லாப்பர மானந்த வெள்ள மருள்கின்றவே. 24.

**அ**ம்மா தவச்சொல் லரசர்மெய் வாக்கி லமர்ந்திருந்து
வெம்மா சுணம்பற்று மப்பூதி மைந்தன் விடமகற்றி
மெய்வாழ் வருளிய வற்புதத் தால்வெண் கமலமலர்
அம்மா வுன்வாய் மொழிபுத் தமுதென்ப தறிந்தனமே.25.



**சீ**ருந் திருவு மறிவு முருவுந் திசைகளெட்டும்
பேரும் பெருநட்பும் வேண்டுதி ரேல்நன்று பேணுமினோ
நீரும் நெருப்பு மறியத் தன்னுண்மை நிறுத்திவைத்துப்
பாரும் விசும்பும் பணிக்கும் பசுந்தமிழ்ப் பாவையையே.26

**செ**ய்வினை தாக்குக துன்பந் தெறுக திருந்தலர்கள்
நைவினை யாற்றுக நாடலர் தூற்றுக நானசையேன்
பொய்வினை போக்கு முனதருள் நாவினிற் பொய்த்திடுமேல்
உய்வினை யில்லைப் பெருமாட்டி நாவி லுறைகுதியே. 27.

**பொ**ருளில்லை யேனும் புகழில்லை யேனுமெய்ப் போதமருள்
தெருளில்லை யேனும் வலியில்லை யேனுஞ் சிறிதுமஞ்சேன்
இருளல்லல் நீக்கி யெழுமையுங் காக்கு மிளங்கொடியே
அருளில்லையே லஞ்சுவெ னஞ்சிடா தென்னை யாண்டருளே.

**கோ**த்த வுடல நிலைதளர்ந் தாலுங் கொடும்பிணியா
லேத்து நியம நிலைதளர்ந் தாலு மெழுபிறப்பும்
பூத்துள் ளிருந்து பயனருள் ஞானப் பொலங்கொடியே
நாத்தள ராவரந் தாதமிழ் பாடி நலம்பெறவே. 29.

**பூ**வில் வறுமை வரினும் பொல்லாத பிணிவரினும்
மேவு முடலந் தளரினும் வேறு துயர்மிகினும்
ஆவி தழைக்க வருளு மமுதத் தமிழணங்கே
பாவில் வறுமை மருவாத திருவருள் பாலிப்பையே. 30.

**அ**ழியாத செல்வ மவியாத ஞான மணிவிளக்கம்
ஒழியா தெழுபிறப் புந்தொடர் வைப்புயிர்க் குற்றதுணை
கழியாப் பிறவி கழிய வருந்துங் கலைமருந்து
சுழியாக் கடலமு தெந்தமை யாள்தமிழ்ச் சுந்தரியே. 31.

# உரைவிளக்கம்

நாமகளின் அழகினைக் கூறுவது அலங்காரம்.

(1) மாசு அற்ற திங்கள் – களங்கமில்லாத சந்திரன். வரி - செவ்வரி. தேசு – ஒளி. பவளச் செப்பு – பவளம்போன்ற வாய்.

(2) தீயவினை அதன் வேராகிய ஆணவ மலத்தோடுமஞ்ச மிதிக்குந் திருவடிகள் என்க. ஆணவமலத்தின் வலி கெடுத்தலின் ஊன்றி மிதிக்கும் என்றார். ஆர் – முத்து. ஆரம் எனற்பாலது ஆர் எனக் குறைந்து நின்றது.

(3) நாட்கொண்ட சோதிமதி – பதினாறு நாளும் நிரம்பிய முழுமதிபோலும் முகம். கயல் – கயல்போலுங் கண்கள். எள்ளு – எள்ளுப் பூப்போலும் மூக்கு. ஆடி – கண்ணாடிபோலுங் கன்னங்கள். துப்பு – பவளம்போலும் வாய். தாமரை – தாமரை மொட்டுப்போலுந் தனங்கள். தடித்து – மின்னல்போலும் இடை. தனிக்கதலி – ஒப்பற்ற கதலிபோலுந் தொடைகள். கேட்கின்ற வள்ளை – வள்ளை போலுங் காதுகள். கிளர் தளிர் – தளிர் போன்ற மேனி. கிறி – பொய். ஈண்டுப் பொய்ம்மாய வாழ்வைக் குறித்தது. மூவேழ்வழி – இருபத்தொரு தலைமுறை.

(4) நுனித்தல் – உற்றாராய்தல். புலவோர்களால் ஆராயப்பட்ட நல்ல நூல்களை அணிகலனாகவுடைய சிந்தாமணி போன்றவளே என்றபடி.

(5) குட்டம் – குளம். பீடு – பெருமை.

(6) மன்றல் – வாசனை. நாதம் – ஒலி. நூபுரம் – சிலம்பு.

(7) அருள்செய்தற்கு நாமகளின் திருவுருவந் தோன்றி மறையும் அதிசயத்தைக் கூறுகின்றது இது. விள்ள – மலர. முகமும் விழிகளும் மலரக் குமுதவிதழ்கள் விரியத் திருநகையுங் காட்டிக் கரந்திடும் என்க. தன்னுள்ளத்தைக் கொள்ளைகொள்ளலிற் கள்ளத்திருநகை என்றார்.

(8) நாமகளின் திருவுருவந் தோன்றுமதிசயத்தை மேலே கூறியமையாது பின்னுங் கூறுகின்றார்.

(9) இதுவுமது.



(10) இதனாலே நாமகள் தமக்கு மெய்ஞ்ஞான வமுதூட்டியமை கூறுகின்றார்.

(11) தமிழ், படைப்புக்காலத்துத் தோன்றிய மொழியாதலின் 'பசுந்தமிழ்ச் சொன்னாலே அன்றே உயிர்க்கூட்டும்' என்றார். துடியடி நுண்ணிடையாள் – உடுக்கையை அடித்து ஒதுக்கிய நுணுகிய இடையையுடையாள். ஏழு உலகிற்கும் ஞானநிலையை வழங்குவது நாமகளின் திருக்கரத்திலுள்ள மந்திரமணிமாலை யென்பது இதனாற் கூறப்பட்டது.

(12) பத்து – அன்பு. உயிர்க்கு ஒத்து அகத்தே இருள் கூட்டுணுந் தெய்வக் குலவிளக்கம் – உயிர்களொடு பொருந்தி உள்ளத்தே யமைந்து ஆணவமலவிருளை உண்ணுகின்ற தெய்வப்பேரொளி விளக்கம். நத்து அகம் – விரும்பித் தொழுவார் உள்ளம். நளினம் – தாமரை. நாமகளின் திருக்கரத்திற் பொலிகின்ற புத்தகத்திலே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களும் பொருந்தி உள்ளன என்பது இதனாற் கூறப்பட்டது.

(13) அங்கோட்டுத் தென்னம் பொருப்பு – அழகிய சிகரங்களை உடைய பொதியமலை. அகத்தியனார் தங்கோட்டம் – வடமொழிப் புலவர்களோடு புலந்து நின்ற அகத்தியனாரின் மனக்கோட்டம். வேய் – மூங்கில் போலுந் தோள். காந்தள் – காந்தள் போலுங் கைவிரல்கள். தோளின்மேற் சார்த்தப்பட்டுக் காந்தள் போலுங் கைவிரல்களாற் பயிலப்படும் யாழ் என்க. செங்கோட்டியாழ் – நால்வகை யாழிலொன்று. நாமகளின் யாழிலிருந்து இசைத்தமிழ் தோன்றியதென்பது இதனாற் கூறப்பட்டது.

(14) சொல் அப்பன் – நாவுக்கரசாகிய அப்பர் சுவாமிகள். சிலைத் தோணி – கல்லாகிய மரக்கலம். வன்றொண்டன் – சுந்தரமூர்த்தி சுவாமிகள். சிலைத்தோணியி லேற்றியதுந் தூது போக்கியதுமாகிய வரலாறுகளைப் பெரியபுராணத்தாலறிக. நல் அப்பன் – சிவபெருமான். சந்து – தூது. தண்டமிழ் ஞானவல்லி – தண்டமிழ்த் தெய்வமாகிய ஞானக்கொழுந்தினது. அப் பனுவற்கலை கல்லும் மாமதி முகத்தே கனிந்த – அந்த ஞான நூற்கலையைச் சொல்லுகின்ற முழுமதிபோன்ற திருமுகத்திலே கனிந்திருக்கும். செல்வச் சிரிப்பில் உயிரின்பஞ் செழிக்கின்றதே – புன்முறுவலிலே உயிர்களது பேரின்பம் பொலிகின்றது. சிவத்தினது திருவருட் சத்தியினாலே உயிர்களிடத்து ஞானவுணர்ச்சி தோன்றும். அந்த ஞானக்கலைக்குத் தெய்வம் 'தண்டமிழ் ஞானவல்லி' யாகிய கலைமகள். அவளது திருமுகம் ஞானக்கலையை உயிர்களுக்கருளும் அருள்நோக்கமும் புன்முறுவலும் பூத்துக் கனிந்திருக்கும். அம்முகமதி மண்டிலத்தைத் தியானத்திருத்தி நோக்க,

அது, ஞானக்கலையை அருளிச்செய்யும், இதனை, ‘அப்பனுவற் கலை கல்லும் மாமதி முகத்தே கனிந்த செல்வச் சிரிப்பிலன்றே உயிர் இன்பஞ் செழிக்கின்றது.’ என மிகநுட்பமாக ஆசிரியர் சொல்லுகின்றார். கல்லும் – சொல்லும்.

(15) நஞ்சுவெம்பும்படி வார்த்தை வழங்கியது :- திருநாவுக்கரசு நாயனார் ஒருமுறை அப்பூதியடிகளின் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அப்பூதியடிகள் நாயனாருக்கு அமுது படைத்தல் வேண்டித் தமது பிள்ளைகளில் மூத்த திருநாவுக்கரசை வாழைக்குருத்துக் கொணருமாறு தோட்டத்திற்கு விடுத்தார். அவர் இலை கொய்கையிற் பாம்பு தீண்டப்பெற்றார். ஆயினுஞ் சுவமிகளுக்கு அமுது கொடுக்க வேண்டுமென்னுமாசையால் விடமேறுமுன்னாக ஓடிவந்து இலையை வீட்டிற் போட்டு விழுந்தனர். இதையறிந்தால் நாயனார் அமுது கொள்ளாரென எண்ணிய அப்பூதியடிகள் இறந்த உடலத்தை மறைத்து வைத்துவிட்டு, நாயனாரை அமுதுசெய்தருளுமாறு வேண்டினர். நாயனார் அங்கே நடந்தவற்றைத் திருவருளாலறிந்து இறந்த உடலத்தைச் சிவாலயத்துக்குக் கொணர்வித்து “ஒன்று கொலா மவர்” என்னும் திருப்பதிகம்பாடிப் பிள்ளையை உயிர்ப்பித்தனர் என்றவாறு.

கைந்நாகம் – யானை. கைந்நாகமுடைந்து அஞ்சி வெம்பும்படி பார்த்தது :- திருநாவுக்கரசு நாயனாரைக் கொல்லுமாறு சமணாகிய பல்லவ அரசன் யானையை விடுப்ப, நாயனார் “சுண்ணவெண் சந்தனச் சாந்தும்” என்னுந் திருப்பதிகமோதி யானையை அஞ்சியோடச் செய்தனர் என்பது. வஞ்சி வெம்புந் துடி நுண்ணிடையாள் – வஞ்சிக்கொடி ஒப்பாகாமைக் கிரங்கி வெதும்புதற்குக் காரணமான உடுக்கை போலும் நுண்ணிய இடையை உடையவள். நாமகளின் திருவடிச் சிலம்பினின்றும் எல்லாவோசைகட்கும் மூலமாய் இயற்கையாய் நிற்கும் ஓங்கார வோசை கேட்கப்படுதலிற் ‘செஞ்சிலம் போசையிலே சொல்லுலகஞ் செறிகின்ற’ தென்றார். ஓங்கார வோசையாவது அ, உ, ம் என்னும் மூவோசைகளை அடக்கிய “ஓம்” என்னும் பிரணவ நாதம். ஒருவன் மூடியிருந்த வாயைத் திறக்கும்போது அகரவோசை பிறக்கின்றது. அத்திறந்த இதழ்கள் சிறிது குவிய உகரம் பிறக்கின்றது. வாயை முழுவதும் மூட மகரமெய் பிறக்கின்றது. இவற்றிலிருந்து எழுத்துக்களெல்லாம் முயற்சி வேறுபாட்டாற் பலவாக விரிகின்றன. விரிந்த அவ்வெழுத்துக்களினாலே சொல்லுலகம் அமைக்கப்படுகின்றது. இவ்வாறு ஓங்கார ஓசையினின்றுஞ் சொல்லுலகந் தோன்றுமென்க. அதன் விரிவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

(16) “கண்ணிணை மூடிக் கருத்தை நிறுத்தித்” தியானிக்கும்



ஆசிரியருக்குச் செஞ்சிலம்போசை கழிபேரின்பந் தருதலினாலே இப்பாட்டிலும் அதனையே சொல்லி யின்புறுகின்றார்.

(17) நேயம் – உள்ளன்பு. தூய சுடர் உரு – தூய்மை பொருந்திய ஞானசூரிய வடிவம். பண்டு துடக்குமிருள் – அநாதியே தொடர்ந்த ஆணவமலவிருள். ஓய – ஆணவமலவிருள் தன் வலி கெட்டு அடங்க. நாமகள் உடுத்திருக்கும் வெண்பட்டாடையிலே அறுபத்துநான்கு கலைகளும் அமர்கின்றன என்றவாறு.

(18) புன்மாலை – ஆன்ம அறிவை மறைக்கும் மயக்கத்தை. யாக்கைப் பிணியை – உடற் பிணியை. இல்லாமையை – வறுமையை. உயிர்ப்பிணியாகிய மயக்கத்தையும், உடற்பிணியாகிய நோயையும், வறுமையையும் போக்கிப் புகழாகிய நல்ல மாலையைத் தந்த நாயகி என்க. சொன்மாலை ஆறிரண்டெட்டு – தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள். நாமகளின் கழுத்திலுள்ள பொன்மாலை, முத்து மணிமாலை, பூமாலைகளிலே தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுந் துலங்குகின்றன என்க. என்றது; செந்தமிழ்ப் புலவர்கள் பல்லோராலே பாடியணியப்பட்ட பிரபந்தங்கள் பல தமிழில் உள. அவை உள்ளமுருகிய மெய்யன்போடும் பாடப்பட்டனவாதலின் என்றைக்கும் அழியாதன. அவை யெல்லாம் அவ்வப் புலவோர்களால் நாமகளின் திருக்கழுத்திற்கு அணிகலனாக அணியப்பட்டனவாதலின், ஏனைய மாலைகளின் மேலே எப்பொழுதும் விளங்கித் தெரியுமென்றவாறு. இவ்வாறு பலவேறு மாலைகளையெல்லாம் புனைந்துள்ள நாமகள் தனது மெய்யடியாராகிய ஆசிரியருக்கும் ஒரு மாலை சூட்டுகிறாள் அது இசைநன் மாலை என்க.

(19) மதலை முதலை தரவழைத்த வரலாறு:- சுந்தரமூர்த்திநாயனார் சேரமானைக்காணச் செல்லும்போது ஒரு வீட்டில் மங்கலமும் ஒரு வீட்டில், அமங்கலமும் கண்டு ஈதென்னையோவென, அவர்கள் ஐந்து வயதான இரு சிறுவர்கள் ஏரிக்குச் செல்ல ஒருவனை முதலையுண்டது. ஒருவன் பிழைத்து வந்தான். இறந்தவன் வீட்டில் அழுகை கேட்கிறது. மற்றவனுக்கு இன்று உபநயனம் நடக்கின்றது என்றார்கள். நாயனார் அவர்களோடு ஏரிக்கரையை அடைந்து திருப்பதிகமோதி முதலையுண்ட பிள்ளையை அழைத்துப் பிள்ளைக்கு உபநயனமுஞ் செய்வித்தார் என்பது. குயில்போலும் இனிய மொழியும், கொவ்வைக்கனி போலுஞ் சிவந்த வாயும், குங்கும மணிந்த மூங்கில் போலுந் தோள்களும், மயில்போலுஞ் சாயலும், வெயில் போலும் மேனியும், உடைய வெண்டாமரை யாட்டி. மதலை முதலை தரவழைத்த வெண்டாமரை யாட்டி. எனக்கூட்டி யுரைக்க. வியன் கருணை – பரந்த கருணை. வெண்டாமரையாளின் இரண்டு திருவிழிகளும் எண்ணையும் எழுத்தையும் அருளுகின்றன என்றவாறு. எனவே, உலகிற்கும் அவை கண்ணெனத் தரும் என்க.

(20) ஓவாத – கொடுத்தல் ஒழியாத- முத்தமிழாகிய கற்பகதரு விலே சொற்களாகிய பூக்களை நாவாகிய கையாலெடுத்து அன்பாகிய நாரினாற் றொடுத்த நறுமணங்கமழும் மாலைகளை மேலான அணிகல னாக அணிந்த செந்தமிழ்ச் சுந்தரியின் திருவதரத்திலே இறவாமை யையும், மூவாமையையுந் தரும் அமுத சஞ்சீவி பொருந்தித் ததைக்கின்றதுஎன்க.

(21) மருண்ட நோக்கம் பயிலுதற்கு மான்கள் சென்றடைதற் கேதுவாகிய கண்களையும், மென்மைத்தன்மை பயிலுதற்கு மயில்கள் சென்றடைதற்கேதுவாகிய சாயலினையும் உடைய கலைமகளது தனி நடைஎன்க. சாயல் – மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம் பொறியானும் நுகரப்படும் மென்மை. மலரிலனந் தான் அடை தெய் வப் பிடி நடை ஓட்டுந் தனிநடை – மலரிலிருந்து விளையாடும் அன் னம் நடைபயிலு மெண்ணத்தாற் றானே சென்றடைதற்குக் காரண மான, தெய்வயானையின் நடையை வென்று துரத்திய ஒப்பற்ற தனிச் சிறப்புடைய அழகு நடை. தேன் அடை செந்தமிழ் – தேன் இனிமை பயிலுதற்குச் சென்றடைதற்கேதுவாகிய செந்தமிழ். நூல் நடை – நூல் நடக்கு முறைமை. சீர்நடை சேர்ந்தியலும் பாநடை – சீர்கள் சேர்ந்து நடக்கும் பாமுறைகள். நல்ல உரைநடை – நல்ல உரைநடை முறைகள். நாமகளது தனிநடையிலே நூல்நடை பாநடை உரைநடைகள் எல்லாந் தத்தமக்குரிய நடைமுறைகளைப் பயிலுகின்றன என்க.

(22) ஒல்காப் பெரும் புகழ் – குறையாத பெரிய புகழ். பேரா சிரியராலே உரைவகுக்கப்பட்ட தொல்காப்பியச் சூத்திரங்கள் போலச் சுருங்கிய இடையை உடையவள் என்க. நாமகளது திருவடிகள் எல்லாவுயிர்களுக்கும் இயல்பாகவுள்ள சிற்றறிவை விளக்கும் மெய் யறிவாமென்க.

(23) காழ் – குற்றம். காழ் ஒன்று அக இருட் கங்குல் – குற் றம் மலிந்த மன இருளாகிய பேரிருள். மறுகுதல் – மனங் குழம்பு தல். வனம் – நீர். கலைவாணியின் முகத்துக்குத் தோற்று மனங் குழம்பிய தாமரை நீர் நிலையிலே ஒரு தாளிலே நின்று தவஞ் செய் கின்றது என்றவாறு.

(24) மதித்தல் – கடைதல். மறுதலைகள் – ஒன்றற் கொன்று மாறு பாடாயுள்ளன. அவை நஞ்சும் அமுதுமென்க. அமுது வெள்ளை விழிக்கும் நஞ்சு கருவிழிக்கும் உவமம். விந்துருநாதச் சிலம்பு – விந்து வினது வட்ட வடிவத்தையும் பிரணவ நாதமாகியஇயற்கை யொலியை யுமுடைய சிலம்பு. சேவடிகள் சிவஞானத்தை அருளுதலினாலே பேரின் பந் தருவன வென்க.



(25) மாதவச்சொல் அரசர் – திருநாவுக் கரசுநாயனார். திரு நாவுக்கரசு நாயனார் அப்பூதியடிகளின் மைந்தனது விடத்தை அகற் றிய வரலாறு இவ்வலங்காரத்துப் பதினைந்தாஞ் செய்யுளிற் கூறப் பட்டுள்ளது.

(26) நீரும் நெருப்புமறியத் தன் உண்மை நிறுத்திவைத்தது:- திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டியன் முன்னிலையிற் றிருப்பதிக மெழுதிய திருவேட்டை வைகையாற்றிலும் நெருப்பிலும் இட்டு எடுத் துச் சமணரை வாதில் வென்று சைவத்தை நிறுத்தி வைத்தது.

(27) செய்வினை - பல பிறப்புக்களிலுஞ் செய்த இருவினைகள். தெறுதல் – அழித்தல். திருந்தலர் – பகைவர். உலக போகங்களை ஒறுத்துச் சிவபோகத்தை விரும்பிக் கலைவாணியை இடையறாது வழி படுதல் கண்டு ஊரலருண்டாயது.

28, 29, 30, 31 ஆம் செய்யுள்களின் பொருள் வெளிப்படை.

# 23. இழந்தவை கொண்டு வளம்பெற வாழ்வோம்

தேனினும் பாலினுந் தெள்ளிய வமுதினும்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அந்தமில் பெருமையும் அருமையுங் கெழுமிய
செந்தமிழ் நாட்டுச் சீரிய மக்காள் !
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றிடுங் கட்டுரை போற்றிக் கேண்மின் !!
முந்திய வினைதவிர் முதல்வன தருளாற்
சந்தனப் பொதியினில் வந்தவ தரித்து
மாதவ முனிவன் மடிமிசைக் கிடந்து
தீதறு புலவர் நாவினி லாடித்
தீட்டிய செந்தமிழ் ஏட்டினிற் றவழ்ந்து
சான்றோ ருள்ளத் தளர்நடை பழகித்
தேன்றோய் நாவிற் செழுமொழி யொழுக்கி
மணிதிகழ் செம்பொன் மாடக் கூடல்
அணிதிகழ் சங்கத் தரியணை யேறி
முடியுடை வேந்தர் அடியுறை பயிலக்

குறுநில மன்னர் சிறுதொழில் புரிய
வளமலி தெய்வத் தமிழக மன்றியும்
இமயமும் புறமும் திகிரிசென் றுலாவ
ஆரிய மாதி யயன்மொழி மடவார்
சீரிய பணிவொடு சேவடி பரவ
முழுதர சாண்ட முத்தமிழ்ச் செல்வி
இளமையும் இனிமையும் வளமையும் புதுமையும்
பழைமையுங் கெழுமிய பைந்தமிழ்ப் பிராட்டி
ஐயிரு திங்கள் அகட்டில்வை யாதெமை
வையகத் தீன்ற வண்டமிழ் மாதா
நாப்புடை பெயர நாவில மசைத்த
காப்புடை வாழ்க்கைக் கலைப்பெரு மாட்டி
தொன்மை நலமிழந் தின்மைமீக் கூர
வாடிய முகத்தினள் மறுகிய மனத்தினள்
ஊடிய வுளத்தினள் ஒருபுடை யொதுங்கிக்
கண்ணீர் வடித்துக் கலங்கின ளிருப்ப
நாங்கள்,
இன்னுயி ரன்ன அன்னையை மறந்து
நாசித் துளையிலும் நாக்கு நுனியிலும்
பேசி மயக்கும் பெண்களை விரும்பி
அவர்தம்,
வேல்விழி யுருட்டிலும் வெளிப்புற மருட்டினும்
மேனடைக் குலுக்கிலும் மேனி மினுக்கினும்
அழிபொருட் பெருக்கினும் ஐயகோ வழுந்தி
வழிவழி சான்றோர் வளர்தொடு சிறந்த
சாதியும் விட்டோம் சமயமுங் கெட்டோம்
மானமு மழிந்தோம் வலிமையு மிழந்தோம்
வாய்மொழி துறந்தோம் வரைவது மறந்தோம்
ஊனுடை திரிந்தோம் உடனலம் பிரிந்தோம்
பல்லோர் நகைக்கப் பயனில புரியும்
பொல்லா மாந்த ரெம்மினு முளரோ?
மாதா வருந்த மாநிதி வழங்கிக்
கோதா வஞ்செய் கொடுமைய ரானோர்;
வாய்மொழி யமுதம் வார்த்தெமை வளர்த்த



தாயவள் வருந்துதல் தகுமோ! தகுமோ!!
பெற்றவ ளிருக்கப் பிறர்தமைப் பேணியன்
பற்றவ ராகுத லறமோ! வறமோ!!
பீடுடை யன்னை பெருந்துயர் கண்டும்
மூடரின் மறத்தல் முறையோ! முறையோ!!
போதனை தந்தெமைப் போற்றி வளர்த்தவள்
வேதனைப் படுதல் விதியோ! விதியோ!!
போனது போக மேனெறி யுரைப்பென்
விழிமின் விழிமின் எழுமின் எழுமின்
நாடுமின் ஒருங்கு கூடுமின் கூடி
எழுமையுந் தொடரும் விழுமிய வன்புடன்
எம்மை வளர்க்கும் அம்மையைத் தூக்கிக்
கண்ணீர் துடைத்துக் கதிர்முகந் திருத்தி
அன்புநீ ராட்டி வெண்கலை புனைந்து
பொய்யா நெஞ்சப் பொற்பெருங் கோயிற்
றொல்காப் பியமெனுஞ் சுடர்த்தவி சிருத்தி
வள்ளுவர் முப்பால் மணிமுடி சூடித்
தெள்ளிய வாரமுந் திருமணிக் கோவையும்
வளையுங் குழையு மணிமே கலையுஞ்
சேரன் சிலம்புந் திருமணி யிரண்டும்
பத்தும் எட்டும் பற்பல மாலையும்
விதமுற வணிந்து புதுமயல் நீக்கும்
ஞான விளக்கம் நயம்பெறக் காட்டித்
தேனுறு கவிச்சுவைத் தெள்ளமு தருத்தி
வலமுறை மும்முறை வந்து முறைமுறை
செய்பிழை பொறுக்குந் திருவே போற்றி
உய்வரு ளுள்ளத் தொளியே போற்றி
நாமிசை மேவிய நங்காய் போற்றி
பூமிசை விளங்கும் பொற்கொடி போற்றி
அறமுதல் நான்கும் அருள்வாய் போற்றி
மறுவறு பொன்னே மணியே போற்றி
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளகத் தினிக்கும்
தெள்ளிய தேறலின் தெளிவே போற்றி
அன்னாய் போற்றி யரசீ போற்றியென்

றன்னவள் தாமரை யடிமுடிச் சூடிப்
பல்லாண் டிசைத்துப் பரவுதும் வம்மின்
எல்லாத் துன்பமு மிருளொடு நீக்கி
இழந்தவை யாவையு மெய்தி
வளம்பெற விருமையும் வாழ்வுறற் பொருட்டே.

## உரைவிளக்கம்

கெழுமிய — பொருந்திய. கடிப்பாக — பறையடிக்குங் குறுங் தடியாக. தீதறு புலவர் நாவினில் ஆடி — குற்றந் தீர்ந்த கம்பர், காளமேகம், சயங்கொண்டான், சேக்கிழார் முதலாய புலவர்களது நாவாகிய தொட்டிலில் ஊசலாடி. செந்தமிழ் தீட்டிய ஏட்டினிற் றவழ்ந்து — அறமுதனாற் பொருள்களையுஞ் சொல்லுகின்ற செந்தமிழ் எழுதிய ஏடுகளிலே தவழ்ந்து. சான்றோர் உள்ளத் தளர்நடை பழகி — சான்றாண்மை என்னும் உயர்குணத்தை அணிகலனாகப் பூண்ட பெரியோர்களது நெஞ்சமாகிய முற்றத்திலே சிறுநடை பழகி. தேன்தோய் நாவிற் செழுமொழி யொழுக்கி — இறைவனது ஆயிரந்திருநாமங்களையும் இடையறாது உச்சரித்தலினாலே இனிமை தோய்ந்த சிவனடியார்களது நாவினிலே செழுமை கனிந்த தேவார திருவாசகங்களாகிய மந்திர மொழிகளை இயல்பாகவே ஒழுகச் செய்து. தேன் — இனிமை. சிறுதொழில் — குற்றேவல். நெருப்பிலே சூடுபோலத் தெய்வத்தோடு கலந்தமொழி தமிழ் ஆதலின் தெய்வத் தமிழகமென்றார்.

நாப்புடைபெயர நானில மசைத்த காப்புடை வாழ்க்கைக் கலைப் பெருமாட்டி — சொல்லுதற்குன்னி நாவசையுமளவிலே உலகினை நடுங்கச்செய்யும் ஆணைமொழியாகிய காவல் அமைந்த வாழ்க்கையினை உடைய கலைச்செல்வி. சிவனடியார்களும் மெய்ப்புலவர்களும் வாய்மை மன்னர்களும் கற்பரசிகளும் தமது ஆணைமொழியால் மூவுலகையும் நடுங்கச்செய்த வரலாறுகளையெல்லாம் ஈண்டுப்பொருத்தி உணர்ந்துகொள்க. நாசித்துளையிலும் நாக்கு நுனியிலும் பேசி மயக்கும் பெண்கள் — ஆங்கிலம் இலத்தீன் முதலிய மொழியணங்குகள். ஆங்கிலக்கல்வி பொருளழிவையும் மயக்கத்தையும் தந்து சாதி தருமத்தையுஞ் சமயவுணர்வையும் அழித்து மானம் வலிமை தூய்மை வாய்மை ஆதியவற்றை மறப்பித்து உணவு உடைகளை வேறுபடுத்தி உடல் நலத்தை நீக்கித் தமிழரை நகைத்தற்கிடமாக்கிய கீழ்மையை நாக்கடிப்பாக வாய்ப்பறையறையும் ஆசிரியர் பலவகையாயும் இடித்துரைக்கின்றார். ஞானவிளக்கம் — சிவஞானபோதம் ஞானாமிர்தம் முதலிய ஞானநூல்களாகிய விளக்குகள். ஞானவிளக்கம் புதுமயல் நீக்கி நயந்தருமென்க. இருள் — அறியாமை.



யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பாடியருளிய செந்தமிழ்ச்செல்வி வழிபாடும் திருப்பள்ளியெழுச்சியும், துயிற்பத்தும், ஆசைப்பத்தும், வருகைப்பத்தும், செந்தமிழ்க் குலதெய்வமும், தசாங்கமும், செந்தமிழ்ச் செல்வியும், ஓலப்பத்தும், முறையீடும், உய்ந்தபத்தும், பொறுத்தபத்தும், அருட்பத்தும், நயனப்பத்தும், அடைக்கலப்பத்தும், இரட்டைமணிமாலையும், போற்றித்திருவகவலும், வருக்க மாலையும், நாமகள் கலித்துறையும், தாலாட்டும், அம்மானையும், அலங்காரமும், இழந்தவை கொண்டு வளம் பெற வாழ்தலும் என்றித்தொடக்கத்துப் பாமலர்களாலாகிய நாமகள்புகழ்மாலை என்னும் செந்தமிழ் நூலும், அந்நூற்றுப் பண்டிதை பா. பரமேசுவரியார் எழுதிய உரைக்குறிப்பும் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

## செய்யுண் முதற்குறிப்பகராதி

செய்யுள் — பக்கம்

அ

அங்கோட்டு — 133
அஞ்சமலர் — 109
அஞ்சமுயர் — 101
அஞ்சியொஞ் — 112
அஞ்சுகணை — 102
அஞ்சுதலையுடைத் — 91
அணிமாலை — 71
அப்பணியுஞ் — 62
அப்பார் — 25
அம்பாலணைய — 39
அம்பிகை — 115
அம்புவி — 31
அம்பொற் — 38
அம்மாதவச் — 134
அரன்றனை — 9
அரும் பொனே — 58
அல்லமன் — 111
அல்லியங் — 84
அவியாச் — 95
அவியாத — 14
அழியாத — 135
அறிவுரு — 48
அற்பகத்தேயூறி — 54
அற்பகத்தேயன — 55
அற்றகுளத் — 61
அன்பர்களங் — 114
அன்பார் — 101
அன்னக்கொடி — 108
அன்புடை — 8
அன்றுகொட் — 47
அன்னே — 26

ஆ

ஆக்குவான் — 47
ஆங்காரங் — 133
ஆசையெட்டு — 102
ஆச்சி யழ — 110
ஆடலு — 104
ஆடிபோலுங் — 44
ஆடினர் — 10
ஆணிப்பொன் — 113
ஆதரித்த — 111
ஆதரிப்பார் — 112
ஆதிநடு — 13
ஆராத — 61
ஆராரோ — 100
ஆரியம் — 104
ஆரியமங்கை — 108
ஆரியமுங் — 114
ஆரியை பெற்ற — 112
ஆருயிர்கள் — 101
ஆருயிர்க் — 48
ஆலிலை — 44
ஆவிக் கருங் — 94
ஆவிக்கமு — 125
ஆழித்துகில் — 101
ஆள்கண் — 105
ஆறுமுகங் — 102
ஆறுபேரீரே — 113
ஆன நான் — 105
ஆனைமுகன் — 115

இ

இச்சைப்பட் — 106
இயற்கை யொலி — 43
இல்லாமை — 32
இல்லா — 109
இளமையின் — 51



## செய்யுண் முதற்குறிப்பகராதி

செய்யுள் — பக்கம்

இளமையு — 59
இன்ற வறுமை — 68

ஈ

ஈசனை — 63
ஈட்டிக்கு — 104

உ

உடுத்தபட் — 44
உண்டமக — 45
உண்டுபசி — 107
உண்டாலினி — 107
உரைமகள் — 48
உருப்பளிங்கு — 61
உலகினி — 51
உள்ளத்தா — 71
உள்ளத்தி — 132
உள்ளபெய — 112
உள்ளங்கவல — 112
உள்ளபொரு — 104

ஊ

ஊடன் முகத் — 110
ஊனு — 94
ஊணுந்துகிலும் — 113

எ

எங்செங்கு — 102
எங்குமளித்த — 113
எட்போலும் — 44
எண்ணைச் — 69
எண்ணெண் — 108
எந்த மொழி — 126
எப்போதும் — 93
எம்மொழிக்கு — 55
எல்லாப்பிழை — 69
எல்லாத்திசை — 112
எழுத்துவகை — 17
என்புதோல் — 51
என்பிழை — 59
என்மனக் — 33
என்னைப் — 25
என்றென்று — 46

ஏ

ஏடகப்பொற் — 103
ஏராருங் — 127
ஏர்கொண்ட — 28
ஏழொன்று — 134
ஏற்றமணி — 111

ஒ

ஒப்பிதழ் — 94
ஒருகணப் — 94
ஒருகோடி — 63
ஒல்காப்பெரு — 134
ஒன்றிற் — 132

ஓ

ஓங்கார — 84
ஓசையொலி — 105
ஓயாம — 29
ஓருமிறை — 104
ஓவாத — 134

க

கச்சங் — 68
கஞ்சத் தவிசுங் — 115
கடையமுதிற் — 72
கண்டெழுங் — 32
கண்ணே — 24
கண்பாதி — 110
கண்ணுடி — 108
கண்ணிணை — 132
கந்தன் கதை — 111
கம்பனளி — 104

## செய்யுள் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| கலைசேர் | 23 |
| கல்விக்கிரி | 101 |
| கற்புடையோர் | 109 |
| கற்றவர் | 52 |
| கற்றுணையாய் | 103 |
| கன்மாப் பலகை | 106 |
| கன்னிவாழை | 45 |
| **கா** | |
| காதரிக்க | 16 |
| காமமும் | 50 |
| காமன் கரத் | 93 |
| காமன்சிலை | 110 |
| காரஞ்சு | 131 |
| காரியமன் | 73 |
| காரினு | 51 |
| காரே | 92 |
| காலணை | 109 |
| காலையிளங் | 65 |
| காவர | 73 |
| காவி விழி | 106 |
| **கி** | |
| கீதக் கடல் | 108 |
| **கு** | |
| குடையுந் | 92 |
| குணந் தரும் | 92 |
| குயிலாரு | 134 |
| குழல் திருத்தி | 18 |
| குன்றமெறி | 100 |
| குன்றிற் | 126 |
| **கூ** | |
| கூடனகர் | 45 |
| கூத்தனுலா | 111 |
| கூருமருட் | 44 |
| கூருந்தொல் | 106 |
| கூளிபுரட்டு | 104 |
| **கே** | |
| கேட்டுமன | 114 |
| **கை** | |
| கையது | 73 |
| கையின் வளை | 110 |
| **கொ** | |
| கொஞ்சத் தினை | 104 |
| கொஞ்சும் மதுர | 126 |
| **கோ** | |
| கோங்கரும்பு | 44 |
| கோடாத | 132 |
| கோத்தவுடல | 135 |
| கோபவிதழ் | 109 |
| கோலத்திரு | 113 |
| கோல்வளையா | 125 |
| கோள்கேட்ட | 109 |
| **ச** | |
| சங்கரன் | 47 |
| சஞ்சலம் | 71 |
| சந்தப்பொதி | 125 |
| சந்தனச் சிலம் | 8 |
| சந்தனச்சோலை | 64 |
| சந்தனப்பொற் | 54 |
| சந்திரனை | 43 |
| **சி** | |
| சிங்களமாதி | 111 |
| சிந்தாமணி | 45 |
| சிந்தாகுலம் | 101 |
| சிந்திக்குஞ் | 132 |




## செய்யுள் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **சீ** | |
| சீரடியார் | 113 |
| சீரழிந்து | 112 |
| சீராரகத்திய | 106 |
| சீரிய நற் | 114 |
| சீருந்திருவு | 135 |
| சீருயிர்க்கும் | 126 |
| சீர்பூத்த | 100 |
| சீர்மன்னு | 105 |
| **சு** | |
| சுடுபிணி | 12 |
| சுணங்கும் | 92 |
| **சூ** | |
| சூட்டிப் புனைந் | 114 |
| **செ** | |
| செங்காந்தள் | 44 |
| செஞ்சிதலு | 112 |
| செஞ்சிலம்பு | 114 |
| செஞ்சொற் | 100 |
| செந்தமிழ் | 1 |
| செந்தமிழ்ச் செல்வி | 100 |
| செந்தாமரை | 101 |
| செந்தாது | 114 |
| செந்தார்ப் | 35 |
| செப்புநேர் | 47 |
| செய்த | 46 |
| செய்வினை | 135 |
| செல்லாத | 72 |
| செல்வப் | 111 |
| **சே** | |
| சேயழா | 57 |
| சேரன்குலக் | 103 |
| சேராயிர | 107 |
| சேலாட்டு | 115 |
| சேலெல்லாந் | 109 |
| **சொ** | |
| சொல்லப்பணை | 133 |
| சொல்லார்க்கு | 126 |
| சொன்மாமணி | 106 |
| **சோ** | |
| சோலைப்பசுங் | 42 |
| **ஞா** | |
| ஞானக் கடன் | 105 |
| ஞானட்புவிக் | 107 |
| **த** | |
| தங்கசில | 112 |
| தண்டலையில் | 41 |
| தண்டா | 107 |
| தண்டாத்தமி | 125 |
| தண்டாமரை | 103 |
| தண்டை | 45 |
| தண்டேன் | 94 |
| தண்பொதி | 45 |
| தவந்தருமே | 95 |
| தவந்தருமோங் | 72 |
| **தா** | |
| தாடலை | 71 |
| தாதுறை | 73 |
| தாமப்பசுங் | 39 |
| தாமரை போலுங் | 91 |
| தாயுமெனைப் | 68 |
| தாய்போல் | 72 |
| தாவென்றிர | 132 |
| **தி** | |
| திங்கட்குடை | 107 |
| திங்கள்மிலை | 102 |

## செய்யுண் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| திருமுத்த | — 93 |
| திருவளர் | — 91 |
| திருவுறை | — 93 |
| **தீ** | |
| தீட்டுங்கலை | — 101 |
| தீட்டும் | — 114 |
| தீமலர்ந்த | — 103 |
| தீராத | — 12 |
| **து** | |
| துண்டப்பிறை | — 108 |
| **தூ** | |
| தூக்கும் | — 93 |
| தூண்டா | — 92 |
| **தெ** | |
| தெய்வத்தமிழ் | — 115 |
| தெய்வமுனைப் | — 73 |
| தென்பொதிய | — 100 |
| தென்றல் கவரி | — 103 |
| தென்னன் | — 127 |
| **தே** | |
| தேம்பியழுத | — 110 |
| தேரா | — 26 |
| தேவர்கள் | — 10 |
| தேவரிருவர் | — 113 |
| தேவாதி | — 55 |
| தேனினும் | — 141 |
| தேனென | — 9 |
| தேனேபாகே | — 23 |
| தேனேறு | — 42 |
| தேனூறு | — 104 |
| **தொ** | |
| தொண்டனுக்கு | — 103 |
| தொண்டர் | — 111 |
| தொன்னூற்பா | — 106 |
| **ந** | |
| நங்கைக்கிடம் | — 73 |
| நச்சுபே | — 106 |
| நஞ்சுவெம்பும் | — 133 |
| நஞ்சையரன் | — 109 |
| நஞ்சையமு | — 45 |
| நந்தா | — 100 |
| நம்புரை | — 66 |
| நல்லுயிர் | — 109 |
| நன்னூல் | — 106 |
| **நா** | |
| நாசித்துளை | — 111 |
| நாடியெடுத்து | — 113 |
| நாட்கொண்ட | — 131 |
| நாட்டும் புகழ் | — 103 |
| நாவாயிரம் | — 113 |
| நாவாரவேத் | — 113 |
| நாவாலெடு | — 93 |
| **நி** | |
| நிறைவாண் | — 71 |
| நினைத்த | — 46 |
| **நீ** | |
| நீரியலு | — 108 |
| நீரின்மே | — 45 |
| நீலக்கடுவை | — 22 |
| **நெ** | |
| நெஞ்சகம்படி | — 50 |
| நெஞ்சத் திருந்து | — 115 |
| நெஞ்சிரக்க | — 103 |
| **நே** | |
| நேயமலிக்தவர் | — 133 |





## செய்யுண் முதற்குறிப்பகராதி



| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **ப** | |
| பங்குக்குப் | — 13 |
| படிபுகழும் | — 18 |
| பட்டபனந் | — 104 |
| பண்டங்கு | — 72 |
| பண்டே | — 95 |
| பண்டைவளை | — 114 |
| பண்டொரு | — 48 |
| பண்ணு | — 65 |
| பத்தகத்தே | — 133 |
| பத்தித்தரு | — 108 |
| பழகிய | — 91 |
| பன்னிய | — 8 |
| **பா** | |
| பாட்டுக்குப் | — 114 |
| பாட்டும் பொரு | — 103 |
| பாணினும் | — 31 |
| பாமாரி | — 105 |
| பாலன் குரல் | — 110 |
| பாலாற்குறை | — 110 |
| பாலினெடு | — 53 |
| பாலைவென் | — 132 |
| பாவலர்கள் | — 106 |
| பாவேறுநா | — 100 |
| பாற்கடலிற் | — 102 |
| **பி** | |
| பிள்ளைப்பிறை | — 110 |
| **பு** | |
| புத்தகஞ்சேர் | — 45 |
| புத்தகத் | — 47 |
| புத்தலர் | — 8 |
| புன்மாலை | — 133 |
| **பூ** | |
| பூமகள் கேள்வன் | — 91 |
| பூமகள் கூறும் | — 93 |
| பூமணக்கும் | — 102 |
| பூமிக்குணில்லாப் | — 102 |
| பூவில் வறுமை | — 135 |
| பூவிற் பர | — 108 |
| பூவூரிதழ் | — 109 |
| **பே** | |
| பேச மலர்ந்த | — 107 |
| பேசுபுகழ் | — 111 |
| பேதைமைத் | — 103 |
| **பொ** | |
| பொய்ம்மாய | — 68 |
| பொய்யாமொழி | — 105 |
| பொய்யுரைத் | — 57 |
| பொருந்தலர் | — 58 |
| பொருளில்லை | — 135 |
| பொல்லாக் கல்லா | — 102 |
| பொல்லா வறுமை | — 68 |
| பொல்லா வினை | — 46 |
| பொன் பெற்ற | — 65 |
| பொன் பொதிந்த | — 12 |
| பொன் மகள் | — 78 |
| பொன்னனை மாமி | — 111 |
| **போ** | |
| போகாத | — 95 |
| போதனை சாதனை | — 112 |
| போற்றுங் கபாட | — 110 |
| போற்றும் முப்பா | — 22 |
| போற்றும் பொரு | — 105 |
| **ம** | |
| மங்கல மாலை | — 114 |
| மங்கையர் | — 107 |
| மங்குலுறை | — 18 |
| மங்குலுறை | — 102 |
| மஞ்சஞ்சு | — 62 |

## செய்யுண் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| மஞ்சுதவழ் | — | 16 |
| மட்டுவிரி | — | 107 |
| மணிதிகழும் | — | 62 |
| மண்ணகத்தார் | — | 18 |
| மந்தர கட்டு | — | 134 |
| மயிலேமட | — | 72 |
| மயிலே | — | 92 |
| மருளேறு | — | 29 |
| மறைவிலே | — | 52 |
| **மா** | | |
| மாகலேதே | — | 113 |
| மாசற்ற | — | 131 |
| மாசிலா | — | 59 |
| மாசுதவிர் | — | 108 |
| மாதங்க | — | 94 |
| மாயையால் | — | 50 |
| மாயையிற் | — | 59 |
| மாரிபோலும் | — | 44 |
| மாரிதாழ் | — | 107 |
| மாவாழ் | — | 72 |
| மாறுரு | — | 105 |
| மானடை | — | 134 |
| மானேபிடி | — | 108 |
| **மி** | | |
| மின்னவிடை | — | 105 |
| மின்னவிடை | — | 107 |
| மின்போலும் | — | 44 |
| **மீ** | | |
| மீட்டிய | — | 9 |
| மீனேறு | — | 62 |
| **மு** | | |
| முச்சங்க | — | 106 |
| முச்சங்கவாழ் | — | 112 |
| முச்சங்கப் பெரு | — | 54 |
| முத்துப்போற் | — | 44 |
| முப்புர | — | 9 |
| முருகோடி | — | 61 |
| முற்ரூத | — | 126 |
| முன்பின் | — | 113 |
| முன்மொழிந்த | — | 104 |
| முன்வாயரும் | — | 109 |
| முன்னம் | — | 41 |
| முன்னமினி | — | 108 |
| முன்னுள | — | 44 |
| **மூ** | | |
| மூடத்தை | — | 101 |
| மூலைக்குமூலை | — | 113 |
| மூவர்க்கு | — | 47 |
| மூவாதசுவை | — | 13 |
| மூவாத | — | 53 |
| மூவேந்தர் | — | 106 |
| மூவேந்தரும் | — | 115 |
| **மெ** | | |
| மெய்ப்புலவர் | — | 45 |
| மெய்ம் முழுதும் | — | 14 |
| மெல்லிய பா | — | 111 |
| **மே** | | |
| மேவேழ் | — | 102 |
| மேருமலை | — | 103 |
| **மை** | | |
| மைக்கட்டு | — | 101 |
| **மொ-மோ** | | |
| மொய்தாரணி | — | 65 |
| மோதிக் கலக்கும் | — | 69 |
| **வ** | | |
| வஞ்சப் | — | 68 |
| வஞ்சச் சமணர் | — | 103 |




## செய்யுண் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| வஞ்சங் | — | 94 |
| வஞ்சமிலர் | — | 55 |
| வஞ்சியிடை | — | 108 |
| வட்டப்பெரு | — | 107 |
| வண்டரற்றும் | — | 105 |
| வண்டாடுங் | — | 12 |
| வண்டார் | — | 21 |
| வண்டாடுஞ் | — | 40 |
| வண்டிசை | — | 54 |
| வண்டுவீழ் | — | 50 |
| வண்ணப் | — | 73 |
| வந்தாயென் | — | 131 |
| வம்புகள் | — | 58 |
| வம்மின் | — | 1 |
| வரிக்கோல | — | 72 |
| வல்லநா | — | 111 |
| வளவியதென் | — | 17 |
| வள்ளக் | — | 65 |
| வள்ளுவன்முப் | — | 17 |
| வள்ளுவர்முப் | — | 45 |
| வறியவன் | — | 58 |
| வன்னவடிவாளோ | — | 105 |
| வன்னவடி | — | 44 |
| **வா** | | |
| வாகான | — | 112 |
| வாக்குத் | — | 110 |
| வாசப்பட் | — | 93 |
| வாடாத | — | 30 |
| வாடும் | — | 91 |
| வாட்டங் | — | 114 |
| வாட்டுமிடி | — | 114 |
| வாதளித்த | — | 17 |
| வாதித்த | — | 104 |
| வாயின்மத | — | 112 |
| வாய்ச்சதமிழ் | — | 104 |
| வாய்ப்பான் | — | 125 |
| வாய்மை | — | 65 |
| வாராத | — | 30 |
| வாரிகுடித்த | — | 110 |
| வார்க்குங்கும் | — | 92 |
| வாவென | — | 65 |
| வாளுங் | — | 69 |
| வானகம்போல் | — | 43 |
| வானப்புலவர் | — | 24 |
| வானும் புவி | — | 94 |
| வானும் புவி | — | 65 |
| வானுறங்கு | — | 110 |
| **வி** | | |
| விண்ணே | — | 106 |
| வித்தைப் பெரு | — | 101 |
| விந்துநாத | — | 43 |
| விழிக்கின்ற | — | 13 |
| விற்காட்டி | — | 91 |
| **வீ** | | |
| வீடுதவுஞ் | — | 127 |
| வீணையிரு | — | 45 |
| **வெ** | | |
| வெண்டாமரைமே | — | 71 |
| வெண்டாமரை | — | 102 |
| வெந்தாபம் | — | 101 |
| வெய்யபிணி | — | 45 |
| வெள்ளமும் | — | 102 |
| வெள்ளைக்கலை | — | 101 |
| வெள்ளைக் கலையாளே | — | 100 |
| வெள்ளைக்கலை பொழி | — | 105 |
| **வே** | | |
| வேத மரும்பி | — | 107 |
| வேய் போலுங் | — | 44 |
| வேலை நெடுங்கண் | — | 109 |
| வேலெல்லாம் | — | 109 |

# இலக்குமி தோத்திரம்

## காப்பு

**வா**ட்டு மிடியு மனவருத்த மும்மாறத்
தோட்டுச்செந் தாமரையா டுயபுகழ் — பாட்டிற்
கருதிடத் தானீயுங் கலைத்தமிழ்தேர் மானி
மருதிடத்தா னீடு வரம்.

**த**ன்மாமி யார்பாத் தழைக்கத் தமிழறியா
வென்று வினும்வந் திருப்பாளே — பொன்னுரு
முண்டகத்தா னுவின் முதுமறைநான் குஞ்சொன்ன
வண்டமிழ்தேர் வெண்கமல மான்.

## பதிகம்

**கா**ர்கொண்ட மேனிக் கரங்கொண்ட நேமியங்
கடவுளும் புத்தேளிருங்
கால்கொண்டு பணிநாணி கைக்கொண்டு மந்தரக்
கற்கொண்டு கடையுமெல்லை
ஏர்கொண்ட வாரிதி யிடங்கொண் டெழுந்தநல்
லெழில் கொண்ட பொன்னன்னமே
எண்கொண்ட பலகோடி யுயிர்கள்யா வையுந்தந்தும்
இளமைகொண் டிடுமன்னையே
பேர்கொண்ட கலியெனும் பேய்கொண்டு நாடொறும்
பெரிதுமச் சுறவுகொண்ட
பிள்ளைபா லின்னமுந் தயைகொண்டி டாயெனிற்
பேரருட் கழகாகுமோ
சீர்கொண்ட நன்னிதிச் செல்வியே யுன்னுடைய
திருவருள் கொடுத்தாளுவாய்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 1.



**கா**ரன்ன கூந்தலும் மதியன்ன வதனமுங்
கமலமன விழியிணைகளுங்
கமுகன்ன கந்தரமும் வேயன்ன தோளுமிரு
கமலமொட் டன்னதனமும்
நீரன்ன நடையுமொ ளிர்மின்னன்ன விடையுமுள
நித்தியகல் யாணியெங்கும்
நிறையருட் பூரணி யாரணி காரணி
நீடுபுகழ் நாராயணி
ஆரென்ன சொல்லியென் நீமன்னு முயிர்தமக்
கன்னையன் றோநானுமுன்
அடியனன் றோவென்னை மிடியனென் றோதினுன்
அகிலலோக கமுநிறைந்த
சீரென்ன வாய்விடுந் துவரன்ன வாய்விண்டு
செப்புன்ன வரியபொருளே
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 2.

**அ**ந்துண்ட நெல்லெனக் களிறுண்ட கனியென்ன
ஐயகோ மிடியுண்டுநான்
அலையுண்டு தனிகரா விடியுண்டு வையுண்
டடங்காத கவலையுண்டாய்
வெந்துண்டி யின்றியெத் தனைகால முழலுவேன்
விரையுண்டு புகையுண்டுபூ
வேயுண்டு நறவுண்டு கரியவண் டினநின்று
வெறிகொண்டு பாடுகுழலாய்
சந்துண்டு கச்சினிற் றளையுண்ட விருதனத்
தையலே யடியனேற்குத்
தனமுண்டு பட்டுளத் தயையுமுண் டோவெனத்
தரளமுண் டுன்வாயினிற்
சிந்துண்டு போமென்று வாய்விண் டிடாயினிச்
சிறியனுக் காருண்டுகாண்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 3.

கண்டென்றும் இனியமுக் கனியென்று பாலென்று
கழையென்றும் இன்னமுதமே
காணென்று மொழிமொழிக் கன்னியே யுன்னுடைய
கமலசெஞ் சரணமன்றி
உண்டென் றிருப்பதினி யொன்றில்லை யுலகொா
மொன்ருகி யன்ருகியே
உருவாகி யருவாகி யொளியாகி வெளியான
வுலவாத சுகவாரியே
வண்டென்று வேலென்று வாளென் றுரைக்குமிரு
வாரீச நயனமங்காய்
வாதொன்று மிடியொன்று மாய்வுண்டு போகநீ
வாவென் றெனைக்கூவநான்
தெண்டன் புரிந்தென்று சிந்தைநோய் தீருவேன்
செப்புவா யப்பிலுறையுஞ்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 4.

ஓராயி ரந்தளத் தாமரைத் தவிசினு
னுலகம்ப டைத்திடுவதும்
உவணகே தனனுலகு திதிசெய்வ தும்பரன்
ஒடுக்குவது மும்பர்தலைவன்
சீராயிருந் தரசு செய்வதுங் கல்வியிற்
றேசினிற் றீரமதனிற்
திருவினல் லருளினிற் கொடையினிற் புகழினிற்
செப்புபெரி யோராவதும்
பேரா யிரம்பெற்ற வாரணங் கேயுனது
பேரருள் படைத்தல்லவோ
பேசுமிப் புடவியிற் கண்கண்ட தெய்வமென்
பெருமாட்டி நீயல்லையோ
தேரா திருந்தவிச் சிறியேனை யாளுவாய்
திருவடிக் கபயமபயம்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 5.



முந்தையூழ் வினைதந்த சமுசார பந்தத்தில்
முழுகியுன் மருகனுன
முருகனை யடைந்தெனது முட்டினை யறைந்துதவிர்
முதல்வவென் றேனங்கவன்
தந்தையோ யாசகப் பித்தனென் றுய்நீலி
சமுசார மோவிரண்டு
சங்கட மெனக்குன்னி லும்பெரி துனக்குநான்
தரவசதி யொன்றுமில்லை
பந்தனை யறுக்குநற் பாமாலை யலதுபொற்
பணிமாலை யில்லையென்கைப்
பற்றுவேல் பற்றுமேற் பற்றென்ன வோர்காசு
பற்றுதெனக் கழித்துச்
சிந்தைகுடி கொண்டதிரு வேயுனை யடைந்தனன்
திருவருள் கொடுத்தாளுவாய்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே. 6.

ஆனல்ல நல்லவைந் தருவல்ல மணியல்ல
வழியாத கல்வியல்ல
அமரர்பெரு வாழ்வல்ல வவருண்ணு மமுதமல்ல
வாடையா பரணமல்ல
வானல்ல மண்ணல்ல மறைநாவன் வாழ்வல்ல
வைகுந்த வரசுமல்ல
வடிவல்ல மடியாத வயதல்ல வுன்னுடைய
மலரடியி லத்துவிதமாய்த்
தானல்ல நானல்ல வென்னுமொரு நிலையல்ல
சாண்வயிறு தூர்க்கவேதேன்
தாவென்ன வீகிலாய் சேயல்ல னோவெனது
தாயல்லையோ நீநறுந்
தேனல்ல சுவைமொழிச் செல்வியே கட்கடை
திறந்துசற் றருள்செய்குவாய்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செப்பதும மலர்வல்லியே. 7.

**வ**ல்லியம் நாய்க்ரடி கண்டஉர வங்கழுது
    வாழ்கின்ற வடவிதன்னை
மாடமா ளிகையோடு கூடகோ புரநீடு
    மாநகர மாக்கிவைப்பாய்
சொல்லியம் பாமூடர் ஞானப்ர சங்கமழை
    சொரியவைப் பாய்தெருவினிற்
சோற்றுக் கலைந்தோரை யெவ்வுலக மும்பதந்
    தொழுமன்ன ராக்கிவைப்பாய்
பல்லிய முழங்கிட்ப் பவனிவந் தோரோடு
    பற்றியா சிக்கவைப்பாய்
பாவலர்கள் புகழுநன் நகரிணைக் கழுதைமேய்
    பாழாக மாற்றிவைப்பாய்
செல்வியுன் னுடலுக் கெல்லையுண் டோசொலச்
    சிறியனுக் கறிவுமுண்டோ
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
    செம்பதும மலர்வல்லியே. 8.

**மு**ம்மைநற் பொருடம்மி னடுநின்ற நீவரின்
    முதல்வரும் கடையும்வரும்
முத்தியுங் கைவரும் பத்திசெய் முனிவரும்
    முடிமன்ன ரும்முன்னுவ
தம்மைநின் னருளின்றி முடிவுறு தொடியா
    வரும்புகழ்படைத்த பேரும்
அவனியில் நடைப்பிண மெனப்படுவ ரன்னோரை
    யடையாது நீவிலகினுல்
இம்மையிலை மறுமையிலை நீயில்லை யென்னில்மற்
    றினமில்லை சனமில்லையால்
ஈன்றதா யென்னினு மடித்துத் துரத்திடுவ
    ளின்பமனை வியுமிகழுவாள்
செம்மையுல குயிர்களுக் குயிராகி நிற்குமொரு
    தெய்வமுனை யன்றியுண்டோ
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
    செம்பதும மலர்வல்லியே. 9.



**உ**ள்ளப் பெருங்கவலை யெல்லா முரைக்கவெற்
    கொருகோடி நாவில்லைநான்
ஓதா துணர்ந்தெனைத் தேற்றவோ வுன்மனத்
    தொருசிறி திரக்கமில்லை
பிள்ளைக் கிரங்காத கன்னெஞ்சி யென்றுனைப்
    பேசவொரு பேருமில்லை
பேதையென் இலம்பாடு நீக்கியருள் செய்யமறு
    பெற்றியிலை யுன்னன்பருக்
கள்ளிச் சொரிந்துழிச் சிந்துண்ட மிச்சிலெனு
    மடியனுக் கமையுமநளாய்
அந்தா மரைத்தாவி யன்னமே மறைநாலு
    மறியாத பொறிமஞ்ஞையே
தெள்ளித் தெளித்தசெந் தேனேநல் லமுதமே
    சிந்தா மணிக்குவியலே
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
    செம்பதும மலர்வல்லியே. 10.

---

**மா**னே மடமயி லேயிசை பாடிடு மாங்குயிலே
தேனே நவமணி யேமிடி நோய்தவிர் தெள்ளமுதே
வானே முதலெங்கு மாயவ ளேயிவ் வறுமைபினி
நானே பொறுக்கலன் வந்தாள்செந் தாமரை நாயகியே.

---

**குறிப்பு:** உருதிரோற்காரியாண்டு உண்டான வறுமைப்பிணியை நீக்கி யருளும்படி வேண்டிப் பாடப்பட்டது இப்பதிகம்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 22 | நாண்மை | நான்மை |
| 9 | 11 | சிந்தனை | சிரந்தனை |
| 13 | 21 | காவலரும் | காவாருந் |
| 28 | 24 | நித்திலங்குடி | நித்திலங் |
| 29 | 28 | புனவேறு | புனலேறு |
| 63 | 6 | வழங்குவதுமுன் | வழங்குவதுன் |
| 65 | 31 | உரைப்பதுபோன் | உரைப்பதுபோல |
| 66 | 2 | வாழியென்று | வாழியென்றே |
| 71 | 21 | அணிகள் | அளிகள் |
| 71 | 22 | அம்புயபம்பொற் | அம்புயப்பொற் |
| 73 | 18 | போதுரை | போதுறை |
| 91 | 23 | சலங்கவழித் | சலங்களழித் |
| 93 | 14 | யெளிர் | யொளிர் |
| 99 | 16 | நிலைபெற்ற | நிலையற்ற |
| 101 | 11 | கலைத்தமிழ்த்தேர் | கலைத்தமிழ்தேர் |
| 101 | 18 | தெள்ளமுதே | தெள்ளமுதோ |
| 101 | 20 | ஞானங்கனி | ஞானமருள் |
| 103 | 18 | நல்லமுது | நல்லமுத |
| 109 | 8 | சிந்திடவே | சிந்திடுமே |
| 114 | 15 | தெய்வணி | தெய்வமணி |
| 116 | 10 | கரபிடித்த | கரம்பிடித்த |

**குறிப்பு :—** நூலைப் படிக்கத் தொடங்குமுன்பு பிழைகளைத் திருத்திக் கொள்க.